# மலரும் இதழே



என்.சீதாலெட்சுமி

## முன்னுரை

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

எனக்குள்ளிருந்த ஆர்வத்தின் காரணமாய் எழுதத் தொடங்கிய நான் அருணோதயம் 'உயர்திரு அருணோதயம் அருணன் ஐயா அவர்களது வழிநடத்துதலாலும், என் குடும்பத்தாரின் ஆதர வாலும், என் தோழிகள் அளித்த ஊக்கத்தாலும், எனது பதினெட்டாவது கதையுடன் உங்களைச் சந்திக்கிறேன்.

தினசரியில் படித்த ஓர் செய்தி ஏற்படுத்திய பாதிப்பே, இக்கதையை நான் எழுதக் காரணம்! இந்தக் கதையின் முக்கியப் பிரச்சனை, தினசரியில் வந்த ஓர் உண்மைச் சம்பவம். அதைச் சுற்றி பின்னப்பட்ட என் கற்பனையே, கதையின் போக்கும் முடிவும்.

இந்தக் கதையைப் பற்றிய உங்களது விமர்சனங்களை, @ என்ற எனது மின்னஞ்சல் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்! குறை-நிறைகள் கேட்டறிய ஆவலாய் இருக்கிறேன்!

அன்புடன்

திருமதி. என்.சீதாலெட்சுமி

# மலரும் இதழே



## 1

குன்றத்திலே குமரனுக்குக் கொண்டாட்டம்!
அங்கே குவிந்ததம்மா பெண்கள் எல்லாம் வண்டாட்டம்!
குன்றத்திலே குமரனுக்குக் கொண்டாட்டம்!

தெய்வானை திருமணமாம் திருப்பரங்குன்றம்!
தெருமுழுதும் பக்தர்களின் ஆனந்தமன்றம்!

கந்தனைத் துதிபாடி, ஒலிபெருக்கி அலறிக் கொண்டிருக்க,

''ஏலேய்... பாட்டை மாத்துடா! இங்கன... என்ன கூழா ஊத்துறாய்ங்க? கலியாண வீட்டில... மனுஷனை அங்க... இங்க பார்த்து சந்தோஷமா இருக்க விடுங்கடா!'' என்று ஒருவன் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு அலும்ப,

அவனோடு சேர்ந்துகொண்டு, சில பல இளவட்டங்களும், மைக் செட் காரனுடன் சண்டைக்குச் சென்றனர்!

மைக் செட் காரனின் நல்ல நேரம் போலும்! ''என்ன பங்காளி... இங்க என்னய்யா புலம்பிக்கிட்டு இருக்கீக?'' என்றபடியே வந்தான், ராஜதுரை!

''இல்ல மாப்ள! நீயே சொல்லு... கிளியாட்டம் பொண்ணுங்க... இங்கிட்டும் அங்கிட்டுமா போகுதுங்க! இந்த நாதாரி... சாமி பாட்டைப் போட்டு... மூடைக் கெடுக்கிறான்... படுபாவி!'' என்றவன், மைக் செட் காரனை அடிக்கப் போக,

''ஏய் பங்காளி... வாய்யா! இப்ப... என்ன பாட்டை மாத்தணும்... அம்புட்டுத்தானே? அதுக்கேன் புலம்புறே? மாத்தச் சொல்லுதேன்... நீ உள்ளார போய் உக்காரு... நல்ல நல்ல ஃபிகரெல்லாம் அங்கதன் நடமாடுது!'' என்று அவனை அனுப்பி வைத்த, ராஜதுரைக்கு வயது இருபத்தியொன்பது! அவன் வசிக்கும் செங்கப்படை கிராமத்தின் முக்கிய பிரமுகன்! விவசாயத்தைப் படிப்பாகவும், தொழிலாகவும் செய்பவன்!

நல்லவனுக்கு நல்லவன்! கெட்டவனுக்குக் கெட்டவன்! சில சமயம், நல்லவனுக்கும் கெட்டவன்! அவனுக்கு, நாம் நல்லவனா... கெட்டவனா என்று தீர்மானிப்பது, நமது செயல்களோ... நமது குணமோ அல்ல! அவனுக்கு... அவன் மனதிற்குப் பிடித்திருக்கிறதா... என்பது மட்டுமே நம்மை நல்லவனாகவும் கெட்டவனாகவும் உருப்பெறச் செய்யும்!

மைக் செட் காரனிடம், பாட்டை மாற்றச் சொல்லி விட்டு, அவன் திரும்பவும், கிளிப்பச்சைப் பாவாடையும், குங்குமக் கலர்ச் சட்டையும், அதே நிறத்தில் தாவணியும்



அணிந்து கொண்டு, அவனது தங்கையின் தோழி பொன்மலர் வரவும் சரியாக இருந்தது!

அந்த நேரம் பார்த்து, ''பூவே... இளைய பூவே! வரம் தரும் வசந்தமே! மடி மீது தேங்கும் தேனே! எனக்குத் தானே! எனக்குத்தானே!'' என்ற பாட்டு ஒலிக்க,

மலேசியா வாசுதேவனின் குரலுடன் சேர்ந்து, துரையின் குரலும் ''எனக்குத் தானே! எனக்குத் தானே!'' என்று அழுத்தம் கொடுத்து ஒலித்தது, பொன்மலரின் மீது கண்ணை வைத்துக் கொண்டே!

மலேசியா வாசுதேவனின் குரலை மீறிக்கொண்டு கேட்ட துரையின் குரலில், லேசாய் திகைத்து, மெல்ல நிமிர்ந்து பார்த்த பொன்மலரின் உதட்டில் ஓர் மென்னகை! அதைப் புன்னகை என்றும் சொல்லலாம்! நாணம் என்றும் சொல்லலாம்! சிரிப்பு என்றும் சொல்லலாம்! நட்பாய் ஓர் உதட்டசைவு என்றும் சொல்லலாம்! பார்ப்பவரின் (படிப்பவரின்) எண்ண ஓட்டத்தைப் பொறுத்தது!

''ஏய்... பங்காளி! எங்கள... உள்ளார தள்ளிவிட்டு, இங்க நீங்க மட்டும்... என்னய்யா ரூட்டு விடுறே?'' என்றவாறே துரையின் தோளில் கைபோட்டான், அவனது நண்பன் - பாண்டியன்!

பொன்மலர், பொன்மானாய் மாறி உள்ளே விரைந்தாள்! அவள் முகத்திலிருந்த உணர்விற்குப் பெயரிட வேண்டுமென்றால்... அதற்குப் பெயர் பதட்டம்! ஆனால், ஏன் பதட்டம்? எதற்கு பதட்டம்?

கல்யாண வீட்டினுள் ஓடிய பொன்மலரின் மீதே பார்வையை வைத்திருந்த ராஜதுரை, ''யோவ் பங்காளி! அலப்பறையைக் கூட்டிவிட்டுப் போயிறாதய்யா! அவ

அண்ணங்காரன் காதில விழுந்துச்சு... என்னைய உப்புக் கண்டம் போட்டுருவான்!'' என்றான்.

ஆனால், வார்த்தைகளில் தென்பட்ட பயம் போன்ற உணர்விற்கு நேர் மாறாய், குரலில் தெனாவெட்டு தெம்மாங்குப் பாட்டுப் பாடியது!

''நீயா? பயமா? அவ அண்ணனுக்கு? போய்யா.. போ! எனக்கு... முன்னமே காது குத்திட்டாய்ங்க... நீ இன்னொரு வாட்டி குத்த வேணாம்!'' என்றான் பாண்டியன், நக்கலாக.

''ஹஹஹா!'' என்று மனம் விட்டுச் சிரித்த ராஜதுரையின் கைகள், தனது முறுக்கு மீசையை, கர்வத்துடன் நீவி விட்டுக் கொண்டன!

பாண்டியன் ''வேணாம்... மாப்ள!'' என ஏதோ தொடங்கும்போது,

''யய்யா! ராசு!'' என்ற குரல், உள்ளிருந்து ஒலித்தது!

''என்னாத்தா! இந்தா வாரேன்!'' என்றபடியே, உள்ளே நுழைந்தவன், தன் தாய் - சந்தோசத்திடம் சென்றான்.

''யய்யா! இந்த அய்யரை எங்கன புடிச்சாந்தே?'' என சந்தோசம், எரிந்து விழவும்,

''உன்னைய... என்ன கேட்டாரு?''

''இத கொண்டா... அதக் கொண்டான்னு என் இடுப்பை ஒடைக்கிறான்... கட்டையில போறவன்...!''

''விடுத்தா!'' என்று அன்னையிடமிருந்து பார்வையை விலக்கியவன், ''அத்தாச்சி...'' என உறவுக்காரப் பெண்மணி ஒருவரை அழைத்தான்.

''கத்திரிக்காய்க்கும்... தக்காளிக்கும் பொறந்த அந்தச் சுண்டைக்காயை ஏன் கூப்பிடுறவ...'' என சந்தோசம், கழுத்தை நொடிக்க,



''சத்த நேரம்... செவனேன்னு அங்கன உக்காரு!'' எனத் தாயை ஒரு அதட்டுப் போட்டான், ராஜதுரை!

படம் எடுத்தாடும் பாம்போ... பொன்னனின் கையிலிருக்கும் அருவாளோ உண்டு பண்ணாத பயத்தை, மகனது வார்த்தை உண்டு பண்ண, அங்கிருந்த தூணில் சாய்ந்து அமர்ந்தார் சந்தோசம்!

அவர் அமர்ந்த நொடிக்கும், ''சுண்டைக்காய்'' அத்தாச்சி அய்யரிடம் மஞ்சளை எடுத்துக் கொடுக்கும் வினாடிக்கும் இடையே, பொன்மலர் திருமண மேடைக்கு அருகே வந்துவிட,

''ஏய்... எடுபட்ட சிறுக்கி! இங்கன என்னடி பண்றே?'' என்று எகிறியது, சந்தோசத்தின் குரல்.

அவரது ஆர்ப்பாட்டக் குரலுக்குப் பழகியிருந்த போதும், கூடியிருந்த அனைவருமே திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர்.

பின்னே, கல்யாணப் பெண்ணின் தாயார் இப்படிக் கத்தினால், யார் தான் திடுக்கிட மாட்டார்கள்? ஆம், அவரது ஒரே மகள்... பூவரசிக்கு இன்று திருமணம்!

ஆனால், அவரோ! பெண்ணின் தாய் என்ற எண்ணம் சிறிதுமில்லாமல், எப்போதும் போல் ஒரே ஆர்ப்பாட்டம்! அலட்டல்! அதட்டல்! சிறு வயது தொட்டு, அனைவரையும் அதட்டி... மிரட்டி... உருட்டியே வேலை வாங்கிய வருக்கு, பெண்ணின் திருமணத்தன்று மட்டும் வாய் மூடிவிடுமா என்ன? அதற்கென்று, பிரத்யேகமாய் ஜிப் வாங்கி வந்தாலும், அதைக் கிழித்துக் கொண்டு விழாதோ வார்த்தைகள்!

''சந்தோசம்... சத்த நேரம்.. சும்மா இரு!'' என்று அவரது கணவர் - பழையம்பெருமாளின் அதட்டல்

எல்லாம், ஹோமக்குண்டத்திலிருந்து வெளிப்பட்டப் புகையோடு புகையாய் மறைந்து போக,

''ஏய்... உன்னத்தான்! குத்துக்கல்லாட்டம் ஒருத்தி... இங்கன கத்திக்கிட்டு இருக்கவ... நீ எங்க.. உள்ளார மேயுற!'' என்று மீண்டும் அதட்டியது அரசுவின் குரல்.

''நா... ஒண்ணும்... உங்க களத்து மேட்டுல கட்டியிருக்க மாடில்ல! மேயுறதுக்கு! மேயுறேனாம்ல!'' என்று அவருக்குச் சரிக்குச் சமமாய் கழுத்தை நொடித்த பொன்மலருக்கு, சந்தோசத்தைக் கண்டாலே கனல் தான்! பின்னே, அவளை எதற்கெடுத்தாலும் மட்டம் தட்டிக் கொண்டே அல்லவா இருப்பார்!

''சவட்டு... சவட்டுன்னு மேயுற நாக்கை இழுத்து வச்சு அறுத்துப்புடுவேன்... கழுத!'' என பெரியவரும் எகிற,

''ஆமாமா... நீங்க அறுக்கிற வரைக்கும்... நா தேவுடு காத்துக்கிட்டு, உம்மகிட்ட நாக்கைக் கொடுத்திட்டு உட்கார்ந்திருப்பேனாக்கும்...''

''நீ இருக்க மாட்டேடியம்மா... இருக்க மாட்டே! ஊர் மேயுற காலு... ஓரிடத்தில அடங்கி இருந்தா... இந்த ஊரு என்னாவும்? ஒலகம் என்னாவும்!'' - தாடையால் தோள்பட்டையை இடித்தார் சந்தோசம்!

வேறொரு நாளாய் இருந்திருந்தால், சந்தோசமும் பொன்மலரும் தங்கள் விவாதத்தை... ம்ஹூம் சண்டையை, சூரியனார் சுறுசுறுப்பாய் இருக்கும்போது தொடங்கி, அவர் ''ஹப்பாடா!'' என்று களைப்படையும் வரையிலும் தொடர்ந்திருப்பர்! ஆனால், இன்று கல்யாணம் அல்லவோ! அதுவும் பூவரசியின் கல்யாணம் அன்றோ!



அன்றைய தினத்தின் நாயகியே, தன் அறையை விட்டு வெளியே வந்து ''ஷ்! ஆத்தா! இன்னமும்... ஒரு மணி நேரம் தேன்... சத்த சும்மாயிரு... நா தாலியை வாங்கினதும், உந்திருவாயைத் தொறக்கலாம்!'' என்று ஒரு அதட்டுப் போட,

''இன்னைக்கு மொளைச்ச காளான்... என்னைய விரட்டுது! ச்சீ... கழுத... உள்ளார போ! மாப்பிள்ள வூட்டுல எல்லாரும் கிளம்பியாச்சாம். சொடக்குப் போடறதுக்குள்ளார வந்தாலும்... வந்திடுவாக! அந்த நேரத்தில், முத்தத்தில (முற்றத்தில்) நின்னுக்கிட்டு முழங்குறவ! அந்த எடுபட்ட சிறுக்கிக்கு... இந்தக் காளான் வக்காளத்து! உள்ளார போடி!''

''ஏய்டி! பூவு! உங்காத்தாட்ட சொல்லி வையு... என்னைய சிறுக்கி... கிறுக்கின்னா கதிர் அறுக்காப்பல அறுத்துப்புடுவேன்!''

''இவ ஒருத்தி... எண்ணைக்குள்ள விழுந்த அப்பளமாட்டம் குதிச்சுக்கிட்டு... உள்ளார வாடி! உன்னைய எதுக்கு வரச் சொன்னேன்? நடு முத்தத்தில நின்னுக்கிட்டு... என் கல்யாணத்தைக் கெடுக்கவா?'' என்று அவளை ஒரே பிடியாய் இழுத்துக் கொண்டு, தான் உபயோகப்படுத்தும் அறைக்குள் நுழைந்தாள் பூவரசி!

''ஆத்தாடி ஆத்தா! உங்காத்தாளுக்கு இம்புட்டு பேச்சாகாதுடி!'' என்று பொன்மலர் நொடிக்க,

''என்னவோ... புதுசா கேட்கிற மாதிரி கத்துறவ! சும்மா வாடி! ஆத்தா... எப்பவுமே இப்படித் தானே!''

''செடியா இருக்கையிலேயே உங்காத்தா வணங்கலையாம்... இப்ப மரமா வளந்து நிக்கயிலையா வணங்கிடப் போறா...''

''அடியே! இப்ப... எங்காத்தாவைப் பத்தின சம்பாஷணைக்கா உன்னைய வரச் சொன்னேன்...'' எனத் தோழியை ஒரு அடி வைத்தவள்,

''இந்தா... இந்தச் சேலையைச் சரி பண்ணு...''

''ஆமா... ஒனக்கு... கொசுவம் பிரிச்சு விடத் ததேன்... எங்கப்பாரு என்னைய பெத்துவிட்டிருக்காரு... பாரு!''

''பெரிய எலிசபெத் மகராணி! எடுத்து விடுடின்னா...''

''ஒங்க குடும்பமே... இப்படித் தானாடி! உங்காத்தா என்னடான்னா... ஊரைக் கூட்டி வச்சுக்கிட்டு, வரவ போறவளை ஏசிக்கிட்டுத் திரியுது! ஒனக்கு... மூத்தவன்... என்னமோ மைக் பிடிச்ச மன்மதனாட்டம் பாடுறாரு... நீ என்னடான்னா... பொண்ணு மாதிரியா இருக்கே... என்னமோ மாப்பிள்ளையை ஓட்டிக்கிட்டுப் போறவ மாதிரி!''

''உங்கல்யாணத்தில நீ எப்படி இருக்கேன்னு பார்க்கத் தானே போறேன்... அன்னைக்கும், சிண்டு சிணுக்கை எல்லாம் கூட்டி வச்சுக்கிட்டு, பரமபதம் ஆடுவே! உன்னைப் பத்தித் தெரியாது!''

''கூறு கெட்ட மட்ட! நா இப்ப ஆடுற ஆட்டத்துக்குப் பேரு... பரமபதம் இல்ல! ஆடு... புலியாட்டம்! அதுல... உங்காத்தா தான் ஆடு! நா புலி!''

''அடி செருப்பால! எங்காத்தாவ எதுக்குடி இப்ப இழுக்கிறவ! வந்த வேலையைப் பாரு!''

''உங்காத்தா மட்டும்... என்னைய கணக்கில்லாம இழுக்குது! நானும் இழுப்பேன்!'' - சந்தோசத்தின் மேலிருந்த கோபத்தில், பூவரசியின் சேலையை விடுக்கென இழுத்தாள் பொன்மலர்.



''உன்னைய கொடுப்பேனே... பூ மலந்து கெட்டுச் சாம்... நா வாய் விரிச்சுக் கெட்டேனாம்! போடி அந்தப் பக்கம்! நானே கட்டிக்கிடுதேன்...'' என பூவரசி கோபித்துக் கொள்ள,

அவளது தாடை தொட்டுக் கொஞ்சிய பொன்மலர், ''சரி... சரி விடு! ரொம்பச் சலிச்சுக்கிடாத...'' என்றாள் தன்மையாக.

ஹ்ம்ம். ஒரே நிமிடம் தான்! தோழியர் இருவரும் சமாதானமாகி விட்டிருந்தனர்! பிறந்தது முதல், ஒன்றாய் வளர்ந்தவர்கள் அன்றோ! ஒன்றாய் உண்டு, ஒன்றாய் உறங்கி, ஒன்றாய் பள்ளி சென்று, ஒன்றாய் டிப்ளமோ படித்து... என எல்லாமே ஒன்றாய்! ஒன்றே ஒன்றைத் தவிர! அது வாய்த்துடுக்கு! பூவரசிக்கும் வாய்த்துடுக்கு உண்டு! ஆனால், பொன்மலருக்கோ... வாய்ய்ய்ய்த் துடுக்காய் அன்றோ இருந்தது!

''மாப்ள வீட்டில இருந்து வந்துட்டாக!'' என்ற குரல் வெளியே கேட்கவும், அதுவரை வம்பளந்து கொண்டிருந்த தோழிகள் இருவரும், சட்டென அடங்கிப் போயினர்.

''ஏய் பூவு! நீ.. இல்லாம நா ஒத்தையாளா காலேசுக்குப் போவணும்டி...'' என்று பொன்மலர் கலங்க,

''என்னடி பொண்ணு இது? சின்னப் பிள்ளையாட்டம்! அடுத்தத் தெரு... கனகம் இருக்கால்ல...''

''ஹுக்கும்! அவ வாயில இருந்து ஒரு முத்தை வாங்குறதுக்குள்ள... எனக்குத் தாவு தீர்ந்து போவும்! போடி!'' என்று எரிச்சல் கொண்டவள்,

''ஏய்... நீ ஏன்டி... இப்பவே கல்யாணம் கட்டிக்கிறே... ஒனக்கு முன்னாடி சமைஞ்சவ நா இருக்கையில... ஒனக்கு என்னடி...'' என்றாள், ஐந்நூறாவது முறையாக.

திருமணம் நிச்சயமானது தொட்டு, சொல்லி வந்த பதில் தான் என்றாலும், தோழியின் வருத்தத்தைப் பொறுக்க முடியாமல், ''அண்ணன் தேன்டி... பொட்டப் புள்ளைய எம்புட்டு நாள் வச்சுக்கிறதுன்னு வரம் பாக்க ஆரம்பிச்சுச்சு! என் நேரம்... உடனே முடிஞ்சு போச்சுது!'' என்றாள் பூவும்.

''பெரிய நொண்ணன்! எங்கண்ணன்... என்னைய படிப்பு முடிஞ்சு, வேலைக்கு அனுப்புறேன்னு சொல்லியிருக்கு! தெரியுமா?'' - இதைச் சொல்லும்போது, பொன்மலரின் முகத்தில் அப்படியொரு மினுமினுப்பு.

''உங்கண்ணன் என்ன செய்யுதோ... அதுக்கு எக்குத் தப்பாதானே... எங்கண்ணன் செய்யும்!'' என்று உதடு பிதுக்கிய பூவரசியின் முகத்தில், அப்படியொரு ஏக்கம்!

''ஆமா... எப்பப் பாரு... எங்கண்ணனை கர்ணம் கட்டிக்கிட்டே திரியுறதே உங்கண்ணனுக்குப் பொழப்பு!''

''ஏய் வேணாம்... ராசாண்ணனை எதுனா சொன்னே... நானே நாக்கை இழுத்து வச்சு அறுத்துப்புடுவேன்!''

''வாடியம்மா வா! ராங்கிக்குப் பொறந்த ரங்கம்மா! ஆத்தாளும் மகளும்... ஆனா... ஊன்னா அருவாளைத் தூக்கிக்கிட்டு வந்துடுவீகளே! அதுவும், உங்க அருமந்த அண்ணனைச் சொல்லிட்டா...'' என வாயால் மட்டுமல்லாமல், கையாலும் பொன்மலர் நீட்டி முழக்கிக் கொண்டிருக்கும்போது, நீட்டி முழக்கிய கைக்கு அரணாய் வந்து சேர்ந்தான் ராஜதுரை!

''பூவு... ரெடியா கண்ணு? மாப்ள வந்துட்டாரு! அந்தக் குந்தாணியை வெளிய வெரட்டிட்டு... நீ வெருசா வா!'' என்றவாறே நுழைந்தவன், பொன்மலர் அடித்த அடியில், ''அப்பா!'' என ஒரு நிமிடம் அயர்ந்து நின்றான்.



# 2



''அய்யய்யோ!'' என பொன்மலர் பதற,

''இந்தக் குந்தாணி தானா? நா... ஏதோ ஒலக்க (உலக்கை) அடிச்சிடுச்சுன்னு நினைச்சேன்... ஷப்பா!'' என்றான் ராஜதுரை, பாவம் போன்ற குரலில்.

''இருக்குமே... ஏன் இருக்காது? உம்ம தங்கச்சி... அப்படியே அல்லிக்கொடி பாரும்! என்னைய குந்தாணின்னு சொல்ல வந்துட்டாரு!'' என்று நொடித்த பொன்மலர்,

''உன்னைய யாராவது... இந்தக் கல்யாணத்துக்கு வான்னு அழைச்சாங்களா? தொறந்த வீட்டில ஏதோ நுழையுற மாதிரி நுழைஞ்சுட்டு.... பேச்சைப் பாரு... பேச்சை! மானரோசமிருந்தா... வந்திருக்க மாட்டே...! உனக்கெங்க? குந்தாணி!'' என்ற ராஜதுரையின் வார்த்தைகளில், அறையை விட்டு விடுவிடுவென வெளியேறினாள்.

''ஏண்ணே...'' என ஆரம்பித்து, பூவரசி ஏதோ சொல்லத் தொடங்கவும்,

''அவளைப் பத்தி வெட்டிக் கதை பேச இப்ப நேரமில்ல... நீ வெருசா வா... மாப்பிள மனையில இருந்து எந்திருச்சி வந்திடப் போறாரு...'' எனத் தங்கையின் கைப்பிடித்து, மணமேடைக்கு அழைத்துச் சென்றான், ராஜதுரை.

வீட்டு முற்றம் தாண்டி, வெளிவாசலைக் கடந்து கொண்டிருந்த பொன்மலரைக் காண்கையில், பூவரசிக்கு ராஜதுரை மீது எரிச்சலாய் வந்தது! கல்யாணத்துக்குக்

கூட இருக்க விடாமல், விரட்டி விட்டானே என்ற கடுப்புடன் நடந்தவளின் கண்கள், மணமேடையைச் சந்தித்ததும், மற்றதை மறந்தாள், அந்தப் புது மணப்பெண்!

அங்கே, பூவரசியைக் கைபிடிக்கக் காத்திருந்தான் அன்பழகன்! விரிந்த சிரிப்பும், அமைதி படிந்த முகமும், எதிர்பார்ப்பு மின்னும் கண்களுமாய் இருந்த அன்பழகன், ஆணழகனாய் தெரிந்தான், அவளுக்கு!

பிறருக்குத் தெரியாமல், அவன் கண்ணடித்த அழகில், சுற்றியிருந்த சுற்றுப் புறமே மறந்துவிட்டது எனும்போது, எதிர்த்த வீட்டுப் பொன்மலர் எம்மாத்திரம்! எண்ணங்களின் ஆக்கிரமிப்பிலிருந்து காத தூரம் ஓடிப்போயிருந்தாள், பொன்மலர்.

அதன் பின்னர், சுற்றமும் சொந்தமும் வாழ்த்து மழை பொழிய, அன்பழகன் - பூவரசியின் திருமணம், இனிதே நிறைவுபெற்றது!

தாலி கட்டிய மறுநிமிடம், கூடமே காலியாய் இருக்க, உணவுக் கூடம் நிரம்பத் தொடங்கியது! திருமணத்திற்குப் பலர் வருவதற்குக் காரணமே, கறி விருந்து தானே!

கிலோ கணக்கில் ஆடும், விரல் விட்டு எண்ண முடியாத அளவிற்குக் கோழியும் கமகமக்க, விருந்து பிரமாதப்பட்டுக் கொண்டிருந்தது!

பிரியாணி பரிமாறிக் கொண்டு சென்றவனின் சட்டையைப் பிடித்த ஒரு பெரும்புள்ளி, ''டேய், என்ன லந்தா? இங்க... வலையப்பட்டிக்காரன் உட்கார்ந்திருக்கிறது... ஒன் நொள்ளக் கண்ணுக்குத் தெரியலையோ? அப்படியே போறே?'' என எகிற,

அங்கே பந்தி விசாரித்துக் கொண்டிருந்த ராஜதுரை, வினாடிக்குள் சண்டை நடக்கவிருந்த இடத்தில் ஆஜரானான்!



''என்ன அண்ணே... எதுக்குக் கோபப்படுறீக!''

''பின்ன என்ன ராசு... இலைய பார்த்துக்கிட்டு... அப்படியே போறான்... பக்கிப்பய! ரெண்டு நள்ளி எலும்பை அள்ளி வைப்பானா?''

பரிமாறிய சிறுவனோ ''இல்லண்ணே! இலை.. நிரம்ப இருந்துச்சுண்ணே!'' என பம்ம,

''இவன் ஒருத்தன்! அவரு ரெண்டு இலைக்குக் கூடச் சாப்பிடுவாரு! நீ ஏன்டா கவலைப்படறே? வச்சுட்டுப் போவியா?'' - தணிந்தக் குரலில் அவனைக் கடிந்து கொண்ட கையோடு,

''அண்ணனுக்கு... பிரியாணி வைடா, தம்பி!'' என அவனைச் சத்தமாய் ஏவினான்!

கூடவே, ''அண்ணே... இது உங்க வீடுண்ணே! உங்க வீட்டு விசேஷம்! கேட்டு வாங்கிச் சாப்புடுற உரிமை உங்களுக்கு இருக்குண்ணே! அவன்... வைக்கலைன்னா... டேய் தம்பி வைடான்னா வச்சுட்டுப் போறான். அந்த உரிமை உங்களுக்கு இல்லையா என்ன? உங்களுக்கு மட்டுமில்ல... பக்கத்து இலைக்குக் கூட வைக்கச் சொல்லி ஏவுற உரிமை உங்களுக்கு இருக்குண்ணே! அதுக்குப் போய், அதிரி புதிரி பண்றீகளே!'' என ராஜதுரை பணிவாய்ப் பேசவும், அந்த முறுக்கு மீசை குழைந்து போனது!

''ஹஹ்ஹா! ஆமா... தம்பி! ஆமா! நீ போ... ராசு! நா பார்த்துக்கிடுதேன்! இந்தப் பக்கப் பந்தியை... அண்ணே விசாரிச்சுக்கிடுதேன்! நீ அந்தப் பக்கம் பாரு!'' என அவர், அவன் தோள் தொட்டு அனுப்பி வைத்தார்.

இது தான் ராஜதுரை! அவரையும் சமாதானப்படுத்தியாயிற்று! அவனது வேலையையும் குறைத்தது போலாயிற்று! ஒரு கல்லில் இரண்டு மாங்காய்! பல சமயங்களில், இது பற்பல மாங்காய்களாய் இருக்கும்!

பந்திக் கட்டை, ஒரு லாவகத்துடனும், அதே சமயம் வேகத்துடன் வலம் வந்தவன், பந்திக் கட்டின் நுழைவு வாயிலில் நிழலாடிய உருவத்தைக் கண்டு, ஒரு நிமிடம் நெற்றி சுருக்கி, ஒரு தீப்பார்வையைக் கக்கினான்!

அடுத்த நிமிடம், ''டேய் பங்காளி! மன்னிச்சுக் கோடா!'' என்ற வேண்டுதலுடன், அந்த உருவம் அருகே வந்து கட்டிப் பிடிக்கவும், அந்தத் தீப்பார்வையின் உஷ்ணம் குறைந்தது!

''மாப்ள! என்னடா என்னுமே பேச மாட்டேங்கிறே! ஆம்னி பஸ்காரன் சதி பண்ணிட்டான்டா... அதான் லேட்டு! மன்னிச்சுக்க மாப்ள!''

''பண்ற லந்தை எல்லாம்... நீ பண்ணிட்டு, ஆம்னி பஸ்காரனை ஏன்டா வையுறே? வரவன்... கல்யாணத்தன்னைக்குக் காலையில தான் வருவியோ? நேத்தே வர வேண்டியதுதானே? என்னடா பண்ணிட்டு இருந்தே?...'' - அதன் பின் வந்தவையெல்லாம் 'கெட்ட' வார்த்தைகள் அகராதியில் இடம் பெற்றிருந்தன!

''இல்ல மாப்ள... ஆபீஸ்ல வேலைடா...''

''என்ன பெரிய வேலை? அதுக்குத்தேன் ஊரோட... விவசாயத்தைப் பார்த்துக்கிட்டு இருக்கணும்ங்கிறது! பட்டணம் போய்... பணக்காரன் ஆவுறானாம்!''

''வேணாம் மாப்ள... இந்த விஷயத்தைப் பேசினா... கைகலப்புல தான் முடியும்! விடு! தங்கச்சியைப் பார்த்துட்டு வருவோம்! வா!'' என வந்தவன், ராஜதுரையின் கைப்பிடித்து இழுத்துக் கொண்டு, வீட்டினுள் சென்றான்.

''ஆமா... இதைப் பேசினாவே உனக்கு எரியுமே! வா!'' என்ற ராஜதுரையும், பேச்சை வளர்க்காமல், அவனுடன் சென்றான்.



உறவினர் கூட்டத்தின் மத்தியில் நின்றிருந்த மணமக்களிடம் சென்றவர்கள், ''என்னம்மா பூவு! எப்படி இருக்கே?'' எனக் கேட்டு, பூவரசியைத் திரும்பிப் பார்க்க வைத்தனர்.

''வாசு அண்ணே! எப்படி இருக்கீக? இப்பத் தான்... எங்க வீட்டுக்கு வழி தெரிஞ்சதோ?'' என வியப்பில் ஆரம்பித்து, கோபத்தில் முடித்தாள் பூவரசி!

''கோவிச்சுக்காதே பூவு! கொஞ்சம் வேலையா போச்சு!'' என்று தணிவாய் பேசியவன், ராஜதுரை ஏதோ சொல்ல முன்வரவும், ''இப்பத்தான், உன் அண்ணங்காரனை சமாளிச்சு... கூட்டியாந்தேன்... நீ திரும்ப இழுத்துவிடாதே தாயி!'' என்றான் நண்பனின் தோளில் கைபோட்டு, இறுக்கியபடியே!

''ஆமா... எங்கண்ணனைச் சமாளிக்கிறது பெரிய விஷயமாக்கும்! அதுவும்... ''நீங்க'' சமாளிக்கிறது பெரிய விஷயமாக்கும்! என்னமோ தெரியல... உங்கட்ட மட்டும் ராசண்ணே நல்லாவே பம்முது!'' என்று கழுத்தை நொடித்தாள், பூவரசி!

நண்பர்கள் இருவரும் வாய்விட்டுச் சிரிக்கையிலேயே, ''என்னையும் சேர்த்துக்கிறது!'' என்று மனைவியின் அருகே வந்தான், அன்பழகன்.

''அவுகளோட சேர்ந்தா... எம் பொழப்பு கெட்டுப் போவும்! வேணாஞ்சாமி! வேணாம்!'' என்று பூவரசி சிரித்தப்போதும்,

''மாப்பிள, இவன் எங்க பங்காளி வாசுதேவன்! பட்டணத்தில தான் பணம் கொட்டும்ன்னு அங்க போய், சீட்டைத் தேச்சுக்கிட்டுத் திரியுறான்!'' என்று தன் நண்பனை, அறிமுகப்படுத்தி வைத்தான், ராஜதுரை.

''பங்காளி மட்டுமில்லைங்க... கூட்டாளிங்க! யாரை நம்புனாலும்... நம்பலாம்... இவுக ரெண்டு பேரையும் நம் பிடவே கூடாது!'' என எடுத்துக் கொடுத்தாள், பூவரசி.

''எங்க மேல என்ன தாயி காண்டு!'' என்றபோதும், அவளது வார்த்தையை மறுத்துப் பேசவில்லை இருவருமே.

''ராசண்ணே... ராசண்ணேன்னு உருகுற உங்க தங் கச்சியே... இப்படி நொடிச்சுக்குதே... என்ன மச்சான் விஷ யம்?'' என அன்பழகன், ஆர்வம் பொங்கக் கேட்கவும்,

''அது ஒண்ணுமில்லை, மாப்பிள! பொறந்ததில இருந்து ஒண்ணா வளந்தவைங்க! அம்புட்டுத்தேன்!'' என்றான் ராஜதுரை, சமாளிப்பாய்.

ஆனால், பூவரசி விடுவதாய் இல்லை!

''நானும் பொன்னும் தான் ஒண்ணா வளந்தோம்! ஆனா... எங்க ரெண்டு பேரையும் சேரவா விடுறீங்க... இப்பக் கூடப் பாரு.. நீ மட்டும் ஒங்கூட்டாளியைக் கூட்டியாந்து, அவுககிட்ட அறிமுகப்படுத்துறே! ஆனா... அவளை வர விட்டியா?'' எனத் தன் எரிச்சல் முழுதையும், கொட்டிவிட்டாள்!

''ஹோ! என்னடா பூ... கல்யாணத்தன்னைக்குக் கூட, இவ்வளவு காண்டா இருக்குதேன்னுட்டுப் பார்த்தேன்! இதேன் விஷயமா? ஏம் பங்காளி... என்ன பண்ணீரு?'' என்றான் வாசு, ராஜதுரையின் முகம் திருப்பி.

''விடுய்யா! விடுய்யா! அதான்... ஏதோ சொல்லு துன்னா... நீ வேற வேட்டியை மடிச்சுக்கிட்டு வந்துடுவே வா... வா... நாம பந்தியைப் போய்ப் பார்ப்போம்!'' என்று அங்கிருந்து லாவகமாய், நழுவிப் போனான், ராஜதுரை.

பந்திக் கட்டுக்கு வந்த பின்னர், நேரம் நேரமாய் இல்லாமல், மின்னலாய் மாறிப் போனது!



நண்பர்கள் இருவரும், மூச்சு விட்டுக் கொண்டு நிமிர்ந்தபோது, அந்த முறுக்கு மீசை வந்து சேர்ந்தது!

''அண்ணே! ரொம்ப நன்றிண்ணே... எல்லாரையும் பார்த்துப் பார்த்து கவனிச்சீங்கலாட்டு இருக்கு! எல் லாரும் ரொம்ப திருப்தியா போறாங்க!'' என்று ராஜதுரை, முதலிலேயே பிட்டைப் போட்டுவிட,

''அட விடுப்பா! நமக்குள்ள என்ன நன்றி!'' என்று பெருந்தன்மையாய் பேசிய மீசை,

''எனக்கு... உங்களைப் பார்த்துத் தான்யா சந்தோசமா இருக்கு! ஒரே சாதி தான்னாலும்.. நீங்க ரெண்டு பேரும்... வேற வேற பிரிவு ஆளுக! ஊருக்குள்ள அம்புட்டுப் பேரும், உட்பிரிவை வைச்சு... நா ஒசத்தி... நீ தாழ்த்தின்னு... சண்டைக்கு அலையில, நீங்க ரெண்டு பேரும் இப்படி அங்காளி... பங்காளியா திரியுறது, மனசுக்கு ரொம்ப இதமா இருக்குதுய்யா!'' என்றார் மனதார. ஆனால், அவர் கூறிய நேரம் - நல்ல நேரமா? கெட்ட நேரமா? ஆண்டவனுக்கே வெளிச்சம்!

அவரது, இப்போதைய வார்த்தை நூறு சதவீதம் உண்மை!

ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்றாலும், ராஜதுரை யும் வாசுதேவனும் வெவ்வேறு உட்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள்! ராஜதுரையின் பிரிவு ஆட்கள், பரம்பரை பரம்பரையாக ஊர் தனக்காரர்களாய் இருப்பவர்கள்! வாசுதேவனின் பிரிவு ஆட்களோ, அவர்களுக்கு ஒரு படி கீழே தான்! சொத்திலும் சரி, உரிமை... பெருமைகளிலும் சரி! இந்த ஏற்றத் தாழ்வினால், ஊரில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் பிரச்சனைகள் உருவானபோதும், ராஜதுரையும் வாசுதேவனும் இது நாள், அந்தப்

பிரச்சனைகளில் தங்களைச் சிக்க வைத்துக் கொண்ட தில்லை! இளமைக் காலம் தொட்டு, ஓர் அழகிய நட்பு இருவருள்ளும் இருந்து வந்தது!

சரியான வார்த்தைகளில் குறிப்பிட வேண்டுமென்றால், இரு வேறு குணவடிவங்களைக் கொண்டிருந்த போதும், இருவருமே தங்கள் நட்பைப் போற்றி வளர்த்தனர்! அதன் ஒரு பகுதியாய், ''பங்காளி... வாய்யா! சாப்பிடு வோம்!'' என்று வாசுவை அழைத்தான், ராஜதுரை.

''இருய்யா! இன்னும் மாப்ள வீட்டுக்காரங்களை பொம்பளங்க பந்தி முடியல... முடியட்டும்!'' என்றான் அவனோ.

''அது பாடு... நடக்கட்டும்! அத்தாச்சி... மதினி எல்லாம் பார்த்துப்பாக! நீ வா... வந்து உக்காரு! பசிக்குதுய்யா!''

''ஆமா... அந்த சுண்டக்கா.. ச்சே ராமக்காவா? அந்தா... அதுவே... ஒரு இலையில உக்காந்து மொக்கிக் கிட்டு இருக்கு! இதில, அதான்... பந்தி விசாரிக்குது! இழுந்திரு! பங்காளி! நம்ம... வீட்டுக்கல்யாணத்தில, மாப்பிள வீட்டுக்காரங்களுக்கு முன்னாடி நாம சாப்பிட்டா... அசிங்கம்ய்யா!''

''ஆனாலும்... ரொம்ப புலம்புறடா! எம் தங்கச்சி கல் யாணத்துக்கே இப்படின்னா... ஒந்தங்கச்சி கல்யாணத் துக்கு என்ன செய்வியோ? மூணு நாளு பட்டினி கிடப்பப் போல!'' என்றான் ராஜதுரை. ஆனால், முணுமுணுப்பாக!

''என்ன சொன்னே?'' என வாசு காதைத் தீட்ட,

''ஒண்ணுமில்லை! வா... பந்தியை விசாரிப்போம்!'' என்று விட்டு நகர்ந்தான், ராஜதுரை.

ஒரு வழியாக, பந்தி விசாரணை முடியவும், நண்பர்கள் இருவரும் உணவுண்ண அமர்ந்தனர்.



கறி வகைகள் பரிமாறப்பட்டு, பிரியாணி பரிமாறப்பட விருந்த இடைவேளையில் ''பங்காளி! இங்கயே வந் துடுய்யா!'' என்றான் ராஜதுரை, வாசுவின் சென்னை வேலையை மனதில் வைத்து.

நண்பன் எதைக் குறிப்பிடுகிறான் என்பது புரிய, ''இல்ல பங்காளி! நமக்கு இதெல்லாம் சரியா வராதுய்யா! வானம் பார்த்து... கஞ்சி குடிக்க நம்மளால முடியாது!'' என்றான் வாசு, தீர்மானமாய்.

''இப்ப... விவசாயத்திலயும் எம்புட்டோ முன்னேற்றம் வந்துப் போச்சு, வாசு! நீ நினைக்கிற மாதிரி இல்லை!''

''மழையை நம்பி விவசாயம் இல்லைன்னு சொல்ல வரியா?''

''அப்படியில்ல வாசு! மழையை மட்டுமே நம்பி இருக்கலைன்னு சொல்லுறேன்! பம்ப் செட்டு... சொட்டு நீர் பாசனம்ன்னு...'' - ராஜதுரையை முடிக்க விடவில்லை, வாசுதேவன்.

''பம்ப செட்டாம்! பம்ப் செட்டு! அதை ஓட்ட கரண்ட் வேணாமாய்யா? ஒரு நாளைக்கு... பதினாறுல இருந்து பதினெட்டு மணி நேரம் கரண்ட் போவுதே? எதில பம்ப் செட்டை ஓட்டுவியாம்!''

ராஜதுரை பதில் சொல்லும் முன்னர், ''எனக்கு வெறுத்துப் போச்சுய்யா! என்னையும் ஒன்னையும் விடு! எங்கப்பாரும்... உங்கப்பாரும்... இந்த நெலத்தைக் கட்டிக்கிட்டுத்தானே அழுதாக! அப்படி அழுது... அழுது என்னத்த கண்டாக? சொல்லு? ஒண்ணு... ஒட்டுக்கா வெயில் கொழுத்தும்... இல்ல மழை அடிச்சு ஊத்தும்... அப்படியே பயிரா வந்துட்டாலும், அதை விக்குறதுக் குள்ள தாவு தீர்ந்து போவும்! வேணாம்ய்யா! நமக்கு ஒத்து வராது!'' என்றான், வாசுதேவன் முடிவாக.

முன்பே தெரிந்தது தான்! பள்ளிப் படிப்பை முடித்து விட்டு, ''விவசாயம்'' தான் விடிவு என்று ராஜதுரை முடிவு செய்ய, ''பொறியியல்'' தான் வாழ்வு என்று நின்றான், வாசுதேவன்!

அங்கே ஆரம்பித்தது, இருவரது எண்ண வேறுபாடு களும்! கூடவே, கருத்து மோதல்களும்!

என்னதான் கூடிக் குலாவினாலும், இருவருக்கும் மற்றவரது எண்ணப் போக்கின் மீது, ஓர் அலட்சியமும், ''புளிச்சப் பழத்தைத் தேர்ந்தெடுத்து விட்டானே?'' என்ற கோபமும் அணையா நெருப்பாய் இருந்து கொண்டே இருந்தது!

அதற்குள், இலையை மட்டன் பிரியாணி நிரப்பிவிட, ''சரி பங்காளி! நல்ல நாள்... பெரிய நாள் அதுவுமா... நாம சண்டை போட வேணாம்! நீ சாப்பிடு!'' என்று நண்பனின் தோளில் தட்டினான், ராஜதுரை.

''சண்டை என்ன சண்டை, பங்காளி! எனக்கு விவசாயம் பிடிக்கல... ஒனக்குப் பிடிச்சிருக்கு! ஒனக்குப் பிடிச்சதை நீ செய்யு! எனக்குப் பிடிச்சதை நா செய்யு றேன்! அம்புட்டுத் தேன்!'' என்ற வாசு, சோற்றில் கை வைப்பதற்கும்,

ஒரு வாண்டு ''வாசண்ணே! இந்தாங்க!'' என ஒரு காகிதத்தை, வாசுவிடம் நீட்டுவதற்கும் சரியாக இருந்தது!

''யாருடே?'' என ராஜதுரை, கண்ணடிக்க,

''நீ வேற சும்மா இருய்யா! நம்ம ஊரு... புள்ளக ஒண்ணுக்கும் அம்புட்டு தைரியமெல்லாம் கிடையாது!'' என்று சிரித்தபடியே காகிதத்தைப் பிரித்தவன்,

''இன்னும் அஞ்சு நிமிஷத்தில நீ வீட்டில இருக்கணும்! இல்ல... மவனே...'' என்ற வாக்கியத்தைப் படித்ததும்,



''ஹைய்யோ!'' என அலறினான். கூடவே, ''நா வாரேன், பங்காளி! பொறவு பாப்போம்!'' என இலையி லிருந்து எழப் போனான்.

''ஏய்... ஏய்... நில்லு! எங்கய்யா? யாரு... என்ன... எழுதினா?''

''எம் ஒடன்பொறப்பு எழுதி... அனுப்பியிருக்கு!''

''அதானே பாத்தேன்... என்னடா புலி இந்தப் பம்மு... பம்முதேன்னு...'' எனக் கிண்டல் செய்தபோதும், வாசுவைப் பிடித்திருந்த கையை விடவில்லை ராஜதுரை! விட்டால், ஓடியே போய் விடுவானே! உடன் பிறப்பிற்கு அவ்வளவு பயந்தவன்!

''நீ வேற விடு... பங்காளி! வீட்டுக்குப் போனா... என்ன ஏழரையைக் கூட்டப் போறாளோ!'' - நிஜமாகவே பயந்தான், வாசுதேவன்.

''ஆமா... இந்தப் பிட்டை உன் ஒடன்பொறப்பு தான் எழுதியிருக்குன்னு எப்படிக் கண்டுபிடிச்சே?'' - அதிமுக்கியமான கேள்வியை, ராஜதுரை கேட்க,

''ரொம்ப முக்கியம்! அவ கையெழுத்து எனக்குத் தெரியாதாக்கும்! அவ கண்ணாட்டமே... பெருசா... பெருசா... கோழி முட்டை மாதிரி...'' என இழுத்தவன், தானே சிரித்தான்.

கூடச் சேர்ந்து சிரித்த ராஜதுரையின் பிடி, லேசாய் தளரவும், ஒரே ஓட்டமாய் ஓடியே போனான், வாசுதேவன்!

''பங்காளி! எம் வீட்டு விருந்துல இருந்து... இப்படிப் பாதிலேயே ஓடிப் போறது நல்லதில்லை! சொல்லிப் புட்டேன்!'' என்று ராஜதுரை, எச்சரித்ததெல்லாம் வாசுவின் காதிலேயே விழவில்லை.

மூச்சிரைக்க வீட்டு வாசலில் வந்து நின்றவனை, இடுப்பில் கை வைத்து முறைத்தபடி வரவேற்றாள், அவனது தங்கை பொன்மலர்!

# 3



''பொன்னு...'' - குரலிலும் கண்ணிலுமாய் வாசு கெஞ்சி நிற்க,

''எங்க மேஞ்சுட்டு வர்ரீக தொரை?'' என முறைத்தாள், பொன்மலர்.

''என்ன பொன்னு... நம்ம பூவுக்குக் கல்யாணம்லடா... அங்கதான்...''

''பெரிய பூவு! அவளுக்கு ஏவலுக்கு மட்டும் நா வேணும்... காரியம் முடிஞ்சதும் என்னைய கண்டுக்கக் கூட இல்ல... நீ என்னடான்னா அங்க போயி.. மொக்கிட்டு வரே?''

''ஏய்... அண்ணே சாப்பிடவே இல்ல, பொன்னு! நிஜம்!''

''பொய் சொல்லாதே! வாய் புழுத்துப் போவும்!''

''நெசம்டா தங்க ராஜாத்தி! நா இலையில உட்கார்ந்தேன்... நீ கூப்பிட்டு விட்டே!''

''ஹோ! அப்போ... நா தான் ஒங்கூட்டாளியோட சோறு உண்ண விடாம பண்ணிட்டேன்னு சொல்லுறே? அப்படித்தானே?''

''இல்ல... இல்ல... அப்படியில்ல!''

''பின்ன எப்படி? அந்த ஆளு... என்னைய நாயின்னு சொல்லாம சொல்லி... விரட்டி விட்டான்! ஆனா... நீ அவனோட கொஞ்சிக் குலாவி... ஒரே இலையில விருந்து உண்ணுட்டு வரே?''



''நெசமாலுமே... சாப்பிடலை பொன்னு!''

''சரி... சாப்பிடலை! ஆனா... ஊர்ல இருந்து வந்ததும் வராததுமா எதுக்கு அங்கன போனே?''

''அதுக்குத் தானே பொன்னு... சென்னையில இருந்து வந்தேன்!''

''அப்ப.... என்னைய பார்க்க வரல... அந்த ராச தொரையத் தேன் பார்க்க வந்திருக்கே?'' - இடுப்பில் கை வைத்து, குரலில் ஏற்ற இறக்கத்துடன் அவள் கேட்ட தினுசில், லேசாய் சிரிப்பு எட்டிப் பார்த்தது!

ஆனால், தங்கையின் கோபமும் அவனுக்குப் புரிந்தது! இந்த துரை ஏன் தான் இப்படிச் செய்கிறானோ? எப்போது பார்த்தாலும், பொன்மலருடன் சண்டை தான்... சச்சரவு தான்! ''ஏன்டா?'' எனக் கேட்டால், ''என்னமோ... அவளைப் பார்த்தாலே... வம்பு வளக்கணும் போலவே இருக்கு, பங்காளி!'' என்று நக்கலாய் சிரிப்பதோடு நிறுத்திக் கொள்வான்!

ஆனாலும், அவனை மட்டும் குற்றம் சொல்லிப் புண்ணியமில்லை! பூவரசி ''வாசுண்ணே... வாசுண்ணே!'' என்று எவ்வளவுக்கு எவ்வளவு பாசம் காண்பிக்கிறாளோ, அதற்கு எதிர்மாறாய் பொன்மலருக்கு ராஜதுரையைப் பிடிக்காது! ''ஏன் பொன்னு? அவனைக் கண்டாலே எரிஞ்சு விழுகுறே?'' என்றால், ''அவுக அப்பாரு ஊர்த் தனக்காரருன்னு அவனுக்குத் திமிருண்ணே! பெரிய மைனர்ன்னு மனசில நினைப்பு! எப்பப் பாரு... பார் வையில ஒரு எக்காளம்... இளப்பம்... எனக்கு அவனைக் கண்டாலே எரிச்சலா வருது!'' என்று கடுப்புப் பீரங்கியை முழங்க விடுவாள், பொன்மலர்!

காலில் விழாத குறையாக, தங்கையை சமாதானம் செய்தவன், ''நேத்து ராத்திரி சாப்பிட்டது, பொன்னு! சாப்பாடு எடுத்து வையுடா!'' என்று அவளது பலவீனத்தைச் சரியாகப் படித்துக், காய் நகர்த்தியதும் தான், பொன்மலர் தளர்ந்தாள்!

''நேத்து ரவைக்குச் சாப்பிட்டிதா? மணி... என்னாவுது தெரியுமா? ஒண்ணரையாகி... பத்து நிமிஷம் முடிஞ்சு போச்சு! இன்னுமா சாப்பிடாம இருக்கது? உம் பங்காளியைப் பார்த்துட்டா... உனக்கு சோறு... தண்ணி வேணாமே? ச்சே!'' என்று புலம்பிக் கொண்டே, உணவு எடுத்து வைத்து, தமையனுக்குப் பரிமாறினாள்.

உணவை ரசித்து உண்டவன், ''இங்க வந்தா தான்... பொன்னு... சாப்பிடவே முடியுது! அங்கெல்லாம் சாப் பாட்டைப் பார்த்தாலே... வெறுப்பா வருது!'' என்று தங்கையின் கன்னம் தட்டிச் சொல்லவும், பொன் மலருக்கு உருகி விட்டது!

''ஏண்ணே... அப்படி வேலை பார்க்கணுமா என்ன? ஊரோடவே வந்திடுண்ணே!'' என்றாள் உண்மையான பாசத்துடன். அன்னையற்றவர்கள் அன்றோ? ஒரு வருக்கு ஒருவர், ஆதரவாய் இருந்து பழகிய நெஞ்சம், மற்றவரது பிரிவை எண்ணி வருந்தியது!

தங்கையின் பாசம் புரிந்தபோதும், ''நீயும்... துரையை மாதிரியே ஆரம்பிக்காத பொன்னு! என்னால... இங்க கிடந்து லோல்பட முடியாது!'' என்று முகத்தில் அடித்தாற் போல் பதில் கூறினான், வாசுதேவன்.

பொன்மலரின் தலை கவிழ்ந்து விடவும், ''அவனுக்குத் தான் புரியலைன்னா... நீயுமா பொன்னு? இந்த சோத் துக்கும்... பாசத்துக்கும் பார்த்துக்கிட்டு, ஊரோட



வந்துட்டா, பணத்துக்கு என்ன பொன்னு பண்றது? நம்ம நெலத்தில... கட்டிக்கிட்டு இருக்கிற வீட்டை முடிக்க வேணாமா? அந்த வீட்டைக் கட்டித்தான் நாம வாழ ணும்ன்னு இல்லை... இந்த வீடு இருக்கு! ஆனா.. இந்த ஊர்க்காரைங்க எல்லாரும் மூக்கில விரல் வைக்கிற மாதிரி... மச்சு வீடும்... நில புலமுமா விஸ்ராந்தியா இருக் கணும், பொன்னு! அதுக்கு... பணம் வேணும்! அந்தப் பணம்... இங்க வெயிலையும் மழையிலையும் வருஷக் கணக்கா காஞ்சாலும் வராது! இங்க... ரெண்டு வரு ஷத்தில சம்பாதிக்கிற பணத்தை... நாலே மாசத்தில நான் அங்க சம்பாதிச்சிடுவேன்! அதுவும்... குளுகுளுன்னு ஏ.சி. ரூம்ல உட்காந்துக்கிட்டே!'' என்றான் வேகம், கோபம், ஆசை, சந்தோசம் என்று எல்லா உணர்ச்சி களையும் குரலில் கலவையாய் கொட்டி.

''என்னமோ போ! நா... என்ன சொன்னாலும்... கேட் கப் போறதில்ல! பொறவு என்ன?'' என்றபடியே, உண வுப் பாத்திரங்களை எடுத்து வைத்த பொன்மலருக்கு, அவனது எண்ணங்கள் புரியாமல் இல்லை!

ஏனோ, ராஜதுரையிடம் நட்பு பாராட்டியபோதும், அவர்களை விட ஒரு படி மேலே வந்துவிட வேண்டும் என்ற வெறி, தன் தமையனிடம் இருப்பது அவளுக்குத் தெரிந்த விஷயமே!

அது மட்டுமில்லாமல், தனக்குமே அந்த எண்ணம் இருந்ததால், அண்ணனை மேற்கொண்டு எதுவும் சொல்லாமல் அங்கிருந்து நகர்ந்தாள்!

அவள் உணவுப் பாத்திரங்களைக் கொல்லையில் போட்டுவிட்டுத் திரும்புகையில், அவளது தகப்பனார் வேலுகருப்பன் வந்து சேர்ந்தார்.

வந்தவர், சென்னையிலிருந்து வந்த மகனிடம் அவனது நலத்தை விசாரித்துவிட்டு, மகளிடம் திரும்பினார்.

முகத்தில் கோபரேகைகள் அழுத்தமாய்ப் பதிய, ''ஏய்... கழுத! இன்னைக்கு... அந்த சந்தோசம் மகக் கலி யாணத்துக்குப் போனியா?''

''நா ஒண்ணும்... சந்தோசம் மகக் கலியாணத்துக்குப் போவல! என் பிரெண்டு பூ கலியாணத்துக்குப் போனேன்!'' எனத் துடுக்காய் பதில் சொன்னவள், ''அதுவும் தான் எங்க போனேன்? தொரத்தி விட்டாய்ங்களே!'' என்றாள் முணுமுணுப்பாக.

''இந்த வாய் வக்கணைக்கு ஒண்ணும் குறைச்ச லில்லை... பொட்டப் புள்ள மாதிரியா திரியுறே? வண்டி மாடு கணக்கா... கொண்டி இல்லாம சுத்திக்கிட்டு!'' என்று அவர் பலமாய் சத்தம் போட, அண்ணனின் அருகே சென்று நின்று கொண்டு, ''பாருண்ணே! எப்பப் பாரு... என்னைய வஞ்சுக்கிட்டே இருக்குறாரு!'' என்று செல்லம் கொஞ்சினாள், பொன்மலர்.

''ஏன் அப்பச்சி... விடுங்க! ஒட்டுக்கா படிச்சதுங்க... போனா என்ன தப்பு?'' என்று தங்கைக்குப் பரிந்து வந்த வாசுதேவன்,

''நானும் தான் கல்யாணத்துக்குப் போனேன்! அதில என்ன தப்பு?'' என்றான், தலைமகனாய்.

''நீ போலாம்டா! நம்ம பிரிவு ஆம்பிளைங்க... அவுக பிரிவு விசேஷத்துக்குக் கூடிக்கிறது தேன்! ஆனா... பொம்பளை கூடக் கூடாது! இந்தக் கழுத... அங்க போயிருக்கு! போனது... சும்மாவா இருந்திருக்கு? அந்த ஆத்தாக்காரி இருக்கா இல்ல... அவட்டையும் வம்பு வளத்துட்டு வந்திருக்கு! அந்தப் பய... அவன் தேன் உங்கூட்டாளி... அவன்ட்டையும் நின்னு பேசியிருக்கு! கழுத! கழுத! கேவேறுக் கழுத! என்ன சொன்னாலும்... கேட்டுத் தொலையுது இல்லையே?'' என்றார் அவர் தலையில் அடித்துக் கொள்ளாத குறையாக.

''சந்தோசமாம்... சந்தோசம்... அந்த கிழவிக்கு... பேசாம துக்கம்ன்னு பேரு வச்சிருக்கலாம்! யப்பே! என்னமா பேசுது?'' - கழுத்தை வேகமாய் நொடித்தாள், பொன்மலர்.

''அதோட வாய் தான் நமக்குத் தெரியுமே? அப்புறம்... எதுக்கு அங்க போறவ? போனதுமில்லாம... சண்டை இழுத்திட்டு வரவ?'' என வைதார், தந்தையார்.

பொன்மலர் ஏதோ பேசத் தொடங்கவும், ''பொன்னு! இனி, அந்தப் பொண்ணுக்கு... மறு வீடு... சீமந்தம்... வளைகாப்பு... புள்ள பொறப்புன்னு... மாசாமாசம் எதுனா விசேஷம் வரும்! சும்மா அங்க போற வேலை வச்சிக் கிடாத! அப்புறம்... ஒரு சொல்லுக்கு இடமாகிப் போவும்! சொல்லிப்புட்டேன்!'' என்றார் வேலு, கறாராக.

கூடவே, ''வானம் சும்மா கருத்துக்கிட்டு வரையிலேயே, வெள்ளம் வந்து ஊரையே அடிச்சுக்கிட்டுப் போன மாதிரி பேசுவாய்ங்க! இதில... நாமளே.. வெள்ளத்தை உருவாக்கி விட்டுடக் கூடாது!'' என்றார் எச்சரிக்கை மேலோங்க.

''என்னப்பா... என்னமோ, ஜாதி விட்டு ஜாதி கல்யாணம் பண்ண மாதிரி பேசுறீக!'' - எப்போதும் போல், வாய்த் துடுக்காய் விழுந்து விட்டன வார்த்தைகள்!

அவ்வளவு தான், தந்தையும் தமையனும் சிலிர்த்து எழுந்து விட்டனர்!

''ச்சீ, கழுத! வாயைக் கழுவு! சாதி... விட்டு சாதி கலி யாணம் பண்றாளாமே! புள்ளயாவே வளத்திருக்கேன்னு...

என்னைய ராட்டிப் புடுவாய்ங்க!'' - என்று வேலு, ருத்ரதாண்டவமாட.

''என்ன பொன்னு... பேச்சு இது?'' என்று அதிர்ந்து நின்ற வாசுதேவன்,

பொன்மலர் மறுத்துப் பேசும் முன்னர், ''சாதி விட்டு சாதி கூட பரவாயில்லை பொன்னு! ஒரே பிரிவுக்குள்ள... கலியாணம்கிறது கூடவே கூடாது! பங்காளி முறை... தங்கம்! பங்காளின்னா... ஒண்ணு விட்ட அண்ணன் மொறைக்காரைங்க!'' என்று விளக்கம் சொல்ல ஆரம்பித்தான்.

அந்த வாக்கியத்தில் சிங்கமென சிலிர்த்து, ''அடக் கேனக் குப்பா! சாதி விட்டு சாதி பரவாயில்லைன்னு சொல்லுதே? உன்னைய கொடுப்பேனே! நீயே அவ ளுக்குச் சொல்லிக் கொடு!'' என்று அங்கலாய்த்துப் போனார், வேலுகருப்பன்!

வாசு தந்தையின் கோபத்திற்குப் பதில் சொல்ல எத்தனிக்க, ''என்னைய பத்தி... என்ன நினைச்சீக? எவன் பின்னாடியும் ஓடிப் போறவன்னா? அப்படியாப்பட்ட குடும்பத்தில நா பொறக்கலை... தெரிஞ்சுக்கோங்க!'' என்று ஒரு அதட்டுப் போட்டாள், பொன்மலர்.

ஆண்கள் இருவரும் திகைத்துத் திரும்பையிலே, ''ஓ... அந்த தொரைராசுவோட ஓடிப் போயிருவேன்னு நினைச் சீக போல! செத்தா கூட சந்தோசமா சாவேனே ஒழிய... அந்த துக்கத்துக்கிட்ட போயி... இசிபட மாட்டேன்! சொல்லிப்புட்டேன்!'' என்றாள், காளி போல்!

''உண்ட சோறு... செரிக்க விடமாட்டா! அவகிட்ட போயி... வாழ்வேன்னு பயப்படுறாக! கருமம்! கருமம்! கருமாந்திரம்!'' என்று தலையில் அடித்துக் கொண்ட



வாறே, அவள் நகர, ஆண்கள் இருவருக்கும் லேசாய் சிரிப்புக் கூட வந்தது! கூடவே, ஒரு பலத்த நிம்மதியும்!

அந்தப் பேச்சு அதோடு முடியவில்லை. இரவு, வாசுதேவன் ஊருக்குக் கிளம்பும் முன்னர், அவனைப் பின் பக்கம் அழைத்துச் சென்ற பொன்மலர், ''ஏண்ணே... இன்னைக்கு அப்படிக் கேட்டே? நான் அந்த மாதிரி தப்பு செய்வேன்னு நினைக்கிறியா?'' என்றாள் மெல்ல.

''என்ன தப்பு... தங்கம்? நீ எதைச் சொல்லுதே?''

''சும்மா நடிக்காதண்ணே! அதேன்... இன்னைக்கு... நீயும் அப்பாரும் என்னைய காய்ச்சி எடுத்தீகளே... அது!''

''ஓ... அந்த பங்காளி முறையா?'' என்று நினைவுக் குக் கொண்டு வந்தவன், ''நீ தானே... பொண்ணு, சாதி... விட்டு சாதின்னு...'' என ஆரம்பிக்கவும்,

''நா ஏதோ... வாய் புளிக்காம சொல்லிப்புட்டேன்! அதுக்காவ... இப்படியா?'' என வருத்தம் கொண்டவள்,

''அந்தாளு... அதான் தொரராசு... நா அவனோட பேசுறது ஒனக்குப் பிடிக்கலையாண்ணே!''

''நீ எங்க பேசுறே? எப்பப் பார்த்தாலும்... சண்டை யில்ல போடுறே?'' என சிரித்தான் அண்ணன்.

''பொறவு என்ன? ஒனக்கே தெரியுது... எனக்கு அவனைக் கண்டாலே ஆவாதுன்னு... பொறவு ஏண்ணே?'' - மனம் ஆறவில்லை, பொன்மலருக்கு!

''அட விடுத்தா! இதுக்குப் போயி... மனசு வெசனப் பட்டுக்கிட்டு!'' எனத் தங்கையின் கன்னம் தட்டியவ னுக்கு, மனதின் ஓரத்தில் பெருத்த சந்தோசம்... நிம்மதி... ஓர் விடுதலை உணர்வு!

அந்த சந்தோசம் மாறாமல், அண்ணனை சென்னைக்கு வழி அனுப்பி வைத்தாள், பொன்மலர்.

வாசுதேவன், கிளம்பிச் சென்ற அரை மணி நேரத்திற்கு எல்லாம், பூவரசி பொன்மலரின் வீட்டிற்குள் பிரவேசித்தாள்!

முற்றத்தில் அமர்ந்திருந்த வேலுவிடம் ஓர் தலையசைவுடன் நகர்ந்தவள், தோழியைத் தேடி, கொல்லைக்குப் போனாள்.

அங்கே மாட்டுக்குத் தீவனம் வைத்துக் கொண்டிருந்த பொன்மலரை, ''பொன்னு...'' என அவள் அழைக்க,

சட்டென நிமிர்ந்த பொன்மலருக்கு, பூவரசியைக் கண்டதும் சந்தோஷமும் கோபமும் ஒருங்கே வந்து போயின!

''எங்கன வந்தவ?'' என அவள் இருந்த இடத்தை விட்டு நகராமலே கேட்க,

''ஏய்... கோபமாடி! மன்னிச்சுக்க... பொன்னு! அண்ணே பேசினதுக்கு... நா மாப்பு கேட்டுக்கிடுதேன்!''

''உங்க நொண்ணன் பேசுறது என்ன புதுசாக்கும்! நா... ஒம்மேல தான் கடுப்பா இருக்கேன்... சொல்லிப்புட்டேன்! ஒங்க அண்ணா சொன்னா என்னடி... என் பிரண்டு இங்க தான் இருப்பான்னு ஒரு வார்த்தை சொன்னியா நீயி? பேசாத ஓடிப் போயிரு!''

''சொன்னேன்டி... ஆனா...''

''என்ன ஆனா? மச்சானைப் பார்த்ததும் மறந்துட்டியாக்கும்?''

''ஹி... ஹி! நீ எப்படி... நிதம் நிதம் மொத மார்ச் வாங்குறேன்னு இப்பப் புரியுது! அறிவாளிடி... நீ!'' என்று அசடு வழிந்தாள், பூவரசி.

சட்டெனச் சிரிப்பு வந்துவிட்டது பொன்மலருக்கு அதற்கு மேல், கோபத்தை இழுத்துப் பிடிக்க முடியாமல்



''என்ன... ஊருக்குக் கிளம்பிட்டியா?'' என்றவாறே, தோழியிடம் வந்தாள்.

''ஆமாடி! இன்னைக்கு... அவுக ஊருக்குப் போறோம்! பொறவு... மறு வீட்டுக்கு ஒரு நாள் வருவேன்னு நினைக்குதேன்!'' என்றாள், பூவரசி அலுப்புடன்.

''ஏன்டி... அழுத்துக்கிடுதே! சந்தோசமா போயிட்டு வா!'' என அவளது தோள் தட்டினாள், பொன்மலர்.

''இந்தப் பொம்பளப் பொழப்பே... நாரப் பொழப்புடி! பொறந்து... வளர்ந்த ஊரை விட்டுட்டு... எங்கயோ போயி குப்பை கொட்டணும்!'' என்றவள்,

பொன்மலரின் ''நீயே குப்பை கொட்டினா... அண்ணன் போடுற குப்பையை யாரு அள்ளுறது? அதனால... குப்பை கொட்டாத... அள்ளு!'' என்ற கவுன்ட்டரில் முறைப்புக்குள்ளாகி,

''நீயாவது... சூதானமா இருந்துக்கோ! ஊரோட ஒரு மாப்பிள்ளையைப் பார்த்து... கட்டிக்கோ, பொன்னு!''

''இவ ஒருத்தி! எனக்குக் காலம் விரிஞ்சு இருக்குடி!''

''ஆமா... இவ பெரிய சமையவே செய்யாத பச்சப்புள்ள! நல்லா வாயில வந்திரும் சொல்லிட்டேன்! கல்யாணம் முடிச்ச பெரிய மனுஷி சொன்னா... கேட்டுக்கோ!'' என அதட்டும் போதே, பூவுக்கும் சிரிப்பு வந்துவிட்டது!

கூடச் சேர்ந்து சிரித்துவிட்டு, ''என்னைய விடு! நீ சூதானமா போ... அண்ணனோட சந்தோசமா இரு...'' என அறிவுரை கூறிய பொன்மலருக்குக் கண்ணை முட்டிக் கொண்டு கண்ணீர் வந்தது.

''பொன்னு...'' என பூவும் கலங்கிவிட,

''பூவு! நீ இல்லாம எப்படிடி... இருக்கப் போறேன்...'' என் பொன்மலரும் கலங்கி நிற்க, ''அக்கா... உன்னைய

ராசாண்ணே வரச் சொன்னிச்சு!'' என்று வந்து நின்றான் பொடியன்.

சட்டென மூண்ட எரிச்சலை அடக்கிக் கொண்டு, ''சரிடி! நீ கிளம்பு... அவுக எம்புட்டு நேரம் தேன் காத்துக் கிடப்பாக! போ... போ... வெருசா போ!'' எனத் தோழியை அனுப்பி வைத்தாள், பொன்மலர்.

வாயிலை நோக்கி நடந்த பூவரசி, ''பொன்னு... படிப்ப மட்டும் விட்டுறாதடி! என்னைய மாதிரி... அண்ணே சொல்லிச்சு... ஆட்டுக்குட்டி சொல்லிச்சுன்னு படிப்பைப் பாதிலேயே விட்டுடாதே! நல்லா படிடி... நாம படிக்கிற லேப் டெக்னிஷியன் படிப்புக்கு... நிறைய ஆஸ்பத்திரில உடனே வேலை கிடைக்குமாம்!'' என்று சொல்லிக் கொண்டே போனாள்.

தோழியின் குரலில் தென்பட்ட ஏக்கமும், ஆசையும் மனதை இம்சிக்க, ராஜதுரையை மனதார வைது தீர்த்தாள், பொன்மலர்!

ஆனால், அதே வசவு... அவளுக்கும் அவளது அண்ணனுக்கும் அடுத்த ஒரே வாரத்தில், ராஜதுரையிடமிருந்து கிடைத்தது! ஆனால், வசவாய் அல்ல! வஞ்சமாய்!



## 4

காலம் அதன் பின்னர் வேகமாய் சென்றது என்றே சொல்லலாம்!

பூவின் துணையில்லாமல் கல்லூரிக்குச் சென்று வருவது கஷ்டமாய் இருந்தபோதும், படிப்பின் மீது ஆசை



கொண்டிருந்த பொன்மலர் விருப்பத்துடனே படிப்பைத் தொடர்ந்தாள்!

அதுவும், அவள் படிக்கும் மருத்துவப் பரிசோதனை சம்பந்தமான படிப்பு, அவளுளிருந்த ஆர்வத்தைப் பன்மடங்காய் பெருக்கி விட்டிருந்தது! பலவிதமான பரிசோதனைகளும், அவற்றுள் அடங்கியிருந்த மருத்துவ மகத்துவங்களும், அவளை ஈர்த்தன!

செய்யும் வேலையைப் பிடித்துச் செய்தால், அது வேலையாகவே தோன்றாதில்லையா? அப்படித்தான், ஒரோர் நாளும் கல்லூரி சென்று வருவதை விரும்பியே செய்தாள், பொன்மலர்.

பொன்மலருக்கு, வாழ்க்கை தெளிந்த நீரோடையாய் சென்று கொண்டிருந்த வேளையில், வாசு கட்டிக் கொண்டிருந்த பண்ணை வீட்டு வேலைகள் முற்று பெறும் நிலையை எட்டின.

வாசு சம்பாதிக்கத் தொடங்கிய காலத்திலிருந்து கொஞ்சம்... கொஞ்சமாய் பணம் சேர்த்து, அவனது ஒரே கனவான 'பண்ணை வீட்டைக்' கட்டத் தொடங்கியிருந்தது, அக்குடும்பம்! வாசுவின் நெடுநாள் ஆசை என்றாலும், வேலுவிற்கும் பெரிதாய் ஓர் வீட்டைக் கட்டிவிட வேண்டும் என்ற தாகம் நெடுநாளாகவே இருந்தது! ஆகையால், மகன் பண்ணை வீட்டு ஆசையைச் சொன்னதும், மகளுக்காகவென்று சேர்த்து வைத்திருந்த நகைகளைக்கூட விற்றுவிட்டு, அவனுக்கு உதவினார் அவர்! எப்படியும் மகன் சம்பாரித்து, அவனது தங்கையின் திருமணத்தை நல்லபடியாக நடத்தி விடுவான் என்ற நம்பிக்கை, அவருக்கு!

ஆதலால், அவர்களது நெடுநாள் ஆசை வடிவம் பெற்றதில் மிகுந்த சந்தோஷமடைந்த வேலு,

சென்னையிலிருக்கும் மகனை அழைத்து, ''யய்யா, வாசு! நம்ம பெரிய வீட்டுக்கு... இன்னும் வெளிப்பூச்சு மட்டும் தான்யா பூசணும்! மத்த எல்லா வேலையும் முடிஞ்சிடுச்சு... ஊரைக் கூட்டி... ஒரு விருந்தைக் கொடுத் திட்டு, பொறவு பூசிக்கிடலாமா?'' என வினவினார்.

''பூசிட்டே கூப்பிட்டுக்கிடலாம் அப்பச்சி!'' என மகன் தன் எண்ணத்தைப் பகிர,

'இவன் என்னடா விவரமில்லாத தக்குறியா இருக்கு தான்! எல்லா வேலையும் முடிச்சிட்டு... சிங்காரமா எல் லாரையும் கூப்பிட்டா, கண்ணு பட்டுப் போவும்டா! வெளிப்பூச்சு இல்லாம பார்த்தாலே... வெந்து போவா னுங்க... இதில எல்லா அலங்காரத்தையும் பண்ணிட்டுக் கூப்பிட்டா... அங்கேயே வயிறெரிஞ்சு போயிடு வானுங்க!'' என்றார், தன் கூற்றிற்கான விளக்கமாய்.

வாசுவிற்கும் சரி, பொன்மலருக்கும் சரி, தந்தையின் வார்த்தை சரியென்று பட, ஒரு நல்ல நாளாய் பார்த்து, புது மனை புகு விழாவிற்கு ஏற்பாடு செய்தனர்!

நாள்... நேரமெல்லாம் குறித்தப் பின்னர், விழாவிற்கு அழைக்க வேண்டியவர்களின் பட்டியல் தயாரானது.

சாய்வு நாற்காலியில் வேலு அமர்ந்திருக்க, அவர் கால் மாட்டில் அமர்ந்திருந்த பொன்மலர், ஒரு பேப்பரில் அழைக்க வேண்டியவர்களின் பெயர்களை எழுத ஆயத்தமானாள்.

தாய் மாமன், சித்தப்பா, பெரியப்பா, அத்தை என்று நெருங்கிய உறவுகளின் பெயர்கள் எழுதப்பட்டதும், ''ஊருல யாரையப்பு கூப்பிடணும்?'' என்ற பொன்மலர்,

''யாரைக் கூப்பிடுறோமோ இல்லையோ... அந்தப் பழையனையும் அவன் மகனையும் அழைச்சிடணும்!''



என்றபோது அவர் குரலில் தென்பட்ட தீவிரம் மனதை ஏதோ செய்ய, ''ஏம்ப்பு'' என்றாள், மெல்ல.

''என்னம்மா என்னன்னு கேட்குதே? என்னைய எம்புட்டு வெசனப்பட வச்சிருப்பான்! தெரியுமா?'' என்ற வரின் எண்ணங்கள், கொஞ்சமாய் பின்னே நகர்ந்தன.

எத்தனையோ தருணங்கள் இருந்தபோது, ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை மட்டும் அவரால் மறக்கவே முடியவில்லை!

விவசாயத்திற்காக அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடும்படி, மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுப்ப தாய் இருந்த சமயம். சொந்தமாய் நிலம் வைத்திருந் தவர்கள் அனைவரும், ராஜதுரையின் வீட்டில் கூடியிருந் தனர்.

முதுமையை மனதில் வைத்து, ஊர்க்காரியங்களை மகனிடம் விட்டுவிட்டு, அதை மேற்பார்வை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தார் பழையம்பெருமாள். ஆதலால், ராஜதுரை தலைமையில் அந்தக் கூட்டம் நடந்தேறியது!

''இந்த மாசமே தண்ணியைத் தொறந்து விடச் சொல்லுப்பா... ராசு!''

''பயிரெல்லாம்... ஜீவனத்து போவுது!''

''அந்த பழையனூர் காரனுங்களுக்கு தண்ணி தொறந்து விட்டிருக்கானுங்க... நமக்குத் தொறந்துவிட... அந்த கலெக்டருக்கு வலிக்குதோ!''

''பக்கிப்பய! பணத்த வாங்கிட்டு... நீட்டின எடத்தில எல்லாம் கைநாட்டை வச்சுப்புட்டான்...''

''பணம் மட்டுமில்ல வெங்கய்யா... அவைங்க ஊர்ல ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.-ல ஜெயிச்சான்... அதான்..

அவனைப் புடுச்சு, அங்க இங்க காயை நகத்தி, காரியத்தைச் சாதிச்சுப்புட்டாய்ங்க!'' - ஆளாளுக்கு, ஒவ்வொன்று பேசிக் கொண்டிருக்க,

''அண்ணே! அவங்க... அவங்க பேசிக்கிட்டே இருந்தா... நாளைக்கில்ல... இன்னமும் ஒரு மாசமானா கூட, கலெக்டரைப் போய்ப் பார்க்க முடியாது! கொஞ்சம்... நான் பேசுறதைக் கேளுங்க!'' என்று சத்தமாய் விழுந்த துரையின் அதட்டலுக்குப் பின்னர், அங்கே துரையின் குரல் மட்டுமே ஒலித்தது!

''இந்த மாசமே தண்ணி வரதெல்லாம், சாத்தியப்படாத விசயம்!''

''அதனால, அடுத்த மாசம் பதினைஞ்சு தேதிக்குள்ள தண்ணி திறந்து விடுங்கன்னு, கேட்போம்!''

''பத்தில இருந்து முப்பது டி.எம்.சி. வரைக்கும் கேட்போம்...'' என அவன் பேச,

''பத்தா... பத்து எந்த மூலைக்கு? பயிரை விட்டு... களையைத் தான் அந்தத் தண்ணியில வளக்க முடியும்!'' என்று அவனை இடைமறித்தார், வேலுகருப்பன்.

சட்டென பேச்சை நிறுத்தி, அவரைத் தீர்க்கமாய் பார்த்த ராஜதுரை, ''உங்க அரை ஏக்கர் நெலத்தில விளையுறதுக்கு பேரு... பயிரோ!'' என்றான் எகத்தாளமாய்.

''ஏலேய்! என்ன எக்காளமா? உன்கிட்ட இருபது ஏக்கர் நிலம் இருந்தா.... அது உம் மட்டுக்கும்! எனக்கிருக்க சொத்தைப் பத்தி... நீ பேசாதே!''

''சொத்தாம்ல சொத்து! அரை ஏக்கரா நிலமும், ஒரு ஒத்த வீடும்... அதுவும் ஓட்டு வீடுமா இருக்கிற உமக்கே... நாக்கு எட்டூருக்குப் பாஞ்சா... எனக்கிருக்காது!''



''டேய் வேணாம்! வெட்டுக் குத்தாகிப் போவும்... சொல்லிப்புட்டேன்!''

''நீரு... கத்தி எடுத்துக் குத்துற வரைக்கும்... எங்-கையென்ன அல்வா சாப்பிட்டுக்கிட்டு இருக்கும்ன்னு நினைச்சீரோ? அருவா தீட்டிக்கிட்டு இருக்கும்யா!'' என அவன் மீசையை முறுக்கி விட்டுச் சொல்ல,

''வேணாம் ராசு! நீ பேசுறது நல்லா இல்ல...'' என அவரும், கூடவே ஊர் ஆட்கள் பலரும் ஆட்சேபிக்க ஆரம்பித்தனர்.

நிலைமையின் வீரியம் புரிய, பழையம்பெருமாள் இடைப்புகுந்து, இரு தரப்புக்கும் இடையே சமாதானம் செய்து வைத்தார்.

ஆனால், அவரது பேச்சு வார்த்தை ''சமாதானம்'' என்ற போர்வையைப் போர்த்தி இருந்தாலும், மகனைத் தாங்கியே இருந்தது!

''காணி நெலமா இருந்தாலும்... நம்ம ஊரு நெலம் ராசு! அப்படியெல்லாம் பேசக் கூடாதுய்யா!''

''என்னன்னாலும்... அவனும் அவன் மக்களும் அந்த நெலத்தில வர வருமானத்தை நம்பித்தானே... வயுத்துப் பொழப்பை ஓட்டணும்!'' என பரிதாபம் என்ற போர்வையில், வேலுகருப்பனைக் கொட்டியவர், ''அவன்ட்ட மாப்பு கேளுய்யா!'' என்றார் மகனிடம், தேன் வடிய.

அவனும், தந்தையின் கண் காட்டிய சைகையில் எதையோ உணர்ந்தவனாய் ''மன்னிச்சுக்கோங்க!'' என்றான் வேலுகருப்பனிடம்.

அந்த மன்னிப்பில் இருந்த திமிரும், அந்நியத்தன்மையும் வேலுவை முறைக்க வைக்க, ''அவனே இறங்கி வந்து மாப்பு கேட்குதான்... நீ என்ன ஜல்லிக்கட்டுக் காள

மாதிரி முறுக்கிட்டு இருக்கவ! விடு... வேலு! உட்காரு!'' என அவனது கைப்பிடித்து, அமர வைத்தனர், ஊர் மக்கள்.

ஆனால், வேலு எண்ணியதுபோல், அந்த மன்னிப்பு ஊர்ப்பார்வைக்காக மட்டுமே என்று நிரூபித்தான் ராஜதுரை.

அவன் நினைத்தது போல், ''பத்து டி.எம்.சி.'' தண்ணிக்கு மட்டும் மனு எழுதினான்.

யார் யார் மாவட்ட ஆட்சியரைப் போய்ப் பார்ப்பது என்ற கேள்வி வருகையில், ''பெரிய தனக்காரங்க போவோம்!'' என அவரையும், அவரது பிரிவு ஆட்களையும் ஒதுக்கினான்.

ஊர்க்காரர்களிடம் கையெழுத்து வாங்கும்போதும், வேண்டுமென்றே அவரிடம் கடைசியாய் கையெழுத்து வாங்கினான்.

ஒரு கட்டத்தில், பொறுக்க முடியாமல் ''வாசுவோட அப்படி தோஸ்தா பழகிட்டு... அவன் அப்பன்ட்டேயே இப்படி உன் அதிகாரத்தைக் காம்பிக்கிறியே, ராசு!'' என அவர் கேட்டுவிட,

நிதானமாய் அவருகே வந்தவன், மெல்ல ''அப்பு...'' என அழைத்து, ''நட்பு வேற.. அந்தஸ்து வேற அப்பு!'' என்றான் ஒரோர் வார்த்தைக்கும், போதுமான இடைவேளை விட்டு, அதே சமயம் அழுத்தமாய்!

அவனை அயர்ந்து பார்த்திருந்தவளுக்கு ஆறவே இல்லை!

''அந்தஸ்தாம்... அந்தஸ்து! நம்மளை... என்னமோ ஈனப்பய மாதிரில பேசிப்புட்டான்!'' என மனம் வெம்பிப் போனவரின் ரணம், இந்த வீட்டைக் கட்டத் துவங்கியதும் தான், கொஞ்சம் மட்டுப்பட்டது!



வீட்டில் துவங்கும் இந்த உயர்வு, நிலபுலன்... தோட்டம் துரவு என்று நீடித்து, அவன் கூறிய, அந்தஸ்துக்கு ஈடாய் தம்மை இட்டுச் செல்லும் என அவர் தீர்க்கமாய் நம்பினார்!

அதே நம்பிக்கை, வாசுவிடமும் இருந்தது!

தந்தையைப் போல், ராஜதுரை அவனை அவமானப் படுத்தியது இல்லை என்றாலும், ஏனோ அவனுக்கு ராஜதுரையை விடவும் தாம் ஒரு படி கீழே தான் என்ற எண்ணம் வியாபித்திருந்தது! சிறு வயது தொடங்கி, போடும் சட்டை... கொண்டு வரும் உணவு... நினைத்ததை நடத்திக் கொள்ளும் வல்லமை என ராஜதுரை அவனை ஒரு வகை, பண போதையில் ஆழ்த்தியிருந்தான் என்றே சொல்ல வேண்டும்!

பெரியவனானதும், அவனைப் போல் நிறைய பணம் படைத்தவனாய் வரவேண்டும் என்றே ஒற்றைக் குறிக்கோள் வாசுவிடம் நிறைந்து போனது! அந்தக் குறிக்கோள் தான்... பொறியியல் படிப்பை எடுத்துப் படிக்க வைத்தது! அதே குறிக்கோள் தான்... இந்த வீட்டையும் கட்ட வைத்தது!

இப்படியாக, வாசு மற்றும் வேலுவின் கனவு வீட்டிற்கான கிரகப்பிரவேசத்திற்கு, அழைக்கவென, வேலுகருப்பன் பழையம்பெருமாளின் வீட்டிற்குச் சென்றார்.

முறையாக, தேங்காய்... பழம்... பூவுடன் பத்திரிகையையும் வைத்து, ஊர்தனக்காரர் என்ற மரியாதையை மறக்காமல், பழையம்பெருமாள் குடும்பத்தை அழைத்தபோதும், அவர் முகத்தில் தோன்றிய பெருமை உணர்வு படர்வதை, அவரால் தடுக்க முடியவில்லை.

''கண்டிப்பா வந்துடுங்க... பங்காளி!'' என்று பழையம் பெருமாளிடமும்,

''ஆத்தா.. நீங்களும் த்தேன்... கிரகப்பிரவேசத்துக்கு பொம்பளைங்க கூடுறது தானே? வந்துடுங்க!'' என்று சந்தோசத்திடமும்,

''அப்பா.. ராசு! வந்துடுப்பா! வாசு... விழாவுக்கு ரெண்டு நாள் முன்ன த்தேன் வருவான்... அதனால நீ தானப்பா எல்லாம் பார்த்துச் செய்யணும்! பங்காளி முறைக்கு வரலைன்னாலும்... கூட்டாளி முறைக்கு வந்து செய்யுப்பா!'' என்றார் ராஜதுரையிடம்.

கூடவே, ''இதில அந்தஸ்து வராதில்ல... நட்புக்காக செய்யலாம் தானே?'' என அவனது தோள் தட்டிக் கேட்டவரின் குரலில், லேசாய் நக்கல்!

வினாடிக்கும் குறைவான நேரத்தில், ராஜதுரையின் கண்கள் கனலை ஏந்திச் செல்ல, சட்டென தன்னை நிலைப்படுத்தியவன், ''நா பாக்காம... யாருப்பு பாக்கப் போறா? நிம்மதியா போங்க... பாத்துக்கிடலாம்!'' என அவரது தோள் தட்டி, அனுப்பி வைத்தான்.

வேலுகருப்பனின் கால்கள், அவர்களது மச்சு வீட்டின் கடைசிப் படியைத் தாண்டக் காத்திருப்பது போல், ராஜதுரையின் வீட்டில் பெரும் சலசலப்பு எழுந்து அடங்கியது.

அந்த வீட்டில்... என்ன நடந்தது... என்ன பேசப் பட்டது... ராஜதுரை என்ன எண்ணினான் என்பதெல் லாம் அவர்கள் மட்டுமே அறிந்த விஷயம்!

✱ பத்து நாட்களுக்கு பின்னர் ✱

✱ செங்கப்படை கிராமத்தின் பெரிய சிவன் கோவில் ✱



துர்க்கை அம்மனுக்கு விளக்குப் போட்டுத் திரும்பிய பொன்மலரை, ''அடியே மல்லிகா... அந்த சந்தோசம்மா வருதுடி! வந்து நம்ம வாயைப் புடுங்குறதுக்குள்ள ஓடிரலாம்... வா!'' என்ற ஒரு பெண்ணின் பயந்த குரல் சிரிக்க வைக்க,

வாய் பொத்திச் சிரித்தவளின், மேனி சிலிர்க்கவென ''என்னடி கெக்கிலி... பிக்கிலி பல்லு இளிப்பு!'' என்ற சந்தோசத்தின் அதட்டல் ஓங்கி ஒலித்தது.

''ஆமா... இவுக பல்லு மட்டுமில்ல... நம்ம பல்லும் இவுகளைக் கேட்டுத் தான்... நாரணும்... ச்சே... இளிக்கணும்!'' என்று நொடித்தாள், பொன்மலர்.

''அடியே! பேச்சைக் கொற... சொல்லிப்புட்டேன்! இல்லைன்னா... வர மாமியாக்காரி... ராட்டிப்புடுவா (அடிப்பது)!''

''அதைப் பத்தி எம்மாமியா யோசிக்கட்டும்... நீங்க ஏன் யோசிக்கிறீக? நீங்க என்ன எம்மாமியாவா?''

''அட எங்கொப்புரானே! உன்னைய மருமவளா கூட் டினா, வெளங்கின மாதிரித் தேன்! மாடு மேய்க்கிறதை விட்டுட்டு... உன்னைய மேய்க்க வேண்டியது தேன்... ச்சீ கழுத!''

''இதப் பாருங்க... கோவில வச்சு... என்னைய மாடு கீடுன்னா நல்லா இருக்காது... சொல்லிப்புட்டேன்!''

''என்னடி செய்வே?''

''ஹான்... மாடு மேய்க்கிற உங்களை என்னைய மேய்க்க விட்டிருவேன்...''

''அடிக்கழுத! இவ இருக்க இருப்பென்ன? எம்பையன் இருக்க உசரமென்ன? அவனுக்கு... லட்சமும்...

கோடியுமா வருது? உனக்கு என்னடி தேறும்? உங்கப் பனும் அண்ணனும் பத்தாயிரம் போடுவாய்ங்களா? அது கூடப் போடுவாய்ங்களோ என்னவோ? அதான்... அற்பனுக்கு வாழ்வு வந்து... நெலம தெரியாம ஒரு வீட்டைக் கட்டி வச்சிருக்கீகளே... அதில அம்புட்டையும் அள்ளி விட்டிருப்பாய்ங்க! அதனால, உன்னைய கட்டின சேலையும்... வெறுங்கையுமா தான் அனுப்புவாய்ங்க!'' எனத் தன் ஆதங்கம், கோபம், பொறாமை என அனைத் தையும் கொட்டியவர்,

''ஆனா நீ இருக்கியே... உன் வாய்க்கு... போறன் னைக்குப் போயிட்டு... புதன்கிழமை வந்திடுவே! ராங்கிடி!'' என முத்தாய்ப்பு வைத்து முடித்தபோது, ஆனானப்பட்ட பொன்மலருக்கே, கண் கலங்கி விட்டது.

அவரை எதிர்த்து ஏதும் பேசாமல், விருட்டென அங்கிருந்து நகர்ந்தவள், வீட்டிற்கு வந்ததும் வராததுமாக, அண்ணனுக்கு அழைத்து விவரம் முழுதும் சொல்லி விட்டாள்.

அவள் சொல்வதைப் பொறுமையாய் கேட்டுக் கொண் டவன், ''என்ன பொன்னு இது? அன்னைக்கும் அப்படித் தான்... சும்மா வாய்த்துடுக்கா பேசினேன்னு... ஜாதி விட்டு ஜாதி அது இதுன்னு பேசினே... இன்னைக்கு என்னடான்னா... அந்தப் பொம்பளைட்டப் போயி... ச்சே! ஒனக்கும் வாய் ஜாஸ்தியாப் போச்சு, பொன்னு!'' எனக் கடிந்து கொண்டான், அண்ணன்.

''தப்புத் தேன்! அது... பேசப் பேச... எப்படியாவது அது வாயை அடைச்சுப்புடணும்ன்னு வெறி மாதிரி வந்திடுதுண்ணே! என்ன பேசுறோம்ன்னு யோசிக்காம பேசிப்புட்டேன்!''



''ஹ்ம்ம். சரி விடு!''

''ஆனா.. நான் என்ன எப்படி தப்புப் பண்ணிப்புட் டேன்... போறன்னைக்குப் போயிட்டு... புதன்கிழமை வந்திடுவேன்னு சொல்லுதுண்ணே!'' என்றபோது, அழுகை விம்மிக் கொண்டு வந்தது, பொன்மலருக்கு!

''சரி விடு பொன்னு! அந்தம்மா சொல்றதையெல் லாம் மனசில வச்சுக்கிட்டு... அதெல்லாம் நடக்குமா என்ன?'' என்று அவளைத் தேற்றிய அண்ணனுக்கு, சந் தோசத்தின் வார்த்தை முழுதாய் மெய்யாக விட்டாலும், பொன்மலர் புகுந்த வீட்டில் கஷ்டப்படப் போகிறாள் என்பது தெரிய வாய்ப்பில்லை!

## 5



புது மனைப் புகு விழாவிற்கு, ஒரு வாரமே இருந்த சமயம்.

ராஜதுரை, வாசுதேவனின் வீட்டிற்குப் பிரவேசித்தான்.

இரவு உணவிற்கு, கருவாட்டுக் குழம்பும், பருப்புத் துவையலும் செய்யலாம் என்ற முடிவுடன், பருப்புத் துவையலை அரைத்து எடுத்துக் கொண்டு, குழம்புக்கான மசாலாவை அம்மியில் அரைத்துக் கொண்டிருந்த பொன் மலர், வாயில் புறம் அரவம் கேட்கவும், ''தாவாரத்தில் யாரு?'' என்றாள் உரக்க.

செருப்பு கழட்டும் சத்தம் மட்டுமே பதிலாய் கேட்டது!

''அப்பச்சியோ?'' என எழுந்த கேள்வி, ''இல் லையே... வீடு கட்டிக் கொடுத்த கொத்தனாருக்கும்...

காண்ட்ராக்ட்டருக்கும் பத்திரிகை கொடுத்திட்டு வரேன்னு டவுனுக்குப் போயிருக்கிறவரு... இம்புட்டுச் சீக்கிரமா வந்திடப் போறாரு?'' என்ற எதிர்க்கேள்வியில் அடங்கிப் போனது.

''வேற யாரா இருக்கும்?'' என்ற எண்ணம் வந்தாலும், அரைத்துக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, எழவும் பொன்மலருக்கு மனம் வரவில்லை.

''ஏய்டி... மல்லிகா... நீயா?'' - பக்கத்து வீட்டுப் பெண்மணியோ என்ற நினைப்பில், இருந்த இடத்திலிருந்தே கூவினாள், பொன்மலர்.

ம்ஹூம். ஆள் உள்ளே நடந்து வரும் அரவம் கேட்டதே ஒழிய, மூச்சுப் பேச்சென்று எதுவுமே இல்லை!

''ஏய் கனகம்... நீயோ? இந்நேரம் என்னடி?'' என அடுத்த யூகத்தை அவள் எடுத்து வைக்க, இப்போது முற்றத்திலிருக்கும் காகிதங்கள் லேசாய் புரளும் சத்தம். அவ்வளவே!

மையென அரைத்த மிளகாயை வழித்து எடுத்தவள், அம்மிக் குழவியை நட்டங்குத்தலாய் வைத்து, அதில் ஒட்டியிருந்த மிளகாயையும் லாவகமாய் எடுத்தபோது, அடுக்களை அருகே அரவம்!

லேசாய் தண்ணீர் ஊற்றி, அம்மியிலிருந்த மசாலாவைக் கழுவி எடுத்தவள், ''எவடி அவ! என்னமோ... பேய்க்குப் பொறந்தவ மாதிரி வரவ?'' என்ற எரிச்சலோடு எழுந்தாள்.

கொல்லைப் புறத்திலிருந்து, அடுக்களைக்குள் நுழையும் வாயிலின் முதல் படியில் அவள் கால் வைத்தபோது, அடுக்களைக்குள் பாத்திரங்கள் உருட்டப்படும் சத்தம்!



''எந்த எடுப்பட்ட பூனை இது? வீட்டுக்குள்ளார வந்து... பானையை உருட்டுது!'' என சத்தம் போட்டுக் கொண்டே, கடைசிப் படியை கடந்து, அவள் அடுக்களைக்குள் நுழைவதற்கும், ராஜதுரை அடுக்களையிலிருந்து வாசல்புறம் கால் வைப்பதற்கும் சரியாக இருக்க, பொன்மலரின் கையிலிருந்த மசாலா, மசாலா அரைத்தத் தண்ணீர், பருப்புத் துவையல் எனப் பற்பல சிறந்த நறுமணப் பொருட்களால் ராஜதுரைக்கு அபிஷேகம் நடத்தப்பட்டது!

''ஏய்!'' என அவனும்,

''முருகா!'' என அவளும், அந்தத் தாக்குதலில் நிலை குலைந்து போய் நின்றது, அரை நிமிடம்தான்.

''மன்னிச்சுக்கிடுங்க!'' என முதலில் மன்னிப்புக் கேட்டது, மலர் தான்!

ஆனால் அவனோ, அவளது கண்களில் தென்பட்ட பயத்தைக் கண்டு சிரித்தவனாய் ''இன்னைக்கு இரவைக்குக் கருவாட்டுக் குழம்பா?'' என்றான், சட்டையில் கொட்டியிருந்த மசாலாவை லேசாய் மூக்கால் நுகர்ந்து,

அவன் திட்டுவான்... கத்துவான்... முறைப்பான் என்று லேசாய் பயந்து போயிருந்த பொன்மலருக்கு, அவனது இப்பேச்சு ஆச்சரியத்தை வரவழைத்தக் கையோடு, வாய்த்துடுக்கையும் மீட்டெடுத்து வந்திருந்தது!

''யினி... எங்க... கருவாட்டுக் குழம்பு வைக்கிறது... ராசக் குழம்பு த்தேன் வைக்கணும்...'' என நொடிப்பது போல், நக்கல் செய்தாள் பொன்மலர்.

''ஹஹா!'' - ஏதோ பெரிய நகைச்சுவையைக் கண்டு விட்டவன் போல் சிரித்த ராஜதுரை,

''ராசக்குழம்பு... இந்த ராசய்யனுக்குக் கிடைக்குமா?'' என்றான், பவ்யமாய். குரலில் மட்டும் பவ்யமில்லை, உடம்புமே, பாதி வரை குனிந்து, ஏகோபித்த பவ்யம் காட்டியது.

''என்னாச்சு இவனுக்கு? ஏகத்துக்கும் குழையுறானே?'' என்ற சந்தேகம், பொன்மலரின் மனதில் குடிவரும் போதே,

''என்ன கிடைக்காதா?'' என்றான் அவன் உதடு பிதுக்கி, முகத்தைப் பாவமாய் வைத்துக் கொண்டு.

''ஹான்... அது... அது...'' என இழுத்தவள், நாக்கைக் கடித்துத் தன்னைச் சமன் செய்து கொண்டு,

''ஒரு வாட்டி... மசாலா அரைக்கவே இடுப்பு கழண்டு போவுது. இதில... இன்னொரு வாட்டி எங்க அரைக்கிறது? இன்னைக்கு... அப்பச்சிக்கே வெறுஞ்சோறும் மோரும் தான்!'' என்றாள், ஆயாசத்தைக் குரலில் இட்டு நிரப்பி.

''எதுக்கு அரைக்கிரவ? இந்தா இதையே எடுத்துக்கோ...'' எனத் தன் சட்டையிலிருந்த மசாலாவை எடுத்து, அவள் தவற விட்டிருந்த பாத்திரங்களில் போடத் துவங்கினான்.

''அய்யே... என்ன பண்ணுறீக... விடுங்க...'' எனப் பதறியவள், ''நா பாத்துக்கிடுதேன்!'' என்றாள் வேகமாய்.

''சரி... அப்ப எடுத்துக்கோ...'' என்றவன், தோள்களை மட்டும் முன்னே நீட்டி, அவள் எடுப்பதற்கு உதவ முற்பட்டான்.

ஒரு நிமிடம், மூச்சு நின்று போனது, பொன்மலருக்கு!

இதுநாள் வரை, எந்தவொரு ஆண்மகனையும் இவ்வளவு அருகில் பார்த்ததில்லை, அந்த கிராமத்துப்



பெண்கிளி! சட்டையின் முதல் பட்டன் கழண்டிருக்க, அதிலிருந்து வெளிப்பட்ட முரட்டு ரோமங்களும், அகன்று விரிந்திருந்த தோள்களும் மனதை ஆட்டிப்படைக்க, ஸ்தம்பித்து நின்றாள் பொன்மலர்!

பொன்மலரின் நெஞ்சம் வேகமாய்த் துடிப்பது, ராஜதுரைக்கே கேட்டது போலும்!

முகத்தில் படர்ந்த வெற்றிச் சிரிப்பும், கண்களில் குடி புகுந்த கர்வமுமாய், அவளை விட்டு லேசாய் பின்னே நகர்ந்தான், அவன்.

''சரி... விடு... நானே எடுத்துத் தாரேன்...'' என்றவன், தன் சட்டையில் ஒட்டியிருந்த மசாலாவை எடுக்கத் துவங்கினான்.

அவன் எடுக்க எடுக்க, மசாலா ஒட்டியிருந்த இடம் சிகப்புத் திட்டுக்களாகவும், பருப்புத் துவையல் படர்ந்திருந்த இடம் ஈரத் தேக்கங்களாகவும், மசாலாவும் துவையலும் ஒருங்கே படர்ந்திருந்த இடங்கள்... மஞ்சள் நிறத் திட்டுக்களாகவும் காட்சியளிக்க, அவனது வெள்ளைச் சட்டையும் வெள்ளை வேஷ்டியும், ஹோலிப் பண்டிகைக்குச் சென்று வந்தவன் போல் அவனைக் காட்சியளிக்க வைத்தது!

''ஐயோ... சட்டையெல்லாம் கறையா போச்சுதே... கழுவிக்கிடுறீகளா?'' எனக் கேட்டாள் பொன்மலர்.

''ஹ்ம்ம்...'' என ஆமோதித்தவன், கொல்லைப் புறமாய் நகர்ந்தான்.

''இங்கனவே இருங்க!'' என அவனை வாயிலிலேயே நிறுத்திவிட்டு, கிணற்றுப் பக்கம் நகர்ந்தாள், பொன்மலர்.

வாளியைக் கிணற்றில் போட்டு, தண்ணீரை மேலே இழுக்க எடுத்த நேரத்தில், மனமெனும் கிணற்றில்

கேள்விகள் எனும் வாளிகள் ஆயிரமாயிரம் முறை உள்ளே சென்று வந்தன.

''இவன் எதுக்கு... இப்போ இங்க வந்தான்?'' என்ற பிரதானக் கேள்வியைச் சுற்றியே, மற்ற கேள்விகள் பயணப்பட்டன!

ராஜதுரை வீட்டிற்கு வருவது முதல் முறையல்ல! வாசு இங்கு இருக்கையில், வருவான் தான்! ஆனால், திண்ணையோடு முடிந்து விடும் பேச்சுக்கள். அப்படியே முக்கியமான விஷயமாக இருந்தாலும், முற்றத்திற்கு வந்து பேசிவிட்டுச் சென்று விடுவான்.

''தொர... இருக்க ஒசரத்துக்கு... நம்ம குச்சு வீடெல்லாம் எட்டுமா என்ன?'' என்று கழுத்தை நொடிப்பதோடு, அவன் வராததை ஒதுக்கி விடுவாள், பொன்மலர். அவன் வருவதை ஒரு பொருட்டாகவே மதித்ததில்லை அவள்!

ஆனால், இன்று! ஏகப்பட்ட அதிசயமாய் இருக்கிறதே!

முதல் அதிசயமாய், வாசு இல்லாதபோது... வீட்டிற்கு வந்திருக்கிறான்!

அடுத்ததாய், முற்றத்தோடு நின்று தான் ஒரு ''விருந்தாளி'' என்பதைப் பறைசாற்றுபவன், இன்று அடுக்களை வரை... ம்ஹூம் கொல்லைப் புறம் வரை வந்திருக்கிறான்!

முக்கியமானதாய், அவளிடம் வம்பு செய்யாமல், நன்றாகப் பேசுகிறான்!

''என்ன விஷயம்? என்ன விஷயம்?'' என்று ஒரே மண்டைக் குடைச்சலாய் இருந்தது, பொன்மலருக்கு.

மனக்கிணற்றில் விழுந்த வாளிக்குப் பதில் கிடைக்கவில்லை என்றாலும், தண்ணீர்க் கிணற்றில் விழுந்த



வாளி, தண்ணீர் ததும்பத் ததும்ப நிரம்பி நிற்க, அதை எடுத்துக் கொண்டுத் திரும்பியவள், அந்த நாளின் அடுத்த அதிர்ச்சியைச் சந்தித்தாள்.

கிணற்றுக்கு மிக அருகில், அவளை விட்டு இரண்டே அடிகள் விலகி நின்றவாறே, கைகளை நீட்டிக் கொண்டிருந்தான் ராஜதுரை.

''ஐயோ... நீங்க ஏன் இங்க வந்தீக?'' எனப் பதறியவளின் கண்கள், வேகமாய் அக்கம் பக்கம் மேய்ந்தன.

அடுத்த வீட்டுக் கொல்லையிலிருந்து, ஒரு உருவம் வேகமாய் வீட்டினுள் நுழைவது போல் தெரிய, ''அய்யோ... எவன்னு தெரியலையே! போய்... அந்தத் துக்கத்துக் கிட்டப் போட்டுக் கொடுத்திடுவாளுகளே! அந்த ராங்கி... என்ன பேச்சுப் பேசப்போறாளோ! சும்மாவே பேசறவ... அவ சீமந்தப்புத்திரன்... சீமைக்கு அரசன்... இங்க வந்து போனது தெரிஞ்சா... ராட்டிப்புடுவாளே!'' என்று பயந்து போனாள்.

எல்லாவற்றையும் விட, சந்தோசத்தை நினைத்தால் தான் பொன்மலருக்குப் பயமாக இருந்தது!

அவளது முகத்தில் படர்ந்த உணர்ச்சிகளை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தவன், ''என்ன... யாரும் பார்த்துப் புடுவாய்ங்களோன்னு நெஞ்சு... பதறுதா?'' என்றான் சிறு சிரிப்பும், கேலியுமாய்.

''எனக்கென்ன பயம்? பயப்படுறதுக்கு... நா என்ன கொலயா பண்ணுதேன்...'' என்று பொன்மலர் தலையைச் சிலுப்ப,

''ஆமா... கொல தாண்டி பண்றே... கிராதகி!'' என்று முணுமுணுத்தான், ராஜதுரை.

அவன் பேசியது காதில் விழாமல் போக, ''என்னது?'' என்றாள் பொன்மலர், மீண்டும்.

''ஒண்ணுமில்லை... கூதக்காத்து... நெஞ்சைப் பிசையுது! இதில நீ வேற... தண்ணிய மொண்டு... மொண்டு ஊத்துறியேன்னு சொன்னேன்... நெஞ்சுக்குழி சிலுத்துப் போவுது!''

''பொறவு... பேய்க் கணக்கா... ராவுல இப்படி வந்தா அப்படித் தேன் இருக்கும்!'' என நொடித்தாள், பொன்மலர்.

''வாய் இருக்கே வாயி! இந்தக் கிணத்துல இருக்கதைவிட, ஏகத்துக்கும் வார்த்தையை அடக்கி வச்சிருக்கும்!'' என்று சிரித்த அவனது குரலில், முன்னர் போல் ஓர் நக்கல் இல்லை. வேறு ஏதோ இருந்தது. ஆனால் என்னவென்று தான் மலருக்குப் புரியவில்லை.

ஒரு வழியாக, துணியைச் சுத்தம் செய்து கொண்டு, அவர்கள் வீட்டினுள் செல்கையில், அடுத்த வீட்டுக் கொல்லைப்புறத்தில் நடமாட்டம் தென்பட்டது. சட்டென தலைத் திருப்பிப் பார்த்தால், யாரையும் காணவில்லை.

''எவடி அவ?'' என்று சேலையை வரிந்து கட்டிக் கொண்டு, சண்டைக்குச் செல்லலாம் என்றால், இவன் வேறு இருக்கிறானே? எப்போது போய்த் தொலைவானோ? என்ற எரிச்சல் வர,

''என்ன சோலியா வந்தீக?'' என நேரடியாகவே கேட்டாள்.

ஊடுருவி விடுபவன் போல், அவளையே பார்த்தவன், ''வாசு போன் போட்டிருந்தான். விசேஷத்துக்கு எதுனா உதவி வேணும்னா செஞ்சு கொடுன்னு சொன்னான்... அதேன் வந்தேன்...'' என்றான் அவன் பதிலாய்.



''ஹோ! அதா சேதி! அப்பச்சி... டவுன் வரைக்கும் ஒரு சோலியா போயிருக்காக... வர ராவாகும்!'' என்றாள், அறிவிப்புப் போல.

''ஹோ... அப்படியா... தெரியாம போச்சுதே!'' என்ற வார்த்தைகளை வெளியிட்ட போதும், ''தெரிஞ்சுதானே வந்தேன்!'' என்ற தொனி, அக்குரலில் அள்ளித் தெளிக்கப் பட்டிருந்தது!

''சரி... அப்பு வரட்டும்... பார்த்துட்டேப் போறேன்...'' என அவன் கூறவும்,

''அப்பச்சி... வர நேரஞ்செல்லும்... நாள வெள்ளன உங்களை வந்துப் பார்க்கச் சொல்லுதேன்...'' என அவனை அனுப்ப முற்பட்டாள், பொன்மலர்.

''எனக்கு வேற தல போற சோலியில்ல... இருந்துப் பார்த்துட்டே போறேன்...'' என்றவன், முற்றத்திற்குச் சென்று, நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்து விட்டான்.

''ஐயோ... போவ மாட்டான் போலவே!'' என்று மனம் அடித்துக் கொண்டது, பொன்மலருக்கு.

ஏனோ, அவன் வீட்டினுள் இருப்பது நல்லதாகவே படவில்லை அவளுக்கு!

ஆனால், அவனோ ''மலரு... இந்த டி.வி.யைத் தட்டிவிட்டுப் போ'' என்றான், அதிகாரமாய்.

''ராசதொரையில்ல.... அதேன் அதிகாரம் தூள் பறக்குது!'' என எண்ணியவள், தொலைக்காட்சியை உயிர்ப்பித்தாள்.

தொலைக்காட்சியை அணைப்பதற்கு முன்னே, அவள் பார்த்துக் கொண்டிருந்த, பாடல்கள் மட்டுமே

ஒளிபரப்பாகும் சேனல், இப்போது உயிர்பெற்று ஓடத் துவங்கியது.

தொலைக்காட்சிக்கு உயிர்க்கொடுத்துவிட்டு, அவள் அடுக்களைப் பக்கம் காலடி எடுத்து வைப்பதற்கும், தொகுப்பாளியின் பேச்சு முடிந்து, பாடல் ஒளிபரப் பாவதற்கும் சரியாக இருந்தது.

''பூவே... இளைய பூவே! வரம் தரும் வசந்தமே! மடி மீது தேங்கும் தேனே!'' எனத் தொடங்கிய அப்பாடலை அவள் முதலில் கவனித்தாளில்லை.

ஆனால், அந்த வரிகளுக்குப் பின்னே வந்த ''எனக்குத் தானே... எனக்குத்தானே!'' என்ற வரிகளை, மலேசியா வாசுதேவனின் குரல் உச்சரிக்க,

''எனக்குத்தானே... எனக்குத்தானே!'' என்று உடன் பாடின, ராஜதுரையின் ஒலி உண்டு பண்ணும் கருவிகள்!

அந்த ஒலி, பொன்மலரின் ஒலி கிரகிக்கும் கருவி களுக்குள் ஊடுருவி, உடம்பைச் சிலிர்க்க வைக்க,

அவளது ஒளிவிடும் கண்கள், அவனது ஒளிப்பிழம்பு பார்வையோடு ஒன்றி நிற்க, அவனது ஒளிக்கிரகங்கள் மெட்டிசைத்துச் சென்றன!

அவன் கண்ணடித்த அழகில், மேலும் திகைத்தவள், சட்டென அங்கிருந்து நகர்ந்து, அடுப்படியினுள் சென்று மறைந்தாள்.

குழம்புக்கான மசாலா பொருட்களை எடுத்துக் கொண்டு, மீண்டும் கொல்லைப்புறம் சென்று அரைக்கத் துவங்கினாள்.

மல்லி அரைப்பட்ட நேரமெல்லாம், ''இவனுக்கு என் னாச்சு... என்னாச்சு?'' என்ற கேள்வி, மனதை அரைக்க,



மிளகா மையாய் உருமாறிய வேளையாவும், ''இவனை எப்படித் துரத்துவது?'' என்ற எண்ணமே பிரதானமாய் நின்றது.

ஆனால், அவனோ அவள் சோற்றுப் பானையைக் கவிழ்க்கும்போது, ''என்ன மலரு... சோறு கவுத்திட்டியா? வயிறு பசிக்குது... பசியாறலாமா?'' என்றான் வெகு இயல்பாய்.

ஒரு நிமிடம் திகைத்தாலும், மறு நிமிடமே சந்தோசம் பேசிய வார்த்தைகள் நினைவு வந்துவிட, ''உங்காத்தா தங்கத்தில் சோறு வடிச்சு... வைரத்தைக் குழம்பு வச்சு... வெள்ளியை உருக்கியில்ல ரசம் வச்சிருக்கும். நீங்க பாட்டுக்கு... இங்கன உங்கிறேன்ங்கிரீரு! இங்க வரும்... பித்தளையும்... மண்ஞ்சட்டியும் தான் கிடக்குது!'' என்றாள் நக்கலாக.

விடைத்துக் கொண்டு சண்டைக்கு வருவான் என்று மலர் எண்ணியதற்கு மாறாய், ''ஹஹாஹா!'' என வாய்விட்டுச் சிரித்தவன், ''ஆத்தா சொல்றதையெல் லாம் மனசு வச்சு... வெசனப்படாத, மலரு! அது கொணம் தெரியாதா என்ன?'' என்றான் சமாதானம் போல்.

''ஆமா... அது கொணம் தெரிஞ்சா நா என்ன பண்ணப் போறேன்.''

''ஆமாமா...'' என ஆமோதித்த அவனது குரலில், சற்றே தூக்கலாய் தெரிந்தது நக்கல்.

மலர் பேசுவதற்குள் ''பசியாற எடுத்து வையு, மலரு! கருவாட்டுக் கொழம்பு வாசம்... ஊரைக் கூட்டியாந்துரும் போல!'' என்றான் கையைத் தேய்த்துக் கொண்டு.

''கூட்டியாரும்... கூட்டியாரும்... இப்படி வீடு தொறந் திருந்தா... எல்லாம் தான் உள்ள வரும்!'' என்றாள் தாடையைத் தோளில் தட்டியவாறே.

பூவரசியின் கல்யாணத்தைத் தன்னைப் பார்க்க விடாமல் விரட்டி விட்டான் என்ற ஆத்திரம் அவளுக்கு! அது, அவனுக்கும் புரிந்தது!

அதற்கும் வஞ்சம் தீர்க்கத் தான், தன்னை மறைமுக மாய் ''நாய்'' என்கிறாள் என்பது புரிந்தபோதும், ராஜதுரை ஏதும் பேசவில்லை.

''சரி... கை கழுவிட்டு வாரேன்...'' என்றபடி, கொல்லைப்பக்கம் சென்றான்.

''அட என்னடா இவன்? ரோசமத்துப் போயிட்டானா என்ன?'' என்ற வியப்பிலேயே உழன்று நின்ற பொன்மலரை,

''என்ன மலரு... பனமரம் மாதிரி நிக்கிறவ்! பாயை எடுத்து விரி...'' என்றான் ஏவலாக.

சாப்பாடு எடுத்து வைக்கவும் பிடிக்காமல், அதே சமயம் அவனை வெளியே அனுப்பவும் முடியாமல், பாயை எடுத்து விரித்தாள் பொன்மலர்.

உணவுப் பாத்திரங்களை எடுத்து வந்தவளிடம், ''தட்டு எடுத்தா'' என்றான் அவன்.

''இருங்க... எல(இலை) நறுக்கியாறேன்...'' என அவள் கொல்லைப்புறம் திரும்ப,

''எல எதுக்கு? தட்டே வையு!'' என்றான் அவன், சாதாரணமாய்.

''இல்ல... விருந்தாளி வந்தா... நாங்க எல தான் போடறது. வீட்டாளுங்களுக்குத் தான் தட்டு...''



''ஹ்ம்ம்... நா வீட்டாளு இல்லன்னு சொல்லாம சொல்லிட்டே!'' என அவன் விட்டப் பெருமூச்சை மதிக் காமல், வாழையிலை நறுக்கி வந்தாள் அந்த வீட்டு உரிமைக்காரி.

அதன் பின் கழிந்த உணவு நேரம், வாக்குவாதங்கள் எதுவுமின்றி அமைதியாய் நடந்து முடிந்தது.

இலையிலிருந்த கருவாட்டுக் குழம்பை வழித்து, மணிக்கட்டு வ்ரை ருசித்துச் சாப்பிட்டவன், ''உன்னைய கட்டிக்கப் போறவன்... கொடுத்து வச்சவன்... மலரு! என்ன ருசி... என்ன ருசி...'' என்றான் சிலாகிப்பாய்.

''க்கும்... மண் பானையில ஆக்கினதில என்ன ருசி... உங்காத்தா தங்கச் சட்டியில ஆக்கி வச்சுட்டு உக்காந் திருக்கப் போவுது!'' என்றாள் பொன்மலர், மீண்டும் சந்தோசத்தைப் பேச்சில் இழுத்து.

''இன்னைக்கு... ரவைக்கு வீட்டுக்கு வர நேரஞ்செல் லும்ன்னு... அந்தி சாயையிலேயே சொல்லிட்டேன்... அதனால... ஆத்தா தேடாது! இந்நேரம்... சோத்தை உன் னுட்டு... ரெண்டு பேரும் படுத்திருப்பாக...'' என்றான் அவனோ, விளக்கம் போல.

தொடர்ந்து, ''அது கெடக்குது... கருவாட்டோட சேர்த்துக் கொஞ்சமா குழம்பை ஊத்து... சாப்பிட்டு எழுந்துக்கிறேன்'' என்றான்.

அக்குரலில் தென்பட்ட நிஜமான ஆசை ஏதோ செய்ய, அவன் கேட்டதை வைத்தாள் பொன்மலர்.

அதை அவன் ருசித்த வேளையில், ''யம்மா... பொன்னு... கொஞ்சம் தண்ணி கொண்டா தாயி! உடம்பு அசந்து போச்சு!'' என்றவாறே வீட்டினுள் நுழைந்த வேலுகருப்பன், பின்கட்டிற்கு வந்தார்.

அங்கே அவர் கண்ட காட்சி, அவரை உறைய வைத்தது.

உண்டு முடித்த இலையும், அதில் தொக்கி நின்ற கருவாடும், அதன் எதிரே அமர்ந்திருந்த ராஜதுரை, அருகே அமர்ந்து பரிமாறிக் கொண்டிருந்த மகளும், நெஞ்சுக்குள் கிலியை உண்டு பண்ண,

''என்னம்மா இது?'' என்று கண்ணாலேயே மகளைக் கேள்வி கேட்டார். அதில், அப்பட்டமான கோபம் தென்பட்டது.

மகளும், ''நா என்ன செய்யட்டும்... வேற வழி தெரியல...'' என்பது போல் பார்க்க, தந்தையும் மகளும் ஓர் சங்கடமான சூழலைக் கையாண்டுக் கொண்டிருந்தனர்.

அவர்களது பார்வைப் பரிமாறல்களை ஓர் சுவாரஸ்யத்துடன் பார்த்திருந்த ராஜதுரையின் உதடுகள், எதையோ சாதித்து விட்டதில் அகலமாய் விரிந்தன. அந்த விரிந்த உதடுகள் மூடுவதற்குள், ''வாங்கப்பு... போன சோலியை சூதானமா முடிச்சிட்டீரா? வாரும்... வந்து சாப்பிடும்! உம்ம மக.... வச்சிருக்கக் கருவாட்டுக் குழம்பு எட்டூருக்கு மணக்குது! அம்புட்டு ருசி!'' என்றான், கண்கள் விரிய.

வேலுவிற்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. ''அது... அது...'' என இழுத்தவர், மேலே பேசும் முன்னர்,

''சமைச்ச கைக்கு... தங்கத்தில காப்பு வாங்கி மாட்டுனாலும் ஆகாது! வாரும்... வந்து சாப்பிட்டுரும்... இல்லைன்னா நானே இது அம்புட்டையும் உள்ளார தள்ளினாலும் சொல்றதுகில்ல'' என்றான்.

''ஆஹா... புலி ஏன் இந்தப் பம்மு... பம்முது... எதுக்குத் தயாராகுதோ, வெளங்கலையே!'' என்ற அச்சத்துடனே,



உணவுண்ண அமர்ந்த வேலுகருப்பனுக்கு, உணவு இறங்கவில்லை!

# 6



ராஜதுரை, தன் வருகையை அன்றோடு மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை!

மறுநாளும் வந்தான். அதுவும் காலையிலேயே!

காலைக்கடன்களை முடித்துக் கொண்டு, கொல்லைப் புறத்திலிருந்து வந்த வேலுகருப்பன், ராஜதுரையைக் கண்டதும் திகைத்துப் போனார்.

''என்ன ராசு? இம்புட்டு வெள்ளனா?'' என அவர் இழுக்க,

''ஒண்ணுமில்லை அப்பு... இன்னைக்கு ஓரம் (உரம்) வாங்க... டவுனுக்குப் போறேன்... உங்களுக்கு எதுனா வேணும்னா சொல்லுங்க. ஒட்டுக்கா வாங்கியாறேன்!'' என்றான், பணிவு சொட்டியக் குரலில்.

''இதென்ன புதுப் பழக்கம்?'' என்பது போல் பார்த்தார், வேலு.

பின்னே, கால் கடுக்கப் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருப்பவரை, சட்டை கூடச் செய்யாமல், புல்லட்டில் ஏறிப் பறப்பவன் அன்றோ இவன்? இப்போது என்ன புதுசாய்?

''இருக்கட்டும்... ராசு! சர்க்காருக்குச் சொந்தமான பஸ்ஸு நெறைய ஓடுது... அதிலேயே போய்க்கிடுதேன்!'' என்றார் அவர்.

''என்னப்பு... ஒரு மாதிரிப் பேசுறீங்க? வாசு சொன் னானேன்னுட்டு வந்தேன்...''

''அவன் ஆயிரம் சொல்லுவான்... எதையெல்லாம் செய்ய முடியுமா ராசு! ஒரு நாளைக்கு... புல்லட்டு சவாரிக்கு ஒடம்பு போச்சுன்னு வச்சுக்க... அப்புறம், சர்க்காரு விடுற பஸ்ஸுக்கு மவுசு கொறைஞ்சு போவும். வேணாம்ய்யா... நா பாத்துக்கிடுதேன்!'' என அவனை அனுப்ப முற்பட்டார், வேலு.

''என்னமோ போங்க... என்னைய வேத்தாளா நினைச்சு ஒதுக்கி வைக்கிறீக!'' என்றவன், பொன்மலர் அரவம் உணர்ந்து, கொஞ்சம் சுனங்கினான்.

''அப்பு... இந்தாங்க நீராகாரம்...'' என்றபடியே வந்த பொன்மலர், குளித்து முடித்து, மஞ்சள் பாவாடையும் பச்சைத் தாவணியுமாய் ஜொலித்தாள்!

தாவணியைச் சரி செய்து கொண்டே வந்தவள், அங்கே ராஜதுரையைப் பார்த்ததும், அப்படியே நின்று விட்டாள்!

''இவன் என்ன இந்த நேரத்தில?'' என்ற கேள்வி, அவளது தந்தையைப் போலவே அவளுக்கும் இருக்க, அவனையே பார்த்திருந்தவள், அவனது பார்வை பாய்ந்த இடத்தைக் கண்டதும் ஒரு நிமிடம் சிலிர்த்து விட்டாள்.

''ச்சே! களவாணி ராஸ்கல்... பார்வையைப் பாரு பார் வையை... அப்படியே கண்ணாம் முழியை நோண்டாம...'' எனத் தனக்குத் தானே முணுமுணுத்தவள், கையில் கொண்டு வந்த நீராகாரத்துடன் திரும்பி விட்டாள்.

''என்ன பொன்னு... என்னைய பார்த்தா... ராக்கள வாணி மாதிரியா இருக்குது? அப்படியே ஓடுறவ!'' என அவன் வம்பிழுக்க,



''ஆமா... இவரு பெரிய மன்மத ராசா! மகுந்துட்டாலும்!'' என்று நொடித்தப்போதும் பொன்மலர் நிற்கவில்லை.

ஏதோ பெரும் நகைச்சுவையைக் கண்டதும் போல், ராஜ துரை நகைக்க, வேலு அவனை விசித்திரமாய் பார்த்தார்.

ஆனால், அவன் அதையெல்லாம் கண்டுகொள்வதாய் கூட இல்லை.

''சரிப்பு... இன்னைக்கு இல்லாட்டியும் இன்னொரு நாள்... சர்க்கார் விடுற பஸ் மக்கர் பண்ணும்... அப்ப... இந்த துரையை ஞாபகம் வச்சுக்கோங்க!'' என்றுவிட்டு, வெளியேறினார்.

''கால் அத்துப்போற அளவுக்கு... நோவு எடுத்தாலும், உம் வண்டில ஏற மாட்டேன்டா!'' என்று மனதினுள் எண்ணினார், வேலுகருப்பன்! ஆனால், அன்றிரவே அவனது புல்லட்டில் பயணிப்போம் என அவர் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை!

அவன் வீட்டை விட்டு வெளியேறியதும், ''இந்தாளு... ஏம்ப்பு நம்ம வீட்டையே சுத்திச் சுத்தி வாரான்? என் னமோ சரியில்லையே!'' என்றபடியே வந்தாள், பொன்மலர்.

''எனக்கும் அதான் தாயி... புரியல...'' என்றவர்,

''கத்திரிக்கா முத்தினா சந்தைக்கு வந்து தானே ஆவ ணும்! வரட்டும் பாத்துக்கிடுவோம். முத்தின கத்திரிக் காவா... இல்ல புழுத்துப் போனதான்னு!'' என அவனது வருகையை ஒதுக்கி வைத்துவிட்டு, அன்றாட வேலை யில் ஈடுபட்டார்.

அதன் பின்னர், பொன்மலர் கல்லூரிக்குக் கிளம்ப ''பொன்னு... இன்னைக்கு டவுன்ல இருக்க விவசாய ஆராய்ச்சி மையத்துக்குப் போறேன். அவுககிட்ட நம்ம மண்ணைக் கொடுத்து, என்ன போடலாம்ன்னு கேட்டிருக் கேன்... இன்னைக்கு வெதை (விதை) தராதா

சொல்லியிருக்காக... மத்தியானமா போயி... வாங்கிட்டு வந்துடுறேன்... சரியா கண்ணு? பார்த்துச் சூதானமா இருந்துக்கோ! வெளிக் கதவைப் பூட்டிக்கோ, கண்ணு! கண்ட நாயும் வந்திடாம...'' என்றார் மகளிடம்.

ஆனால், அந்த நாயை அவரே பிடித்துக் கொண்டு வருவார் என்பதை அவரும் அறியவில்லை, ''சரிப்பு'' என்று ஒப்பிய மலரும் அறியவில்லை.

இரவு உணவிற்கு, கேழ்வரகுக் கூழும், பச்சை வெங்காயமும் என்று முடிவு செய்தமையால், சமையல் வேலை இல்லாமல் போக, மாட்டுத் தொழுவத்தைச் சுத்தம் செய்து கொண்டிருந்தாள், பொன்மலர்.

கொல்லைப்புறத்தில் இருந்தவளுக்கு, வீட்டு முற்றத் தில் சின்னதாய் ஓர் சத்தம் கேட்டாலும், ''அவனோ... அவனோ...'' என்று பெரும் பதட்டமாய் இருந்தது!

''பூட்டியிருக்க வீட்டுக்குள்ளார ஒட்டைப் பிரிச்சா எறங்குவான்... கூறு கெட்டவளே! சும்மா இருடி!'' என மூளை அதட்டியபோதும்,

''எறங்கினாலும் எறங்குவான்... எமனுக்குப் பொறந் தவன்!'' என்று மனம் பயந்தது, நிஜம்!

தொழுவத்தைக் கூட்டிச் சுத்தம் செய்து முடித்தவள், சாணத்தை உருட்டி, வரட்டித் தட்ட ஆரம்பித்தாள்.

சாணத்தின் மீது கைப்பட்ட நொடியாவும், நேற்று சாதத்தின் மீது கைவைத்த ராஜதுரையே நினைவு வந்தான்.

''கருவாட்டுக் கொழம்பு அம்புட்டு ருசியாவா இருந் துச்சு? ஆசையா சாப்பிட்டானே?'' என்று நெஞ்சம் நேற்றைய தினத்தை அசைப்போட்டது!



''தங்கக் காப்பு வாங்கி மாட்டுனாலும் ஆகாது!'' என்ற அவனது பாராட்டே மனதில் தொக்கி நிற்க, ரப்பர் வளையல் மாட்டியிருந்த கைகளை நிமிர்த்திப் பார்த் தவள், ஏக்கமாய் ஓர் பெருமூச்சு விட்டாள்.

''ஒரு பித்தள வளைவியாவது வாங்கி மாட்டிக் கணும்!'' என்ற எண்ணம் மனதில், உதித்தது.

ஓர் தனி கற்பனை உலகத்தில் அவள் மிதந்து கொண டிருக்க, ''ஏய்... கூறு கெட்டவளே! உனக்கு கிறுக்கு எதுவும் பிடிச்சுப் போச்சா? உருட்டின சாணத்தை... சட்டியிலேயே தட்டித் தட்டி வைக்கிறவ? அப்படி என்ன கனா காணுறே?'' என்றாள் பக்கத்து வீட்டு மல்லிகா, தங்கள் கொல்லைப்புறத்திலிருந்து.

ஒரே வெட்கமாய் போய்விட்டது, பொன்மலருக்கு! சாந்துச் சட்டியிலிருக்கும் சாணத்தின் அளவு குறையாமல் இருப்பது கூடத் தெரியாமல்... ச்சே... என்று வந்தது அவளுக்கு!

கேள்வி கேட்ட தனக்குப் பதில் சொல்ல முடியாமல், தலையைக் குனிந்து கொண்ட பொன்மலரை, விசித்திரமாய் பார்த்துவிட்டு நகர்ந்தாள் மல்லிகா.

அதன்பின், சாணம் வரட்டியாய் மாறியது தான்! ஆனால், நினைவுகள் நிஜமாய் உருமாறுவது நிற்கவில்லை!

கடைசியாய், வெறும் கருவாடு மட்டும் வைத்து, அவன் ரசித்து உண்ட உணவு, அவள் தொண்டைக்குள் இனிப்பது போலிருந்தது.

வாசுவும் உணவை ரசித்து உண்பான் தான். ஆனால் ''நல்லாயிருக்கு... பொன்னு!'' என்பதோடு முடித்துக் கொள்வான்! ராசுவைப் போல் வாய்க்கு வாய், பாராட்டு மழை பொழிய மாட்டான்!

சும்மா நடிப்பதாய் இருந்தால், வேண்டுமென்றே ஓரோர் வாய் உணவிற்கும் ''நல்லா இருக்கு...'' ''செம... ருசி'' என்று ஜால்ரா தட்டியிருக்கலாமே! ஆனால், அவன் அப்படிச் செய்யவில்லை! தான் ருசித்துச் சாப்பிடு கிறேன் என்பதைச் செயலில் காட்டினான்... சொல்லில் அல்ல!

அவன் உண்ட அழகிலேயே, அவனது பசியும்... ருசியும் படம் பிடித்துக் காட்டப்பட, கடைசியில் அவன் பாராட்டிய வார்த்தைகள் கூடத் தேவையற்றதாய் தோன்றியது, பொன்மலருக்கு!

சாந்துச் சட்டியிலிருந்த சாணம் காலியானதும் தான், சுய உணர்வே வந்தது அந்தப் பெண்மகளுக்கு!

''அடச்சே! அவனை... ஏன்டா வந்தேன்னு விரட்டாத குறையா பேசிட்டு, இப்ப என்ன அவனைப் பத்தின கற்பனை?'' என்று மனம் கேள்வி கேட்க,

ராஜதுரையின் மீது அவளுக்கிருந்த கோபம் மீண்டும் சன்னமாய் மேலெழும்பியது! சிறு வயது கோபம் அன்றோ, சுடுகாடு சென்றாலும் கங்காய் கனன்று கொண்டே அல்லவா இருக்கும்!

சட்டியைச் சுத்தம் செய்து வைத்துவிட்டு, கை -கால்களைக் கழுவியவள், சிறிது மஞ்சள் தூள் எடுத்து வந்து கைகளைச் சுத்தம் செய்து கொண்டாள்.

கையில் அப்பிய மஞ்சள், தண்ணீருடன் கரைந்தோட, ராஜதுரையைப் பற்றிய எண்ணங்களும் மனதை விட்டு அகன்று விட்டால் நல்லது எனத் தோன்றியது, மலருக்கு!

''எந்நேரம் பார்த்தாலும்.. நக்கலும் நையாண்டியுமா திரியறவன்.... எதுக்கு நேத்தைக்கு வீட்டுக்கு வந்தான்? வந்தான்... ச்சரி... ஆனா... சோழியன் குடுமி... சலக்கு...



சலக்குன்னு ஆடிச்சே... எதுக்கா இருக்கும்?'' என்று சரியான மண்டைக் குடைச்சலாய் இருந்தது.

அவளது மண்டைக் குடைச்சலை அதிகரிக்கவென, இரவு எட்டு மணி மேலாகியும் வேலுகருப்பன் வராமல் போக, திண்ணைக்குக் கொல்லைக்கும் நடையாய் நடந்து தீர்த்தாள், பொன்மலர்.

தாவணியைக் கை விரலில் சுருட்டிக் கொண்டு, முகம் முழுக்கப் பதட்டத்துடன் அவள் நடப்பதைக் கவனித்துவிட்டு, ''ஏய்டி... பொன்னு! என்ன சமைஞ்ச குமரி... குச்சுக்குள்ள நட பழகுற கணக்கா... இங்க உலாத் துறவ?'' எனக் கேட்டாள், பக்கத்து வீட்டு மல்லிகா.

''அய்யனைக் காணல மல்லிகாக்கா!''

''எங்க போனவரு?''

''டவுனுக்குப் போனாரு... ஏதோ வெத வாங்கியா றேன்னு... கடைசி வண்டியும் வந்துட்டுப் போயிருக்கும். இன்னும் காணல...''

''அவரென்ன... பரிசும் போட்ட பச்சக்குருத்தா? வந்துடுவாரு... உள்ளார போடி! வீட்டுக்குள்ளார இருந் தாலே... அவனும் இவனும் வந்து போறான்... இவ என்ன டான்னா பேயாட்டம் வீதில உலாத்துறா!''

''யக்கோ! என்ன பேசுறே? வாய அடக்கிப் பேசு! ராட்டிப்புடுவேன்... ராட்டி!''

''நா பொதுவா சொன்னேன்டி! உனக்கேன்... வெட் டப் போற ஆடு கணக்கா சிலுத்துக்குது!'' என கழுத்தை வெட்டிய மல்லிகா, ''எனக்கேன்டி... பொல்லாப்பு... நீ அய்யனைத் தேடி! இல்ல... உங்கண்ணனைத் தேடு! யென்... உம் புருஷனைத் தேடு! எனக்கென்ன? நா போறேண்டியம்மா!'' என்று விட்டு, உள்ளே நகர்ந்தாள்.

''போயேன்... ஒன்னைய யாரும் இங்க சந்தனம் தேச்சுக்கச் சொல்லி அழைச்சாங்களாக்கும்!'' என்று அவளிடம் வீம்பு பேசிய பொன்மலருக்கு, அடுத்த நிமிடமே தந்தையின் ஞாபகம் வந்துவிட்டது!

''ஐயோ... இன்னும் காணலையே... பஸ்ஸை விட்டுட்டாரோ? எப்படி வருவாரு? நாலு மைலுக்கு மேல தொலவிருக்குமே!'' என்று தந்தையை எண்ணி அவள் கவலைக் கொண்டிருக்க,

திண்ணையில் புல்லட் வந்து நிற்கும் சத்தம் கேட்டது!

கொல்லைப்புறத்தில் நின்றிருந்தவள், சத்தம் கேட்டு விரைவதற்குள், வேலுகருப்பனும், அவரது ''வா... ராசு''வும், கூடவே ராஜதுரையும் உள்ளே நுழைந்தனர்.

''திரும்பவும் இவனா?'' என்ற ரீதியில் பார்த்துக் கொண்டிருந்த பொன்மலரைப் பார்த்து, கண்ணடித்தான் ராஜதுரை.

''அடி செருப்பால!'' என்று மலரின் உதடுகள் உச்சரித்தபோதும், வார்த்தைகள் ஒலிப்பெறவில்லை.

இரண்டையும் கணக்கெடுத்த ராஜதுரையின் கண்கள், வித்தியாசமாய் பளபளத்தன! அதன் தொடர்ச்சியாய், மீண்டும் ஒரு முறை கண்ணடித்தான், அக்கள்வன்!

நாக்கைத் துருத்தி, பொன்மலர் எச்சரிக்கும்போதே, தன் சட்டைப் பையில் எதையோ தேடிக் கொண்டிருந்த வேலுகருப்பன் நிமிர்ந்தார்.

''யம்மா... பொன்னு... கை-கால் கழுவத் தண்ணி விளாவி வைம்மா! நோவுது!' என்றுவிட்டு,

''கையோட... எனக்கும் ராசுக்கும் சாப்பிட எடுத்து வையு, தாயி!'' என்றார் சோர்ந்த குரலில்.



''என்னப்பு... அவரைச் சாப்பிடச் சொல்லுதீக! அவுக ஆத்தா... நம்மளை வையப் போவுது! தெனம்.. தெனம், சோத்தை நாய்க்குக் கொட்ட வேண்டியிருக்குன்னு, இங்கென வந்து ஏழரையைக் கூட்டிறப் போவுதுப்பு!''

''என்ன... பொன்னு! அதெல்லாம்... விசாரிக்காமலா கூட்டியாருவேன்...'' என்று கடிந்து கொண்டவர்,

''வாயை அடக்கிப் பேசணும், பொன்னு! வீட்டுக்குப் பசியாற வந்தவகிட்ட... இப்படித் தேன் எடக்கா பேசுறதா?'' என்றார், தந்தையாய்.

கூடவே, ''தாயில்லாம வளந்தவ... மொறை தெரியாம பேசிப்புட்டா! மனசில வச்சுக்கிடாத, ராசு!'' என்றார் ராஜதுரை பக்கம் திரும்பி.

''இருக்கட்டும்ப்பு! இது... நம்ம வீடு! உம்ம மக... என்னைய கல்லைக் கொண்டி அடிச்சாலும்... இன்னைக்கு இங்கன தான் ராச்சாப்பாடு! எங்காத்தா... இன்னியேரம்... சோத்துப் பானையைக் கவுத்துப் போட்டுட்டுக், கட்டையைச் சாய்ச்சிருக்கும்!'' என்றான், சிரிப்புடன்.

கூடச் சேர்ந்துச் சிரித்தத் தந்தையின் தலையில், ஓங்கி ஒன்று வைக்க வேண்டும் போல் வந்தது மகளுக்கு!

காலையில், இவர் பேசிய பேச்சென்ன? இப்போது இழுக்கும் இழிப்பென்ன? வரட்டும்... பேசிக்கிறேன்! என்று கறுவிக்கொண்டே,

''இன்னைக்கு... நெல்லுச்சோறு ஆக்கலை... வெறும் கேப்பைக் கூழும்... பச்ச வெங்காயமும் தான்!'' என்றாள் அவள், அலட்சியக்குரலில்.

''ஏந்தாயி!'' என வேலு கேள்வி கேட்கையிலேயே,

''உங்கையில... களி கூடத் திங்கலாம், மலரு! எடுத்து வையி!'' என்று ஏகத்திற்கும் சிரித்தான், ராஜதுரை.

''நாளைக்கு... சோறு கேட்டு வாரும்! களி தான்... கிண்டி வைக்கப் போறேன்!'' என்று உள்ளுக்குள் கறுவிக் கொண்டு, விருட்டென்ற தலை சிலுப்பலுடன் அடுக் களைக்குள் சென்ற பொன்மலர், பதினைந்தே நிமிடத் தில் ''அப்பு... பசியாற வாரும்! விருந்தாளியையும் கூட்டியாரும்!'' என்றாள் ''விருந்தாளி''யில் அழுத்தம் கொடுத்து.

ஆண்கள் இருவரும், பந்தியில் அமர்ந்ததும், இரண்டு பித்தளைக் கும்பாக்களை இருவர் முன்னேயும் வைத்து, கூழை ஊற்றினாள்.

''எல போய்த் தட்டு வந்துச்சாம்... டும்! டும்! டும்!ன்னு எட்டுக்கட்டிப் பாடலாம் போல! என்ன மலரு... விருந் தாளிக்கு எலை இல்லையோ? இல்ல... உம்ம தோட்டத் தில இருக்க வாழை... எலை இல்லைன்னு சொல் லிருச்சா?'' என்றான் ராஜதுரை, நக்கலாய்.

''இதுக்குப் பேரு... தட்டில்ல... கும்பா!'' என்ற பொன்மலர், அவன் எதிரே இருந்த கும்பாவை லேசாய்த் தூக்கிக் காட்டிவிட்டுப், பட்டென கீழே வைத்தாள்.

''பைய... பைய...'' எனப் பதறுவது போல் நடித்த ராஜதுரையின் சிரிப்பு அப்போதும் நிற்காமலிருக்க,

''உம்ம வீட்டில... கூழைக் கூடத் தட்டில ஊத்தித் தேன் குடிப்பீகளோ? நான் என்னமோ... இருக்கப்பட்ட மகாராசைங்க... வெள்ளியில் கும்பா செஞ்சு... தங்கக் கிண்ணி வச்சுக் குடிப்பீகன்னுல்ல நினைச்சேன்! ச்சு... ச்சு... ச்சு!'' எனப் போலியாகப் பரிதாபப்பட்டாள் பொன்மலர்.

அதில் சிரித்த இரு ஆண்களும், அதன் பின்னர் பேசியது முழுதும் - விவசாயம்! விவசாயம்! விவசாயம் மட்டுமே!



ஒருவழியாக, அவன் கிளம்பிச் சென்றபின், தந்தை யிடம் திரும்பியவள்

''ஏம்ப்பு... காலையில என்னமோ தோரணையா பேசிக்கிட்டுத் திரிஞ்சீரு! இப்ப என்னடான்னா... அந் தாளுகிட்ட ராசு... ராசுன்னு உருகிக் கரையுரீரு!'' என்றாள் நக்கலாய்.

''என்ன தாயி... செய்யச் சொல்லுறே? அந்த விவசாய ஆப்பிசுக்குப் போனா... என்ன மாதிரி நூறு பேர் நிக்கான்! அங்க இருந்த அதிகாரிக்கு... ஒரொருத்தனுக் கும்... வெளக்கம் சொல்லி மாள முடியல! ஒரு வழியா... என்னைக் கூப்பிடப் போற நேரம்... இந்த ராசுப் பய... வந்துட்டான்!''

''அந்தாளு வந்தா... என்ன? நீரு பார்த்திட்டு... வர வேண்டியதுதானே?''

''இவ ஒரு கூறு கெட்டவ! நடப்புப் புரியாம... அவன்ட்ட இருக்க அம்பது ஏக்கராவுக்கும் பாப்பானா... இல்ல நம்ம அரை ஏக்கரை மதிப்பானா...''

''ஹுக்கும்! அங்கயும்... இப்படித் தானாக்கும்!''

''அங்கன மட்டுமில்ல, பொன்னு! எங்கன போனாலும்... காசுக்குத் தேன் மதிப்பு...''

''ஹ்ம்ம்...''

''எங்கன விட்டேன்... அதான்... ராசு பேசிட்டே இருக் கான்... மணி ஆகிட்டே இருக்கு... ஏழே கால் ஆனதும்.. வண்டி போய்டும்ன்னு நான் எழுந்துட்டேன்! பொறவு... ராசுப் பய பார்த்துப்புட்டு... 'நம்ம பங்காளியா... இவ ருக்குப் பாத்துடுங்க... நா நாளைக்கு வாரேன்'னுட்டு... எனக்குப் பாக்கச் சொன்னான்!''

''ஹ்ம்ம்... ஏதோ சரியில்லையே... அந்தாளு நொற நாட்டியம் பிடிச்சவன் அப்பு! அவனை நம்பக் கூடாது...''

''விடு தாயி! இன்னைக்கு... நமக்கு நல்லது செஞ் சிருக்கான்... அதோட விடுவோம்!'' என்றவர், அத்துடன் விட்டு விட்டார்.

ஆனால், மலருக்குத் தான் ஒரே மண்டைக் குடைச்ச லாக இருந்தது!

அதை மேலும் அதிகரிப்பது போல், அடுத்த நாள் மாலை, பேருந்து நிலையத்தில் பேருந்துக்காக அவள் காத்திருந்தபோது,''மலரு! வண்டியில ஏறு!'' என அவளை அதட்டியவாறே, புல்லட்டைக் கொண்டு வந்து, அவளை உரசியபடி நிறுத்தினான், ராஜதுரை!

# 7

''என்னது?'' - பொன்மலர், அதிர்ந்தே போனாள்!

ஆனால் அவனோ!

''ஏறு... மலரு! ஒரு முக்கியமான விசயம்... ஏறு...'' என்றான் அவசரமாய்.

''உமக்கென்ன கிறுக்கு தலைக்கேறி யிருக்கோ? நா வர மாட்டேன்!'' என்ற மலர், ஓரடி பின்னே நிற்கவும், ராஜதுரை வண்டியை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கி னான்.

அதற்குள், மலரின் அருகே நின்று கொண்டிருந்த கனகம் மற்றும் சில பெண்கள், மலரையும் துரையையும் விசித்திரமாய்ப் பார்க்கத் தொடங்கினர்.



அதிலும், அவர்களது ஊரைச் சேர்ந்த கனகமும், மேலும் இரண்டு பெண்களும், கூடவே சில பள்ளிக் கூடப் பிள்ளைகளும் குறுகுறுவெனப் பார்த்தப் பார்வை யில், மலர் கூனிக் குறுகிப் போனாள்!

அவளது குற்ற உணர்வை மேலும் அதிகரிக்கவென, ''ஏய் மலரு! வாங்கிறேன்...'' என்றவாறே, அவளது கையைப் பிடித்து இழுத்தான், ராஜதுரை.

''அய்யே! என்ன பண்றீரு? விடும்!'' என்ற மலரின் குரல், நடுங்கத் தொடங்கியிருந்தது!

நடு ரோட்டில் வைத்து, இப்படி நடந்து கொள்கிறானே? தந்தைக்கும், தமையனுக்கும் தெரிந்தால் என்னவாகுமோ என்ற பதட்டம் ஒருபுறமிருக்க, அவர்களது கல்லூரியில் படிக்கும் பலரும் அதை வேடிக்கைப் பார்த்தது பெருத்த அவமானமாய் இருந்தது!

''இப்ப நீ வரமாட்டே?'' - அவன் தொனியே மாறிப் போனது!

ஆனாலும், மலர் ஓரடி கூட முன்னே எடுத்து வைக்க வில்லை.

''சண்டித்தனம் பண்றே?'' என்றபோது அவன் குரலில், சிங்கத்தின் கர்ஜனை இருந்தது! அக்குரல், உள்ளுக்குள் எதையோ தூண்டிவிட, ''விசயம் என்னன்னு சொன்னா... நா சண்டித்தனம் பண்ண வேண்டிய அவசியமென்ன? நீரு சண்டியரா மாற வேண்டிய அவசியமும் என்ன?'' என்றாள் மலர், அவனை நேராய் நோக்கி.

''அம்புட்டுத்தானே? உயிர் போற விசயம்.... ரெண்டு உயிரைக் காப்பாத்தப் போற விசயம்... வர்றியா?'' என்றான் அவன், ''சொல்லிவிட்டேன். வா!'' என்ற தோரணையில்.

''அப்பா... செங்கப்பொடி போட்டு அப்படியே பள பளன்னு வெளக்கிப்புட்டாரு! எங்களுக்கும் வெளங்கிப் போச்சு!'' என்று போலியாய் சிலாகித்தவளை முறைத் தான், ராஜதுரை.

அந்த நேரம் பார்த்து, அவர்கள் ஊர் செல்லும் பேருந்து வந்து சேர, அவர்கள் ஊரைச் சேர்ந்த அனை வரும் அங்கே விரைந்தனர்.

அதில் கனகமும் உட்பட்டு இருக்க, ''ஏய்... கனகம்... இருடி! நானும் வாரேன்... விட்டுப் போயிராதடி!'' என்று கூவிக் கொண்டே, ஓடினாள் பொன்மலர்.

தன் எதிரே நின்ற ராஜதுரையைச் சுற்றிக் கொண்டு, பேருந்தின் அருகே விரைந்தவளால், பேருந்தில் ஏற முடியவில்லை! ஏனென்றால், ராஜதுரை அவளது கையை இறுகப் பிடித்து, தன் பக்கமாய் இழுத்திருந் தான்!

மணிக்கட்டில் பதிந்திருந்த அவனது கை, இரும்புக் காப்பை விடவும் கனமாய் இருக்க, செயலிழந்து போனாள் பொன்மலர்.

இழுத்த வேகத்தில், அவளைத் தனது பின்பக்கம் இட்டுச் சென்று, நிறுத்தி வைத்தான், அந்தக் கிராமத்துக் காளை!

''என்ன பண்றீரு! அம்புட்டுப் பேரும்... பாக்குறாக! கையை விடும்... இல்லன்னா மருவாத கெட்டுப் போவும்!'' எனப் பொன்மலர் பல்லைக் கடிக்க, அவனது கைப்பிடியின் அழுத்தம் அதிகரித்துக் கொண்டே சென்றது.

''ஆ... ஆ... விடும்! கை நோவுது!'' என்றவள், பேருந்து எடுக்கப் போவதைக் கண்டதும்



''கண்டக்டரண்ணே! நில்லுங்க.. நா வந்துடுதேன்... வண்டிய எடுத்துப் புடாதீக!'' என்றாள் சத்தமாய்.

''வெரசா வாம்மா! இம்புட்டு நேரம் என்ன பண் ணினவ... பரமபதமா ஆடினே?'' என நொடித்தான் பேருந்தின் நடத்துனர்.

''இந்தா வந்துட்டேண்ணே! விடும்.. அய்யோ விடும்! இந்த வண்டியை விட்டா... அடுத்த வண்டி வர ஒரு மணி நேரம் புடிக்கும்!'' என்றபோது, அவளையும் மீறி பொன்மலரின் குரல் கெஞ்சிற்று.

அதற்குப் பதிலாய், ராஜதுரை பேசவுமில்லை... கையை விடவுமில்லை... ஏன் நிமிர்ந்து அவளைப் பார்க்கக் கூட இல்லை. கைப்பிடியின் இறுக்கம் மேலும் கூட, நின்ற இடத்தில் சமைந்து போனான் அவன்.

''அய்யோ... விடும்... போவணும்!'' என அவள் கெஞ்சும் போதே,

''என்னம்மா வர்றியா இல்லையா?'' என்றான் பேருந்தின் நடத்துனர்.

''வாரேண்ணே!'' என அவனிடம் அவசரமாய் கூறிவிட்டு, ''விடும்!'' என்றாள் ராஜதுரையைப் பார்த்து.

கையை உருவிக் கொள்ள அவள் எடுத்த முயற்சிகள் யாவும், அவளது கை வலியை அதிகப்படுத்தினவே ஒழிய, கொஞ்சம் கூடக் குறைக்கவில்லை.

பேருந்திலிருந்த அனைவரும், அவர்கள் இருவரை யும் குறுகுறுவெனப் பார்த்திருக்க, ''அம்புட்டுப் பேரும் பாக்குறாக... விடும்!'' என்றாள், மலர் இறைஞ்சலாக.

ம்ஹூம்! அவன் இம்மியும் அசையவில்லை!

அசிங்கமாய் இருந்தது, மலருக்கு!

இவர்களது நாடகத்திற்கெல்லாம் பேருந்து காத்திருக் குமா என்ன? அதன் நடத்துனர் ''ஏய் பொண்ணு! வர்றியா இல்லையா?'' என்றான் கடைசி தடவையாக.

இந்த முறை, பொன்மலர் வாய் திறப்பதற்குள் ''நீங்க போங்கண்ணே! அந்தப் பொண்ணை... நா கூட்டியாந்து ஊர்ல விட்டுக்கிடுதேன்!'' என்றான் ராஜதுரை.

அவ்வளவுதான்! அந்த மாநகரப் பேருந்து, வழமை யான தன் வேகத்தை மிஞ்சிக் கொண்டு பறந்து விட்டது!

''ஏன்... போக விட்டீக? ஐயோ... நா எப்படி வீட்டுக் குப் போவேன்... ஊர்ல அம்புட்டுப் பேரும் நாக்கு மேல பல்லைப் போட்டுப் பேசுவாய்ங்களே! ஐயோ!'' - பொன்மலர் அரற்ற ஆரம்பித்தாள்.

''ஏய்... சும்மா நை.. நைங்காம வண்டில ஏறு!'' என அதட்டினான், ராஜதுரை.

''முடியாது! வரமாட்டேன்! என்ன செய்ய முடியுமோ... செஞ்சுக்கும்!'' என்றபடி, அந்த இடத்திலேயே அமர்ந்து விட்டாள் பொன்மலர்.

அவனது கைகள் நீளமானதாய் இருந்தமையால், அவளால் அமர முடிந்தது! கை அவனது பிடியிலிருந்த போதும், பொன்மலர் சட்டமாய் சம்மணமிட்டு அமர்ந்து விட்டாள்.

''ஏய்! கூறுகெட்டவளே! எழுந்திருடி!'' - ராஜதுரை கோபம் கொள்ள,

''மருவாத! என்ன... டி... கி...ன்னு அதிகாரம் தூள் பறக்குது!'' - பொன்மலர் பட்டெனத் திருப்பிக் கொடுத் தாள்!



''ரெண்டு உசுரைக் காப்பாத்தணும்ன்னு சொல்லுதேன்... ராங்கித்தனம் பண்றவ!''

''அது சரி! யாரு... அந்த ரெண்டு உசுரு? நா எப்படி அவுக உசுரைக் காப்பாத்த முடியும்? அதெல்லாம் சொல்லும்!''

''திமிருடி ஒனக்கு! இந்த வாய்க்கொழுப்புக்குக்... கலியாணம் முடிஞ்சதும் படப் போறே! சொல்லிப்புட் டேன்!''

''அதை... யெம் புருஷங்காரன் பாத்துக்கட்டும்! நீரு... கவலைப் படாதீரும்! இப்ப... விசயத்துக்கு வாரும்!''

அவளை முடிந்த மட்டும் முறைத்தவன், ''ஒனக்கு... ரத்தம் எடுக்கத் தெரியுந்தானே? அந்தப் படிப்பு தானே படிக்கிறவ?'' என்றான் காட்டமாய்.

எதற்குக் கேட்கிறான் என்று புரியாவிட்டாலும், தன் படிப்பின் மீது கர்வம் கொண்டவளாய் ''ஆமா! லேப் டெக்னிசியன்!'' என்றாள் அவள், பெருமை மேலோங்க.

''ஏதோ... ஒண்ணு! ரத்தம் எடுத்து... பி.பி. சுகரு... எல்லாம் பார்க்கத் தெரியுமா?''

''தெரியுமே? ஒரு சொட்டு ரத்தத்தில... புள்ள உதிச்சிருக்கான்னு கூடச் சொல்லிப்புடலாம்!'' என்றாள் அவள் பெருமையாய்.

''அவுகளுக்குப் புள்ள பெத்துக்கிடுற வயசில... சும்மா பி.பி. சுகரு மட்டும் பாத்துச் சொல்லு!''

''யாருக்கு?'' - அப்போதும் சந்தேகமாய் கேட்டாள், பொன்மலர்.

''என் சிநேகிதனோட அப்பா - அம்மாவுக்கு!''

''ஓ! எங்க இருக்காக...''

''இங்க தான்... பெரிய ஆஸ்பத்திரிக்குப் பின் பக்கமா!''

''அப்ப அங்கனேயே போய் எடுத்துக்கிட வேண்டியது தானே?''

''எங்களுக்கும் இதெல்லாம் தெரியும். அவுக ரெண்டு பேருக்கும் எம்பது வயசாவுது! எழுந்து நடக்கவே சிரமப்படுறாக! பெரிய ஆஸ்பத்திரில வேல பாக்குற எல்லாவனும்... தடிப்பயலா இருக்குதான்! ரத்தம் எடுக்கிறேன் பேர்வழின்னு... கையைப் பொத்துப் போட்டுப் போயிடுறான்! அதேன்... உன்னையக் கூப்பிடுறேன்...''

''எனக்கு... ரத்தம் எடுக்கிற சிரிஞ்சு... பொறவு ரத்தம் டெஸ்ட் பண்ற கருவி எல்லாம் வேணும்!''

''அதுக்கு... நா ஏற்பாடு பண்ணுதேன்! நீ மொதல்ல வண்டில ஏறு!'' என்றவன், தான் பிடித்திருந்தப் பிடியிலிருந்தே அவளைச் சுண்டி மேலே இழுத்தான்.

''ஆஅ... ஆஅ!'' - அலறிவிட்டாள், பொன்மலர்.

அவன் விடுவித்தக் கையை அவள் நீவிவிடவும், அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

''என்னோட நோவு... உமக்குச் சிரிப்பா இருக்கோ?'' என்று அவனைக் கேள்வி கேட்டப் பொன்மலர்,

''இந்தக் காரணத்தை முன்னமே சொல்லியிருக்கலாம்ல... கையைப் போட்டு இழுத்து... ச்சை...'' என்றாள், கையைப் பிடித்துவிட்டுக் கொண்டே.

''சொல்லியிருக்கலாம்...'' என ஒரு மாதிரி இழுத்தவன், ''சொல்லக் கூடாதுன்னு தானே... சொல்லலை!'' என்றான் முணுமுணுப்பாய்.

''என்னது?'' என அவள் கேட்கவும்,

''ஒண்ணுமில்லை... ஏறு... போவலாம்!'' என்றான், புல்லட்டின் சீட்டைத் தட்டி.



''இல்ல... அவுக வீடு பெரிய ஆஸ்பத்திரிக்குப் பக்கம்ன்னு தானே சொன்னீக? நா டவுன் பஸ் புடுச்சு... அங்கன வந்துடுதேன்!'' என்றாள் பொன்மலர், தீர்க்கமாய்.

''அப்ப... வண்டில ஏறமாட்டீக, சண்டிராணி!'' என அவன் புருவத்தை உயர்த்த,

''மாட்டேன்!'' என்றாள் பொன்மலர், முன்பைவிடவும் தீர்க்கமாய்.

''சரி... பெரிய ஆஸ்பத்திரி தாண்டி... வலப்பக்கமாய் வர மூணாவது தெருல, நாலாவது வீடு! பச்சக் கலர்ல பெயிண்ட் அடிச்சிருக்கும்!'' என்றவன், நிமிட நேரத்தில் வண்டியில் ஏறிப் பறந்துவிட்டான்!

அவனது வண்டி கண்ணை விட்டு மறையும் வரை, பொன்மலர் அந்த இடத்தை விட்டு அகலவில்லை.

''இவனை நம்பிப் போகலாமா? வேணாமா?'' என்ற கேள்வி மனதைக் குடைய, என்ன செய்வது என்று மனம் தடுமாறிப் போனது!

முடிவில், ''இவன் சொல்வதில், எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியவில்லையே! தெரியாத இடத்திற்குப் போய் மாட்டிக் கொள்ளக் கூடாது! வேண்டாம்!'' என்ற எண்ணம் வலுப்பெற, அவர்கள் ஊர் செல்லும் அடுத்தப் பேருந்துக்காகக் காத்திருக்கத் தொடங்கினாள்.

ஆனால், அன்று அவளுக்கு நல்ல நேரம் என்று ஒன்று இல்லவே இல்லை போலும்!

அடுத்தப் பதினைந்தாவது நிமிடம், ராஜதுரை வந்திருந்தான்.

அவனைப் பார்த்ததும் விதிர் விதிர்த்து எழுந்த பொன்மலர், ஐந்தடி பின்னே நகர்ந்தாள்.

அவனோ, இரண்டே எட்டில் அவளை நெருங்கி, முழங்கைக்கு மேலுள்ள மேல்கையை இறுகப் பிடித்துத் தன்புறமாய் அவளைக் குனியச் செய்து, ''என்ன திமிரா? உன்னைய... அங்க வச்சு உருக்கொலைச்சிருவேன்னு நினைச்சியோ? ராங்கி மட்ட! அப்படியொரு எண்ண மிருந்தா... இங்க வரைக்கும் நா வர வேண்டியதில்ல... ஊரிலேயே முடிச்சிருப்பேன்!'' என்றான் அடிக்குரலில்.

''என்னது?'' - பொன்மலரின் வாயிலிருந்து காத்து மட்டுமே வந்தது! அந்தளவுக்கு, அவள் அதிர்ந்து போயிருந்தாள்!

''என்ன பேசுறீக... நீங்களும் நாங்களும் பங்காளி மொற!'' என அவள் திக்க,

''அந்தச் சனியனைப் பொறவு முடிவு பண்ணலாம்... நீ இப்ப வரியா இல்லயா?''

''நாளைக்கு வரவா? வானம் இருட்டிக்கின்னு வருதே?''

''வாயில ஏதாவது அசிங்கமா வந்திடும்!'' என்றவனின் கோபம், கண்களை மீறி, முகம்... கை... கால் என்று உடம்பு முழுதும் தகித்தது!

சுற்றும் முற்றும் பார்த்தவன், ''ஏய்... ஆட்டோ! ஆட்டோ!'' எனக் கைத்தட்டி அழைத்தான்.

''அதில ஏறி வா... உன்னையா யாரும் தின்னுட மாட் டோம்!' என்றவன்,

''என் வண்டியை நூல் புடுச்சு வாய்யா!'' என ஆட் டோக்காரனிடம் கூறிவிட்டு, வண்டியை விரட்டினான்.

ராஜதுரை பொய் புகலவில்லை! அவன் கூறியது போல், தள்ளாத முதியவர்கள் இருவர் இருந்தனர்.

அவள் கேட்ட சிரிஞ்ஜ், ஸ்பிரிட், பஞ்சு என்று எல் லாம் வாங்கிக் கொடுத்தவன், அவள் ரத்தம் எடுத்ததும்,



பக்கத்திலிருந்த அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றான்.

அந்த முதியவர்களின் வீட்டிலேயே, ராஜதுரையைப் பற்றிய ஏகப் போகப் புராணத்தைக் காது புளிக்கக் கேட்டு வந்தவளுக்கு, மருத்துவமனையில் அவனுக்குக் கிடைத்த மரியாதையைப் பார்த்து மலைப்பாய் இருந்தது!

அவர்களைக் கடந்து சென்றவன் ஒரோருத்தனும், அவனுக்கு வணக்கம் வைத்தான்! ஆனால் தொரையோ அதை ஓர் தலையசைவால் மட்டுமே ஏற்றுக் கொண டார்! ''பெரிய தோரண தான்!'' என்று உதடு பிதுக்கிய படியே நடந்தாள், பொன்மலர்.

அங்கே ஆய்வுக் கூடத்திற்குள் அவளைக் கூட்டிச் சென்றவன், அங்கிருந்த பணியாளிடம் ''பூபாலு... இந்த ரத்தத்தை மட்டும் டெஸ்ட் பண்ணிப் பாத்துக்கிடு தோம்ய்யா!'' என்றான் பணிவுக் குரலில்.

''நல்லா பாருங்கண்ணே! இந்தப் பொண்ணு தா.. பார்க்கப் போவுதா?'' - பொன்மலரைக் கை காட்டிக் கேட் டவன், ''யாருண்ணே?'' என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

பொன்மலர், திரும்பிப் பார்த்து முறைக்கவும், ''யோவ்! ஏழரையைக் கூட்டிவிட்டுப் போயிராதய்யா!'' என்ற ராஜதுரையின் குரலில், பயத்தைக் காட்டிலும் சிரிப்பே விரவியிருந்தது.

அதன் பின், பொன்மலர் ரத்தப் பரிசோதனையின் முடிவுகளைக் குறித்துக் கொண்டு வர, ''இந்தாருங்க! இது... அந்தய்யாவோடது... இது அம்மாவோடது!'' என்றாள் பொன்மலர்.

''நன்றி மலரு!'' என அவன் கூறவும்,

''இப்ப... எந்த டாக்டரைக் குண்டுக் கட்டாகத் தூக்கிட்டுப் போவீரு?'' என்றாள் பொன்மலர் நக்கலாக.

''ஹஹஹா!'' என்று பெருங்குரலெடுத்துச் சிரித்தவன், ''தூக்குனதும் சொல்லிவிடுதேன்! நீ வந்துப் பார்த்துட்டுப் போ!'' என்றான், அவன் கண்ணடித்தபடியே!

''அய்யே! மொகரையைப் பாரு!'' என்று நொடித்தவள்,

''நா கௌம்புறேன்! மானம் இருக்கிட்டு வருது!''

''நா கொண்டு போயி விடுறேன்... மலரு!''

அதற்கு மலர் வார்த்தைகளால் பதில் சொல்லவில்லை. அவனைத் தீர்க்கமாய் ஓர் முறைப்பு முறைத்ததோடு கிளம்பிச் சென்று விட்டாள்.

அலட்சியம் போல் தோளைக் குலுக்கிய ராஜதுரையின் புன்னகையில் அலட்சியம் இருக்கவில்லை! ஓர் திருப்தி இருந்தது! வெற்றியைத் தொடப் போகும், ஓர் ஆர்வமிருந்தது! சரியான பாதையில் செல்கிறோம் என்ற நிம்மதி இருந்தது! மொத்தத்தில், கர்வம் கொஞ்சம் தூக்கலாய் இருந்தது!

கடைசி வண்டியில் ஊர் போய்ச் சேர்ந்த மலரைப் பிடிபிடியெனப் பிடித்துக் கொண்டார் வேலுகருப்பன்! போதாததற்கு, வாசு வேறு!

நடந்தது முழுதையும் கூறிய பின்னரும், இருவரும் முழுதாய் திருப்திப்படவில்லை.

''சமைஞ்ச பொண்ணு... இம்புட்டு நேரமா வெளிய இருந்திட்டு வரது?''

''அவன் கூப்பிட்டா... நீ எப்படிப் போவலாம்? கொஞ்சம் கூட கூறில்லையா?''



''நடு ரோட்டில வச்சு அவனோட வார்த்தையாடி இருக்கே? ஊரே பாத்திருக்கும்... என்ன பேசுவாய்ங்களோ!'' - ஏகத்திற்கும் ஏசிய வேலுகருப்பனாகட்டும்,

''என்ன பொன்னு... ஏற்கனவே அப்பச்சி உன்னைய படிக்க அனுப்புறதுக்கு என்னைய வையாத நாளில்ல... இப்ப இப்படி வேற பண்ணிட்டு வந்திருக்கே?'' என்று அங்கலாய்த்த வாசுவாகட்டும்.

பொன்மலரின் ''எம்மேல நம்பிக்கையில்லையா? நா அப்படியா தப்புக் காரியம் பண்ணுவேன்?'' என்ற வாக்கியத்தில், அடங்கிப் போயினர்.

வீட்டினரை அடக்கி விட்டப் போதும், ஊராரின் வாயை அடைக்க முடியவில்லை, பொன் மலரால்!

''ரத்தம் எடுக்கத் தேன் போனேன்!'' என்பதை யாரும் நம்புவதாய் இல்லை!

''நம்புனா நம்புங்க... இல்லாக்காட்டிப் போங்க!'' என்று தலையைச் சிலுப்பியப் பொன்மலர், ''தப்பு செஞ்சிருந்தா இவைங்க சொல்றதுக்குக் கூனிக் குறுகணும்! இப்ப என்ன?'' என்று தலை நிமிர்ந்தே நின்றாள்!

ஆனால், அந்தத் தலை நிமிர்வெல்லாம், அவன் அடுத்த நாளே வீடு வந்து ''இன்னைக்கு என்ன சமையல்?'' என்று உரிமையாய் கேட்டபோது, சுக்கு நூறாய் நொறுங்கி, ''அய்யயோ... குறி வச்சு வாரானோ?'' என்ற அச்சம் மனதினுள் குடி வந்தது!

ஆனால், மனதின் ஓர் ஓரம் ''ருசிச்சுச் சாப்பிடுவானே... இன்னைக்குன்னு பார்த்து... வெறும் கொள்ளு ரசமும், உப்புக் கண்டமும்ல்ல பொரிச்சிருக்கேன்!'' என்று சன்னமாய் அடித்துக் கொண்டது, அவள் மட்டுமே அறிந்த நிஜம்!

# 8

வீட்டினுள் வந்தமர்ந்திருந்தவனை என்ன செய்வதென்று, பொன்மலருக்குப் புரியவில்லை!

புதுமனைப் புகு விழாவிற்கு ஒரு வாரமே இருந்த நிலையில், வேலுகருப்பனுக்கு ஏகப்பட்ட வேலைகள் அணிவகுத்திருந்தன. ஆதலால், அவர் வீட்டிலிருக்கவில்லை.

மாலை ஏழு மணியளவில், வீட்டுக் கதவைத் தட்டியவனை ''எதுக்கு வந்தே? வெளிய போ!'' என்று விரட்ட முடியாமல், அவனுக்கு வழி விட்டவள்,

''என்ன விசயம்?'' என்றாள், அவனிடம் நேரடியாக.

''வந்தவனை ஒரு வார்த்தை... வான்னு கூப்பிடலை... ஹ்ம்ம்!'' என அவன் பெருமூச்சு விட்டதையெல்லாம் அவள் கண்டு கொள்ளவே இல்லை.

அவன் முகத்தைப் பார்க்காதப் பார்வையை ஏந்தியவளாய், ஓடிக் கொண்டிருந்த தொலைக்காட்சியை வெறித்துக் கொண்டே ''அப்பு வெளிய போயிருக்காக! வர.. ராவாகும்! என்ன விசயம்?'' என்றாள் மீண்டும்.

''ஒண்ணுமில்ல! வீடு குடி போறதுக்கான காயை.... நம்ம தோட்டத்திலேயே எடுத்துக்கிடலாம்... அதேன் சொல்லிட்டுப் போவலாம்ன்னு வந்தேன்.''

''உங்களுக்கு எதுக்கு சிரமம்... அப்பு சந்தையில வாங்கிக்கிடலாம்ன்னு சொல்லிச்சு...''



''இதில என்ன சிரமம் வேண்டிக் கிடக்கு... ஆமா.. இன்னைக்கு என்ன சமையல்?''

''ஹான்!'' என்று ஒரு நிமிடம் விழித்தவள்,

''காய்கறி வேணாம்... நாங்க சந்தையில வாங்கிக் கிடுதோம்!''

''நா... என்ன சமையல்ன்னு கேட்டேன்...''

''நீரு சொல்றதைத் தேன் அம்புட்டுப் பேரும் கேட்கணுமோ? நாங்க சொல்றதெல்லாம் பேச்சா இல்லையாக்கும்! ரொம்பத் தான் தோரணை!'' - வந்த எரிச்சலில், பலமாகவே திருப்பிக் கொடுத்தாள் பொன்மலர்.

''ஹஹஹா!'' - இதற்கும் அவன் சிரிக்கவே

கடுப்பாய் வந்தது மலருக்கு.

இப்படியெல்லாம் பேசினால் இவன் அடங்க மாட்டான் என்ற எண்ணம் தோன்ற, ''என்ன... இங்கனவே உலாத்திக்கிட்டு இருக்கீரு? உங்காத்தா வீட்டில இல்லையோ?'' என அவள் சந்தேகக் குரல் எழுப்பவும்,

''ஹஹஹா!'' என முதலில் சிரித்தவன்,

''ஆத்தா... நேத்து ரவைக்குக் கெளம்பி... வைத்தீஸ்வரன் கோவில ஒரு சீமந்தத்துக்குப் போயிருக்கு! வர... ஒரு வாரம் பிடுக்கும்... போன மேனிக்கா... கும்பக்கோணம் பக்கத்தில கோவில் எல்லாம் ஒரு பார்வை பார்த்திட்டு வரச் சொல்லியிருக்கேன்...''

''ஆமா... அந்தத் துக்கம் பார்வைப் படத்தான்... அந்தக் கோவில் எல்லாம் ஏங்கிப் போயிருக்காக்கும்! உங்காத்தா வாயைத் தொறந்தா போதும்... சாமியே கோவிலை விட்டு ஓடிப் போய்டுவாரு!'' என்று முணுமுணுத்தாள், மலர்.

''என்ன சொன்னே? என்ன சொன்னே? துக்கமா? ஆத்தாடி... ஆத்தா... உன் ராங்கித் தனத்துக்குக் கல்யாணத் துக்குப் பொறவு படப் போறடி!'' என்றபோது, அவன் குரல் மிரட்டவில்லை! மாறாய், சிரித்தது!

''அதது நடக்கையில பார்ப்போம்... நீரு வந்த விஷ யத்தைச் சொல்லிட்டா... கௌம்பும்! அப்பு வரையில இங்க இருந்தீரானா... என்னைய வஞ்சே கலட்டிரும்!''

''அப்படின்னா... இருந்திட்டுத் தான் போறேன்...'' என்றவன், அவள் என்ன கெஞ்சியபோதும், என்ன மிரட்டியபோதும் அங்கிருந்து அகலவில்லை.

சட்டமாய், நடு முற்றத்தில் அமர்ந்து கொண்டு, ஓர் திரைப்படத்தில் மூழ்கி விட்டிருந்தான்!

கையைப் பிசைந்தபடியே நிற்பதைத் தவிர, மலரால் எதுவுமே செய்ய முடியவில்லை.

வேலுகருப்பன், வருவதற்கு எடுத்துக் கொண்ட ஒரு மணி நேரமும், தங்கத்தைக் காவல் காப்பவள் போல், முற்றத்திலேயே அமர்ந்திருந்தாள் பொன்மலர்.

ஆனால், முதலில் அவளிடமிருந்து விறைப்பு கொஞ்சம் கொஞ்சமாய் விடை பெற்றது!

மெல்ல ராஜதுரையின் மீது திரும்பிய அவளது கவனம், அடுத்து வந்த நிமிடங்களில் அவனிடம் முழுதாய் லயிக்கத் தொடங்கியது.

கால் மேல் கால் போட்டு, ஒய்யாரமாய் அமர்ந்திருந் தவன், கைகள் இரண்டையும் பின்னுக்குக் கொடுத்து, முதுகை லேசாய் முன்னுக்குத் தள்ளி, மிகவும் சௌகரிய மாய் அமர்ந்திருந்தான்.

''தோரணையைப் பாரு...'' என்று நொடிக்கத் தொடங் கிய கழுத்து, மெல்ல மெல்ல அவன் பக்கமாய் இதயத்தை இடம் நகர்த்தியது.



இருநூறு கண்மை டப்பாக்களை ஒன்றாய் தடவியது போன்ற கருஞ்சிகை! திமிரை எடுத்துக் காட்டும் எடுப் பான நாசி! போதையின் வாடை தெரியாமல், சிவப் பேறாதிருந்த கண்கள்! கேப்பையும்... கம்புமாய் தின்று உரமேறிப் போயிருந்த உடல்! ஏர்கலப்பையின் உறுதி கொண்ட கால்கள்! கொம்பு சீவிய காளையாய் துள்ளித் திரிந்த கைகள்! கறந்த பாலென வெளுத்திருந்த வேட்டி-சட்டை! அதிலும், எப்போதும் போடப்படாத முதல் பட்டன்! அதன் வழியே வெளியே தெரியும் புலிநக டாலர்! அவனது முரட்டுத் தனத்தை அதிகரிக் கும் முறுக்குச் சங்கிலி! ஹ்ம்ம். மலருக்குக் கண்ணை எடுக்கவே முடியவில்லை.

ஒவ்வொன்றாய் வலம் வந்த அவளது கண்கள், ஏதோ நகைச்சுவையைப் பார்த்துவிட்டு, மலர்ந்த சிரித்த அவனது அதரங்களை விட்டு அகல்வேனா என்று சண்டித்தனம் செய்தது.

''இப்படிச் சிரிச்சுக்கிட்டே இருந்தா... எம்புட்டு ரம்மியமா இருக்குது!

கடு... கடுன்னு... ஜல்லிக்கட்டுக் காளை மாதிரி... யாரைடா முட்டுவோம்... மோதுவோம்ன்னுட்டு... கடை சில... என்ட்ட குத்துப் பட்டு நிக்க வேண்டியது!'' எனச் சலித்துக் கொண்டது மனம்.

தன்னை மறந்து அவனிடம் லயித்திருந்தவள், ''மலரு...'' என்ற அவனது அழைப்பில் களைந்தாள்!

''ஹான்...'' என அவள் விழிக்க,

''ஒரு சொம்பு... தண்ணி எடுத்தாறியா?'' என்றான் அவன்.

அக்குரலில், அதிகாரம் இருக்கவில்லை... அலட்டல் இருக்கவில்லை... திமிர் இருக்கவில்லை! மாறாய், ஓர்

உரிமை! ஹ்ம்ம்... உரிமையை மீறி ஓர் இழைவு! சொந்தம் போன்ற ஓர் நெருக்கம்!

அந்தக் குரல் ஏதோ மாயம் செய்ய, மெல்ல எழுந்து உள்ளே சென்ற மலர், அவள் வசம் இருக்கவில்லை.

ஏற்கனவே கழுவியிருந்த பித்தளைச் செம்பை, மீண்டும் ஒரு முறை கழுவி, தளும்பத் தளும்பத் தண்ணீருடன் வந்தவள், அவனிடம் நீட்டினாள்.

பல நிமிடம் சென்ற பின்னரும், ராஜதுரை அதை வாங்காமலிருக்க, செம்புக்குள் இருக்க மாட்டேன் என்று சண்டித்தனம் செய்து கொண்டிருந்த தண்ணீரின் மீதே பார்வையை வைத்திருந்த மலர், மெல்ல நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள்.

அவன் வேண்டுமென்றே வாங்காமலிருக்கவில்லை போலும்! கவனம் முழுதும் தொலைக்காட்சியில் இருக்க, மலர் வந்ததைக் கூட கவனிக்காமல், அந்தப் படத்தில் மூழ்கியிருந்தான் அவன்.

''ம்ம்ம்... இந்தாரும்!'' என்ற மலருக்கு, இந்தக் குரல் தனது தானா என்று சந்தேகமாய் இருந்தது!

இவ்வளவு பணிவாய்... இவ்வளவு பதமாய்... இவ்வளவு மென்மையாய்... ஹ்ம்ம்... என்னவாகிறது எனக்கு? என யோசித்தவளை, மேலும் யோசிக்க விடாமல்.

''நன்றி மலரு!'' எனக் கூறித், தண்ணீரை வாங்கிக் கொண்டான் ராஜதுரை.

தன் கையிலிருந்த செம்பு அவனது கைக்கு இடமாறியதைக் கூட உணராமல், நின்றிருந்தாள் மலர்.

ஒரே மடக்கில், தண்ணீர் முழுதையும் குடித்த ராஜதுரையின் தொண்டைக்குழி ''கலக்... கலக்'' என்று ஏறி



இறங்குவதைப் பார்த்திருந்தவளை, சிறு வியப்புடன் ஏறிட்டான் ராஜதுரை.

அவள் கண்களில் இருந்த எந்த உணர்ச்சி, ராஜதுரையை என்ன செய்ததா? ஒரு நிமிடம், அவனுமே தனது அந்தஸ்து... கௌரவம்... திமிர் என்ற எதிர்மறை உணர்வுகளை மூட்டைக் கட்டிவிட்டு, அந்தக் கண்ணோடு கண்ணாய் லயித்துத் தான் போனான், அவனும்!

வெளிப்பூச்சற்ற மனிதனாய் அவன் நின்றிருக்க, உள்ளிருந்த உறுத்தல்கள் யாவும் கரைந்தோட மலரும் புது மனுஷியாய் நின்றிருந்தாள்.

குடும்பமும், சூழ்நிலையும், ஏன்... சிறு வயதில் தன் வெறுப்பும் என்று நடக்கவே முடியாது என அவள் எண்ணியிருந்த ஓர் காரியம், இப்போது நடந்து விடுமோ என்று அவளுக்குச் சற்று பயமாக இருந்தது! ஆனால், அந்தப் பயத்தையும் மீறி, உள்ளுக்குள் ஓர் ஆசை உருப்பெறுவதை அவளால் தடுக்க முடியவில்லை!

தமையன், தந்தை, சந்தோசம், ஊரார், உறவினர் என்று அனைவரிடமிருந்தும் இதற்கு எதிர்ப்புக் கிளம்பும் என்று மூளை எச்சரித்தபோதும், மனம் அலைபாய்வதை நிறுத்துவதாய் இல்லை!

எதிரே நிற்கும், ஆஜானுபாகு தேகத்தானிடம் தன் தேகமும் மனமும் ஒரு சேர வசமிழப்பதை அவளால் தடுக்க முடியவில்லை என்பது, அந்த வயதுக்கான நிஜம்!

ராஜதுரையுமே, பொன்மலரின் தேக வளைவுகளில் தன்னைத் தொலைத்திருந்தாலும், அவளது உணர்வு வலைக்குள் தானும் தன் மனமும் சிக்குண்டு இருப்பதைக் கட்டுப்படுத்த முடியாதவனாய், எழுந்து நின்றான்.

வலது கை அவளிடம் தண்ணீர்ச் செம்பை நீட்ட, இடது கை அவளது கைகளைப் பற்றின.

முந்தைய தினமும், அவளது கைகளை அவன் பற்றியிருக்கிறான். ஆனால், அந்தப் பிடிக்கும் இந்தப் பிடிக்கும் ஏகப்பட்ட வித்தியாசங்கள்! முன்னிருந்த பிடியில், அழுத்தமும், கோபமும், வேகமும் நிரம்பி யிருந்தது என்றால், இன்றைய பிடியில் மென்மையும் நெருக்கமும் இதமும் காதலும் பொங்கி வழிந்தன.

அவனது பிடியைப் போலவே, மலரின் மனமும் நேற்றைய நிலையை விட்டு முற்றிலுமாய் மாறிப் போயி ருந்தது! நேற்று அவமானமும் பயமும் நெஞ்சத்தை நிரப்பியிருக்க, இன்றோ மயக்கமும்... இது நடக்குமா என்ற எதிர்பார்ப்பும் மனதை ஆக்கிரமித்திருந்தன.

இருவருமே ஓர் மயக்க நிலையிலிருக்க, ராஜதுரை யின் பிடிக்குள் மலரின் மனமும் உடலும், செல்லும் வேளையில் ''யம்மா... பொன்னு...'' என்ற விளிப்புடன் வேலுகருப்பன், வெளிவேலியை நீக்கும் சத்தம் கேட்டது!

சட்டென இருவர் நடுவேயும் நிலவிய மாயவலை அறுத்தெறியப்பட, பதறி விலகினர் இருவரும்.

விலகிய அவசரத்தில், ராஜதுரையின் கையிலிருந்த செம்பு கீழே விழுந்துவிட, அந்தச் சத்தம், மலரின் பதட்டத்தை மேலும் அதிகரித்தது.

அதை விடவும், வேலுவின் ''தண்ணி கொண்டா... பொன்னு!'' என்ற குரல், அருகே கேட்கவும், பொன்மலர் பதறியடித்து விலகினாள்.

அவள் விலகிய வேகத்தில், கீழே உருண்டுக் கொண்டிருந்த செம்பின் மீது கால் வைத்துவிட, கால் இடறி, அவள் தடுமாற,



அந்தத் தடுமாற்றத்தின் காரணமாய், அருங்கிருந்த தூண் மீது, பொன்மலரின் தலை நங்கென்று மோதியது.

மோதிய வேகத்தில், ''ஆத்தா...'' என்ற அலறலும், ''மலரு...'' என்ற பதற்றமும், ''என்னாச்சு... பொன்னு...'' என்ற வேகக் குரலும் ஒருங்கே ஒலித்தது.

ரத்தம் வழிந்தோட, மலர் அத்தூணின் மீதே சரிந்து விழ, ''மலரு... மலரு... ஐயோ... அம்புட்டு ரத்தம்...'' என்றபடியே, அவளைக் கையில் தூக்கினான், ராஜதுரை.

ம்ஹூம்! தூக்கில்லை! தூக்க முயன்றான்! ஆனால், சுய உணர்வை இழந்து கொண்டிருந்த நிலையிலும், வாசல் தாண்டி விரைந்து கொண்டிருந்த தந்தையின் மீது பார்வையை வைத்து, ''வே....ணாம்... வ்...வ... விடுங்..க! அப்.....ப்......ப்பச்சி... வ...ராக!'' என்றாள் ஈனச் சுவரத்தில்.

ஆனால், அதைக் கவனிக்கும் மனநிலையில் அவன் இருக்கவில்லை.

தன்னை விலக்கித் தள்ளிய அவளது கரங்களைத் தன் பலம் கொண்ட மட்டும், விலக்கிவிட்டுத், தம் கட்டி, அவளைத் தூக்கிவிட்டான்.

அதற்குள், வேலுகருப்பன் முற்றத்திற்குள் நுழைந்து விட்டிருந்தார்.

அங்கே தான் கண்ட காட்சியில் அதிர்ந்தவராய் ''ராசு... என்னய்யா செய்றே? விடுய்யா... அவளைக் கீழ விடு...'' என்றார் அதட்டலாய்.

ராஜதுரைக்குக் கோபம் தலைக்கேறியது! ''அவ... மண்டை தெறிச்சுப் போயிருக்கு... இப்ப என்னய்யா?'' என்று காட்டமாய் வெளிவந்தன, வார்த்தைகள்.

அவனது கோபம் அவனிடம் பேச விடாமல் செய்ய, ''பொன்னு! இறங்கு... அவன் கையில் இருந்து இறங்கு!'' என்று மகளை அதட்டினார்.

அரை மயக்கத்திலிருந்த நிலையிலும், மலருக்குத் தந்தையின் சொற்கள் வேதவாக்காய் பட்டன போலும்.

வேலுகருப்பனின் சொற்களை மதிக்காமல், வாயிலை நோக்கி விரைந்து கொண்டிருந்த ராஜதுரையின் கைகளிலிருந்து இறங்க ஆயத்தப்பட்டாள்!

''என்னைய கொலைகாரன் ஆக்கிப்புடாத மலரு! அம்புட்டுத்தேன்!'' - கடித்தப் பற்களின் இடையே வெளிவந்த அவனது வார்த்தைகளுக்குத் தெறித்த கோபதிற்கு மாறாய், மலரின் மீது அவனுக்கிருந்த பிடி இதமாய் இறுகியது!

''விடும்... வி...வி...டு.......'' - மலரின் குரல் கொஞ்சம் கொஞ்சமாய் தேய்ந்து தேய்ந்து மறைந்தே போனது!

அதற்குள் ''ராசு! இப்படியே வெளியே போனியானா எங்க மானம்... ஊரெல்லாம் நாறும்... ஏற்கனவே அவ னவன் என்னைய பேசுறப் பேச்சுக்குப் பதில் சொல்ல முடியுதில்ல... இறக்கிவிடு ராசு, அவளை!'' என்றவாறே அவன் பின்னாடியே ஓடி வந்தார், வேலுகருப்பன்.

''இப்பக்கூட... உமக்கு உம்ம மக உசிரு முக்கிய மில்ல... கட்டையில போகப் போற இந்த ஜாதியும்... இந்த வூரும் த்தேன் முக்கியமாய் போச்சு! ச்சை!'' என்று இரைந்தவன், மறந்தும் வேலுவின் புறம் திரும்பவில்லை.

வாயிலை எட்டி, ''எலே... அலேகா... வெருசா அம்பாசிடரை எடு...'' என்று குரல் கொடுத்தவாறே, எதிர் வீடான தன் வீட்டிற்கு விரைந்தான்.



''அண்ணே...'' என ராஜதுரை வீட்டிலிருந்து ஓடி வந்தவன், அவன் கண்டக் காட்சியில் உறைந்து நிற்க,

''இங்கன என்னடா பிராக்கு... வண்டியை எடுக் கிறேன்...'' என்ற ராஜதுரையின் கர்ஜனை அவனுக்கு உயிரூட்டி, உள்ளே ஓட வைத்தது.

ராஜதுரை போட்டச் சத்தத்தில், அந்தத் தெருவே கூடிவிட, வேலுகருப்பன் செய்வதறியாது தவித்துப் போனார்.

மகள் மயங்கிச் சரிந்தது தந்தையாய் மனதைப் பிசைந் தாலும், ஜாதியும்... ஜாதிப்பற்றும் அவரை வேறெ தையும் சிந்திக்க விடாமல் செய்தன.

''ராசு... ஊரே பாக்குது ராசு! விடுய்யா... நா அவளைப் பார்த்துக்கிடுதேன்... அவ எனக்கு மகய்யா!''

''என்ன பாப்பீரு? இல்ல என்ன பாப்பீரு கேட்கு தேன்.. அவ பரலோகம் போனதும் அங்கன போயி பாத் துட்டுத் திரும்புவீரோ? நம்ம வூருல ஆஸ்பத்திரின்னு ஒரு இடிஞ்ச கட்டிடம் த்தேன் கிடக்கு... டவுன்ல பெரிய ஆஸ்பத்திரிக்குப் போயாவணும்... எப்படிப் போவீரு? பறந்தா? இல்ல நடந்தா?'' என்றான் நக்கலாய்.

கார் அவன் வீட்டு வளாகத்தினுள் இருந்த வெளியே வரக்காத்திருந்த இடைவேளையில் வேலுகருப்பனிடம் பேசியவன், வண்டி வந்ததும் மலரை பின் சீட்டில் படுக்க வைத்துவிட்டுத் தானும் அதில் ஏறினான்.

என்ன செய்வது என்று புரியாமல் நின்று கொண் டிருந்த மலரின் தந்தையிடம் திரும்பியவன், ''வெருசா ஏறும்!'' என்று அதட்டினான், ராஜதுரை.

அப்போதும் அவர் தயங்கியே நிற்க, ''இம்புட்டு த்தேன் உம்ம பாசமா?'' என இளக்காரமாய் கூறிவிட்டு,

''வண்டியை... விரட்டி விடுடா அலகா!'' என்றான் காரோட்டியிடம்.

அவனது நக்கலை விடவும், வண்டியின் உறுமல் நினைவை மீட்டெடுக்க, காரின் கதவைத் திறந்தவர், மகளைத் தன் மடியில் போட்டிருந்த ராஜதுரையை வெளிப்பக்கமாய் இழுத்து ''நீ முன்பக்கம் ஏறு, ராசு!'' என்றார்.

''என்னைய மிருகமாக்கிப் பாக்காதீரும், கருப்பையா!'' என அவரிடமும்,

''எலே... வண்டியை எடுங்கிறேன்...'' என அழகேச னிடமும் சீறினான், ராஜதுரை.

எஜமானின் கோபத்திற்குப் பயந்து, அழகன் வண் டியை நகற்ற, தும்பை விட்டுவிட்டோம் வாலையேனும் பிடிப்போம் என எண்ணியவராய், வேலுகருப்பன் முன் பக்கம் தாவி ஏறினார்.

வண்டி, டவுனுக்குள் நுழையவும், ஓர் பிரபல தனியார் மருத்துவமனையின் பெயரைச் சொல்லி, ''வண்டிய அங்க விடுடா... அலகா!'' என்றான் ராஜதுரை.

''அந்த ஆசுபத்திரியெல்லாம் கொள்ள காசு கேப்பான்... தர்மாசுப்பத்திரிக்கே போவட்டும்...'' என்ற வேலுகருப் பனின் வார்த்தைகளை விடவும்,

''அலகா!'' - ராஜதுரையின் விளிப்பு, அந்தக் காரோட்டியை விரட்டியது.

அடுத்தப் பத்தாவது நிமிடம், தனியார் மருத்துவமனை யின் முன்னே நின்றது வண்டி.

அடுத்தப் பத்தாவது நிமிடம், பொன்மலருக்கு சிகிச்சை ஆரம்பித்திருந்தது.



அதற்கு அடுத்தப் பத்தாவது நிமிடம், ''அவங்க நல்லா யிருக்காங்க...'' என்றனர் மருத்துவர்கள்.

அதன் அடுத்த நிமிடம், ராஜதுரை மலரிருந்த அறைக் குள் நுழைய,

''இதெல்லாம் நல்லாயில்ல ராசு! மனசில... என்ன யிருந்தாலும் தூக்கி எறிஞ்சிரு!'' என்றார் வேலுகருப்பன்.

அதற்குப் பதிலாய், ''கண்டிப்பாய் நடக்கும்! நா நடத்திக் காட்டுறேன்!'' என்றான், அவருக்கு மேலேறிய குரலில்.

சொல்லிவிட்டு அவன் உள்ளே நுழைந்துவிட, அவனையும் மகளையும் மாறி மாறிப் பார்த்தவர், அவனது கைகள் மலரின் நெற்றி முடி வருடவும், வேகமாய் சென்று மகனின் கைப்பேசிக்கு அழைத்தார்.

''ஏலே வாசு! நீ... என்ன செய்வியோ... ஏது செய் வியோ எனக்குத் தெரியாது! வீடு குடிபோற நாளில, பொன்னுக்குக் கலியாணம் நடந்தாவணும்! சொல்லிப் புட்டேன்!'' என்றார், ஆணித்தரமாய்.

## 9



வேலுகருப்பன் வீரவசனம் பேசிக் கொண்டிருந்த வேளையில், அவருக்கருகே... ஆனால் அவர் அறியாமல் ஓர் காதல் நாடகம் அரங்கேறத் தொடங்கியது!

ஒரே நாளில், தன் சக்தி முழுதையும் தொலைத்த வளாய் கட்டிலில் படுத்திருந்த மலரின் நெற்றி முடி வருடிய ராஜதுரை, மறு கையால் அவளது கைகளை அழுத்திப் பிடித்துக் கொண்டான்.

நெற்றியில் ஏற்பட்டக் குறுகுறுப்பா... இல்ல கையில் ஏற்பட்ட அழுத்தமா... எதில் விழித்தாளோ? மலர் கண் திறந்தாள்!

''மலரு...'' என அவனது குரல் கெஞ்சிய வேளையில் தான், அவனது அழைப்பில் தென்பட்ட வித்தியாசத்தை உணர்ந்தாள், பொன்மலர்.

''பொன்னு...'' என்றே அழைக்கப்பட்டுப் பழகிய வளுக்கு, இந்த ''மலரு...'' வித்தியாசமாய் பட்டது!

ஆனால், இப்போது தான் ''மலரு...'' என்றழைக் கிறானா? இல்லை முன்னேரவா? என்று மண்டைக்குள் நண்ட ஊறியது!

ஹ்ம்ம்... மண்டையைக் கசக்கிப் பிழிந்ததில் ''ஏய் புள்ள...'' என்றோ, ''ஏய்... செவ்வண்டு...'' என்றோ, ''ஏய்!'' என்றோ ஏக வசனத்தில் மட்டுமே அழைத்துக் கொண்டிருந்தவன், திடீரென ''மலர்'' என்ற அழைப் பிற்குத் தாவியிருப்பது புரிந்தது!

ஆனால், இந்தத் தாவல் எப்போது நடந்தது என்ற கேள்விக்குத்தான் விடை சரியாகத் தெரியவில்லை.

நெற்றியைச் சுருக்கி யோசித்ததில், தலையில் தையல் போட்டிருந்த இடம் சுருக் சுருக் என்று இழுத்தது.

வலது கையை எடுத்து, அந்த இடத்தை வருடிவிட எண்ணியவள், அது அவனது பிடியில் இருக்கவே, இடது கையைத் தூக்க முயன்றாள்! ஆனால், அதுவோ ட்ரிப்சின் பிடியில் இருந்தது!

அவள் இழுத்த வேகத்தில், ட்ரிப்ஸ் மாட்டியிருந்த ஸ்டாண்ட் லேசாய் ஆட, ''ஏய்... என்ன பண்றவ?'' என்று பதறிப் போனான், ராஜதுரை.



பிடித்திருந்த அவளது கையை விட்டுவிட்டு, மறுபுறமாய் ஓடி வந்து, ட்ரிப்ஸ் ஸ்டாண்டை ஒழுங்காய் நிறுத்தி வைத்தவன்,

''என்னமும் வேணுமா... மலரு?'' என்றான் மென்மை யாய்.

ஆனால், இவன் தான் பேசுவதா? ஒருவேளை, தனக்குத் தான் மண்டையில் அடிபட்டதில், மூளை குழம்பி விட்டதா? - மலருக்குப் புரியவில்லை.

அவள் விழித்த அழகில் கவரப்பட்டவனாய், ''ஏய்... புள்ள! நீ பாட்டுக்கு... நீ யாருன்னு கேட்டுப்புடாதே! பொறவு... என்னால் பித்துப் புடுச்சவளுக்கு வாக்கப்பட முடியாது!'' என்றான் சிரிப்புடன்.

சிரிக்கத் தொடங்கிய மலரின் அதரங்கள் கூம்பி விடவே, அதை உணர்ந்தவனாய், ''அதை வுடு! என்னத்த... மண்டையைத் தட்டி யோசிச்சுக்கிட்டு இருந்தவ? ஊசியைப் புடுங்கி விடுற அளவுக்கு... என்ன வெசனம்?'' என்றான் அவன், அவளது கவனத்தைத் திசைத் திருப்பி.

அவளுமே, தன் பயத்தை ஒதுக்கியவளாய் ''நீரு... எப்பயிலைருந்து இம்புட்டு பாசக்காரரா மாறினீருன்னு அசைப்போடுதேன்...'' என்றாள் லேசான சிரிப்புடன்.

''ஹஹ்ஹா! நா... பாசக்காரனா??'' என்று சிரித்தவன்,

''உன் வாய்த் துடுக்கு இருக்குதே... யப்பா... கலியாணத்துக்குப் பொறவு... படப் போறடி!''

ம்ஹூம். அதன் பின்னர் மலரால் சிரித்துக் கொண் டிருக்க முடியவில்லை!

அரை மயக்க நிலையிலும், தந்தையின் முகத்தில் படர்ந்த கோபமும், ஆற்றாமையும், வேகமும் மனதைப்

பிசைய, ''நா உண்டு... எம் வேலையுண்டுன்னு இருக்கவள... என்னத்துக்குப் போட்டுப் படுத்துறீரு... இதெல்லாம் சரிப்பட்டு வராது! தேவையத்த ஏழரையைக் கூட்டாம... பொழப்பப் பாரும்...'' என்றாள் படபடவென.

''மலரு... உங்கப்பு பேசினத மனசில போட்டு... வெசனப்படாத புள்ள! நா பாத்துக்கிடுதேன்!''

''என்னத்தப் பாப்பீரு... நா ரெண்டு பேருக்கு இடயேயும் கெடந்து இசிப்பட்றதையா? சும்மா இரும்! இதெல்லாம் வேணாம்!''

''மலரு!''

''வேணாமுய்யா... என்னைய விட்டுடும்!''

''என்னடி விடுறது? என்ன விடுறது? சங்கை அறுத்துருவேன்... கழுதமட்ட! விடுறதாம்ல... விடுறது? விடவாடி... இத்தன பாடுபட்டேன்...''

பேசத் தொடங்கிய மலரைப் பேச விடாமல், அவன் மேலும் பேசினான்.

''உங்கண்ணில... ஆசை தெரியுதுடி! பொறவு ஏன் மறைக்கிறவ?'' என்றான் அவளது முகத்தைப் பற்றி, அழுத்தி.

''இல்ல... இல்ல...''

''என்ன நொல்ல...''

''நாம ரெண்டு பேரும்... பங்காளி மொறைக்கா பொறந்தவுக...''

''வேணாம்... மலரு! எதுனா... அசிங்கமா சொல்லிடப் போறேன்... நீயும் நானும்... ஒரே ஆத்தாளுக்கா பொறந்தோம்!''

''ஐயோ... ஒங்காத்தா! அந்தத் துக்கத்தை மறந்தே போனேன் பாரும்! வேணாஞ்சாமி என்னைய விட்டுடுங்க!''



''விட முடியாதுடி! உங்கண்ணு சொல்லுத காதலுக்காகவே... உன்னைய கட்டிக் காம்பிக்கிறேன்...''

''பெரிய... மம்முத ராசா! கண்ணு சொல்லுதாம்... இவரு படிச்சாராம்! எங்கண்ணுத்தேன்... சொல்லுதில்ல... அப்பச்செய்யும்! சும்மா வாய்ச்சவடால் அடிச்சிக்கிட்டு!'' என்றாள் மலர், எரிச்சலாக.

ஆனால், தனது அந்த வார்த்தை, தன் வாழ்க்கையையே அந்தரத்தில் விடப் போவதை அவள் உணரவில்லை!

அதன் பின்னர், ராஜதுரை மருத்துவமனைப் பக்கம் வரவில்லை! ஆனால், மலருக்கு நல்லக் கவனிப்புக் கிடைக்கும்படிப் பார்த்துக் கொண்டான்!

அவனது செயல்கள் ஒரு வகையில் அவளது மனத்தைக் குளிர்வித்த போதும், அவளால் அதை முழுமையாய் அனுபவிக்க முடியவில்லை! பின்னே, வேலுகருப்பன் அவளிடம் மருந்துக்குக் கூட ஒரு வார்த்தைப் பேசவில்லையே!

''நல்லாயிருக்கியா... தாயி!'' என அவர் கேட்டிருந்தால் கூடப் போதும்! ஆனால், அவர் வாய்த் திறக்கவே இல்லை!

ராஜதுரை சென்றதும், கதவைத் திறந்து அவளை ஓர் பார்வைப் பார்த்ததோடு வேலுகருப்பன், அவளது அறைக்குள் வரவே இல்லை.

தான் எழுந்து செல்லலாம் என்றால், ட்ரிப்ஸ் முடியும் வரை எழக்கூடாது என்று அவளைப் பிடித்து வைத்தனர் செவிலியர்.

ட்ரிப்ஸ் முடிந்த நிமிடமில்லாமல், வெளியே சென்று பார்த்தால், வேலுகருப்பன் இருக்கவில்லை. கண்ணை முட்டிக் கொண்டு வந்தது, பொன்மலருக்கு!

அவர் தான் அப்படியிருக்கிறார் என்றால், தனக்கு அடிபட்டது தெரிந்ததும் அண்ணன்காரன் ஓடி வருவான் என்றெண்ணியிருந்த மலருக்கு, ஏகப்பட்ட ஏமாற்றம்!

''பயப்பட ஒன்றுமில்லை!'' என்று சொல்லி, அவளை வீட்டிற்கு அனுப்ப அவர்கள் எடுத்துக் கொண்ட ஒரு முழு நாளும், யாருமே அவளிடம் பேசவில்லை.

அந்தத் தனிமை, ''ச்சே... அவனாவது வந்திருக்கக் கூடாதா?'' என்று ராஜதுரையை எண்ணி, மலரை ஏங்க வைத்தது!

''ம்ஹூம்! வேணாம்... மலரு... அது புளியங்கொம்பு! நமக்கு வேணாம்!'' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு, தன் மனதை மாற்ற முயன்றாள்.

ஆனால், மாறத் தான் மறுத்தது அந்த மரத்தியின் மனம்!

மருத்துவமனையிலிருந்து கிளம்பலாம் என்று மருத்துவர்கள் கூறிவிட்டப்போதும், மலருக்கு எப்படி ஊருக்குப் போவதென்று தெரியவில்லை.

இந்த நிலையில், யாராவது துணைக்கு வந்தால் நன்றாக இருக்கும் என்று அடிப்பட்ட உடலும், சோர்ந்த மனம் ஏங்கியது!

ஆனால், கண்ணிலேயே படாத தந்தையைத் தவிர அவளுடன் வர யாரிருக்கிறார்கள்? என்ன செய்வது என்று கையைப் பிசைந்து கொண்டு நிற்கப் பிடிக்காமல், அறையை விட்டு வெளியே வந்தவளுக்கு, மருத்துவ மனையின் வரவேற்பறையைக் கண்டதும் தான் ''ஐயோ... காசு கட்டலையே...'' என்ற பயம் வந்தது.

உடம்பு பதறி, நெற்றி வியர்த்து, நெஞ்சம் படபட வென அடித்துக் கொள்ளவும், தனக்குச் சிகிச்சை அளித்த



நர்ஸிடம் ஓடியவள், ''நர்சம்மா... எம்புட்டுக் காசு கட்டணும்?'' என்றாள் வேகமாய்.

''காசா? அதெல்லாம்... கட்டியாச்சும்மா... நீ கெளம்பு!'' என்றாள் அவளோ!

''யாரு?'' என்று கேட்க விடாமல், ''ராஜதுரையாகத் தான் இருக்கும்!'' என்று அடித்துச் சொன்னது மனம்.

குழம்பி நின்ற மனதை அடக்கிக் கொண்டு, மெல்ல மருத்துவமனையை விட்டு நகர்ந்தாள் பொன்மலர்.

வீடு செல்ல வேண்டும்... ஆனால்... எப்படி என்று தான் புரியவில்லை! பேருந்தில் சென்று விடலாம் தான்... ஆனால் டிக்கெட்டுக்குக் காசு வேண்டுமே?

மனம் தந்தையை ரொம்பவும் தேடியது!

அவரது கோபம் புரிந்தபோதும், பாசம் தான் புரியாமல் போனது அப்பேதைக்கு!

ஆனால், அழுது கொண்டு நிற்கவும் இது நேரமில் லையே! பேருந்தில் ஏறி விடலாம்... நடத்துனர் கையைக்... காலைப் பிடித்தாவது ஊர் சென்று விடலாம். நாளைக்குப் பணத்தைக் கொடுத்து விடலாம் என முடிவெடுத்த வளாய், பேருந்து நிறுத்தத்திற்கு வந்தவளை, ஐந்து நிமிடத்தில் ஓர் அம்பாசிடர் எதிர் கொண்டது!

''யம்மா... யேறிக்கோங்க!'' எனக் கதவு திறந்து விட்டான், அழகேசன்.

''இல்லண்ணே... வேணாம்... நா பஸ்ஸுலேயே போய்க்கிடுதேன்...'' என்றாள் மலர், முகத்தில் படர்ந்த புதிய பயத்துடன்.

''ஏறுங்கம்மா... இல்லன்னா யய்யா எந்தோலை உரிச் சுப்புடுவாரு!''

''நா ஏறினா... எந்தோல் உரிஞ்சுப் போகும்ண்ணே! வேணாம்... நீங்க கௌம்புங்க!'' என்றாள், மலர் கறாராக.

''இல்ல...'' என அழகேசன் மறுத்துக் கொண்டிருக்கும்போதே, அவர்கள் ஊர் செல்லும் பேருந்து வந்து, மலர் அதில் ஏறிவிட்டாள்.

''ஐயோ... எனக்கின்னைக்கு... ஏழரை த்தேன்...'' என்று புலம்பிய அழகேசன், காரை நிறுத்திவிட்டு, பேருந்தில் தானும் ஏறினான்.

வியந்து நோக்கிய மலரிடம், ''என்னைய உப்புக்கண்டம் ஆக்காம விட மாட்டீக போலவே!'' என்று புலம்பியவன்,

அவள் நடத்துனரிடம், பணமில்லை என்று சொல்லிக் கெஞ்ச ஆரம்பிக்கவும், அவளுக்கும் தனக்குமாய் டிக்கெட் எடுத்தான்.

''அய்யோ.. நீங்க ஏண்ணே எடுத்தீக... கண்டக்டரண்ணே வாங்காதீக! நா... நாளைக்குக் கொடுத்துடுதேன்...'' என அவள் மன்றாடியதை யாருமே கேட்பதாய் இல்லை.

ஒரு வழியாய் ஊர் வந்து சேர்ந்தவளைப் பூட்டிய வீடே வரவேற்றது!

''எங்க போனாரு?'' என்ற யோசனை மேலோங்க, அடுத்த வீட்டு மல்லிகாவிடம் சாவி வாங்கச் சென்றவளை,

''என்னடியம்மா... புடிக்காது... புடிக்காதுன்னு... புடுச்சுப்போட்டே போல!'' என்ற நக்கல் பேச்சுடன் வரவேற்றாள் அவள்!

''யெக்கா... நானே வெசனப்பட்டுப் போயி வந்திருக்குதேன்... கண்டதையும் பேசாதக்கா...'' என்றாள் மலர், சட்டென மேலிட்டக் கோபத்துடன்.



''கண்ணால கண்டதைத் தானேடி... பேசுதேன்!'' என்ற மல்லிகா மேலும் பேசும் முன்னர்,

''அப்பச்சி... சாவி கொடுத்துடுச்சா?'' என்றாள் மலர், பட்டென.

''இல்லடியம்மா! அந்த வீட்டில வாக்கப்பட முன்னையே... அவைங்க தோரணை... உனக்கும் வந்துப் போச்சு! நல்லா... வாழ்வடி நீயி! நானும் பாக்குதேன்!'' என்றாள் மல்லிகா, தன் கோபம் முழுதையும் முகத்தில் அப்பி.

அதைக் கேட்கும் திராணியில்லாமல், ஓய்ந்து போய் திண்ணையில் அமர்ந்தவள், அப்படியே உறங்கிப் போனாள்! காயம் பட்ட உடம்பல்லவோ? அதை விடவும், காயமாற ஊசியும் மருந்தும் ஏறிய உடம்பன்றோ!? அவளையும் மீறி, சோர்ந்து விழுந்தது!

அருகே ஏதோ அரவம் கேட்கவும், மெல்ல விழித்தவள், வேலுகருப்பன் கதவைத் திறப்பதைக் கண்டு, ''எங்கப்பு போனீக? நா... மட்டும் ஒத்தாளா... ஆசுபத்திரில இருந்து வந்தவ!'' என்றாள் ஆதங்கம் பரவலாய் விரவியிருந்த குரலில்.

அவள் கேட்டதற்குப் பதில் சொல்லாமல், ''போகையில் தொணைக்கு வந்த மவராசன்... இப்ப வரலையோ?'' என்றார் அவர் நக்கலாய்.

''அப்பு!'' என மலர் அதிர்ந்து நின்றது ஒரே வினாடி தான்! அடுத்த வினாடி, வேலுகருப்பன் வைத்த அறையில் கன்னம் தகதகவென எரிந்தது!

''வெங்கட்கெட்ட மட்ட! அவங் கையில சொகுசா பயணம் கேட்குதா ஒனக்கு? எம்மானத்தை வாங்கிப்

புட்டியேடி... ராங்கி!'' - தன் கோபம் தாங்க முடியா தவராய், அவளை மீண்டும் அடித்தார் வேலுகருப்பன்!

பதிலே பேச முடியவில்லை, மலரால்! அவர் வைத்த அடி... ஓரோர் அணுவிற்குள்ளும் ஊடுருவி, உடம்பை வலிக்கச் செய்தது!

வலி தாங்க முடியாமல், அப்படியே சுருண்டு படுத் தவளைப், பார்த்து அவருக்கும் பரிதாபம் பிறந்ததோ என்னவோ, ''ச்சே...'' என்ற ஒரு சொல்லோடு உள்ளே சென்று மறைந்தார் தகப்பனார்.

எவ்வளவு நேரம் அப்படியே படுத்திருந்தாளோ, மலர் மெல்ல உள்ளே எழுந்து சென்றபோது, வேலுகருப்பன், முற்றத்தில் சிங்கமென நடை பயின்று கொண்டிருந்தார்.

அவரைப் பார்க்கவே பயமாய் இருந்தது, மலருக்கு!

பயத்தை விடவும், தன்னால் அவருக்கொரு அவமானம் நிகழ்ந்து விட்டதே என்று மனம் நொந்தது!

மெல்ல அவரருகே சென்றவள், ''அப்பு... நா... வேணும்ன்னே.... அந்தாளோட போவல... என்னால கண்ணை முழிக்க முடியலப்பு... அத்தேன்...'' என்றாள் காரணம் போல.

ஆனால், அவருக்கு அந்த விளக்கமெல்லாம் தேவை யில்லை என்று அவரது அடுத்தக் கேள்வியில் நிரூபித்தார்.

''நீ அவனோட போவலை சரி... ஆனா... அவன் ஏன் வீட்டுக்கு வந்தான்?'' என்றார் அவர். குறுக்குக் கேள்வி யாய்.

''உம்மைப் பாக்கத் த்தேன்...'' என அவள் கூறவும்,

''வெளக்கமாறு... பிஞ்சுப் போவும், கழுத! வாயை மூடு!'' என்று அதட்டியவர்,



''நடந்ததைப் பேசி... ஒரு புண்ணியமுமில்ல... ஆவுறதைப் பார்ப்போம்!'' என்றார் தீர்மானமாக.

அவர் தன்னைத் தப்பாக நினைப்பது பிடிக்காவிட் டாலும், ''சரிப்பு... நீரு என்ன சொல்றீரோ... அதை அப்படியே கேட்குதேன்...'' என்றாள் மலர்.

அவளுக்கு, நேற்று ஆசை வைத்த ராஜதுரையை விட, பெற்ற தந்தையும்... கூடப் பிறந்தவனும்... அவர்களது மரியாதையும் மேல் என்று பட்டது!

அவன் மீது இப்போதுதானே ஆசை வந்தது! சட்டென வந்த ஆசைக்காக... ஆண்டாண்டு காலப் பாசத்தை இழப்பதா என்று மனம் சிந்தித்தது! அதுவும், கையை ஊன்றி... காலை ஊன்றி... கர்ணம் பாய்ந்து... ஓர் வீட் டைக் கட்டிருக்கையில், தனது இந்தச் செயல் அவர்களை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்று புரிந்தது!

இதைப் பற்றியெல்லாம் எண்ணாமல், சட்டென அவனிடம் மனதைத் தொலைத்தத் தன்னையே நொந் தவளாய், தந்தையிடம் சரணடைந்தவள்,

''நாளைக்கு... மறுநாளு... கொசவப்பட்டியில இருந்து மாப்பள வீட்டுக்காரக வராக! அவுக வரையில... உன் ராங்கித் தனத்தைக் காட்டாம... பொட்டப்புள்ளையா லட்சணமா இரு...'' என்ற தந்தையின் பேச்சில், அதிர்ந்து போனாள்!

''அப்பு... என்னப்பு சொல்றீக...''

''ஆமா சொல்றாக... உனக்கு அடுத்தப் பொதன்(புதன்) கெழமைக்குக் கலியாணம்!''

''அப்பு!''

''ஆமா.... மாப்பள... எனக்கு ஒண்ணுவிட்ட சித்தப்பா பேரன்... உனக்கு சுத்தி முத்தி... மொறையா த்தேன் வரும்.''

''அப்பு... நா படிக்கனும்...''

''போதும்... நீ படிச்சதும்.... எங்க மானத்தைக் கிழிச்சதும்!''

''இன்னமும் மூணு மாசந்தேன் இருக்குப்பு... முடிச்சிடுதேனே...''

''ஒரு மண்ணும் வேணாம்! உன்னைய இனியும் இந்த ஊருல விட்டு வச்சா... எங்களுக்கு த்தேன் அவமானம்!''

''நா... இனிமே நீரு வெசனப்படற மாதிரி நடந்துக்கிட மாட்டேன்! படிச்சு முடிச்சதும்... நீரு சொல்ற மாப்பிள்ளையே கட்டிக்கிடுதேன்... அப்பு... உம்ம காலில் விழுந்து மாப்புக் கேட்குதேன்... என்னைய படிக்க விடும்...''

''என்னமோ... நா சொல்றதை அப்படியே கேட்குதேன்னு சொன்னவ... இப்ப யென்ன?'' என்று அவளை எதிர்த்துக் கேட்டவர்,

''இத்தேன்... யென் முடிவு! அம்புட்டுத் தேன் சொல்லிப்புட்டேன்...'' என்றுவிட்டு, அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டார்.

மலைத்து நின்றாள் பொன்மலர்!

அந்த நிமிடம், ராஜதுரை மனதை விட்டு எங்கேயோ ஓடிப்போயிருந்தான்! படிப்பு! படிப்பு! படிப்பு மட்டுமே மனதில் நிற்க, அந்தப் பெண் மனம் தவித்துப் போனது!

அதன் பின்னர், தந்தையிடம் கெஞ்சிப் பார்த்தாள்... அழுதுப் பார்த்தாள். கதறிப் பார்த்தாள்... காலைப் பிடித்தாள்! அவர் அசையவில்லை!

முடிவில், தான் கண்டே இராத தாயின் படத்தை எடுத்து வந்து அவர் காலடியில் போட்டு, ''அப்பு... எங் காத்தாவை நா பாத்ததில்லை... நீரு த்தேன்... என்னைய ஆத்தாவுக்கு ஆத்தாவா.. அப்பச்சிக்கு அப்பச்சியா வளத்தீரு! அதனால... இந்த ஆத்தாவை நா இம்புட்டு நாளைக்குத் தேடினதே இல்லை! ஆனா... இப்ப எதுக்காண்டி எடுத்தாந்து இருக்கேன் தெரியுமா... இந்தா எங்காத்தா மேல சத்தியமா சொல்லுதேன்... நா உம்ம பேச்சை மீறி... எதுவும் செய்ய மாட்டேன்... என்னைய படிக்க விடும்... உம்ம காலில விழுவுறேன்...'' என்றாள் தேம்பலின் ஊடே!



அந்தப் பேச்சு, வேலுகருப்பனை அசைத்திருக்க வேண்டும்!

பல நிமிட மௌனத்திற்குப் பின்னே ''கலியாணத்துக்குப் பொறவு... படிக்கலாம்... நா மாப்பள வீட்டில் சொல்லுத்தேன்!'' என்றார் அரை மனதாய்.

பொன்மலருக்கு, அதுவே போதுமானதாய் இருந்தது. இதற்கு மேல், அவரை எதிர்த்துப் பேசினால், மாப்பிள்ளை வீட்டார் படிக்க வைப்பதாய் இருந்தாலும், ''படிக்க வைக்க வேண்டாம்!'' என்று சொன்னாலும் சொல்லி விடுவார் என்ற பயம் மனதைப் பிசைய, மெதுவாய் கை கூப்பினாள் பொன்மலர்.

அதன்பின், அந்த வீட்டில் பேச்சு வார்த்தை என்று எதுவும் நடக்கவில்லை.

அடுத்த நாள் காலை, மலர் கல்லூரிக்குச் செல்வது போல் தயாராகி வரும் வரை!

ஆனால், அவள் வியக்கும் வகையில் வேலுகருப்பன் எதுவும் சொல்லவில்லை. ''பாத்துச் சூதானமா போ... ஒழுங்கா மொறைக்கா இன்னைக்குப் பள்ளிக்கூடம் போய் வந்தியானா... உன்னைய படிக்க வைக்கச் சொல்லி, எம் தங்கச்சி மவன்ட்ட சொல்லுவேன்.... இன்னைக்கும்... அன்னைக்கு மாதிரி எதுனா கூத்தடிச்சிட்டு வந்தவ?

மவளே, நானே கொன்னு போட்டுருவேன்!'' என்ற தோடு, அவளைப் போக விட்டார்.

போகவிட்டார் என்று அவள் நினைத்தாள், அவ்வளவே! ஆனால், அவரோ?

தந்தையின் எண்ணம் புரியாமல், தலையில் பட்ட அடியைக் கூட மதிக்காமல் கல்லூரிக்குச் சென்றவளை, ஒன்பதரை மணியளவில் ஓர் மாணவன் எதிர்கொண்டான்.

''நீங்க தான் பொன்மலரா? உங்களுக்கு... ஒரு போன் வந்திருக்கு!'' என்று கைப்பேசியை அவளிடம் நீட்டி விட்டு, ஓடியே போய்விட்டான்.

ஒன்றும் புரியாமல், கைப்பேசியைக் காதில் வைத்தால் ''மலரு...'' என்றது மறுமுனைக் குரல் ராஜதுரையின் அடையாளத்தைத் தாங்கிக் கொண்டு.

''ஹான்...'' என்று அயர்ந்து நின்றவள்,

''ஐயோ... வேணாம்...'' என்று ஆரம்பிக்கும் முன்னர்,

''ஒரு முக்கியமான விசயம்... வெக்காளியம்மன் கோவில்கிட்டக்க வந்திடு...'' என்றான் அவன்.

''ம்ஹூம்! வர முடியாது... அப்பச்சி... கொன்னுப் போட்டுரும்...''

''எனக்குத் தெரியாது, மலரு! நீ வர... அம்புட்டுத் தேன்... ஒரு அஞ்சு நிமிஷம்!'' என்றான் அவன், பிடிவாதமாய்.

மலர் பதில் சொல்வதற்குள், கைப்பேசி வைக்கப்பட்டு விட்டது!

''ஐயோ...'' என்று வந்தது அவளுக்கு.

''ம்ஹூம். போக வேண்டாம்!'' என்று முடிவு செய்து அமர்ந்தவளால், ஐந்து நிமிடம் கூடத் தாக்குப் பிடிக்க முடியவில்லை.



''அவனை விடவும் தனக்குப் படிப்புத் தான் முக்கியம்!'' என்று அவனிடம் சொல்லிவிட்டு வந்து விடலாம் என்ற முடிவுடன், வெக்காளியம்மன் கோவிலுக்குச் சென்றவளை, எதிர்ப்பக்கமிருந்த ராஜதுரை, கைதட்டி அழைத்தான்.

சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டு வேகமாய் சென்று விடலாம் என்றெண்ணி, ஓட்டமும் நடையுமாய் சாலையைக் கடந்த மலரை, இரு கண்கள் தொடர்ந்து கொண்டே இருந்தன!

ராஜதுரை நின்றிருந்த இடத்தை மலர் கவனித்தாளோ இல்லையோ, அந்த கண்களுக்குச் சொந்தக்காரன் கவனித்தான்! அந்த இடம் - சார்பதிவாளர் அலுவலக (ரெஜிஸ்டர் ஆபீஸ்) வாயில்!

## 10

அடுத்த நாள் காலை பதினோரு மணி!

''வாங்க... வாங்க... வாம்மா தங்கச்சி! மதினி வாங்க!''

''வாய்யா... மருதா! வாங்க சித்தப்பு...!''

''ஏலே, வாசு! மாப்பள வீட்டுக்காரக வந்துட்டாக... வெருசா வா!''

''நீங்க வர்றீங்கன்னு.. பலகாரம் பண்ணச் சொல்லியிருந்தேன்... அதை மேப்பாவை (மேற்பார்வை) பாத்துக்கிட்டு இருக்குதான்...''

அடுத்த அரை மணி நேரமும், மாப்பிள்ளை வீட்டாருக்கான விருந்துபசாரமும் கலந்துரையாடலுமாய் கரைந்து போனது.

''பொண்ண கூட்டியாங்க...'' எனக் கூட்டத்தில் ஒருவர் குரல் கொடுக்கவும்,

''வாசு... போயி... அவளைக் கூட்டியா...'' என்றார் வேலுகருப்பன், மகனிடம்.

மகனோ, தந்தையைக் கண்களால் எரித்தான்!

ஆனால், உறவினரின் முன்னிலையில் எதிர்த்துப் பேச முடியாமல், அவன் நகர, ''ஆத்தா இல்லாத கொற... ஆம்பிள போயி கூட்டியார வேண்டியிருக்கு...'' என்று அலுத்துக் கொண்ட பெண்ணைத் தொடர்ந்து, ''நா போய்க் கூட்டியாரேன்... தம்பி!'' என மற்றொருத்தி, உள்ளே சென்றாள்.

வாசுதேவன், ஒன்றும் சொல்லாமல் அங்கேயே நின்று கொண்டான்.

உள்ளறையிலிருந்து இவர்களது உரையாடலை மட்டுமல்லாது அண்ணனின் முகபாவனையையும் கவனித்துக் கொண்டிருந்த மலருக்கு, அழுகைப் பொங்கி வந்தது!

நேற்று மாலை சென்னையிலிருந்து வந்தவன், இன்று வரை... சொல்லப் போனால் இந்த நிமிடம் வரையிலும் அவளிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை!

''அண்ணே... நா சொல்லுறதை ஒரு நிமிஷம் கேளுண்ணே...''

''அண்ணே... நா ஒண்ணுமே பண்ணலைண்ணே! நெசம்ண்ணே! அந்தாளு தேன்... நீ சொன்னதா சொல்லிக்கிட்டு... வீட்டுக்கு வந்தாரு...''

மலரும் என்னென்னவோ சொல்ல முயன்றாள்! ம்ஹூம்! வாசு கொஞ்சம் கூட அசைந்து கொடுக்கவில்லை! தான் வேலுகருப்பனின் மகன் என்பதை நிரூபித்தான்!



கடைசியில், ''என்னைய ரெண்டு அப்புன்னாலும்... அப்பிடுண்ணே! இப்படிப் பேசாது மட்டும் இருக்காத.... மனசு வலிக்குதுண்ணே!'' என்று அவன் காலில் விழுந்தவளைத் தாண்டிக் கொண்டு சென்று விட்டான், பாசக்காரன் என்றெண்ணியிருந்த அவளது அண்ணன்!

மலர் உடைந்து போனாள்! தந்தைக்கும் தமையனக்கும் கண்ணின் மணியாய் இருந்தவள், கருகிய மண்ணாய் மாறிப் போனாள்! ஒரே நாளில்!

கண்ணை நிரப்பியக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தவளை, முற்றத்திற்கு அழைத்துச் சென்றாள், வந்தவள்.

அங்கிருந்த யாரையும் நிமிர்ந்து பாராமல், மெல்ல அங்கு சென்றவள், தூண் ஓரமாய் ஒதுங்கி நின்றாள்.

''செங்கப்பொடி போட்டு... வெளக்கி வச்சப் பித்தள வெளக்காட்டம்... மின்னுதாளே! கொடுத்து வச்சவன்டே.... நீயி!'' என்றாள் வந்தவளுள் ஒருத்தி.

''நீ சுத்திக்கிட்டு இருந்த இருப்புக்கு... இந்த மகராசி கெடச்சது உம் அதிர்ஷ்டம்தான்... மொக்கையா!'' என்றார் ஓர் பெரியவர்.

''ஏம் மவனுக்கென்ன கொறைச்ச(ல்)? தோப்பில்லையா? தொரவில்லையா? கானியில்லையா? கெணறில்லையா என்ன இல்ல?'' - மாப்பிள்ளையின் தாய் நொடிக்க,

''எல்லாம் இருக்குது! கூடவே, குடியும்... கூத்தியாளையும் சேத்துக்க வேண்டியது தான்!'' என்றார் ஒருவர் பட்டென.

அதுவரையிலும், மண்ணுக்குள் புதைந்து விடுபவள் போல் தரையிலேயே பார்வையைப் பதித்திருந்த மலர்,

சட்டென தலை நிமிர்ந்து, எதிரே அமர்ந்திருந்தவர் களைப் பார்த்தாள்!

ஒரு ஜான் அளவுக்கானத் தங்கக் கரையிட்டப்பட்டு வேஷ்டி, நல்ல பச்சை வண்ணத்திலே சில்க் சட்டை, கழுத்தில் சிவப்பு வண்ணக் கர்சீப் என்று "நான் தான் மாப்பிள்ளை! நான் தான் மாப்பிள்ளை!" என்று சொல் லாமல் சொல்லிக் கொண்டிருந்தவனுக்கு, நிச்சயம் வயது நாற்பதிருக்கும்!

ஒன்று, இவனது லீலைகளை அறிந்து எந்தப் பெண்ணும் கட்டிக்கொள்ளாமல் இருந்திருக்க வேண் டும்! இல்லை, ரெண்டாம் தாரமாய் தன்னைப் பெண் பார்க்க வந்திருக்க வேண்டும்! இரண்டுமே, மலரின் மனதை அறுத்தது!

இப்படிப்பட்ட கழிசடைக்குத் தன்னைத் திருமணம் செய்துக் கொடுக்கும் அளவிற்குத் தான் கீழிறங்கிப் போய் விட்டோமா? என்று மனம் கேட்டக் கேள்வியை, அவளால் வெளியே கேட்க முடியவில்லை!

என்னவோ, ஜென்ம எதிரியைப் பார்ப்பது போல் பார்க்கும் அண்ணனையும் தந்தையையும் கண்டால், நெஞ்சம் கொதித்தது!

வந்தவர்கள் முன்னிலையில் எதுவும் பேசவேண்டாம் என்றெண்ணியவளாய், முகத்தைத் தாழ்த்திக் கொண்டு, அப்படியே நின்றாள் பொன்மலர்.

அவளது மனநிலையைப் பற்றிய கவலை அங்கே யாருக்கும் இருக்கவில்லை!

அவர்களுக்குள் பேச்சு தொடர்ந்தது!

அந்த மாப்பிள்ளை "எனக்குப் பொண்ணைப் பிடிச் சிருக்கு! மேக்கொண்டு ஆக வேண்டியதைப் பாருங்க..."



எனக் கூற, அதுவும் சட்டைக் காலரைப் பற்களால் கடித்துக் கொண்டே கூற, மலருக்கு அவளை எட்டிக் கொண்டு அறைய வேண்டும் போலிருந்தது!

"ஏழு கழுத வயசாவுது! இவனுக்கென்ன... வெக்கம் வேண்டிக் கெடக்கு... புண்ணாக்கு!" என்று மனம் கொதித்தது!

"இப்படி த்தேன்... அப்பு... கனகத்தையும் சொன்னே! ஆனா... அவளோட ரெண்டு வருசம் கூட வாழல..." - முன்பு பேசிய பெரியவரே மீண்டும் அவனை ஏசினார்.

"சும்மா இரும்... சித்தப்பு! என்ன நேரத்தில என்னத்தப் பேசுறதுன்னு ஒரு விவஸ்த்த இல்லாம..." - மாப்பிள்ளையின் தாய் அதட்டினார்.

"இந்த நேரத்தில த்தேன் பேசணும்... பொறவு பேசி என்ன பண்ண?" - அவரும் திரும்பிப் பதில் கொடுத்தார்.

"அந்தக் கனகம்... பெத்ததெல்லாம் பொட்டையா போச்சு... அத்தேன் அத்து விட்டோம்! இப்ப... என்னங் கிறே?" - மாப்பிள்ளைக் காரன் எகிறினான்.

"ஏம்... உங்காத்தா என்ன மீசை வச்ச ஆம்பிளையா? அவளும் பொட்டச்சி தானே? இவளுக்கும் பொட் டையா பொறந்தா... இவளையும் அப்பன் வீட்டுக்கு ஒட்டி விட்டிருவீக... அப்படித்தானே? அப்பப்பா... கருப்பா... நல்லா கேட்டுக்கோ! இதுக்கு - மேலையுமா... இந்த மவராசனுக்குப் பொண்ணைக் கொடுக்கணும்ங் கிற! அந்தப் புள்ளையைப் பார்த்தா... உளி படாத செங்கச் சிப்பமா இருக்குதுய்யா! என்னமோ... தோழன் பேசினான்... தொரத்தி பேசினான்னு... அதக் கொண்டே உயிரோட பொதைக் காதய்யா!" என்றார் அப்பெரியவர், மாப்பிள்ளை யிடம் ஆரம்பித்து, வேலுகருப்பனிடம் முடித்து.

ஆனால், தூரத்து உறவினரான அந்தப் பெரியவருக்கு, மலர் மீதிருந்த அக்கறை, அங்கிருந்த வேறு யாருக்கும் இல்லை.

''சித்தப்பு... நீர் பேசாம இரும்... வாசு... அய்யனைக் கொல்லப் பக்கமா கூட்டிப் போய்யா!'' என்று அந்த நல்லவரை, அங்கிருந்து அகற்றிய வேலுகருப்பன், தான் பெற்றப் பெண்ணைத் தானும் இழிவுப் படுத்தினார்.

அதன் பின்னர், மலரால் அங்கு நடப்பது எதையும் காதுக் கொடுத்துக் கேட்கக் கூட முடியவில்லை! அவர் களைப் பேசவிட்டு, அவள் பாட்டிற்கு அறைக்குள் சென்று தாழிட்டுக் கொண்டாள்!

அடுத்த ஒரு மணி நேரமும், மலரை விலை பொரு ளாய் மாற்றி, மாட்டிற்கான பேரத்தைக் காட்டிலும் மோச மான ஓர் பேச்சு வார்த்தை, வரதட்சணை என்ற பெயரில் நடந்தேறியது!

ஒரு வழியாக அவர்கள் கிளம்பிச் சென்றதும், அறையை விட்டு வெளியே வந்த மலர், முற்றத்தில் அமர்ந்திருந்த வேலுகருப்பனிடமும் வாசுதேவனிடமும் வந்தாள்.

''ஏன்ப்பு... ஏன்ப்பு... இப்படிப் பண்ணிப்புட்டீக!''

''நா... என்ன தப்புப் பண்ணினே? நீங்க சொல்றதைக் கேட்குதேன்னு சொல்லிட்டேனே... பொறவு ஏன்ப்பு...''

''இந்தாளு வேணாம்ப்பு... அவனைப் பார்த்தாலே நல்லா யில்லப்பு!''

''அவன்... முழியும்... மொகரையும்! அப்பு... என்னைய அங்க தள்ளிடாதீக... உம்ம காலில விழுந்து மாப்புக் கேட்குதேன்...'' என்றாள், மண்டியிட்டு அமர்ந்து, கைகளை ஏந்தினார் போல் வைத்துக் கொண்டு.



''அடி செருப்பால! இவன் பத்தலையோ... ஒனக்கு! அந்த ராசதொர த்தேன் கேட்குதா... மகாராணிக்கு... ராட்டிப்புடுவேன் நாயே!'' - ஆங்காரமாய் கை ஓங்கிக் கொண்டு வந்தார் வேலுகருப்பன்.

''ஊரில ஒருத்தன் விடாம கேட்குதான்... உம் மவளுக்கும்... அந்த ராசதொரைக்கும் தொடர்பாமேன் னுட்டு... நாக்கைப் புடுங்கிக்கிட்டு சாவலாம் போல இருக்கு...''

''அரை ஏக்கரா நெலம்ன்னாலும்... மானத்தோட வாழ்ந்தவன்டி! என்னைய... தலகுனிய வச்சுப்புட்டியே! நீ விருந்து பரிமாறின அழகிலேயே, நா சுதாரிச்சு இருக்கணும்... பச்சப்புள்ள மாதிரி நீ நடிச்சதை நம்பின பாவம்... இப்படி ஏமாந்து நிக்குதேன்...''

அவர் பேசப்பேச, மலருக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை.

அவர் பேசியது பத்தாதென்று, இதுவரையிலும் பேசாத வாசுதேவன் வாய் திறந்தான்.

''ஆச... ஆசையா கட்டின வீட்டுக்கு ஒரு விழா கூட எடுக்க முடியாம பண்ணிட்டியேடி, பாதகத்தி! நெனவு நெரிஞ்ச நாளா... எனக்கு அந்த வீடு தான் உசிரா இருந் துச்சுன்னு ஒனக்குத் தெரியுந் தானே? இப்ப... நீ பண்ணி வச்சிருக்க அவமானத்துக்கு... வூரில எவன் வருவான்? வந்தாலும்... காரித் துப்பிட்டுத் தேன் போவான்! ச்சீ! உன்னைய அப்பவே கழுத்த நெருச்சுக் கொன்னுட லாம்ன்னு வருது!''

அண்ணன் அவனது மனக் குமுறலை வெளியிடவும், அவனிடம் ஓடிச் சென்று, அவனது கைகளைப் பிடித்துக் கொண்டவள், ''அண்ணே... நா சொல்லுறதைக்

கேளுண்ணே... அந்தாளா த்தேன் வந்தான்... நா...'' என ஆரம்பித்தவளால் முடிக்க முடியவில்லை.

அதற்கு இரு வேறு காரணங்கள்!

ஒன்று, அவளுக்குமே, அந்த வாக்கியத்தில் உடன் பாடில்லை! அவன் வந்தான்... போனான்... பேசினான்... மயக்கினான்... ஆனால், இவளன்றோ மயங்கிப் போனாள்! தன் முட்டாள் தனத்தை எண்ணி வெட்கியவளாய், அவள் தயங்கி நின்றாள்!

இரண்டாவது காரணம், வாசுவின் கரங்கள் இடியென அவளது கன்னத்தில் இறங்கியிருந்தன!

''பொய் சொல்லிக் கழுத! வாய மூடுடி!'' என்று கர்ஜித்தவன்,

''இப்பக் கூடப் பாரு... அந்தாளு... அப்படித்தேன் வாயில வருது! அவன் நமக்குப் பங்காளி மொற தானே? அண்ணன்னு கூப்பிட வேண்டியது தானே? அவன் தங்கச்சி... என்னைய அண்ணன்னு கூப்பிடையில... உனக்கென்னடி வந்துச்சு!'' என்று தன் மிதமிஞ்சியக் கோபத்தின் காரணத்தை எடுத்துரைத்தான்.

கூடவே, ''அந்தாளைப் பாத்தா... அண்ணன்னே கூப்பிடத் தோணலைண்ணே... அண்ணன்னா உன்னைய மாதிரி இருக்கணும்ன்னு நீ கொஞ்சினதெல்லாம்... அவனை மாமன் ஆக்கிக்கத் தான்னு எம் மரமண்டைக்குத்தான் புரியாமப் போச்சு... சை..'' என்றான் அருவெறுப்புடன்.

இப்படிப் பேசுபவனிடம் என்ன பேசுவது? அவனை வெறித்துப் பார்த்துக் கொண்டு நிற்பதைத் தவிர!

''உன்னையப் பாக்கப் பாக்க... நானே கழுத்த நெரிச்சுக் கொன்னுப் போடுவேன்... போய்டு! போடி!'' - என வாசு உறும,



வேலுகருப்பனோ, ''நா நேத்தே அவளுக்கு வெசம் வச்சுக் கொன்னுடலாம்ன்னு சொன்னேன்... கேட்டியா? உங்காத்தா படத்தை எடுத்தாந்து... அது மேல சத்தியம் பண்ண சிறுக்கி மட்ட... அந்த தொரப்பயல போயி... நேத்து பாத்திருக்கா... அது தெரிஞ்சதுமே... கொன்னுடலாம்ன்னு சொன்னே இல்ல... நீ த்தேன்... வேணாம்... கீணாம்ன்னே... இப்பப் பாரு... இந்தக் கழுத கலியாணம் வேணாம்ன்னு சண்டித்தனம் பண்ணுது!'' என்றார், மகளின் உயிரைத் துச்சமாய் மதித்து.

மலர், அந்த நிமிடம் செத்தாள்!

தந்தையையும் தமையனையும் வெறித்துப் பார்த்தவள், ஒன்றும் சொல்லாமல் அறைக்குள் சென்றாள்!

தரையில் தோய்ந்து அமர்ந்தவளுக்குக் கண்ணீர் கூட வருவேனா என்றது! தொண்டைக்குள் உருண்டையாய் ஏதோ அடைத்திருக்க, அதை வெளியேற்றவேனும் அழலாம் என்றெண்ணி, ஒரு மூச்சு அழுது முடித்தாள்!

ஆனால், எவ்வளவு நேரம் தான் அழ முடியும்! கண்ணீருக்கும் வற்றும் தன்மை உண்டல்லவோ!?

கண்ணீரின் கரையோடு, விட்டத்தை வெறித்த படியே சுவற்றில் சாய்ந்து அமர்ந்தவளுக்கு, யோசிக்கும் திறன் கூட இயங்க மறுத்தது!

''ஏன்? ஏன்? ஏன் இப்படி?'' - என்ற கேள்வி மட்டுமே, மனதில் பிரதானமாய் இருக்க,

''ராஜதுரை!'' என்ற பதிலைத் தவிர, வேறெதுவும் மண்டையில் உதிக்கவில்லை.

''அவனால்தான்... இவ்வளவு பிரச்சனையும்!'' என்று அவன் புறம் திரும்பத் தொடங்கிய ஆத்திரம்,

''அவன் என்ன செய்திருந்தாலும், நீ வசமிழக்காமல் இருந்திருந்தால்... இந்தப் பிரச்சனை வந்தே இருக்காதே? இது நீயே தேடிக் கொண்டது! அனுபவி!'' என்று அவள் பக்கமே தலை சாய்த்தது!

ஆம், மலர் தன் தப்பாய் தான் அனைத்தையும் பார்த்தாள்! அவன் என்ன தான் முயன்றிருந்தாலும், தான் இடம் கொடுக்காமல் இருந்திருந்தால், இன்று நடந்த கொடுமைகள் எதுவுமே நடந்திருக்காதே!

அவன் திட்டம் போட்டே காய் நகர்த்தியிருந்த போதும், சிறிது நேரமே ஆனாலும், தான் அவனிடம் மயங்கி நின்றது தவறு என்ற எண்ணம் மலர் ஆட்டிப் படைத்தது!

தான் தனது வசம் இழக்காதிருக்கும் பட்சத்தில், தந்தையும் தமையனும் தன்னை முழுமையாய் நம்பியிருப்பர் என்றெண்ணினாள் அவள்.

''எம்மேல நம்பிக்கையில்லையா?'' என அவள் கேட்ட ஒரு வார்த்தையை நம்பியவர்கள், இன்று தன்னை வெறுத்து ஒதுக்குவதற்கு, ராஜதுரை மட்டுமே காரணமில்லை. தானும் ஓர் காரணம் என்று தனக்குத் தானே பழி ஏற்றுக் கொண்டாள், அந்த நல்லவள்!

அந்த எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாய் சுய வெறுப்பாய் மாறியது!

ராஜதுரையின் மீது வெறுப்பாய் மாறியிருக்க வேண்டிய ஆத்திரத்தைத் தன் மீதே திருப்பிக் கொண்டது, அப்பேதை நெஞ்சம்!

அதன் விளைவாய், ''இவுக என்ன என்னை சாகடிக்கிறது? நானே செத்துப் போகுறேன்!'' என்ற முடிவும்,

''அந்தக் குடிகாரப் பயலுக்கு வாக்கப்படறதும்... சாவுறதும் ஒண்ணு தேன்!'' என்ற கூடுதல் ஆதரவும், அவளைக் கட்டிப் போட்டன!



ஓர் தெளிவு கிடைத்தத் திருப்தியில், மலரின் கண்ணீர் நின்று போயிருக்க, நள்ளிரவைத் தன் சாவு நேரமாய் குறித்துவிட்டு, மெல்லத் தரையில் சரிந்தாள் பொன்மலர்.

ஆனால், அந்த நள்ளிரவு அவளது சாவிற்கான தருணமாய் அமையவில்லை! அவளது திருமணத்திற்கான முஹூர்த்தமாய் அமைந்து போனது! குறிப்பாய் சொல்லப் போனால், ராஜதுரையோடான அவளது திருமணத்திற்கு!

# 11

இரவு மணி ஒன்பது!

கேட்பாரற்ற அனாதையாய் மலர், அறைக்குள் முடங்கிக் கிடந்தாள்!

இரண்டே நாட்களில் தன் நிலைமை இப்படி மாறும் அவள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை!

இதே வீட்டில் ராணியாய் வாழ்ந்தவள், வேலைக்காரிக்கும் கீழாய் மாறிப் போனக் கொடுமை, அவளை வதைத்தது!

''தப்பு செய்துவிட்டோம்... தப்பு செய்துவிட்டோம்!'' என்ற தவிப்புக்கு, ''தற்கொலை'' பதிலானாலும், அவளால் தவிப்பதை விட முடியவில்லை! ஏனென்றால், தற்கொலையை நினைத்தால், நெஞ்சம் சூடேறி பயத்தை அப்பிக் கொண்டது!

பின்னே! தற்கொலை என்பது எவ்வளவு பெரிய விஷயம்! இறைவன் படைத்த உயிரை, அவனை

எடுத்துக் கொள்ள விடாமல், தாமே பிடுங்கி எடுப்பது அல்லவா?

''நீ என்ன கடவுளா? உயிரை எடுப்பதற்கு?'' என்று அவளது மனம், அவளையே கேள்வி கேட்டு இம்சித்தது!

ஆனால், என்ன தான் செய்வது? உயிரோடு இருந்து, அந்தக் கழிசடைக்கு வாழ்க்கைப் படுவதைவிட, இது மேல் அல்லவா? ஒரு நிமிடமோ... இரண்டு நிமிடமோ... மிஞ்சிப் போனால் பத்து நிமிட உயிர் வாதனை! எல்லாம் முடிந்து விடும்!

தற்கொலையைச் சுற்றியே சுழன்று கொண்டிருந்த மலரின் எண்ணங்களைத் தடுத்து நிறுத்தவென,

''மலரு!'' என்ற விளிப்பு, வெளியிருந்து கேட்டது!

அறைக்கு வெளியிருந்து மட்டுமல்ல! வீட்டிற்கு வெளியிருந்தும்!

அக்குரலே, அழைப்பவன் ''ராஜதுரை!'' என்பதை எடுத்துக் காட்ட, திடுக்கிட்டு விழித்தாள் பொன்மலர்!

''இவன் எங்கே இங்கே?'' என்ற எண்ணமே, உதிரத்தை உறைய வைத்தது!

அவளை மேலும் யோசிக்க விடாமல், ''மலரு!'' என்ற விளிப்பு, கூடுதல் அழுத்தம் பெற்று, காற்றில் கரைந்து வந்து, செவியறைந்தது!

உடம்பு ஒரு முறை நடுங்கி அடங்கவும், அடுத்த அழைப்பு வேகமாய் வந்து அவளைத் தாக்கவும் சரியாக இருந்தது!

''இவன் என்ன இந்த நேரத்தில்...'' என்பதை விடவும், தந்தையும் தமையனும் என்ன செய்யப் போகிறார்களோ என்ற பயமே பிரதானமாய் இருக்க, அறையை விட்டு நகரவும் பயந்து, அப்படியே சமைந்து நின்றாள்!



அதற்குள், அந்த அவசரக்காரன் மீண்டும் அழைத் தான்! அதுவும் கூவிக் கூவி!

''ஏய்... மலரு! வெளியவா!'' என அவன் சத்தமாய் அழைக்கவும்,

''எவன்டா அவன்... எம் வீட்டு முன்னால... ஏழரையைக் கூட்டுறவன்...'' என்று வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு, வேலுகருப்பன் வெளியே செல்வது தெரிந்தது! கூடவே, வாசுதேவனும்!

''ஐயோ... என்ன நடக்கப் போகிறதோ...'' என்ற பயத்தில், முகம் வெளிற நின்றிருந்தாள் பொன்மலர்.

அவளது இதயத்துடிப்பை எகிற வைக்கவென, ராஜதுரை மீண்டும் ''மலரு! வெருசா... வெளியவா!'' என்றான் குரலை ஏகத்திற்கும் உயர்த்தி.

''ஏய்... இங்க என்னடே சலம்பிக்கிட்டுத் திரியுற... மருவாதையா போய்டு!'' - என்று வேலுகருப்பன் கத்துவதும்,

ஒரு விநாடி இடைவேளைக்குப் பின்னர் ''மலரு...'' என்ற ராஜதுரையின் அழைப்பு வருவதும் மலருக்குத் துல்லியமாய்க் கேட்டது!

''ஏய்... சொல்லிக்கிட்டே இருக்கோம்ல... என்ன இங்க நின்னு ஏழரையைக் கூட்டிக்கிட்டு இருக்கே? போய்யா!'' - இப்போது வாசுதேவன் குரலை உயர்த்த,

ம்ஹூம்! ராஜதுரை அசைவதாய் இல்லை!

''மலரு! வா... வெருசா... ம்ம்ம்! என்றான் மீண்டும்!

அதற்குள், அந்தத் தெரு மட்டுமல்ல, ஊரிலிருக்கும் பலரும் கூடி விட்டிருந்தனர்! பின்னே, எட்டுத் தெரு தள்ளிக்கூடக் கேட்குமளவிற்கு அன்றோ கத்தினான் அவன்! நாலு தெரு உள்ள ஊர் கூடாதா என்ன?

ஒரொருவராய் நூல் பிடித்துக் கொண்டு, மலரின் வீட்டின் முன்னே கூடவும், வேலுகருப்பனுக்குள் இருந்த சிங்கம் அசிங்கப்பட்டுப் போனது போலும்!

''எலே! என்ன வேணும்டே ஒனக்கு? இங்கன வந்து... என்ன கூவிக்கிட்டு இருக்க? ஒசக்க இருக்க திமிரோ...'' என்றார் ரௌத்திரம் தாண்டவமாட.

அவனோ, காது என்ற உறுப்பையே கடன் கொடுத்து விட்டவன் போல், ''மலரு...'' என்றான் மீண்டும்.

அவ்வளவுதான், வாசுதேவனுக்குக் கோபம் தலைக் கேறி விட்டது!

''ஏய்... என்ன லந்தா? நானும் பாத்துக்கிட்டே இருக்கு தேன்... மலரு... மலருன்னு ஏலம் விட்ட மேனிக்கா இருக்க? அதுவும்... ராவுல! அவனவன்... தூங்க வேணாம்!'' என்றவன், ராஜதுரையின் சட்டையைக் கொத்தாய்ப் பிடித்தான்.

ஒரே அறையில், வாசுதேவனின் கையைத் தன் சட்டையிலிருந்து எடுத்தவன்,

''சும்மா... சலம்பிக்கிட்டுத் திரியுற சோலிய (வேலையை) விட்டுரு! இன்னொரு வாட்டி... என் சட்டையப் புடுச்சே... மவனே... சட்ட போட கையிருக்காது! சொல்லிப்புட் டேன்!'' என்றான் சுட்டு விரல் நீட்டி.

அதற்கு மலரின் குடும்பம் பதில் சொல்லும் முன்னர், ''மலரு...'' என்றழைத்தான் மீண்டும்!

''என்னடா மலரு... மலருன்னு கத்துறவன்? எங்க வூட்டுப் பொண்ண கூப்பிட ஒனக்கு என்னடா உரிம யிருக்கு! அங்கிட்டுப் போடா!'' என்றார் வேலுகருப்பன், கையை அவன் முன்னே நீட்டி. அழைப்பால் மகளையும்,



அடியால் மகனைம் அசிங்கப்படுத்துகிறானே என்ற ஆத்திரம் அவருக்கு!

''உரிமையா? ஹஹ்ஹா!'' என அவன் சிரித்த சிரிப்பே, உள்ளிருந்த மலருக்கு, வரப் போகும் விபரீதத்தின் வீரியத்தை உணர்த்தியது போலும்.

கதவை வேகமாய்த் திறந்து கொண்டு, முற்றத்திற்கு வந்து விட்டாள்!

அவள் அரவம் கேட்டதாலோ இல்லை வேலுகருப் பனின் பேச்சிற்குப் பதிலாகவோ ''என்ன உரிமையா? உம்மை விட எனக்குத் தாம் உரிம அதிகம் இருக்குது!'' என்றான் அவன் கர்வம் துள்ளி விளையாடிய குரலில்!

''என்னது?'' என்பது போல் வாசு அவனை ஏறிட,

''அப்படி எதுய்யா... உனக்கு இல்லாத பொல்லாத உரி மையத் தூக்கிக் கொடுத்துச்சு?'' என்றார் வேலுகருப்பன், நக்கலாய்.

இரவாகிப் போனபோதும், ஒன்று கூடி நின்ற ஊரார், தங்களுக்குள் தத்தம் யூகங்களைப் பகிர்ந்து கொள்ள, மலரோ வீட்டினுள் பேயடித்தது போல் நின்றிருந்தாள்!

வேலுகருப்பன் கேட்டக் கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டால், ராஜதுரையின் கவுரவம் என்னாவது?

''நீ சரியா வரமாட்டேடி! வா... வான்னு ஒருத்தன் இங்கத் தொண்டைத் தண்ணி வத்தக் கத்திக்கிட்டு இருக்குதேன்... அங்கன என்னடி பண்றவ!'' என்றவாறே, இடது காலை மேலே உயர்த்தி, வேஷ்டியைப் பிடித்து, அதை மடித்துக் கட்டிக் கொண்டு, வீட்டினுள் செல்ல முயன்றான் ராஜதுரை!

ஆம். முயன்றான்! செல்லவில்லை! ஏனெனில், அவனது எச்சரிக்கையையும் மீறி, வாசுதேவன் அவனை அடித்திருந்தான்!

இருவருக்குள்ளும் இருந்த அழகான நட்பு, அங்கே ஆற்று வெள்ளமாய் கரைந்து... மறைந்து போனது!

அவ்வளவுதான்! ராஜதுரையின் உண்மையான முகம் வெளிப்பட்டது!

''அடி செருப்பாலே! நாயே! சொல்லிக்கிட்டே இருக்கு தேன்... எம்மேல கையை வைக்கிறவன்...'' என்றவன், தன் பலத்தையெல்லாம் திரட்டி, வாசுவின் முகத்தில் ஓர் அரை விட்டான்!

ஓர் அரை அடி, உயரம் குறைந்து, மண்ணுக்குள் சென்றது போல், உடம்பு கிண்ணென்றது வாசுவிற்கு!

மகன் அடிவாங்கி நிற்பதைப் பொறுக்க முடியாமல், வேலுகருப்பன் ராஜதுரையின் முதுகில் ஓர் குத்துவிட,

''வேணாம்ப்பு... உம்ம வயசுக்கான மருவாதையைக் கெடுத்துக்காதீரும்! நல்லா இருக்காது!'' என்று வாயால் எச்சரித்தவன்,

தன் சட்டையைப் பிடித்திருந்த அவரது கையை விலக்கி, அவரை லேசாய்த் தள்ளினான்.

ஆனால், அவர் தன் சுயத்தில் இருந்தால் அல்லவோ!

மகள் வாழ்க்கையை அழித்து விட்டாள் என்று கண்மண் தெரியாதக் கோபத்தில் இருந்தவர், மீண்டும் அவன் மீது கை வைக்க,

அடுத்த நிமிடம் அவர் தரையில் விழுந்துக் கிடந்தார்! மல்லாக்க!

மலரால், உள்ளே இருக்க முடியவில்லை! தந்தையை யும் தமையனையும் அவன் அடிப்பது புரிந்தபோது, தான் வெளியே சென்றால், ''அவன் கூப்பிட்டதும் வந்துட்டா...'' என்று இன்னுமோர் கெட்டப் பெயர் வந்துவிடும் என்ற



பயத்தில் உள்ளேயே நின்றாள்! மேலும், தந்தை எப் படியும் அவனைச் சமளித்து விடுவார் என்று தோன்றியது அவளுக்கு!

ஆனால், காத்தவராயனாய் சிலிர்த்து நின்ற ராஜ துரையை, அவர்களால் சமாளிக்க முடியவில்லை!

அவர்களால் மட்டுமல்ல ஊர் மக்களாலும் தான்!

''யென்ப்பா... ராசு! என்னன்னு த்தேன் சொல்லிப் புட்டுப் பேசுப்பா...''

''அங்காளி... பங்காளிக்குள்ள கை நீட்டுறதெல்லாம் நல்லா இல்ல... ராசு... வேணாம்!''

''விசயம் என்னன்னு சொல்லாம... ஆளாளுக்குப் பேசினா எப்படிப்பு? என்னன்னு சொல்லு?'' - எப்படி யெப்படியோ கேட்டுப் பார்த்தனர்.

ம்ஹூம்! ராஜதுரை அசையவில்லை!

பேசியவர்களுக்கு ஓர் பார்வையையே பதிலாகக் கொடுத்துவிட்டு, வீட்டினுள் நடந்தான் ராஜதுரை.

''ராசு... இது நல்லாயில்ல...'' என்றபடியே வேலுகருப்பன் அவனைத் தொடர, அவனோ, அவரைச் சட்டை செய் யாமல், உள்ளே நடந்தான்.

''அந்தி சாயையில் ஒருத்தன்... வீடு புகுந்து.. பொண்ணைத் தூக்குறான்... நீங்கெல்லாம் வேடிக்கை பாக்குறவுக... ச்சே... அவனை யாருமே கேக்க மாட்டீ களா?'' என்று இரைந்தான், வாசுதேவன்!

ஆனால், ஊரில் செல்வாக்கு வாய்ந்தவனும், தங் களுக்குச் சில பல உதவிகளைச் செய்பவனுமாய் இருப்ப வனை, எதிர்த்து நிற்க அனைவருமே தயங்கினர்.

வாசுதேவன் ஊர்க்காரர்களுடன் பேசிக் கொண்டிருந்த அதே வேளையில், வீட்டினுள் பிரவேசித்திருந்தான் ராஜதுரை.

அவன் எடுத்து வைத்த ஒரோர் காலடிச் சத்தத்திலும் தன் இதயம் பல மடங்குத் துடிக்க, தான் நின்றிருந்த இடத்திலிருந்தத் தூணில் சாய்ந்து, கைகள் இரண்டாலும் அதை இறுகப் பிடித்தபடி, நின்றிருந்தாள் பொன்மலர்.

ஹ்ம்ம்... வருகிறான்... வருகிறான்... வந்து விட்டான்! ஐயோ... அருகே வந்து விட்டான்!

தூணைப் பிடித்திருந்த அவளது கைகளைப் பற்றி, ''வா....'' என்று அவன் இழுக்க, மலரின் கரங்கள் தூணை இறுகப் பிடித்தன!

தன் இழுப்பிற்கு ஆட்பட்டு, அவள் வந்துவிடுவாள் என்றெண்ணியிருந்தவன், அவள் அங்கேயே நிற்கவும்,

''வா மலரு!'' என்றான் அதிகாரமாய்!

தூண் மீது அவள் கொண்டப் பிடி இறுகியதே ஒழிய, தளரவில்லை!

''என்னடி... ஆளாளுக்கு ஏழரையைக் கூட்டிக்கிட்டுத் திரியுறீக! மவளே, ஒழுங்கா மருவாதையா வா!'' என அவன் மிரட்டவும்,

''முடியாது! நா வரமாட்டேன்!'' என்றாள் மலர் தீர் மானமாய்!

ராஜதுரை ரௌத்திரம் கொள்ள, வேலுகருப்பன் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்!

''மலரு... என்னைய கொலகாரன் ஆக்காத! சொல் லிப்புட்டேன்! வந்துடு!''

''ம்ஹூம்! முடியாது! வரமாட்டேன்!''

அவன் அழைக்க, அவள் மறுக்க, ''அவ த்தேன் வர மாட்டேன்கிறா இல்ல... போய்யா... வெளிய!'' என்றார் மலரின் தந்தை, முகத்தில் படர்ந்த நிம்மதியுடன்.



ஆனால், ராஜதுரைக்கு அதெல்லாம் கணக்கிலேயே வரவில்லை போலும்!

''என்னோட வராம... ஒங்கப்பனும்... அண்ணனும் பாத்து வச்சிருக்கத் தருதலயைக் கட்டிக்கிடப் போறியா? கூறுகெட்டவளே!'' என்றவன், மலரின் கைகளைப் பிடித்துப் பலம் கொண்ட மட்டும் இழுத்தான்.

தன் பலம் முழுதையும் திரட்டி, அவனை எதிர்த்தவள், ''அவனைக் கட்டுதேன்... இல்ல... கெணத்தில விழுந்து சாவுறேன்... உமக்கென்ன வந்துச்சு... விடும்யா!'' என்றவள்,

''நீ வந்து... ஏழரையைக் கூட்டாம இருந்தா... இந் நேரம் பொணமாகயிருப்பேன்...'' என்றாள் கண்ணில் திரண்டு வழிந்தக் கண்ணீருடன்.

ராஜதுரையுடன் சேர்த்து, வேலுகருப்பனும் அதிர்ந்துப் போனார்! அவரே சாகடிப்பதாய் இருந்தார் தான்... ஆனால், மகளே செத்துப் போயிருப்பேன் என்று சொல்வதை அவரால் ஏனோ ஜீரணிக்க முடியவில்லை!

''என்னடி சொல்லுறவ!'' - என ராஜதுரை அதிர,

''ஆமா... போதும்... என்னைய நீங்க எல்லாரும் அசிங் கப்படுத்துனது... நா செத்துப் போறேன்...'' என்றாள் மலர், அடக்க முடியாக் கண்ணீருடன்.

''மலரு... இன்னொரு வாட்டி... அந்த வார்த்த சொல் லாதடி!'' என்ற ராஜதுரையை விநோதமாய் பார்த்தாள் மலர்.

ஆனால், அது ஒரு வினாடி தான்! மறு வினாடியே ''போய்டும்... இங்க இருந்து... என்னைய இன்னமும் அசிங்கப்படுத்தாம போய்டும்! என்னைய நிம்மதியா சாகவாவது விடும்! போய்டும்!'' என்றாள் கையெடுத்துக் கும்பிட்டு!

அந்த வினாடியைப் பயன்படுத்திக் கொண்டான், ராஜதுரை.

கூப்பி நின்றக் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு, வெளியே நடந்தவனை, மனம் அதிரப் பார்த்தாள் பொன்மலர்.

வேலுவோ ''ஏய்... அவள விடுய்யா! விடு!'' என்று தன் பலம் முழுதையும் ஒன்று கூட்டி, மகளை அவனிட மிருந்து பிரிக்க முயன்றார்!

ஆனால், இரும்பின் உறுதி கொண்டிருந்த அவனது பிடி, அவரது முயற்சிகளை வெறும் முயற்சிகளாகவே நிறுத்தி வைத்தது!

''விடு... விடு...'' என அவரும்,

''விடும்... விடும்... விடும்... ஐயோ... விடும்!'' என்று மலரும் கத்தக் கத்த, அவளை இழுத்துக் கொண்டு வெளியே நடந்தான் ராஜதுரை.

ஒரு நிலைக்கு மேல் பொறுக்க முடியாமல், ''சொல் லிக்கிட்டே இருக்கிற நானென்ன கேனையா? அவள விடுய்யா!'' என்று ஆங்காரமாய்க் கத்திய வேலுகருப்பன்,

''என்ன உரிமைல அவ... கையைப் புடுச்சு... இப்படி இழுத்தார...'' என்றார் கோபத்துடன்.

ஒரு வினாடி நின்று, தன் பிடியிலிருந்த மலரின் கைகளைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு, ''அவளைக் கட்டிக்கிட்டவங்கிற உரிமயில!'' என்றான் ராஜதுரை, கர்வத்துடன்.

''என்னது?'' - வேலுகருப்பன் மட்டுமல்ல, மலர் மட்டுமல்ல, கேட்டிருந்த ஊராருமே அதிர்ந்து நிற்க,

''கட்டிக்கிட்டவரா? ஒளராதீரும்!'' - தன்னை மீறி அதட்டினாள், பொன்மலர்.



மகளின் பேச்சிலிருந்த ஆத்திரம், உள்ளுக்குள் எதையோ தூண்டிவிட, ''ஆமா ராசு... புளிச்ச வாயைத் தொலைக்க... கண்டதையும் ஒளராத!'' என்றார் வேலு, சுட்டு விரல் நீட்டி!

''நா ஒளரல! உம்ம மக... மலரு... எனக்குப் பொஞ் சாதிங்கிறதுக்கு... என்கிட்ட ஆதாரம் இருக்கு!'' என்ற ராஜதுரை.

அனைவரது கண்களும் மலரின் கழுத்தைப் பார்க்கவும்,

''சும்மா... அத்து எறியுற ஆதாரம் இல்லடே! சர்க்கார் கொடுத்த ஆதாரம்! நாங்க ரெண்டு பேரும்... புருஷன்... பொஞ்சாதின்னு சர்க்கார் கொடுத்த ஆதாரம்! எங்க... கலியாணத்தைப் பதிவு பண்ணின ரசீது... இந்தா இருக்கு... பாத்துக்கும்!'' என்றானே பார்க்கலாம்!

மலருக்குத் தலையைச் சுற்றிவிட்டது! நிஜமாகவே!

## 12



''என்னடே சொல்றே?'' என்று வேலுகருப்பன் அலற,

ராஜதுரை அவரை மதிக்கக் கூட இல்லை! தலை கிறுகிறுவென சுற்ற, அதிர்ச்சித் தாங்க முடியாமல் தள்ளாடிய மலரைப் பிடித்து நிறுத்தி, ''இப்பத் த்தேன்... ஆசுபத்திரி... மருந்து... மாத்திரைன்னு கிறுகிறுத்துப் போயி வந்திருக்கே! திரும்பவும் எதையும் பண்ணி வைக்காத!'' என்றான் அதட்டலாய்.

ஆனால், இந்த அக்கறையெல்லாம் மலருக்கு ரசிக்கவே இல்லை!

வாழ்வையே புரட்டிப் போட்டுவிட்டு, அக்கறை படுகிறானாம் அக்கறை! எரிச்சலாய் வந்தது அவளுக்கு!

அவளது எரிச்சலையோ... அதிர்ச்சியையோ மதிக்கும் அளவிற்கு, அங்கு யாரும் இருக்கவில்லையே!

''எங்களை என்ன... ஒரு மண்ணும் தெரியாத மருக்கோழின்னு நினைச்சியோ? எங்க அந்த ரசீதைக் காமி...'' என்று தன் ''படித்தவன்'' பரிமாணத்தை எடுத்து விட்டான், வாசுதேவன்.

அவனை ஓர் ஏளனப் பார்வை பார்த்துவிட்டு, ''ஒனக்குத் தேன்... உம் தங்கச்சி கையெழுத்துத் தெரியும்ல... இந்தாப் பாரு...'' என்றவனின் கரங்கள், தன் கையி லிருந்த காகிதத்தை வாசுவின் கைகளில் திணித்தன!

வேகமாய் கண்ணை ஒட்டியவனின் கண்கள், காகிதத்தின் கடைசியில் இடுங்கின!

குண்டு குண்டாய், கத்திரிக்காய்க்குக் கையும் காலும் முளைத்த மாதிரி, ''வே. பொன்மலர்'' என்று கையெழுத் தாகி இருந்தது!

ஆழ மூச்செடுத்து, அதை மீண்டும் பார்த்தவன், அடுத்த வினாடி, கையை ஓங்கிக் கொண்டு தங்கை யிடம் விரைந்தான்.

''பாவி... பாவி... உன்னைய நம்பினேனேடி... பாதகத்தி! உன்னை..'' என அவன் கத்தியதிலேயே, ராஜதுரை சொன்னது உண்மை என்பது மற்றவர்கட்கு விளங்கிப் போயிற்று!

ஆனால், அதில் கையெழுத்திட்டிருந்த மலரால் மட்டும் அதை நம்பவே முடியவில்லை!

''இல்ல... இல்ல... பொய்! நா போடல! பொய்! பொய்!'' என அலறியவளின் முடியைக் கொத்தாய்ப் பிடித்த வாசுதேவன், அவளை அறைய முற்பட,



அவனது கை ராஜதுரையால் மறிக்கப்பட்டது! கூடவே, பற்றியிருந்த அவனது கையைப் பின்பக்கமாய் வளைத்து, தனக்கும் மலருக்கும் முதுகு காட்டி அவனை நிற்க வைத்தவன், பிடித்தப் பிடியை விடாமல், ''இன்னொரு வாட்டி... எம் பொஞ்சாதி மேல கை பட்டு டுச்சு! மவனே, சங்க அறுத்துருவேன்! சொல்லிப்புட் டேன்!'' என்றான் உறுமலாய்.

மலருக்கு இதெல்லாம் ரசிக்கவில்லை!

''ஏன் இப்படிப் பண்றீரு? நா...'' என அவள் ஆரம் பிக்கையிலேயே,

''என்னப்பா... சும்மா ஒரு காகிதத்தை வச்சு எப்படி உன்னைய நம்புறது? பொட்டப்புள்ள... இல்லைங்கு தில்ல!'' என்றார் மலர் பக்கத்துப் பங்காளி ஒருவர்.

''ஆமா... பொண்ணு மறக்குதில்ல... எப்படி நம்பறது?'' என்று அனைவரும், அவரது குரலைப் பின்பற்றவும்,

அக்கேள்வியல் துணுக்குற்றுப் போகாமல், இதெல்லாம் ஒரு கேள்வியா என்பது போல் பார்த்தவன், ''அவ ஊருக் கும்... உலவாய்க்கும் பயந்துக்கிட்டு... இல்லைங்கிறா! அவ அப்பனும்... அண்ணனும் ஆடுற ஆட்டத்தைப் பாத்துப் பயந்துப் போயிருக்கா!'' என்றான் சாதாரண மாய்.

கூடவே, ''இந்தா... பாண்டியைக் கேட்டுப் பாருங்க! அவந்தேன்... சாட்சிக் கையெழுத்துப் போட்டதே!'' என்றான் அலட்சியமாய்.

அனைவரது பார்வையும் வீரபாண்டியின் புறம் திரும்ப, ''ஆமா! நேத்து த்தேன் கலியாணத்தைப் பதிவு பண் ணோம்...'' என்றான் அவனும், அழுத்தமாய்.

''நானும் இந்தப் புள்ளய.. ரெஜிஸ்டர் ஆபீஸ் முன்னாடிப் பார்த்தேன்...'' என்று மற்றொருவர் சொல்ல,

''ஆமா... நேத்து... எம் போன்ல தேன்... அந்தக்கா வோட ராசு மாமா பேசுனாரு! ராசு மாமாகிட்டப் பேசின நிமிசமில்லாம... அந்தக்கா ஓடுச்சு!'' என்றான், முந்தையத் தினம் கைப்பேசி கொடுத்த பையன்.

முன்பைவிட வேகமாய் சுற்றியது, மலருக்கு!

கார் குகைக்குள் சிக்கிக் கொண்டு, அதிலிருந்து விடுபட முடியாமல் போனது போல், மூச்சு முட்டியது!

தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை உணர முடியாதவளாய் அவள் வாய் பிளந்து நிற்க, ''பூன மாதிரி இருந்துக்கிட்டு... என்ன காரியம் பண்ணியிருக்குப் பாரு... தெனவெடுத்தக் கழுத...'' என்று அவளது பேச்சின் மீதான நம்பிக்கையில்லா தீர்மானம், மெல்ல ஆரம்பித்தது!

அதற்கு, அச்சாரம் சூட்டி, ''அவள் சொல்வது பொய்யே!'' என்று நிரூபிப்பது போல்,

''உன்னையச் சொல்லணும்டா... படுபாவி! அவள... பதிவு பண்ற ஆபீஸ் முன்னாடி பார்த்தேன்ப்புன்னு நீ சொன்னதுமே... அவளைக் கொன்னுடலாம்ன்னு சொன்னேனா இல்லையா? நீ தானே... இல்லப்பு... அவ உள்ள போவல... வெளிய நின்னு அவனோட பேச மட்டுந் தேன் செஞ்சான்னு என்னைய அடக்கி வச்ச! இப்பப் பாத்தியா... நம்ம மானத்தை மொத்தமா வாங்கிட்டா! கொன்னிருந்தா... செத்துப் போயிட்டாங்கிற ஒரே வார்த்தையோட போயிருக்குமே! அய்யோ... கருவேலம் அய்யனாரே...'' என்று வேலுகருப்பன் புலம்ப, ''பொய்யன்!'' என்ற பட்டம் மலருக்குக் கொடுக்கப்பட்டது!



ஏற்கனவே செத்து விட்டிருந்த மலருக்குக் குழிக்குள் தன்னை அமுக்கி, மேலே மேலே மண்ணைப் போடுவது போலிருந்தது!

''இல்ல... அது என்னோட கையெழுத்து இல்ல...'' என்று கூவச் சொன்ன மூளையை,

ரணப்பட்டிருந்த மனம் ''நீ என்ன சொன்னாலும்... அவுக நம்பப் போறதில்ல! விடு! பேசுற வாய்... பேசிட்டுப் போகட்டும்!'' எனக் கூறி, அடக்கி வைத்தது!

தன் பேச்சை யாரும் நம்பப் போவதில்லை என்ற முடிவுக்கு வந்த பின்னர், தானும் அக்கூட்டத்தில் ஓர் பார்வையாளராய் மாறிப் போனது போன்ற உணர்வு வந்தது மலருக்கு!

உபயோகமற்றக் கொட்டாங்குச்சியாய் தன்னை அவர்கள் எட்டி உதைப்பது போன்ற உணர்வு அவளுள்! ''நான் உடையும் வரையும் தானே இந்த ஆட்டமெல்லாம்! ஆடுங்கள்!'' என்ற ரீதியில் அவள் பார்த்திருக்க, அவளை உடைக்கப் போகும் அடுத்த அன்பு எய்யப் பட்டது!

''இப்ப ஒத்துக்கிறீகளா, அவ எம் பொஞ்சாதின்னு?'' என்று கூட்டத்தைப் பார்த்துக் கேட்டவன்,

வாசுவைப் பிடித்திருந்த கையை விட்டுவிட்டு, மலரை இழுத்துக் கொண்டு தன் வீடு நோக்கி நடந்தான்.

அதற்குள், அவனது பிரிவைச் சேர்ந்த ஒரு பெரியவர் ''அய்யனும் இல்லாம... ஆத்தாளும் இல்லாம... இம்புட்டுப் பெரிய முடிவை நீ. ஒத்தாளா எடுக்கிறது சரியில்லப்பு! பழையம்... நாளைக்கு சிவகங்கையில இருந்துத் திரும்பட்டும்.... பாத்துக்கிடலாம்! இந்த அர்த்த ராத்திரியில... இந்தப் பொண்ண வீட்டுக்குள்ளாரக் கூட்டிப்

போறது நல்லதில்ல, ராசு! சந்தோசம் வந்தா... ஆடிப் புடும்! ஆடி!'' என்றார் நாலும் தெரிந்தவராய்.

''காரியம் கெட்டுச்சுப் போங்க!'' என்று எண்ணத் தோன்றியது, ராஜதுரைக்கு!

பங்காளி முறையில், தங்கள் பிரிவைத் தாண்டித் திருமணம் செய்வது தெரிந்தால், மலர் வீட்டாரைக் காட்டிலும், இவர்கள் ஆடும் ஆட்டம் தாங்க முடியாது! அதற்குத் தானே, இருவரையும் வெவ்வேறு காரணம் கூறி, வெளியூருக்கு மூட்டைக் கட்டியதே! இவர் என்னடாவென்றால்?

இந்த யோசனையெல்லாம் ராஜதுரையின் மனதினுள் ஓடியபோதும், அதன் நிழல்கூட முகத்தில் படியாமல் பார்த்துக் கொண்டவன், ''நாளைக்கு விடியுற வரைக்கும்... இவள... அங்கன விட்டு வச்சிருந்தா... அந்தக் களவாணிங்க ரெண்டு பேருமாச் சேந்து... இவள கெணத்துக்குள்ளார தூக்கிப் போட்டுட்டு... அவளா விழுந்துட்டான்னு சொன்னாலும்... சொல்லிப்புடுவானுங்க...'' என்றான் பழி முழுதையும் மலரின் குடும்பத்தின் மீது போட்டு!

அவன் சொல்வதையும் நம்பாமல் இருக்க முடியவில்லை, ஊர்ப் பெரியவர்களால்! தங்கள் கண் முன்னேயே, பெண்ணைக் கொலை செய்வதைப் பற்றி பேசியவன் தானே வேலுகருப்பன்! ஆதலால், ''பெற்றப் பெண்ணை எப்படிக் கொலை செய்வான்?'' என்ற கேள்வியை அவர்களால் கேட்க முடியவில்லை!

அவர்களது தயக்கம் தைரியத்தைக் கொடுக்க, ராஜதுரை மலரோடு வீடு நோக்கி முன்னேற,



''ஏய்... நீ என்னப்பு... போய்க்கிட்டே இருக்கே? அப்பன்... ஆத்தா இல்லைன்னா என்ன... நாங்க ஊர்ப் பெரியவங்க இல்லையா? நில்லுப்பு!'' என நிறுத்திய ஒரு பெரியவர்,

''பங்காளி முறைக்குள்ள... எப்படிப்பு கலியாணம்... கருமாதி எல்லாம்... கேட்க நல்லாவா இருக்கு? ஒனக்கும்... அந்தப் பொண்ணுக்கும் அண்ணன் - தங்கச்சி மொறயாவது... எப்படிப்பு... அசலூர்க்காரைங்க கேட்டா காரித் துப்புவாய்ங்க!'' என்றார் முகத்தைச் சுளித்து.

பலரது முகத்திலும் அதன் பிரதிபலிப்புத் தெரியவே, ''மாமோய்... நீங்க சொல்றதெல்லாம் சரித்தேன்... ஆனா... இதென்ன ஜாதி விட்டு ஜாதி... மதம் விட்டு மதமா கலியாணம் பண்றோம்?'' என்றான் ராஜதுரை, இதெல்லாம் ஒரு மேட்டரா என்பது போல்.

''உனக்கு எது தான்டா மேட்டரா இருந்திருக்கு...'' என்று தோன்றியது மலருக்கு!

''ஆடு மகனே, ஆடு! ஆடும் வரை ஆடு!'' என்று அவனை ஓர் அற்பப் புழுவைப் பார்ப்பது போல் பார்த்தவளின் மனதில், அந்தத் தற்கொலை எண்ணம் தலை விரித்தாடிக் கொண்டிருக்க, திக்கற்று வெறித்திருந்தாள் மலர்.

ஆனால், அவளது மனநிலையைப் பகுத்தறியும் நிலையில் அங்கு யாரும் இருக்கவில்லை!

ராஜதுரையின் வாதத்திலேயே குறியாய் இருந்தவர்கள், ''இதென்ன உப்புச் சப்பில்லாம ஒரு காரணம்?'' என்பது போல் பார்த்தனர்.

இதற்கெல்லாம் அசந்து விட்டால், அவன் ராஜதுரை அல்லவே!

''நம்ம பாட்டனுக்குப் பாட்டன் காலத்தில்... நம்ம பிரிவில பொண்ணுங்க எண்ணிக்க கொறவா இருக்குன்னு... வேற பிரிவு பொண்ணுங்களைக் கட்டுற மொற உண்டு தானே?

உண்டு தானே... என்ன தானே? எங்கப்பச்சிக்கு அய்யனுக்கு (அய்யன் என்றால் தாத்தா) ஆத்தா (அதாவது ராஜதுரையின் எள்ளுப் பாட்டி)... மலரு பிரிவைச் சேர்ந்தவங்க தானே... என்ன சித்தப்பு... உமக்குத் தெரியாதா என்ன?'' என்றானே பார்க்கலாம், பலரது மண்டையும் குழப்பத்தில் ஆம் என்றும் ஆடியது, இல்லை என்றும் ஆடியது!

''எங்க எள்ளுத் தாத்தன் பண்ணதை... நா பண்ணா தப்பாக்கும்?'' என அலட்சியமாய் மொழிந்தவனிடம், ''தப்பு!'' என்ற பதிலைக் கூற யாராலும் முடியவில்லை. ஏனென்றால், இப்படி நடப்பது தான்! பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைந்திருந்த காலத்தில், ஒரே ஜாதிக்குள் வெவ்வேறு பிரிவிலிருந்து பெண்ணெடுக்கும் முறை உண்டு! ஆதலால், அவர்களால் மறுக்க முடியவில்லை.

அப்படியே மறுக்க எண்ணியிருந்தாலும், அடுத்ததாய் அவன் கேட்டக் கேள்வியில், ''இவன் செய்தது சரி தான்!'' என்ற எண்ணத்திற்கு வந்து விட்டிருந்தனர் அனைவரும்.

''எனக்கு... அவ மேல ஆசை... அவளுக்கும் எம்மேல விருப்பம் தேன்! ஒரே ஜாதி... அவுக வீடும் ஒண்ணும் கவுரதையில கொறைச்சல் இல்ல! பொறவு என்ன... சாங்கியம் பாத்துக்கிட்டு!'' என்று அவன் கேட்டத் தினுசில்,



''ஆமா... என்ன சாங்கியம் பாத்துக்கிட்டு...'' என்று கூடத் தோன்றியது பலருக்கு.

ஆனால், ''இப்ப... வரைக்கும்... நீ மட்டும் த்தேன்... அவ மேல ஆசை... அவ மேல ஆசை... அவ உம் பொஞ் சாதின்னு பினாத்திக்கிட்டு இருக்கிற... அவ வாயில இருந்து சாதகமா ஒரு வார்த்தைகூட உதறலையே...'' என்றாள் ஒரு பெரிய மனுஷி, மலரின் முகத்தில் தெரிந்த உணர்வைப் புரிந்து கொண்டவராய்.

''என்ன அத்தாச்சி... இப்படிக் கேட்டுப் புட்டீக...'' எனக் கூறி, ''ஹஹ்ஹா...'' என்று வெற்றிச் சிரிப்புச் சிரித்தவனை, மெல்ல முகம் திரும்பிப் பார்த்த மலரின் பார்வை, ''அடுத்ததாய்... என்ன சொல்லி என்னை அசிங்கப் படுத்தக் காத்திருக்கிறாய்?'' என்ற கேள்வியைத் தாங்கி நின்றது!

லேசாய் கண்ணை இடுக்கி, அவளைப் பார்த்தவன், கேள்வி கேட்டவளிடமிருந்து கண்ணைத் திருப்பிக் கொண்டு, ''உம்ம மக... என்னைய எப்படிக் கூப்பிடும், அத்தாச்சி?'' என்றான் கேள்வியாய்.

எதற்கு என்று புரியாதபோதும், ''ராசண்ணேன்னு கூப்பிடும்!'' என்றார் அவர்.

''ஹ்ம்ம்...'' என்றவன், கண்ணை அப்படியே சுழற்றி, வேறொரு பெண்ணிடம் பார்வையை நிறுத்தி ''மதினி... கனகம் என்னைய எப்படிக் கூப்பிடும்?'' என்றான் மீண்டும்.

அவரும், ''ராசண்ணே...'' என்று கூறவும்,

''நீங்களும்... மலரு வீடும் எனக்கு ஒரே மொறத் தேன்... அதேன் பங்காளி மொறை! ஆனா... உம்ம மக்க

எல்லாம் என்னைய அண்ணேன்னு கூப்பிடுதுக... ஆனா... மலரு என்னைய அப்படிக் கூப்பிட்டுப் பாத் திருக்கீகளோ?'' என்றான் சவாலாய்.

சட்டென மலரின் பார்வையும், வாசுவின் பார்வையும் நேர்க்கோட்டில் மோதிக் கொண்டன.

அவன் அருவெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொள்ள, மலரோ வலியால் சுருண்டாள்!

அந்த வலிக்கு மேலும் வலிமைக் கூட்டுவது போல், ''ஆமா... அந்தப் பாண்டிப் பயல... அண்ணேன்பா.. அலகனை அண்ணேன்பா... ஊர்ல அம்புட்டுப் பேரை யும் அண்ணேன்பா... ஆனா... ராசை மட்டும் அந்தாளு.. இந்தாளுன்னு நொடிப்பா...'' என்றாள் மல்லிகா, எதையோ கண்டுபிடித்தவள் போல்.

''ஆனா... இவ எரிஞ்ச எரிப்பென்ன... அவனோட ஒட்டி நிக்குற அழகென்ன... ச்சை... கருமம்!'' என அவள் தோள்பட்டையில் முகத்தை இடித்துக் கொள்ள, மலருக் குத் தனது முகத்தில் யாரோ காரித் துப்புவது போலி ருந்தது!

அவனிடமிருந்து கையைப் பறித்துக் கொண்டு, ஓட வேண்டும் போல் தோன்றிய உணர்வை அடக்கினாள். அப்படியேதும் செய்தால், இன்னுமோர் நாடகமாடித் தொலைப்பான் எனத் தோன்ற, தன்னை அடக்கிக் கொண்டுப் பேசாதிருந்தாள் மலர்.

''சின்ன வயசில... அந்தப் புள்ளயும் அண்ணேன்னு தான்யா கூப்பிட்டுக்கிட்டு இருந்துச்சு... வயசு வந்தப் புறம்... உடம்புக் கோளாறு... எதிர்த்த வீடு வேறே... ஆளு வாட்ட சாட்டமா இருக்கவன்... வயசுப் புள்ள வுழுந் துடுச்சு...'' - அவளுக்கு ஆதரவு கொடுக்கிறேன் என்ற பெயரில், அவளது பெயரை நாரடித்தனர் பலர்.

''எல்லா சந்தேகமும் சரியாப் போச்சுதா?'' என்ற வாறே, மலரின் கைப்பிடித்து அவன் நடக்க,

''ஏய்... நில்லுய்யா! பேப்பர்லதானே கல்யாணம் முடிஞ்சிருக்குது... அந்தப் பேப்பர் செல்லாதுன்னு நா இன் னொரு பேப்பர் வாங்கியாறேன்... அவள விடு...'' என்று முன்னே வந்தான், அவ்வளவு நேரம் வாய் திறக்காமல் நின்றிருந்த வாசுதேவன்.

அனைவருமே அதிர்ந்துப் போய்ப் பார்க்கவும், மலரின் முகத்தில் லேசாய் மின்னல் வெட்டியது!

ராஜதுரையும் இதை எதிர்பார்க்கவில்லை! ஆனால், தான் அதிர்ந்து போயிருக்கிறோம் என்பதைத் துளியும் வெளியே காட்டிக் கொள்ளாமல், ''என்ன பேப்பர் பங் காளி?'' என்றான் ஒன்றும் அறியாதவன் போல்.

''சும்மா நடக்காதடா! நீ... கல்யாணப் பத்தரம் வாங்கினா... நா வெவகாரத்தப் பத்தரம் வாங்கியாறேன்... நீ பண்ணக் கல்யாணத்தை முறிக்கிறேன்...'' என்றான் ஆவேசத்துடன்.

"சொல்ல வேணாம்... சொல்ல வேணாம்ன்னு பாத்தா.... விட மாட்டேங்கிறியே! நீயே... உந்தங்கச்சியை அசிங் கப்படுத்துற...'' என அலட்சியமாய்க் கூறியவன்,

சற்றும் தாமதிக்காமல் ''அவ எனக்கு எழுத்தில மட்டும் பொஞ்சாதி இல்ல! எல்லா வெதத்திலையும் பொஞ் சாதியா மாறி... நாளு நாலஞ்சு ஆகிப் போச்சு!'' என்றான், திடமாய்!

அவன் கூறியதன் அர்த்தத்தைக் கிரகித்துக் கொள்ள, மலருக்கு அரை நிமிடம் பிடித்தது! அர்த்தம் விளங்கிய

அடுத்த நொடி, ''இல்லலலலலல!'' என வீறிட்டாள் அவள்!



# 13

ராஜதுரையின் அபாண்டப் பழியைப் பொறுக்க முடியாமல், மலர் அலற, ராஜதுரையோ வடித்து வைத்தச் சிலையென, உணர்ச்சிகள் எதையும் வெளியிடாமல் நின்றான்!

ஆனால், ராஜதுரையின் வாய்மொழியைக் கேட்டிருந்த எவருக்குமே, மலரின் அலறல் பொருட்டாய் படவில்லை போலும்! வாசுதேவன் உட்பட!

ருத்ரமூர்த்தியாய் ராஜதுரையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவன், ராஜதுரை எய்ந்த சொலம்பில் சுருண்டு விழுந்தவனாய், தங்கையை ஓர் அருவெறுப்புப் பார்வைப் பார்த்தான்!

அதுதான், அவன் காட்டியக் கடைசி உணர்ச்சி! ஓர் புழுவைப் பார்ப்பது போல் தங்கையை வெறித்தவன், விடுவிடுவென வீடு நோக்கி நடந்தான்!

அண்ணனின் பார்வையிலேயே சாட்டையடி விழுந்தவளாய்த் துடித்துப் போன மலர், ராஜதுரையின் பிடியிலிருந்த தனது கையை உருவிக் கொண்டு, ஓட முற்பட்டாள்!

அது வரையில், உடும்பென அவளைப் பிடித்திருந்தவன், என்ன நினைத்தானோ கையை விடுவித்தான்.



அணை திறந்த வெள்ளமென அண்ணன் பின்னே ஓடியவள், ''அண்ணே... இல்லண்ணே... அந்தாளு சொல்றதை நம்பாத... நா அப்படிப்பட்டவளாண்ணே... என்னைய நம்புண்ணே... அண்ணே... நா உந்தங்கச்சிண்ணே... இப்படி ஈனத்தனமா நடந்துக்குவேனா... யோசிண்ணே...'' மலரின் குரல் அண்ணனை யாசித்தது!

வாசுதேவனின் காதில் எதுவுமே விழவில்லை போலும்! நெஞ்சைப் பிடித்துக் கொண்டு, திண்ணையில் அமர்ந்திருந்த தந்தையின் கைப்பிடித்து எழுப்பியவன், ''இவ... நம்ம வீட்டில பொறக்கலைன்னு நினைச்சுக்கும் அப்பச்சி! தல முழுகிட்டு... உள்ளார வாரும்!'' என்றான், தந்தையிடம்.

அதில் சொரணைப் பெற்றவராய் ''என்னைய உயிரோட கொன்னுட்டாளே... பாதகத்தி! பாவி! பாவி!'' என்று எழுந்தவரின் கண்கள், கலங்கியிருந்தன.

''அப்பு... என்னைய நம்புங்கப்பு...'' - வாய் திறந்த மலரின் கன்னத்தில் இடியென ஓர் அடி இறங்க, உதடு கிழிந்து லேசாய் ரத்தம் கசிந்தது!

''நம்பறதா? உன்னையவா? சச்சீ... போடி!'' என்றவர், தன் ரத்தத்தில் உதித்தப் பொன்மலரை எட்டி உதைத்தார்.

வலி தாங்க முடியாதவளாய், வெளி வாசலில் வந்து விழுந்த பொன்மலரை, ராஜதுரையின் கரங்கள் தாங்கின!

அவன் கொடுத்தக் கையைத் தட்டிவிட்டு, தன் முயற்சியாலே எழுந்தவள், ''ச்சீ... நீயெல்லாம் ஒரு மனுசனா? என்னைய ஏன்யா இப்படி அசிங்கப்படுத்துறே? நா என்ன தொரகம் செஞ்சேனுட்டு... என் உசிரைக் குடிக்கிற'' என்றாள் ஆவேசமாய்.

ஆனால், ராஜதுரை பேசினால் அல்லவோ! அவளது கைப்பற்றி, தரதரவென வீடு நோக்கி. அழைத்துச் சென்றான்!

''விடு.. விடுய்யா... விடுங்கிறேன்!'' என்று திமிறி, கத்தி, இழுத்து என்று என்னென்னவோ செய்துப் பார்த்தாள் மலர். ம்ஹூம்! ஒரு இன்ச் அளவிற்குக் கூட, அவளது கைகள் விடுபடவில்லை!

அவனிடம் பேசி ஒரு பிரயோஜனமும் இல்லை என்பது புரிய, ''இப்படி... நின்னு வேடிக்கை பாக்குறீ களே! யாரும் இந்தாளு... பண்ற அக்கிரமத்தைக் கேட்க மாட்டீகளா?'' என்றாள் ஊர் மக்களை நோக்கி.

யாரும் அசைந்தால் அல்லவோ! கல்யாண விஷயத் தில், மலர் கூறியது பொய்யென்று ஆன பிறகு, இந்த விஷயத்தில் அவளை நம்புவது அவர்களுக்குச் சிரமமாய் இருந்தது போலும்!

அதற்கு உரம் சேர்ப்பது போல், ''அன்னைக்கு... பஸ் ஸ்டாப்பில நின்னுக்கிட்டு... ராசண்ணே மலரை எங் கேயோ கூட்டிப் போச்சு...'' என்று ஒருத்தியும்,

''வீட்டுக்குள்ளேயே... என்னென்ன நடந்துச்சோ... இதில, டவுன்ல நடந்ததைப் பத்தி என்னடிப் பேச்சு?'' என்றாள் மல்லிகா, தோளில் இடித்தபடியே.

கூடவே, ''என்னைக்குமில்லாத திருநாளா... ராசு... வாசு வீட்டுக்கு வாறதும்... போறதுமா இருந்தப்பவே நினைச்சேன்... இவளும் த்தேன்... கனா காண்றதும்... வானத்தில பறக்கிறதுமா இல்ல இருந்தா...'' என்றாள் அருவெறுப்புடன்.

அவள் அதை கூறிய விதமே, மலரை அசிங்கப் படுத்திக் காட்ட, மலருக்கு அப்படியே செத்து விடலாம் போல் தோன்றியது!



இன்னும் எத்தனை வசவுகளைக் கேட்க வேணுமோ? ஐயோ... போதும்! போதும்! என்று நெஞ்சு பதறியது!

ஆனால், அவளது வேதனையின் அளவு அத்துடன் நின்றுவிடவில்லை.

வலுக்கட்டாயமாக, ராஜதுரை அவள் தனது வீட்டினுள் இழுத்துச் செல்லவும்,

''ராசு... ஒரு நிமிஷம் நில்லுய்யா!'' என்றார் ஓர் பெரியவர்.

''என்ன த்தேன் இருந்தாலும்... அந்த புள்ளய இப்படி வீட்டுக்குள்ளார கூட்டிப் போறது நல்லா இல்லய்யா'' என்றார், உடன்பாடில்லாக் குரலில்!

''நம்ம ஊருக்குன்னு ஒரு மானம் மருவாத இருக்கு... இந்தப் புள்ள பண்ண கூத்தால, நம்ம ஊரு பொண் ணுங்களே இப்படித் தேன்னு பேசிப் புடுவாய்ங்க!''

''இந்த எடுபட்ட சிறுக்கி... தெனவெடுத்துப் போய்... தட்டுவாணித் தனமா எதுனா பண்ணா... எம் மக்களும் அப்படிப் பண்ணுவாகளா? எங்க பொண்டு பிள்ளை களை நாங்க. அப்படி வளக்கல... அப்பு!''

''அடி... நீ ஏன் காத்தாயி கத்துறவ! இந்தப் புள்ள... மாதிரி தகிரியம் எந்தப் புள்ளைக்கும் வராது! பண்ற தையும் பண்ணிப்புட்டு... பச்சப்புள்ள மாதிரி நிக்குது பாரு! கருமம்!''

''இவளை எல்லாம்... ஊருக்கு நடுல நிக்க வச்சு மொட்டை அடிச்சு விடணும்! அப்பத் தேன்... எவன்டா வருவான்... முந்தானையை விரிக்கலாம்ன்னு நாக்கைத் தொங்கப் போட்டு அலைய மாட்டா...''

ஆளாளுக்கு ஏதேதோ பேச, மலர் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு கதறத் தொடங்கினாள்!

''ஐயோ... ஆத்தா... என்னைய இம்புட்டு அசிங்கப் படவா பெத்தே? ஐயோ... கூசுதே... உடம்பெல்லாம் கூசுதே!'' எனக் கதறியவள்,

''அய்யோ... இந்த அசிங்கத்தை எங்க போயி கழுவு வேன்... எந்தக் கெணத்தில விழுந்து போக்குவேன்...'' என்று உடைந்து போனாள்!

அவளைத் தன் பிடியில் வைத்திருந்த ராஜதுரை, ஓர் நிமிடம் அவளை உறுத்துப் பார்த்தான். அடுத்த நிமிடம், அவளை விட்டுவிட்டு, விடுவிடுவென வீட்டினுள் சென்றான்.

ஆனால், அவன் தன்னை விட்டதோ... உள்ளே சென்றதோ மலரின் மனதில் பதியவே இல்லை!

மருந்திட முடியாத காயம் பட்ட நெஞ்சம், வெடித்து விடும் போலிருக்க, நடு வீதி என்றும் பாராமல், மடிந்து அமர்ந்து கதறிக் கொண்டிருந்தவளைப் பார்த்து, அங்கிருந்த யாருமே இரக்கப்படுவதாய் இல்லை!

ஐந்தே நிமிடத்தில், வீட்டினுள்ளிருந்து வந்த ராஜ துரையின் கைகளில், புத்தம் புதிதாய் ஓர் பொன்மஞ்சள் தாலி!

அனைவரும் அதிர்ந்துப் பார்த்திருக்க, மலரோ அவன் வந்ததைக் கூடக் கவனிக்கவில்லை.

''அவ எம் பொஞ்சாதின்னு சொன்ன பொறவும்... நாக்கு மேல பல்லைப் போட்டுப் பேசுற உங்க வாயை அடக்கத் தேன் இந்தத் தாலி! இதை... நாளைக்கு வெள்ளென கருவேலம் அய்யனார் சந்நிதில வச்சுத் தேன் கட்டுறதா இருந்தேன்... ஆனா... நீங்க எம் பொஞ் சாதியை அதுவரைக்கும் என்னென்ன பேசுவீகளோ! அத்தேன் இப்பவே கட்டுதேன்!'' என்றவன்,



பொன்மலரின் கழுத்தில் திருமாங்கல்யத்தைப் பூட்டி னான்!

தன் கழுத்தில் அவனது கரங்கள் பாடவும், அதிர்ந்துப் போய் நிமிர்ந்த மலரின் கீழ்க்கண்ணில், மஞ்சளோடு சேர்த்த பொன்னும் பளிச்சிட்டுத் தங்கள் இருப்பைக் காட்டின!

மூச்சு நின்று போனது, மலருக்கு!

ஆக, அவனது காரியத்தைக் கட்சிதமாய் முடித்துக் கொண்டு விட்டான்! அவன் கட்டி முடித்ததும், அத்தாலி வந்து அவளது நெஞ்சில் மோதி நிற்க, புல்டோசர் கொண்டு, தன் நெஞ்சை யாரோ இடிப்பது போல், நெஞ்சம் கனத்துப் போனது, மலருக்கு!

தன் கழுத்தில் ஏறிய தாலியின் பாரத்தைத் தாங்க முடியாதவளாய், அவள் அதைக் கழட்ட முற்பட, அதைத் தடுக்கும் விதமாய், அவளை எழுப்பி, மீண்டும் வீட்டி னுள் இழுத்துச் சென்றவன்,

''ஒரு தப்பு நடந்திருக்குன்னா... அதுக்கு ரெண்டு பேருந் தேன் காரணம்... அப்படியிருக்கையில... மலரை மட்டும் குத்தம் சொல்லுறதை விட்ருங்க...'' என்றான் ஊராரின் புறம் திரும்பி.

ஆனால், ஊர் வாயை அடைக்க முடியுமா என்ன?

''ஊசி எடங்கொடுக்காம... நூலு நொழைய முடியுமா என்ன?'' என்று ஒருத்தி ஆரம்பிக்க, மீண்டும் மலரின் பெயர் அம்பலத்தில் ஏறியது!

குத்தும் ஊசிக்கு ''கெட்டுப் போனவள்'' என்ற பட்டம் கொடுக்கப்பட, வளைந்துக் கொடுக்கும் நூல் ''கட்டிக் கொண்டவன்'' என்ற அரிதாரத்தைப் பூசி, ஊரின் மெச்சுதலுக்கு ஆளாகிப் போனான்!

தாய்த்தமிழ்நாட்டில், பெண்ணிற்கு மட்டும் தானே கற்பும், மானமும் சொந்தமானவை! ஆண் என்பவனுக்கு, ஏழு பெண்டாட்டி இருந்தாலும் அவன் உத்தமனாய் அன்றோ மாறி விடுகிறான்! கலாச்சாரம் என்ற பெயரில், பெண்ணினத்திற்கு மட்டும் கட்டுப்பாடுகளும், கோப்பு களும் என்று வகுத்து வைத்திருக்கும் நம் மூடத்தனம், அங்கேயும் அரங்கேறியது!

ஊர் வாய், மூடாத கடலென விஸ்தரித்துக் கொண் டிருக்க, மலர் ராஜதுரையின் வீட்டினுள் மருமகளாய் பிரவேசித்தாள்!

அவளை உள்ளே விட்டு, கதவை மூடிவிட்டுத் திரும்பிய ராஜதுரை அதிர்ந்துப் போனான்!

அவனது சட்டையைக் கொத்தாய்ப் பிடித்து, ''ஏன்? ஏன்? ஏன்? ஏன்ய்யா இப்படிப் பண்ணினே?'' என்று காளி போல் கத்திக் கொண்டிருந்தாள் மலர்.

''மலரு.. நா சொல்றத..'' என அவன் ஆரம்பிக்க,

''என்ன சொல்லப் போறே? இல்ல என்ன சொல்லப் போறே? இதுக்கு மேலையும்... நீ என்னய்யா சொல்லப் போறே? ஐயோ... என் மானத்தை வாங்கிப் புட்டியே...''

''இல்ல மலரு... நா இப்படி...''

''பாவி... பாவி.. பாவி! நா ஒனக்கு என்னய்யா துரோகம் செஞ்சவ!... ஐயோ... எரியுதே! எரியுதே! மனசு எரியுதே! நா சாவணும்... சாவணும்... சாவணும்...'' - ராஜதுரையைப் பற்றியிருந்த மலரின் கரங்கள், மெல்லத் தளர்ந்தன.

அதற்கு மாறாய், வீட்டைச் சுற்றி கண்கள் மேய்ந்தன!

''ஏய்... ஔராதடி! இப்ப... என்ன நடந்துப் போச்சு... அத்தேன்... தாலி கட்டிட்டேன்ல...'' என அவன், தான் தாலி கட்டியதே பெரியக் காரியம் போல் சொல் லவும்,



மலருக்குப் பொத்துக் கொண்டு வந்துவிட்டது!

''இந்தத் தாலி... யாருக்குய்யா வேணும்! எனக்கு வேண்டாம்... எனக்கு என்னோட மானம் வேணும்... மருவாத வேணும்... எங்கண்ணே வேணும்... அப்புச்சி வேணும்... அவுக எம்மேல வச்சிருந்த நம்பிக்க வேணும்! அம்புட்டையும் ஒரே ராவுல மிச்சமில்லாம அழிச்சுப் புட்டு... பேசுற உன்னை...'' என்று பேசிக் கொண்டே போனவள், சட்டெனெ பேச்சை நிறுத்தினாள்!

முகம் ஏதோ யோசனையில் இறுகியது! பின்னர், மின்னல் வெட்டிய முகத்தவளாய் ''நீ என்ன பேசுனாலும்... இந்த வூரு நம்புன்னுதானே இந்த ஆட்டம் ஆடுறே? இரு! நீ சொன்னதெல்லாம் பொய்யின்னு நா வெளிச்சப்படுத்திக் காட்டுதேன்!'' என்றாள் வீராவேச மாய்.

ராஜதுரை கண்கள் இடுங்கப் பார்த்துக் கொண்டிருக் கவும், ''என்னையவா ஆண்டு முடிச்சுட்டேன்னு சொன்னே? இருய்யா... இரு! உம் பேரை... அசிங்கப்படுத்தல... நா வேலுகருப்பனுக்குப் பொறக்கலை!'' எனச் சூளுரைத் தவள்.

அவனது பார்வைத் தன்னிடமே இருப்பதை உணர்ந்து, நக்கலாய்ச் சிரித்தாள். ''நா... என்ன இந்த வூரு பொம்பளைங்க மாதிரி தக்குறின்னு நினைச்சியோ... நா படிச்சவய்யா... நா கன்னி கழியாத தங்கம்ன்னுட்டு... ஆஸ்பத்திரில போயி காகிதம் வாகியாருவேன்... உன்னைய முச்சந்தில வச்சு நாறடிப்பேன்... என்னைய

பேசினப் பேச்சு அம்புட்டுக்கும்... நீயி அனுபவிக் கணும்... அனுபவிச்சே ஆவணும்... இவ மேல ஏன்டா பழி போட்டோம்ன்னு அழுவணும்!'' என அவள் சொல் லிக் கொண்டே போக,

ராஜதுரையின் முகத்தில் ஓர் மெச்சுதல் வந்து போனது!

''ஹஹ்ஹா...'' என்று வெடித்துச் சிரித்தவன்,

''எம் பொஞ்சாதி... அறிவாளி த்தேன் டோய்! ஆனா... இந்த அறிவெல்லாம்... எங்கிட்ட வேணாம் தாயி...'' என்றான் எகத்தாளமாய்.

''ஏன் வேணாம்... இல்ல ஏன் வேணாங்கிறேன்... உம்ம மானம் போவும்ன்னா... போகணும்ய்யா... கண்டிப்பா போவணும்! அப்படிப் போனாத் தேன்... என் ஜீவன்... நிம்மதியா போவும்...'' என்றவள்,

''உன்னைய முச்சந்தில வச்சு அவமானப் படுத்துற வரைக்கும்... இந்த உசிரைக் கையில புடுச்சுக்கிட்டு இருப்பேன்...'' என்றாள் கண்ணில் வெறியுடன்.

ஆனால், ராஜதுரையை அந்த வெறியெல்லாம் பாதிக்கவே இல்லை போலும்!

''ஹாஹ்ஹா!'' என்று மீண்டும் சிரித்தவன், ''இந்தப் பேச்சுத் தான்டி... என்னைய கட்டிப் போட்டதே!'' என் றான் ரசனையுடன்.

''என்னம்மா பேசுறே... இந்தப் பேச்சுக்குக்... கலி யாணத்துக்குப் பொறவு படப் போறேன்னு சொன்னது மறந்துப் போச்சா?'' என்றான் கண்ணில் வெட்டிய மின்னலுடன்.

அவனது பேச்சு, உள்ளுக்குள் ஓர் இடியை இறக்க, பேச்சற்ற அவனை வெறித்திருந்த மலரை, இரு கைகளாலும் தூக்கினான் ராஜதுரை.



வரப் போகும் விபரீதம் புரிந்துவிட, ''விடுடுடுடுடு டுடு...'' என்று அலறிக் கொண்டு, மலர் குதிக்க முற்பட,

''அட என் சண்டி ராணி! கலியாணம் த்தேன்... நடுத் தெருல நடந்துப் போச்சு... மொத ராத்திரியாவது முஹூர்த்தம் பாத்து வைக்கலாம்ன்னு நினைச்சா... விட மாற்றியே!'' என அவன் சிரிக்க,

''ஐயோ! தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொண்டோமோ!'' என்று மலர் அதிர்ந்துப் போனாள்!

''வேணாம்... வேணாம்... நா தெரியாம சொல்லிப்புட் டேன். விட்டுரும்... என்னைய விட்ரும்! ஐயோ... வேணாம்...'' என அவள் கதற,

''எனக்குமே... உன்னைய இந்த நேரத்தில இம்சைப் படுத்த இஸ்டமில்லடி... ஆனா நீ ராங்கித் தனமா ஆடுறியே? என்ன பண்றது?'' என்றான் அவன், வேறு வழி தெரியாதவன் போல்.

''இல்ல... வேணாம்! நா... ஆசுபத்திரிக்குப் போவல... என்னைய விட்டுரும்!''

''உன்னைய விடவா.. இம்புட்டுத் திட்டம் போட்டு... இங்கன கூட்டியாந்தேன்! ஹஹ்ஹா!''

''திட்டம் தானே.. ஐயோ.... திட்டம் தானே... ஐயோ... கண்ணு வச்சுக் கருவறுத்திட்டியே... படுபாவி!''

''ச்சீ... ச்சி.. கரு உருவாகப் போற நேரத்தில... என்ன பேச்சுப் பேசுற.. இந்த வாயை..'' என்றான் அவன் சிரிப்புடன். இந்தப் பேச்சுக்கு நடுவே, மச்சு வீடான ராஜதுரையின் வீட்டின் முதல் மாடிக்கு வந்திருந்தனர் இருவரும்.

''விட்டுரும்! உம்ம காலில விழுந்து மாப்புக் கேட்குதேன்... விட்டுரும்...''

''நீ ஏன்டி... மாப்புக் கேட்கிறவ! எம் பொஞ்சாதி... எங்காலில இல்ல... எவன் காலிலையும் விழக் கூடாது... சொல்லிப்புட்டேன்!''

''ஐயோ... அப்படிச் சொல்லாத... பொஞ்சாதின்னு சொல்லாத... அதுவும் உம் பொஞ்சாதின்னு நினைச் சாலே... என் நெஞ்சுக் கூடு உலந்துப் போவுது! உடம்பு வெந்துப் போவுது! உம் பொஞ்சாதியை வாழுறதுக்கு... நா சாவலாம்...விடு...'' என்று மலர் முகத்தில் மிதமிஞ்சிய அருவெறுப்பு!

அவ்வளவுதான், அந்நேரம் வரையிலும் முகத்தில் ஓர் இலகுத் தன்மையுடன் இருந்த ராஜதுரை, வெறிப் பிடித்தவனாய் அவதாரம் கொண்டான்.

''அடச்சீ நாயே! என்னைய விடவும் எந்த மம்முதன்டி... ஒனக்கு வருவான்? என்கிட்டே மயங்கி நின்னப் பொட்டக் கழுத நீயி! பேசுறப் பேச்சைப் பாரு!'' என்று கர்ஜித்தவன்,

''என்னைத் தவிர... யார்கிட்டயும் பொஞ்சாதியா வாழாது மாதிரி செய்றேன்டி! ராங்கி!'' என்ற சூளுரை யுடன், அவளைத் தூக்கிக் கொண்டு, தன் அறைக்குள் நுழைந்தான்!

அடுத்த நாள், கூம்பியிருந்த தாமரை மலர்களை விரிய வைக்கவென சூரியன் வந்த வேளையில், பொன்மலர் வாசனை முழுதும் முகரப்பட்ட காகித மலராய்க் கசங்கிப் போயிருந்தாள்!



# 14



அதிகாலை மூன்று மணி!

ராஜதுரை உறங்கிவிட, மலர் விடுதலைப் பெற்றிருந் தாள்!

உடம்பு ரணமாய் வலிக்கவில்லை என்றபோதும், மனம் குத்துப்பட்ட குடலாய் குதறப்பட்டிருந்தது!

''அவமானம்! அவமானம்! அவமானம்!'' - இதைத் தவிர வேறெந்த சிந்தனையும் மனதை நிறைக்காமல் இருக்க, மெல்ல வலப்புறம் திரும்பி, 'கணவன்' என்ற பட்டத்தைத் தனக்குத் தானே சூடிக் கொண்ட ராஜதுரை யின் முகம் பார்த்தாள்!

தன்னை இறுக்கிப் பிடித்திருந்த அவனது கைகள், ஒன்றுமில்லாத உடலைப் பிரட்டி, வாயிலெடுக்க வைக்க, வேகமாய் கட்டிலை விட்டு இறங்கினாள் பொன்மலர்.

அவள் கட்டிலை விட்டு இறங்கிய வினாடி, ராஜதுரை - கால் கால்களை நன்றாக அசைத்துக் கட்டிலில் வசதியாகப் படுத்துக் கொள்ள, சீர்குழைந்த அவளது மனம் அவன் முகத்தில் காரித் துப்பச் சொல்லி, அவளைத் தூண்டியது!

ஆனால், அடிப்பட்டு அடிப்பட்டு நொந்து போயிருந்த மனதின் கட்டளையை ஏற்காதே என்று அவளை எச்சரித்தது மூளை!

மெல்ல நகர்ந்து வந்து, அவன் அறையிலிருந்த மேஜையின் அருகே போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்தவளை, எதிரே இருந்த ஜன்னல், ''திற... திற...'' என்று கேட்டுக் கொண்டது போலும்!

மலரின் கரங்கள், ஜன்னலை விஸ்தாரமாய் திறந்து விட்டன!

நேர் எதிரே, அவளது வீடு

ம்ஹூம்! அவளது வீடல்ல! திருவாளர். வேலுகருப்பனின் வீடு! அது கூட சரியல்ல, மதிப்பிற்குரிய வாசுதேவனின் வீடு! - என்ற எண்ணம் நெஞ்சிலோட, ஏளனமாய் வளைந்தன உதடுகள்!

பெற்ற மகளை நம்பத் தெரியாத இவர்கள் எல்லாம் மனிதர்கள்! தூ! என்று துப்பியது மனம்!

ஆனால், நம்ப விடாமல் செய்தவன் இவனன்றோ! கிராதகன்! பாவி! ராட்சசன்! துரோகி! நம்ப வைத்துக் கழுத்தறுத்துவிட்டப் பச்சைத் துரோகி!

நெஞ்சம் தன் கொதிநிலையை எட்டிக் கொண்டிருக்க, கண்ணீர் அருவியாய்க் கொட்டத் தொடங்கியது!

என்ன திட்டி என்ன புண்ணியம்? ஆட்கொண்டு விட்டானே? அழித்து விட்டானே? அசிங்கப்படுத்தி விட்டானே? பாவி! பாவி!

ச்சை... என்ன ஒரு அவமானம்! ஊர் முன்னே வேசி என்ற பட்டம் தான் சூடப்படவில்லை! கொஞ்சமிருந்தால் அதையும் செய்திருப்பார்கள்! இன்னும் இவன் அம்மா வேறு, என்ன ஆட்டம் ஆடப் போகிறாளோ! நாக் கூசாமல் வைது குவிப்பாளே! கடவுளே! இத்தனையையும் கேட்டுக் கொண்டு, இன்னுமா உயிரோடு



இருக்கிறேன்! ம்ம்... சாக வேண்டும்! சாக வேண்டும்! - மனம் பரபரப்புற்று, உடலுக்குச் சுறுசுறுப்பேற்றியது!

நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தவள், தன் பூலோக வாழ்வை முடித்துக் கொள்ளும் தீர்மானத்துடன், அறைக்கதவைத் திறந்த வினாடி.

''மலரு...'' என்ற சன்னமான முனங்கலுடன், திரும்பிப் படுத்த ராஜதுரை, அருகிருந்த தலையணையைத் தன் பக்கம் இழுத்து, உதட்டில் ஓர் மலர்ந்த முறுவலும், முகத்தில் சந்தோஷமுமாய், அத்தலையணையைத் தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

கதவைத் திறந்த மலரின் கரங்கள், அப்படியே நின்று போயின!

''இவனுக்குத் தண்டனை கொடுக்காமல் சாவதா? என்ன ஒரு முட்டாள்தனம்!'' - என்று மூளை, அவளை எள்ளி நகையாட,

''இவன நாரடிக்கணும்... என்னைய குத்துயிரும் கொலஉயிருமா கொத்திப் போட்ட இவன... கரம் வச்சு... சாவடிக்கணும்! சாவடிக்கணும்!'' என்ற சூளுரை, நெஞ்சை நிரப்பியது!

''திட்டம் போட்டு... என்னைய சூறையாடிப் புட்டியேடா, பாவி! உன்னைய...!'' - பற்கள் நறநறவென கடிபட,

''ம்ஹூம்! சாகக் கூடாது! இவனே உசிரோடக் கொல்லாம சாவக் கூடாது, மலரு! சாகவே கூடாது!'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள், பொன் மலர்!

ஆனால், எப்படிப் பழி வாங்குவது? எப்படி? எப்படி? எப்படி? - நெஞ்சம், சுற்றிச் சுழன்று வேலை செய்தது!

மனம் செய்த வேலை ஒரு புறமிருக்க, கண்கள் உறக்கம் கொண்டிருந்தவன் மீது கூர் ஈட்டியெனப் பாய்ந்திருந்தன.

''எந்தூக்கத்தை கெடுத்துப்புட்டு... நிம்மதியாவாடா தூங்குறே? பாவி!'' என்று கண்கள், சிவப்பு மையைப் பூசிக் கொள்ள,

''அப்படியே... அம்மிக் கொலவியத் தூக்கி... இவந் தலையில போட்டுட்டா என்ன?'' எனக் கூட எண்ணத் தோன்றியது!

''ம்ஹூம்! இவன் அம்புட்டுச் சொலபமா சாவக் கூடாது... ஒரொரு நிமிசமும் நொந்து... நூலா பிரிஞ்சு சாவணும்! இவள... ஏன்டா கட்டுனோம்ட்டு... நோவணும்! நோவ வைக்கணும்!'' என்ற வைராக்கியம், மலரினுள் குடி புகுந்தது!

''பழி! பழி! பழி!'' - இதைத் தவிர, அவள் நெஞ்சில் வேறேதும் இருக்கவில்லை!

''பழிக்குப் பழி!'' என்ற முடிவு ஆல மரம் வேராய் ஆழமாய்ப் பதிந்துப் போனதும்,

''இவனை எப்படிப் பழி வாங்கலாம்?'' என்ற திட்டத்தின் வரைபடத்தை நெஞ்சினுள் வரையத் தொடங்கினாள், பொன்மலர்.

ஆரம்பித்தக் கோட்டிற்கு முடிவென்று ஒன்றே இல்லாமல் போக, ''இவனை வீழ்த்தவே முடியாதோ?'' என்று நெஞ்சம் ஒரு நிமிடம் துணுக்குற்றுப் போனது!

''இல்ல முடியும்! இல்ல முடியும்! யோசி... மலரு... யோசி!'' - சோர்ந்துப் போன மூளையைத் தட்டி இழுப்பிவிட்ட மலரின் மூளையில்,



''இந்தப் பேச்சுத் தான்டி.. என்னைக் கட்டிப் போட்டதே!'' என்ற ராஜதுரையின் பேச்சு சட்டெனப் பளிச்சிட்டது!

''இந்தப் பேச்சை வச்சே... அவன இம்சைப்படுத்தணும்... குத்திக் குத்திக் கொல்லணும்... இப்படிப் பேசிப் பேசிக் கொல்றதுக்கு... ஒரேடியா கொன்னுடுடின்னுட்டு அவனப் புலம்ப வைக்கணும்... ம்ம்ம்...'' என்று யோசித்துக் கொண்டே சென்றவளின் கற்பனை, சட்டெனத் தடைப்பட்டு நின்றது!

''இல்லை... எந்தப் பேச்சு அவனுக்குப் பிடிச்சதோ... அந்தப் பேசப் பேச... அவன் சந்தோஷப் படத்தானே செய்வான்! ம்ஹூம் கூடாது!'' - மூளை தனது இருப்பை, இந்த யோசனையின் வாயிலாகக் காட்டியது!

''இது தான் சரி! எது அவனுக்குப் பிடித்ததோ... அதைச் செய்யக் கூடாது! அதாவது பேசக் கூடாது! வாயைத் திறந்து, ஒரு வார்த்தை... ஒரு ம்ம்... ஒரு ம்ஹூம்... ஒரு ஆமாம்... ஒரு இல்லை... ஏன் ஒரு மண்டையாட்டல் கூட அவனுக்குப் பதிலைக் கொடுக்கக் கூடாது! அவனுக்கென்று இல்லை, யாருக்குமே!'' - திட்டத்தின் முழு வரைபடமும் தயாராக வில்லை என்றாலும், அதன் முகப்புத் தயாராகிவிட, ''முதலில் இதைச் செயல்படுத்துவோம்! கொஞ்சம்... கொஞ்சமாய்... அவனை அணுஅணுவாய்க் கொல்வோம்!'' என்ற முடிவுக்கு வந்தாள், மலர்!

''கூட இருந்தே, அவனுக்கானக் குழியை ஆழத் தோண்டுவோம்!'' - உள்ளம் நிறைந்த வன்மத்துடன், விடிவதற்காய்க் காத்திருந்தாள்!

கடலுக்கும் வானுக்குமான ஏணிப்படியில், ஓரோர் படியையும் மெல்ல மெல்ல அனுபவித்து, எடுத்து வைத்துக் கொண்டிருந்த சூரியனைப் போல, தன் வாழ்வைக் கெடுத்தவனின் சந்தோஷத்தை எப்படிப் படிப்படியாய்க் குறைக்கலாம் என்று தன் எண்ண ஓட்டங்களுக்கு உயிர்க் கொடுத்துக் கொண்டிருந்தாள் மலர்.

கோடிக்கணக்கானப் படிகளைக் கடந்து வந்த சூரியன், களைப்படையாமல் இருக்க, மலருக்கோ கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது!

மூன்று நாட்களாய் ஒன்றும் உண்ணாததன் பலன்!

தலையில் பட்டக் காயத்தை மெல்லத் தடவிவிட்டுக் கொண்டாள், மலர்! இன்னும் ரத்தத்தின் ஈரம் கூடக் காயாமல் இருந்தது!

அதற்குள் என்னென்ன குற்றமெல்லாம் சுமத்தி விட்டான்!

போடாதக் கையெழுத்தைப் போட்டேன் எனச் சொல்லி! அதற்கு அல்லக் கைகள் மூன்று பேரைச் சாட்சியாக்கி! எல்லாவற்றுக்கும் மேலாய்...! நினைக்கவே உடம்பு கூசியது மலருக்கு!

இந்தக் காயத்தை வருடிய இவனே தானே, தன்னை நடு வீதியில் வைத்து அசிங்கப்படுத்தியது! ச்சீ!

பாவி! பாவி! பாவி! என்று மீண்டும் அரைகூவ, அதை முழுதாய்ச் செய்ய விடாமல், தலைக்காயம் விண் விண் என்று தெறிக்கத் தொடங்கியது!

நேற்று முன்தினம் உண்டது! அதுவும், ஏதோ கொஞ்சம்! அதன் பின்னர், மலர் ஒரு வாய்த் தண்ணீர் கூடக் குடிக்கவில்லை!



அந்த சில்க் ஜிப்பாவைப் பார்த்ததுமே, மனம் சாப்பாட்டை நினைப்பதை மறுத்து விட்டது! பின்னர் நடந்தவையோ, உணவென்று ஒன்றிருப்பதையே அவளுக்கு உணர்த்தவில்லை!

ஆனால், இப்போது ராசதுரையைப் பழி வாங்க வேனும், இந்த உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற்று விட, வாழும் அவசியமும் அதற்கு அத்தியாவசியத் தேவையான உணவும் உறைக்க ஆரம்பித்தன!

பசிக்கிறது சரி! ஆனால், எதை உண்பது? எங்கு உண்பது? யாரைக் கேட்பது? - எதுவும் புரியாமல், தரையில் அமர்ந்தவள், கால்களில் முகம் பதித்து, இலக்கற்று வெறிக்கத் துவங்கினாள்!

ஹ்ம்ம்! ஒரு மணி நேரம்! இரண்டு மணி நேரம்! மூன்று மூன்றரை! மூன்றே முக்கால்! - ராஜதுரையிடம் சன்னமாய் அசைவுகள் தெரியத் துவங்கின.

மலரின் தேகமும் மனமும் ஒருங்கே விழிப்புப் பெற்றன!

நட்டநடு அறையில் முழங்காலிட்டு அமர்ந்திருந்தவள், அவனது அரவம் கேட்கவும், அமர்ந்த நிலையிலேயே பின்னே நகர்ந்து, சுவற்றில் சாய்ந்து அமர்ந்து கொண்டாள்.

அவளையும் மீறி, அவளது முகத்தில் ஓர் பதட்டம் சூழ்ந்து கொண்டது!

"என்ன செய்வானோ? என்ன செய்வானோ?" என்ற கன்னித் தன்மைக்கே உரிய பயமும் பதட்டமும் அவளது முகத்தில் பிரதிபலிக்க,

கட்டிலை விட்டிறங்கிய ராஜதுரையின் கண்களில் அவைப் பட்டன!

சட்டென முகம் செத்துப் போனது, அவனுக்கு! ஆனால், மறுநொடியே, கண்களில் லேசாய்க் கனலேற, ''என்னையப் பாத்தா... பொம்பளைக்கு அலையுற பொருக்கி மாதிரி இருக்கா...'' என்றான் சூடாக.

ஆனால், மலரின் பார்வையில் ஒரு மாறுதலும் இல்லை!

உள்ளுக்குள் ''ம்ஹூம்! மலர் வாய்த் தொறந்து பேசாத ம்ம்... பேசாத!'' என்று திரும்பத் திரும்ப உருவேற்றிக் கொண்டிருந்தாள், அவள்.

அவளிடமிருந்து, அமிலம் கக்கிய சொல்லம்புகள் வரும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்த ராஜதுரைக்கு, அவளது மௌனம் வித்தியாசமாய்ப் பட்டது!

அவனறிந்த மலர், இப்படியிருக்க மாட்டாள்! பட்... பட்... பட்டாசுதான்!

என்னவாகிற்று இவளுக்கு? ஒருவேளை, நேற்றிரவு தான் நடந்து கொண்ட முறையில், பயந்து போய்விட்டாளோ! புதுசல்லவா! அதான்! - என்று தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டவன்,

தன் அறைக்குள்ளேயே இருந்த குளியலறைக் கதவைத் திறந்தான்!

மலருக்கு உமட்டிக் கொண்டு வந்தது! பழங்கும் வீட்டுக்குள்ளேயே கழிவறையா? ச்சே! என்று வந்தது, அக்கிராமத்துப் பெண்ணிற்கு!

''ஓ... இருக்கப் பட்டவங்க இல்ல... அதேன்... என்னத்த செஞ்சு... காசைக் கரியாக்குறதுன்னு வெளங்கி



இருக்காது... இப்படி அழிச்சிருக்காய்ங்க!'' என்று ஏளனமாய் உதடு சுளித்தவளை ஊன்றிப் பார்த்த ராஜதுரை.

''தலைக்கு ஊத்திக்கலையா?'' என்றான் கேள்வியாய்.

மலரோ ''பேசாத... பேசாத!'' என்று உருப்போட்ட படியே இருந்தாளே ஒழிய, கண்மணியைக் கூட அவன் புறமாய்த் திருப்பவில்லை!

''உன்னையத் தேன் மலரு... தலைக்கு ஊத்திக் கலையா?'' என்றான் அவன் மீண்டும்.

அப்போதும், மௌனமே பதிலாக, ''ஓ... துணியில்லை யேன்னு தயங்கிக்கிட்டு நிக்கியோ! ச்சே... சட்டுன்னு புரியாம போச்சுது!'' என்று தானே ஒரு காரணத்தைக் கண்டு பிடித்து,

''உனக்குத் துணியெல்லாம்... அந்தா அந்த அல மாரில வாங்கி வச்சிருக்குதேன்... போ... போயி எடுத் துக்கோ..'' என்றான், இரக்கம் மேலிட்டக் குரலில்.

பத்திக் கொண்டு வந்தது மலருக்கு! ஆக, ''திட்டம் போட்டுத் தேன்டி உன்னையத் தூக்குனேன்...'' என்று சொன்னதெல்லாம் உண்மை! வீடிழந்து, உறவிழந்து, நிர்கதியாய், இவனிடம் வந்து நிற்போம் என்ற முடிவுடன் தான் காயே நகர்த்தியிருக்கிறான்! கொடும்பாவி! - நெஞ்சம் அவனுக்கு வசைமாரிப் பொழிந்தது!

ஆனால், இப்போது நொந்து என்ன பயன்? நடந்து முடிந்து விட்டது! நடப்பதைப் பார்ப்போம்! என்ற எண்ணத்துடன், மெல்ல எழுந்து அலமாரியின் புறம் சென்றாள் மலர்.

ராஜதுரைக்கு, அதுவே பெருத்த நிம்மதியைக் கொடுத்தது! முகத்தில் மலர்ந்த ஆர்வப் பூக்களுடன்,

அவள் பின்னே சென்றவன், ''பாரு... மலரு! ஒனக்குப் புடுச்ச கலரா பாத்து... எடுத்தாந்தேன்... இந்தா இந்த ரோசு... செம்பகப்பூ மாதிரி இருக்க ஒன்னைய ரோசாப் பூவா மாத்திப்புடும்... இந்தா பாத்தியா நல்ல கரும்பச்ச... இத கட்டினேன்னு வையு... ஒங்கலர அப்படியே தூக்கிக் காட்டும்...'' என்று சொல்லிக் கொண்டே சென்றவன், ஓர் மாம்பழ வண்ணப் புடவையை எடுத்து, அவள் தோளில் போட்டு,

''இன்னைக்கு... இதக் கட்டிக்கோ... மலரு! தோல் சீவுன மாம்பழமா... தங்க மொலாம் பூசினாப்பல மின்னுவே!'' என்றான் கண்கள், மின்ன.

மறு வார்த்தையின்றி, அந்தச் சேலையும் அதற்குத் தகுந்தாற்போல் ரவிக்கையும் எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் புகுந்தாள் பொன்மலர். ரவிக்கை மட்டுமல்ல உள்பாவாடை முதற்கொண்டு, பார்த்துப் பார்த்து வாங்கியிருந்த அவனது நேர்த்தி அவளுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கவில்லை மாறாய், வன்மத்தின் அளவை ஏற்றிக் கொண்டே சென்றது!

''பழி! பழி! பழி!'' என்று நெஞ்சுக் கொக்கரித்து, அவனைக் கொத்தக் காத்திருந்தது!

அவள் குளித்து முடித்து வரக் காத்திருந்தவன் போல், ''மலரு... ஆத்தாவுக்கும் அப்பச்சிக்கும்... வெசயம் தெரிஞ்சுப் போச்சுப் போல... யாரோட ப்ளசரையோ வாங்கிக்கிட்டு... ஓடியாறாக!'' என்றவன்,

''ஆத்தா... உன்னைய எதுவும் சொல்லாம நா பாத்துக்கிடுதேன்... மலரு! நீ பதறாத!'' என்றான் கணவனாய்.



''பெரிய... இமைய மல ராசப்பன்! உத்தம மந்திரி வீரப்பன்! நேத்து ராவு... ஊர் முன்னால என்னையப் படுத்த வேண்டிய அசிங்கமெல்லாம் படுத்திட்டு... இப்ப என்னவோ... ஆத்தாட்ட வீரத்தைக் காணபிக்கிறா ராம்! சண்டியரு! தூ!'' என்று விம்மி வெதும்பிய நெஞ்சத்தைப் பெரு முயற்சிச் செய்து அடக்கியவள் ஒன்றும் சொல்லாமல் அவன் பின்னோடு கீழ் முற்றத்திற்குச் சென்றாள்.

மலரின் இந்த நீண்ட மௌனத்தைக் கவனிக்கும் மனநிலையில், ராஜதுரை இருக்கவில்லை!

தந்தை... குறிப்பாய் தாயைப் பற்றிய பதைப்பில் அனைத்தும் மறந்து போனது, ராஜதுரைக்கே!

அவன் எண்ணியது போலவே, வீட்டுப் படி ஏறும் போதே,

''பாவிப் பயலே... எங்க மானத்த வாங்கிப் புட்டியே!'' என்று தூற்றிக் கொண்டே வந்து சேர்ந்தார், சந்தோசம்.

தாயும் தந்தையும் வீட்டினுள் நுழைந்த மறுவினாடி, ராஜதுரையின் கண்கள் காட்டிய சாடையின் அடிப்படையில், வீட்டுக் கதவுகள் மூடப்பட்டன.

''ஆத்தா... சத்த உக்காரு... பொறவு பேசுவோம்...'' - ராஜதுரை சமாதானக் குரலில் ஆரம்பிக்க,

''என்னடா பொறவு பேசுறது? எதப் பொறவு பேசுறது...'' என்று ஆங்காரமாய் அவனைத் தடுத்து நிறுத்திய சந்தோசம், பேசிய அடுத்த வாக்கியம் மலருக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தது!

''அந்த வேலுப் பய... பத்திரிகை வச்சுட்டுப் போனதும்... அந்தக் குடும்பத்தைத் தல எடுக்க விடாமச்

செய்யுறேன்னு சொன்னப்ப... நா வேற ஏதோன்னுல்ல நினைச்சேன்...'' என்று சந்தோசமும்,

''காலம் மூச்சூடும்... எங்காலடில கெடத்தி வைக்கி றேன்னு சொன்னப்ப... நானும் என்னவோன்னு யோசிச் சேன்... ஆனா... இப்படிப் பண்ணிப்புட்டியே அப்பு...'' என்று பழையம்பெருமாளும், தத்தம் ஆதங்கத்தை எடுத்து வைக்க, மலர் அதிர்ந்துப் போனாள்!

''அடப்பாவி! பாதகா! நீயெல்லாம் ஒரு மனுசன்!'' என்று அவன் சட்டையைப் பிடித்து உலுக்கி எடுக்க வேண்டும் போலிருந்தது!

''ம்ஹூம்! கூடாது! மலர் கூடாது! ஆத்திரத்தை அடக்கு... ஆத்திரத்தை உடனே காட்டிக் காட்டி... என் னத்தைக் கண்டே... வேசிங்கிற பேரைத் தவிர... ம்ஹூம்! திட்டம் போடணும்... திட்டம் போட்டு இவனைக் கவுக்கணும்!'' என்று மூளை உத்தரவுப் பிறப்பிக்க, பல்லைக் கடித்து, வார்த்தைகளை உள்ளேயே முழுங்கி னாள் அவள்.

தன் பாட்டிற்குப் புலம்பிக் கொண்டே போன சந் தோசம், ஒரு கட்டத்தில் ''ஆனா... இந்தக் கேடுக்கெட்ட வெட்டி மட்டய.. எம் வீட்டு மருமவளா கூட்டியாந்துட் டியே பாவி.. பாவி!'' என ஆவேசமாய்க் கூவியபடியே, கையை ஓங்கிக் கொண்டு, மலரை நோக்கி ஓடி வர,

ஒரே எட்டில், அவரைத் தடுத்து நிறுத்தியவன், ''எம் பொஞ்சாதி மேல... ஒரு அடி விழுந்துச்சு! நா மனுசனா இருக்க மாட்டேன்!'' என்றான். சிங்கத்தின் கர்ஜனை யுடன்.

இப்போது, அதிர்ந்து நிற்பது சந்தோசத்தின் முறை யானது!



அவர் விழி மூடாமல் நிற்க, ''இது... எம் பாட்டன் சொத்து! அதுவும்... தோட்டமும் தொரவும் த்தேன்... இந்த மில்லு... பால் பண்ணை... ஒரக்கடை (உரக்கடை) அம்புட்டும்... எஞ்சாமர்த்தியத்தில வந்தது... இந்த வீடு கூட... எம் பேர்ல த்தேன் இருக்கு... என்னையும் எம் பொஞ்சாதியையும் மதிச்சு... நீக்குப் போக்கா இருந்தா இங்க இரும்! இல்ல... பண்ணை வீட்டுக்குப் போயிரும்!'' என்றானே பார்க்கலாம்! பெற்றோர் இருவரும் அயர்ந்து போயினர்! மலருமே தான்!

# 15

''ஆக... இவன் அப்பன் - ஆத்தாளையும் மதிக்கிற தில்ல... மண்டக்கனம் புடுச்ச மகராசன்... இருக்குடா... ஒனக்கு இருக்கு!'' என்று மனதிற்குள் கறுவிய மலரை யாரும் கண்டுகொள்ளவே இல்லை!

சந்தோசம் தன் துக்கத்தைக் கணவனின் தோளில் ஆற்றிக் கொள்ள, ராஜதுரை எதுவுமே நடக்காதவன் போல், முற்றத்திற்கு வந்து, பேப்பர் படிக்கத் தொடங்கி விட்டான்.

''இவனால எப்படித் தேன்.. இம்புட்டு திமிரு புடிச்சு அலைய முடியுதோ...'' என்று வியப்பாய் கூட இருந்தது, மலருக்கு!

தன் வியப்பின் விளைவாய், அவள் அவனையே பார்த்துக் கொண்டிருக்க, சட்டென திரும்பி அவளைப் பார்த்துக் கண்ணடித்தான் ராஜதுரை.

"த்தூ... கருமம்!" என்று நாக்கைச் சுழற்றி, அவனைக் காரித்துப்ப வேண்டும் போல் தோன்றிய உணர்வை அடக்கிக் கொண்டு, அங்கிருந்து நகர்ந்தாள்.

ஆனால், என்ன செய்வது என்று தான் புரியவில்லை!

இந்த வீடு அவளுக்குப் பிரச்சயமற்றது அல்ல, தான்! ஆனாலும், ஓர் அந்நியத் தன்மை மனதை ஆக்கிரமித்தது! அதை விடவும், பசி வயிற்றைத் தாண்டி கை காலெல்லாம் திங்கத் தொடங்க, ஏதாவது உண்ணக் கிடைக்காதா என்று மனம் தவித்துத் தான் போயிற்று, அவளுக்கு!

எதுவும் செய்யப் பிடிக்காமல், யாரிடமும் பேசப் பிடிக்காமல், கொல்லைப்புற வாயிலில் சென்று அமர்ந் தாள், பொன்மலர்.

அவள் பிறந்த வீட்டுக் கொல்லையை விடப் பெரிது! ஹ்ம்ம்... மிகப் பெரிது!

ஒரு புறம் மாடும் கன்னுமாய் நாலைந்து நின்றிருக்க, கோழியும் குஞ்சுமாய் அங்குமிங்கும் ஓடிக் கொண் டிருந்தன!

மறுபுறத்தில், காய்த்துத் தொங்கும் மாங்காய்களுடன் வாழையும் தன் இடத்தைப் பதித்திருந்தது. சுற்றிலும் வேம்பும், பலாவும் ஆட்சி செய்தன!

ரணப்பட்டிருந்த அவளது மனதையே ரம்மியப்படுத் தியது, அச்சூழல்!

அதிலும், அந்த மாட்டுக் கொட்டகையை விட்டு மலரால் கண்ணை எடுக்கவே முடியவில்லை.

பிறந்து சில நாட்களேயான, சின்னக் கன்னுக்குட்டி ஒன்று, தாயின் மடி தேடி பால் குடித்துக் கொண்டிருக்க,



தன் வாலால் குட்டியின் முதுகை வருடிக் கொடுத்துக் கொண்டிருந்தது தாய்ப்பசு!

நெஞ்சம் சிலிர்த்துப் போனது, மலருக்கு! இந்தப் பசுவைப் போல், தனக்கும் ஓர் தாயில்லாமல் போய் விட்டாளே? அவள் இருந்திருந்தால், என் காயங்களை இப்படித் தான் ஆற்றியிருப்பாளோ என்று நெஞ்சம் அலை பாய்ந்துத் தவித்தது!

"அம்மா..." என்று வாய்விட்டு அழ வேண்டும் போல், உள்ளம் துடித்தது! ஆனால், நாக்கு மறுத்தது!

"வேணாம்... மலரு... ஒன்னோட வெசனத்தை வெளிய காம்பிக்காதே... வேணாம்!" என்று தன்னுள் ளேயே புதைத்துக் கொண்ட போதும், அவளால் அக்கன்னுக்குட்டியிடமிருந்து கண்ணைப் பிரிக்க முடியவில்லை.

ஒரு நிலைக்கு மேல், உட்கார்ந்திருக்க முடியாமல், மாட்டுக் கொட்டகைக்கு எழுந்து சென்றவள், அந்தக் கன்னுக்குட்டியின் முதுகை மெல்ல வருடிவிட்டாள்!

என்னவோ, தன் தாயின் மடியில் படுத்திருப்பது போன்று உணர்வு உள்ளுக்குள் ஓடி மறைந்தது!

மீண்டும் ஒரு முறை, தடவிக் கொடுத்தாள்!

மீண்டும் ஒரு முறை!

மீண்டும் ஒரு முறை!

அவள் தடவிக் கொடுத்தத் தினுசை ரசித்தது போலும், அக்கன்னுக்குட்டி! தலையை மெல்ல ஆட்டி, தாயின் மடியை ஒட்டி நின்று, பாலை ரசித்து உண்டது!

சின்னதாய், ஓர் சிரிப்புக் கூட மலரின் முகத்தில் படர்ந்தது!

''ஓம் பேரு... என்ன கண்ணு?'' என்றவளின் கரங்கள், அதன் சின்ன உடம்பு முழுதும் தடவி வர, அந்த நேரம் பார்த்துத், தாய்ப்பசுவின் வாலும் தன் குழந்தையின் மேனியை உரசிச் செல்ல, மலரின் கரமும் பசுவின் வாலும் ஸ்பரிசித்துக் கொண்டன!

உடல் சிலிர்த்தவளாய், ''ஒன்னைய கொஞ்சலைன்னுட்டு... ஒனக்குக் கோவமா...'' என்றாள் தாயிடம் வாஞ்சையாய்.

என்ன புரிந்ததோ, தாய்ப்பசு மண்டையை ஆட்டித், தன் கழுத்தில் கிடந்த மணியைக் கிணுகிணுக்க வைத்தது!

அதில் கவரப்பட்டு, ''ஐயோ... என் தங்கமே...'' என்றபடியே பசுவின் பக்கமாய் நகர்ந்த பொன்மலர், பொட்டிட்டிருந்த அதன் நெற்றியை மெல்ல வருடி, சன்னமாய் அதன் மீது ஓர் முத்தம் வைத்தாள்!

இப்போது, ஓரடி பின்னே நகர்ந்து, இல்லை என்பது போல் தலையை வேகமாய் ஆட்டியது தாய்ப்பசு!

''ஓ... ஒனக்கு முத்தம் கொடுக்கப் புடாதா? சரி.. சரி... கோச்சிக்கிடாத...'' என்ற மலர், அருகிருந்த வைக்கோலை எடுத்து, அதற்கு உண்ணக் கொடுத்தாள்!

அது உண்டு முடிக்கும் வரை, வேறெங்கும் கவனம் சிதறாதவளாய், அதையே பார்த்திருந்த மலருக்குத் தன் சோகம் கூடப் பின்னே சென்று விட்டது!

ஆனால், அதை எப்படி பின்னே செல்ல வைப்பாய் என்று கங்கணம் கட்டியவன் போல், ''என்ன... எங்க பாக்கியம்... ஒன்னையும் தம் பக்கம் இழுத்துக்கிட்டாளா...'' என வந்தான், ராஜதுரை.



சட்டென, முகம் கருத்துப் போயிற்று மலருக்கு!

அதைக் கண்ட ராஜதுரையின் முகம் சுருங்கிப் போயிற்று! ஆனால், அவளது நேற்றைய நிலையை மனதில் வைத்து, அதை ஒதுக்கியவன், ''வா... மலரு... பசியாறலாம்!'' என்றான் கரிசனமாய்.

''ரொம்பத் த்தேன்... பொங்கி வழியுது!'' என்று கழுத்து நொடிப்பட்ட போதும்,

ஒன்றும் பேசாமல் அவன் பின்னே நடந்தாள் பொன்மலர்.

அங்கே, பந்திப் பாய் விரிக்கப்பட்டு, இரு இலைகளில் பலகாரங்கள் பரிமாறப்பட்டிருந்தன.

மலரின் கண்கள் தன்னியல்பாய் முற்றத்தை வலம் வர, ''அப்பச்சியைத் தேடுதியா? அவரும் ஆத்தாவும் சாப்புட்டாக.. நாந்தேன்... ஒனக்காக வேண்டிக் காத்திருக்குதேன்...'' என்றான் அவன், அன்பு சொட்டியக் குரலில்.

''நல்லா வந்திரும் வாயில... காத்திருக்க மொகரக் கட்டையும் மூஞ்சியையும் பாரு! பனமட்டையில செஞ்ச ஊத்தா மாதிரி...'' - வாய் நுனி வரை வந்த வார்த்தைகளைக் கடித்து முழுங்குவது அவனுக்குப் பெரும்பாடாய் இருந்தன!

அமைதியாய், பரிமாறப்பட்ட இலைகளுள் ஒன்றில் அமர்ந்தவள், வயிற்றுக்குத் தேவையானதைச் சாப்பிட்டு விட்டு எழுந்தாள்!

ராஜதுரையின் மனம் நிறைந்துப் போயிற்று! தன் மேலிருக்கும் கோபத்தை, உணவில் காட்டி, அவளையும் வருத்தித் தன்னையும் வருத்தம் கொள்ள வைப்பாளோ

என்று நிரம்பவும் பயந்துப் போயிருந்த அவனது மனம், சந்தோஷத்தில் துள்ளியது என்று கூடச் சொல்லலாம்!

அதே சந்தோஷத்துடன், தோட்டத்திற்குக் கிளம்பிச் செல்வதற்கு முன்னால், ''மலரு... இன்னைக்கு உச்சி வேளை சாப்பாடு... நீ செய்யுதியா?'' என்றான் கண்ணில் மின்னிய ஆர்வத்துடன்.

''டேய்... என்ன தகிரியம்... என்ன திமிரு... என்ன தெனாவெட்டு... என்னைய இப்படிக் கேட்க ஒனக்குக் கூசல...'' வார்த்தையால் அவனை அறைய வேண்டும் போல் தோன்றிய உணர்வை அடக்கிக் கொண்டு, அவனை நிமிர்ந்துக் கூடப் பாராமல், கொல்லைப்புறம் திரும்பி நடந்தாள்.

''என்னமோ... வூரு மெச்ச, உறவு கூடி நிக்க, அய்யரு ஓமம் வளத்து... எங்கழுத்தில தாலி கட்டிக் கூட்டியாந்த மாதிரி பேசுறானே? இவன... என்ன செஞ்சா தகும்!'' என்று குமுறிய மலரின் நெஞ்சத்திற்கு மாறாய், ராஜதுரையின் நெஞ்சம் குழம்பிப் போனது!

மெல்ல வந்து, கொல்லைப்புறம் செல்லும் கதவின் அருகே நின்று, மாட்டுக் கொட்டகையில், ''பாக்கியத்தின்'' அருகே நின்றிருந்த மலரையே சற்று நேரம் பார்த்திருந்தான்.

பின்னர், தலையை உலுக்கிக் கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பியவன், திரும்ப வீடு வரும்போது, உணவு தயாராய் இருந்தது! ஆனால், அதை மலர் சமைத்திருக்கவில்லை!

அவனது தலையைக் கண்டதும், சமையல் வேலை செய்யும் ராக்காயி, இலையை எடுத்து வர, ''மலரு... எங்க...'' என்றான் அவன் கேள்வியாய்.



''தெரியலைங்களே சின்னய்யா!'' என்றாள் அக்கிழவி, அப்பாவியாய்.

கூடவே, ''இந்தாப் பாக்குதேன்...'' என அவள் நகர,

''வேணாம் ராக்காத்தா! நா போயி... பாத்துக்கிடுதேன்... நீ போயி, சத்தப் படு...'' என்றவன்,

கொல்லைப்புறம் நகர்ந்தவாறே ''அப்பச்சியும் ஆத்தாவும் சாப்பிட்டாகளா?'' என்றான் மீண்டும்.

''இல்லைங்க... சின்னய்யா! ஆத்தா... ரொம்பக் கோவமா இருந்தவக... கூப்பிட அச்சமா இருந்துச்சு... அத்தேன்...'' என்று இழுத்தாள், அவள் பயந்தவளாய்.

''நா பாத்துக்கிடுதேன்... நீ போ...'' என்று அவளை அனுப்பிவிட்டு, மறுபுறம் திரும்பி, பெற்றோர் உபயோகிக்கும் அறை நோக்கி நடந்தவனின் காதில்,

''இந்தப் பாவிமட்ட... என்ன சொக்குப்பொடி போட்டாளோ? இப்படி மயங்கிப் போயிக் கிடக்கானே! பெத்த ஆத்தாவை வீட்டை விட்டுப் போன்னு சொல்லிப்புட்டானே! நா என்ன செய்யவே... பெத்த வயிறு பத்தி எரியுதே...'' என சந்தோசம் புலம்புவது கேட்டது.

''என்னாத்தா... என்ன புலம்புறவ...'' என்றவாறே உள்ளே நுழைந்த மகனைக் கண்டதும், சந்தோசத்தின் வாய் இறுக மூடிக் கொண்டன.

ஆனால், மகனோ ''என்னமோ சொல்லிக்கிட்டு இருந்தியே... என்னன்னு கேட்டேன்...'' என்றான் மீண்டும்.

சில வினாடி அமைதிக்குப் பின்னர், சந்தோசம் தன் வாய்த் திறந்தாள்! பின்னே, அவர் ''சந்தோசம்'' அல்லவோ!

''ஒண்ணுமில்லடாப்பா...'' என ஆரம்பித்து, அவர் ஓர் புலம்பல் வாக்குமூலத்தை அவள் முன்னே வைக்க,

''சரி... பசியாறப் போவோமா?'' என்றான் மகன், சாதாரணமாய். அக்குரல், ''நீங்கள் கேட்டதெல்லாம் இந்தக் காது வழியே உள்ளே சென்று, அடுத்தக் காது வழியே வெளியே வந்துவிட்டது!'' எனச் சொலலாமல் சொல்லியது!

நொந்துப் போனார், சந்தோசம்!

எதிர்த்துப் பேசினால், தானும் எகிறலாம்!

திட்டினால், பதிலுக்குத் திட்டித் தீர்க்கலாம்!

என்ன செய்வது... நடந்தது நடந்துப் போச்சு என்று சலிப்புக் காட்டினால், நடப்பதை எப்படி மாற்றி அமைக்கலாம் என்று அவனுக்குச் சொல்லிக் கொடுக்கலாம்!

எனக்கும் பிடிக்கவில்லை என்று ஒரு வார்த்தை கூறினால், மலரை அடித்துத் துரத்தலாம்!

இவள் என்னடாவென்றால், எதிலுமே சிக்க மாட்டேங்கிறானே!

பொங்கி வந்த எரிச்சலை மறைத்துக் கொண்டு, மகனுடன் உணவறைக்கு வந்தனர் சந்தோசமும் அவரது கணவனும்.

''உக்காருங்க...'' என்றவாறே, கொல்லைப் பக்கமாய் நகர்ந்தவனின் கணிப்பைத் தவறச் செய்யாமல், மலர் அந்த மாட்டுக் கொட்டகையில் தான் இருந்தாள்!

ஆனால், இப்போது அவள் அமர்ந்திருந்த நிலை, ராஜதுரையின் கர்வத்தை ஒரு நிமிடம் ஆட்டம் காண வைத்தது!



மாட்டுக் கொட்டகை என்றும் பாராமல், தரையில் அமர்ந்திருந்தவள், அங்கிருந்த கல் தூணில் சாய்ந்திருக்க, புத்தம் புதிதாய் பிறந்த அக்கன்னுக்குட்டி, அவளது மடியில் படுத்திருந்தது.

கண் மூடிச் சாய்ந்திருந்தாப் போதும், அவள் தூங்கவில்லை என்பது, அவள் அக்கன்னுக்குட்டியைத் தடவிக் கொடுத்த விதத்திலிருந்தே புரிய, அவள் கண்களிலிருந்து வடிந்த அந்த மௌனக் கண்ணீர் ''ஐயோ... தப்பு செய்து விட்டோமோ?'' என்று அவனை முதன் முதலாய் உணர வைத்தது!

இதற்கு முன்பும் அவள் அழுதிருக்கிறாள்! கத்தியிருக்கிறாள்! கதறியிருக்கிறாள்! ஆனால், அப்போது அசையாத நெஞ்சம், சத்தமின்றி வடிந்த அவளது சத்தத்தில் சுக்குநூறாய் சிதறியது!

கனத்துக் கொண்டு வந்த நெஞ்சை நீவியபடியே, அவளருகே சென்றவன், மெல்ல அவள் தோள் தொட்டு, ''மலரு...'' என்றான்.

திடுக்கிட்டு விழித்த மலரைத் தொடர்ந்து, அவளது மடியில் படுத்திருந்த கன்னுக்குட்டியும் துள்ளிக் குதித்து ஓடியது!

ராஜதுரையின் முகத்தை வெகு அருகில் காணவும், கண்ணீர் படிந்தக் கன்னத்தை வேகமாய்த் துடைத்து எடுத்தவள், முகத்தில் ஓர் இறுக்கத்தைக் கொண்டு வந்தாள்!

காலையில் போலவே, இப்போதும் துரையின் முகம் சுருங்கிப் போயிற்று!

சந்தோஷத்தையும் மறைக்கிறாள்! துக்கத்தையும் மறைக்கிறாள்! அதாவது எந்தவித உணர்ச்சியையும்

அவனிடம் காட்டிவிடக் கூடாது என எண்ணுகிறாள் என்பது அவனுக்குப் புரிந்தது! ஆனால், ஏன் என்று தான் அவனுக்குப் புரியவில்லை!

சந்தோஷத்தை மறைப்பதிலாவது ஒரு காரணம் இருக்கிறது! பொய் சொல்லித் திருமணம் புரிந்த அவனுடன், அவள் அன்றே ஒன்றி விட மாட்டாள் தான்! ஆனால், கண்ணீரை ஏன் மறைக்க வேண்டும்? உன்னைத் திருமணம் செய்ததில் நான் சந்தோஷமாய் இல்லை என்பதைக் காட்டி, தன்னை வருத்துவதை விட்டுவிட்டு, ஏன் கண்ணீரைத் துடைக்கிறாள் என்று மண்டைக் குழம்பிப் போனான், ராஜதுரை.

அதில் ஆரம்பித்தக் குழப்பம் - அவன் என்ன சொல்லியும் சமையற்கட்டிற்குள் செல்லாமல் சாதித்த அவளது பிடிவாதத்தில் வலுப்பெற்றது!

சமைப்பதில் மட்டுமல்ல ''நல்லா இருக்குதா... மலரு? ஒனக்குப் பிடுக்குமேன்னுட்டு... வரா மீனு வாங்கியாந்தேன்...'' என அவன் கூறினால், ஒரு துண்டு மீன்... ம்ஹூம்... ஒரு வாய் சாதம் கூட உண்ணாமல் சாதித்தாள்!

''ஏன் மலரு? சாப்பிடு... மலரு'' என்று அவன் கெஞ்சியதெல்லாம், காதிலேயே விழாதது போல் அவள் நடமாடியது, அவனை உலுக்கியது என்றே சொல்ல வேண்டும்!

''என்ன... என்ன... என்ன...'' என்று மண்டைக் காய வைத்த மலரோ, பேச்சு என்ற ஒன்றையே மறந்தவள் போல், நடமாடினாள்!

ராஜதுரை தோட்டத்திற்கோ... மில்லுக்கோ... கடைக்கோ கிளம்பிச் சென்ற பின்னர், அவளை இல்லாத பொல்லாத



வசவுகளால் கொன்று புதைக்கும் சந்தோசத்திற்கும் அவள், மௌனத்தையே ஆயுதமாக்க, ஒரே வாரத்தில், ''அந்த ஊமச்சிக்கிட்டப் பேசுறதும்... இந்த அம்மிக் கல்லுக்கிட்டப் பேசுறதும் ஒண்ணு த்தேன்... நம்ம வாயி த்தேன் அரப்பட்டு... அரப்பட்டு அத்துப் போவும்... அம்மிக்கல்லு... தேயாமத் தேன் கெடக்கும்!'' என்ற முடிவிற்கு, சந்தோசம் வரும்படிச் செய்தாள்.

தன் கோபத்தைச், சந்தோசம் இப்படி வெளியிட்டால், ராஜதுரையோ ''என்ன மலரு... ஏன் மலரு பேச மாட்டேங்கிறே... பேசு மலரு.. பேசு மலரு...'' என்று கெஞ்சிக் கெஞ்சியே வாய் வலித்துப் போனான், ஒரே வாரத்தில்!

தனது மௌனமும், ஒதுக்கமும் அவனை இவ்வளவு தூரம் பாதிக்கும் என அவள் எண்ணவே இல்லை! கண்ணில் ஏக்கத்துடன் அவன் தன் முகம் பார்க்கும் போது, ''ஹஹஹா!'' என்று அவளைப் போலவே உரக்கச் சிரிக்க வேண்டும் போல் வெறி வந்தது, மலருக்கு!

ஆனால், ''ம்ஹூம்! சிரிக்கக் கூடாது! ம்ஹூம்!'' என மண்டையை ஆட்டி, ஆட்டித் தன்னை அடக்கிக் கொண்டவளுக்கு, இதெல்லாம் பத்தவே இல்லை!

''இவன... அணு.. அணுவா சாவடிக்கணும்... இதெல்லாம் பத்தாது... அணு அணுவா... ஒரொரு நிமிஷமும் சாவடிக்கணும்...'' என்று மனம் கங்கணம் கட்டிக் கொண்டு, ஆர்ப்பரித்துக் கொண்டிருக்க, அவளது எண்ணத்தைப் பூர்த்தி செய்யவென, அன்று மாலை ஒரு திரைப்படம் ஒளிபரப்பாகியது!

அதன் தாக்கத்தினால், மலர் செய்யத் துவங்கிய காரியங்கள், ஆனானப்பட்ட ராஜதுரையின் நெஞ்சத்தையே அசைத்துப் பார்த்தது!

## 16

அந்தப் படத்தைப் பார்த்தப் பிறகு, மலருக்குள் ஓர் வில்லி தலை விரித்து ஆட ஆரம்பித்தாள்!

''எப்ப... எப்ப...'' என்று காத்துக் கொண்டிருந்த சந்தர்ப்பம், மடி தேடி வந்தது போல், அடுத்த நாள் விடிந்ததுமே தன் வேலையை ஆரம்பித்தாள் மலர்.

காலை ஐந்து மணிக்கே எழுந்து கொள்ளும் ராஜதுரை, ''நடைப்பயிற்சி'' என்ற பெயரில், அவர்களது காட்டையும் நிலத்தையும் சுற்றிவிட்டு வருவான்.

வந்ததும், கேப்பைக் கூழை இரு சொம்பு குடித்துவிட்டு, நாளிதழில் மூழ்கியே போவான்.

அன்றும் அப்படித்தான், தனது அன்றாட வேலைகளை முடித்துக் கொண்டு வந்தவன், நாளிதழுக்காகக் குனிய, அங்கே அது இல்லை!

சுற்றும் முற்றும் தேடியவன், ''எலே... அலகா.. பேப்பர் எங்கடா?'' என்றான் அதட்டலாய்.

அழைத்த விதமே, அவன் கோபமாய் இருக்கிறான் என்பதைத் துல்லியமாய்க் காட்டியது!

''அய்யா... இங்கன தான்யா இருந்துச்சு...'' என்று பதறியபடியே வந்த வேலைக்காரனின் குரல் தந்தியடித்தது!



''இங்கன இருந்துச்சுன்னா... இப்ப எங்கன போச்சு? கூறுகெட்டவனே... வாங்கியாந்தியா இல்ல... போயிலை வாங்கித் தின்னுட்டியா..'' என்று எரிந்து விழுந்தான், ராஜதுரை.

''ஐயோ.. இல்லைங்க எசமா(ன்)! எங்காத்தா சத்தியமா வாங்கியாந்தேன்! அந்த மொனக்கட காத்தையன்ட்ட த்தேன் வாங்கியாந்தேன்...'' எனப் பேச்சு ஒரு புறமிருக்க, தேடல் ஒரு புறம் நடந்தது!

ஆனால், கிடைக்கத் தான் இல்லை!

''சரி... போ... போயித் தொல... ஒரு பேப்பர் வாங்கிக்கிட்டு.. வெருசா வா... விடிஞ்சதும் விடியாதுமா... ஒரே மண்ட இடியா இடிக்குது!'' என்று வேலைக்காரனைத் துரத்திவிட்டு, கொல்லைப் பக்கம் சென்றவன், அங்கே நாளிதழை இதழ் இதழாய்க் கிழித்து, வெந்நீர் காய வைக்கும் அடிப்பிற்கு விறகாக்கிக் கொண்டிருந்த மனைவியைப் பார்த்ததும், அதிர்ந்து போகாமல் இருந்திருப்பானா என்ன?

''மலரு... என்னடி பண்ணுறவ.. இன்னைக்குப் பேப்பருடி... அது...'' என்று அவன் ஓடி வருவதற்குள், வேக வேகமாய் அனைத்துத் தாள்களையும் தீக்கு இரையாக்கிவிட்டு, கையிலிருந்த தூசியைத் தட்டிக் கொண்டு, சென்றே விட்டாள் பொன்மலர்.

அழகன், அடுத்து வாங்கி வந்த இரண்டு நாளிதழ்களும் தீயின் பிள்ளைகளாகிப் போயின!

''ஏன்... மலரு... இப்படிச் செய்யுதே!'' என்று இயலாமையில் கத்த மட்டுமே முடிந்தது, ராஜதுரையால் ஆனால், முகத்தில் சிறு சலனம்கூட இல்லாமல்,

தன்னைச் சுற்றிக் கொண்டு வேறு திசை நோக்கிச் செல்லும் மனைவியை, அவனால் எதுவும் செய்யவும் முடியவில்லை!

அத்துடன் நிற்கவில்லை, மலரின் லீலைகள்!

சமையல் வேலை செய்யும் ராக்காயியிடம், ''நா... இன்னைக்கு சமைச்சுக்கிடுதேன்... நீங்க வேற வேலை இருந்தா பாருங்க...'' என்று அவரை அனுப்பி வைத்தவள், ராஜதுரையின் விருப்பு உணவுப் பட்டியலை உன்னிப்பாய்க் கேட்டுக் கொண்டாள்!

அந்த வேலைக்காரிக்கு ஏக சந்தோசம் போலும்! ஓட்டமும் நடையுமாய், ராஜதுரையின் அரிசி மில்லுக்கு விரைந்தவள், ''சின்னய்யா... இருக்காவுகளா?'' என வினவினாள், மூச்சிரைக்க!

அரிசி பாலிஷ் போடும் மிஷினில் ஏதோ பிரச்சனை, என்று அதைப் பார்த்துக் கொண்டிருந்த ராஜதுரை, ராக்காயியின் வரவிலேயே பதறிப் போனான் என்றால் அவளது வார்த்தையில் உடம்பு உதறிப் போனான்!

''என்னாச்சு... என்ன ராக்காத்தா? என்ன இங்கன... எதுனா பிராதா?'' என அவன் பதறவும்,

''அதெல்லாம் ஒண்ணுமில்லையா... நம்ம சின்னம்மா இருக்குதில்ல...''

பேசத் துவங்கியவளை, முடிக்க விடாமல் ''மலருக்கு என்ன? எதுவும்...'' எனத் துடித்துப் போனான், ராஜதுரை.

''அய்யா... என் ராசா! உம் பொஞ்சாதிக்கு ஒண்ணுமில்லப்பு!'' என்று சிரித்த அக்கிழவி,

''ஒனக்காக வேண்டி... உச்சி வேள சாப்பாடு ஆக்கிக்கிட்டு இருக்குது! ஒனக்குப் பிடிச்சது...



அம்புட்டும் காகிதத்தில குறிச்சு வைக்காத கொறையா... கேட்டுக்கிடுச்சு! அதைச் சொல்லத்தேன்... ஓடியாந்தேன்..'' என்றாள், அந்த வெள்ளந்தி கிராமத்து மனுஷி!

வானில் பறந்தான் ராஜதுரை! என்றைக்குமில்லாத திருநாளாய், ஒரு மணிக்கே மதிய உணவிற்கென வீடு சென்றவனைக், கருவாட்டுக் குழம்பும் மீன் வறுவலும் வரவேற்று இருக்குமா என்ன? ம்ஹூம்! தண்ணிச் சோறும் (நீராகாரமும்), பச்சை மிளகாயும் பல் இழித்துக் கொண்டு காத்திருந்தன.

சரி, அதைப் பரிமாற மனையாள் தான் இருந்தாளா? ம்ஹூம்! ஒரு சட்டியில் நீராகாரம் இருக்க, அவளே மாட்டுக் கொட்டகையில் தானிருந்தாள்.

சட்டென, பெற்றோரின் நினைவு வர, அவர்களது அறைக்குச் சென்றவனை, ''வந்த ஒரு வாரத்திலேயே... வேகாதக் கஞ்சியும்... காஞ்சிப் போன பச்ச மொளகாவும் வைக்கவ, நமக்குப் பின்னாடிக் காலத்தில... ஒத்த மடக்கு தண்ணி ஊத்த மாட்டாங்கிறேன்...'' என்று புலம்பிக் கொண்டிருந்தார் சந்தோசம்.

ஆக, பெற்றோரையும் காய விட்டிருக்கிறாள்!

கோபம் தலைக்கேற, மாட்டுக் கொட்டகைக்குச் சென்றவன், அங்கே கண்டக் காட்சியில் கோபமெல்லாம் வாடியத் திரும்பி வந்தான்!

கன்னுக் குட்டியை மடியில் சாய்த்து, அதன் மீதே தலை வைத்திருந்த மலரின் விழிகள், உறக்கத்தைத் தழுவியிருந்தன!

அவளது உறக்கத்தைக் கெடுக்க மனமில்லாதவனாய், வந்த சுவடே இல்லாமல் திரும்பி நடந்த ராஜதுரையின்

காலடிச் சத்தம் மறைந்ததும், மலரின் மலர் விழிகள் தன் சிறகை விரித்தன!

உதட்டில் ஓர் ஏளன வளைவு வந்து போக, நெஞ்சம் சந்தோஷித்தது!

இருபது நிமிடம் கழித்து, உள்ளே வந்துப் பார்த்தவள், காலியான நீராகாரப் பாத்திரத்தைப் பார்த்து, ''ஹஹ்ஹா!'' என்று வாய் விட்டேச் சிரித்தாள்!

இது போல், சின்னச் சின்ன விஷயங்களில் எல்லாம் அவனை இம்சித்தாள்!

அவளது அடுத்த ஆயுதம், அவனது கணக்கு வழக்குகள்!

மில்லிலிருந்து, கடையிலிருந்து என்று அவன் எடுத்து வரும் தினசரிக் கணக்குப் புத்தகங்களில், அங்கொன்றும் இங்கொன்றுமாய் சில பல சைபர்களைப் போட்டு, அவனை மண்டைக் காய வைத்தாள்!

கணக்கு நோட்டுக்களைக் கொண்டு வருபவன், அதைத் தனது மேசை மீது வைத்துவிட்டு, குளிக்கச் செல்லும் இடைவேளையில், மலரின் திருவிளையாடல்கள் செவ்வனே நடைபெற்றன.

இது தெரியாத ராஜதுரையோ ''யோவ்... கணக்கு! என்னய்யா... ஆயிர ரூபா வித்தியாசம் வருது...'' என்று புலம்ப ஆரம்பித்து,

''இதென்ன லட்சத்தில் வந்து நிக்குது!'' என்பதில் விக்கித்து நின்றான்! நிஜமாகவே, ஓரோர் நாள் கணக்குப் பார்ப்பதும் அவனுக்கு மலைப்பாய் இருந்தது!

அவன் முகத்தில் நீங்காதிருந்த எரிச்சல் கோடுகள், மலரின் முகத்தில் நிரந்தரச் சந்தோஷக் கோடுகளை உருவாக்கின!



''ஹ்ம்ம்.. அந்தப் படத்தில் செய்றது கரெக்ட்டுத்தேன்... பெருசா அடிக்கிறதை விட... சிறுகச் சிறுக... அவனைச் சாவடிக்கணும்... ஐயோ... ஏன்டா வாழ்றோம்னு நொந்துப் போவணும்...'' என்று சந்தோத்தில் கூத்தாடியது மனம்!

காலம் இப்படியே சென்றபோதும், மலர் தன் மௌன ஆயுதத்தைக் கொஞ்சமும் குறைத்துக் கொள்ளவில்லை! அதே சமயம், இரவில் தன்னை அவன் நெருங்கியபோது, ''தொடாதே'' என அவனைத் துரத்தவும் இல்லை!

தொடவிட்டு, தொடவிட்டே, அவனைத் தொட முடியாதபடிச் செய்தாள்!

தாம்பத்தியம் என்பது இருவர் இழுக்கும் வண்டி!

ஒருவர் காளைபோல் துள்ளி ஓட, மற்றொருவர் சினைப்பசுவென அசைந்து ஆடினால், வண்டி தடுமாறிப் போகும் அல்லவா!

அதே போல்தான், ராஜதுரையின் ஆசையும் வேகமும் மோகமும் தாம்பத்தியத்தை நூறு கிலோ மீட்டர் வேகத்தில் இட்டுச் செல்ல,

மலரின் மௌனமும், உணர்வுகளற்ற ஜடத் தேகமும், உணர்ச்சி செத்த முகமும் அத்தாம்பத்திய உறவைப் பின்னுக்கு இழுத்தன!

உணர்வுகளற்ற உடம்பாய் அருகே படுத்திருப்பவளை, சுகிக்க வேண்டுமெனில், சுகிப்பவன் காமக் கொடூரனாய் இருக்க வேண்டும்! இல்லையேல், அவனும் ஜடமாய் இருக்க வேண்டும்!

இவையிரண்டுமல்லாத ராஜதுரையால், மலரின் இந்தச் செய்கையைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை!

வெறுப்பை அப்பட்டமாய் முகத்தில் காட்டிவிட்டாலும் பரவாயில்லை! அதுவுமில்லாமல், செத்தப் பிணம் போல் பக்கத்தில் படுத்திருந்தவளை, அவனால் தொட முடியவில்லை!

''நீ ஆசப்பட்டது... இதுக்குத் தானே? எடுத்துக்கடா...'' என அவள் சொல்லாமல் சொல்வது போல், நெஞ்சைக் குத்தியது!

விழித்தது தொடங்கி, உறங்கும் வரையிலும் ஓர் நிமிடம் கூட, நிம்மதியாய் இருக்க முடியாதது போலிருந்தது அவனுக்கு!

ஏனென்றால், நெஞ்சம் முழுதையும் மலர் ஆக்கிரமித்திருக்க, அந்த மலர் தன் இதழ் பிரிக்கா விரதத்தால், அவனது நிம்மதியை ஆக்கிரமித்துக், கொடுங்கோல் ஆட்சி செய்தாள்!

கத்தியின்றி, ரத்தமின்றி அவனது மனதைச் சுக்கு சுக்காய்க் கிழித்துக் கொண்டிருந்த மலர், தனது போரின் சங்கை ஓங்கி முழங்கி ஒரு வாரமே ஆகியிருந்த சமயம்!

தென்மாவட்ட விவசாயிகள் அனைவரும் சேர்ந்து, ''தடையில்லா மின்சாரம் கோரி, ஒரு பெரும் பேரணியை மதுரையில் நடத்துவதாய் தீர்மானிக்கப்பட்டது.

அந்தப் பேரணியின் முக்கியப் பொறுப்பில் ராஜதுரை அமர்த்தப்பட, அவனது ஊர் விவசாயிகள் மட்டுமல்லாமல் சுற்றியிருக்கும் இருபது... இருபத்தைந்து கிராமத்து விவசாயிகளையும் ஒருங்கிணைக்கும் பணி, அவனிடம் வந்து சேர்ந்தது.

அந்தப் பணியின் ஒரு பகுதியாய், ஓரோர் கிராமத்திற்குச் சென்று, அங்கிருக்கும் பெரிய புள்ளிகளிடம் பேச்சு வார்த்தை நடத்த வேண்டியிருந்தது.



''பேச்சு'' - ராஜதுரையின் ரத்தத்திலேயே ஊறிய ஒன்றென்றாலும், அவனவன் கேட்கும் கேள்வியும், அதற்குப் பதிலுமாய் முற்றிலும் நொந்துப் போய் வீடு திரும்பியவனுக்கு, வெறும் பழைய சோறும், ஊறுகாயும் தொண்டையை அறுத்தன.

அன்றும் அப்படித்தான்! பத்து கிலோ மீட்டர் தள்ளி இருக்கும், நார்த்தமேடு கிராமத்துக்குச் சென்றிருந்தான்!

அந்த ஊர்ப் பெரிய மனுஷன், ஆளுங்கட்சி எம்.எல்.ஏ. போலும்! ''எங்க தலைமையை... எதித்து... நீ போராட்டம் நடத்துவே... நா வந்து கொடி புடிக்கண்ணுமா? மவனே, ராட்டிப்புடுவேன்.. ராட்டி! என்னடே லந்தே?'' என்று வேட்டியைத் தொடை வரை ஏற்றிக் கட்டிக் கொண்டு, அவன் சலம்பிய சலம்பலில் ராஜதுரை கொதித்தே போனான்.

ஆனால், இந்த இடத்தில் கோபம் சரியான ஆயுதமில்லை என மூளை எச்சரிக்க, ''இல்லண்ணே... இது ஆளுங்கட்சி... எதிர்க்கட்சின்னு எதுவுமே இல்லண்ணே... வெவசாயிங்க அம்புட்டுப் பேருமா சேர்ந்து... நம்ம தேவைக்காகப் போராடப் போறோம்... இதில அரசியல் எங்கண்ணே வந்துச்சு?'' என்றான் நயமாய்.

ராஜதுரை என்ன தான் கனிவாய்... பணிவாய்.. பதவிசமாய் பேசியப்போதும், ''எனக்கு.. எதுவும் சரியாப் படல! நீ போயிட்டு.. நாளைக்கு வெள்ளென வாப்பா! பேசிக்கிடலாம்! எனக்கு... ராக்கடையில சோலி இருக்குது!'' என்று துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு, நாற்காலியை விட்டு எழுந்துவிட்டார் அந்தப் பெரிய மனிதர்.

அதன் பின், அங்கே அமர்ந்திருக்க ராஜதுரை என்ன வெட்கம் கெட்டவனா?

உள்ளம் முழுதும் கோபத்தில் சிவந்திருக்க, கண்மண் தெரியாத ஆத்திரத்துடன் வீடு வந்து சேர்ந்தவனை, நீத்துப் போனக் கஞ்சியும் உரித்த வெங்காயமும் வரவேற்றால், அவனும் தான் என்ன செய்வான்?

உக்கிரம் தலைக்கேறி விட்டது அவனுக்கு!

எப்போதும் போல், கால்கள் மாட்டுக் கொட்டகைக்கு அவனை இட்டுச் செல்ல, அங்கே அமர்ந்திருந்த மலரை, முரட்டுத் தனமாய்ப் பிடித்து இழுத்தவன்,

இரு கைகளாலும், அவளது தோளை அழுத்தி, ''ஏன்டி... ஏன்டி... என்னைய இப்படிக் கொல்றே? இந்த வூரிலேயே பெரிய தனக்காரன்டி.. நானு! ஆனா... ராச்சோறு திங்குற பிச்சக்காரன் கூட.. என்னைய விட நல்ல சோறு தின்பா(ன்)... ஏன்டி.. ஏன்டி...'' என்றான் கோபமும் ஆத்திரமுமாய்.

ம்ஹூம்! அவனது அவ்வளவு ஆக்ரோஷத்திற்கும் மலரிடமிருந்து எந்தவிதமான பிரதிப்பலிப்பும் இருக்க வில்லை!

ஏன், அவள் கண்ணைக் கூட அசைத்துப் பார்க்க வில்லை!

எப்போதும் போல், ஓர் வெற்றுப் பார்வை! அதுவும், அவன் கண்ணை நேராய்ப் பார்க்காத பார்வை!

லேசாய்த் திமிறி, அவனிடமிருந்து விடைபெற்றவள், அங்கிருந்து நகர்ந்தாள்!

சற்று நேரம், ராஜதுரை எதுவுமே பேசவில்லை!

வினாடிகளில் உயிர் பெற்றவன், தன்னைத் தாண்டிக் கொண்டு, வீட்டுப் பக்கமாய் செல்லும் மலரின் கைப் பிடித்து நிறுத்தினான்.



''மலரு... என்னைய கொல்லாத மலரு! ஓங்கி... அறைஞ்சு புடு! என்னைய பேசாம சாகடிக்காத!'' என்றான் குரலில் வலியுடன்.

மலருக்குப் பத்திக் கொண்டு வந்தது! அவள் எவ் வளவு கெஞ்சியிருப்பாள்! கதறியிருப்பாள்! கேட்டானா இவன்? பாதகன்! படு பாவி! என் குடும்பம் தலை எடுக்கக் கூடாதுன்னு என்னவெல்லாம் செய்தான்? அனுபவிக்கட்டும்! என உள்ளம் கொதிக்க, அவனது பிடி யிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, அங்கிருந்து நகர்ந்தாள்.

''நா தப்பு செஞ்சேன்.. என்னைய கொல்ற சரி... எங் கப்பச்சியும்.. ஆத்தாவும் என்னடி பாவம் பண்ணினாக... ஏன்டி அவுகளையும் வதைக்கிறே?'' என்று எகிறிய அவனது குரலுக்கு, மலரின் ஏளன உதடுப் பிதுக்கலே பதிலாகிப் போனது!

''உன்னையப் பெத்தாய்ங்க இல்ல.. அதுக்குத் த்தேன் தண்டன...'' என அவள் சொல்லாமல் சொல்ல, ராஜதுரை செய்வதறியாது தவித்துப் போனான்.

மலர் மனதை எப்படி மாற்றுவது என்று அதே சிந்தனையாய் இருந்தவன், தன் வேலைகளிலும் கவனம் இழக்கத் தொடங்கினான்.

தேங்காய் லோடுக்கு விலை கேட்டவரின் வைக் கோல் போருக்கான விலையைச் சொல்லும் அளவுக்கு, மலர் அவனைப் பாதித்தாள்!

இதே குளறுபடியை அவன் மீண்டும் மீண்டும் செய் யவும், ''சின்னய்யா... மனசு இங்க இல்ல போலீங்களே! நீங்க வூட்டுக்குப் போங்க... நா பாத்துக்கிடுதேன்...''

என்று கணக்குப் பிள்ளை, அவனை வீட்டிற்கு அனுப்பும் படி ஆகிற்று.

''ஐயோ.. என்னடே ஆச்சு ஒனக்கு?'' என்ற கேள்வி யுடன், பிற்பகல் மூன்று மணியளவில், வீடு வந்து சேர்ந்தவன், மலரின் பேச்சுக் குரல் கேட்டு, ஒரு நிமிடம் திகைத்துப் போனான்!

எத்தனை நாட்கள்! எத்தனை எத்தனை நிமிடங்கள் ஆயிற்று, அவனது மலர் பேசி!

அவளது துடுக்குத்தனமும், சட்டென வெளிப்படும் கோபமும், கண்ணில் தெறிக்கும் மின்னலும், எதிராளி யின் பலம் தெரியாமல் வீசப்படும் வார்த்தை அம்பு களும்... என அவன் மலரின் பேச்சுக்கு ரசிகன்! இல் லாத... பொல்லாத காரியமெல்லாம் செய்து, அவளைத் திருமணம் செய்ததே, இந்தப் பேச்சின் பாதிப்பால் தான்!

அப்படியிருக்கையில், மலரின் மௌனம் அவனை ஆட்டி வைத்திருந்தது!

அது உடைப்பட்ட இந்தத் தருணம், ராஜதுரையை நிம்மதியெனும் கடலுக்குள் மூழ்கடிக்க, மலரின் குரல் கேட்டப் பின்புறமாய் சென்றவன், அங்கே அவள் கன்னுக்குட்டியுடன் உறவாடுவதைக் கண்டதும், ஒரு நிமிடம் நிம்மதியைத் தொலைத்தான் என்றே சொல்ல வேண்டும்! ஆக, இந்த ஐந்தறிவு ஜீவன் செய்தப் புண்ணியம் கூடத் தான் செய்யவில்லை என்பது அவனை இம்சிக்கவே செய்தது!

ஆனாலும், அவளது உரையாடலைக் கலைக்க விரும்பாமல், படி அருகிலேயே நின்று, அவர்களது சம்பாஷணையை ரசிக்கத் தொடங்கினான்.



''ஏய்டி.. குட்டி! என்ன செல்லம் கொஞ்சுறவ.. இந்தா இந்த வைக்கோலைத் தின்னு.. என் கண்ணாம் மணி யில்ல...''

''மூக்கைப் பாரு.. மூக்கை! செவத்த உடம்பில... கருப்பா பச்சக் குத்தினா மாதிரியா...''

''அடிக்கழுத... உங்காத்தா காம்பு மாதிரி இருக்குதோ எங்கையி... அதப் போயி... நக்குறவ...''

''ஹம்ம்... எடுடி... ஹம்ம் எடு.. எடு... எஞ்செல்ல மில்ல...''

''ஐயோ.. என் ராசாத்தி.. எம்புட்டு அலகா இருக்கவ! ஹம்ம்... ஆனா.. பொட்டையா போயிட்டியே...''

''ஹம்ம்.. பம்பு வச்சுப் பாலெடுக்கவும்... காளையோட கலப்புக்கு விடவும் த்தேன்... உன்னைய அண்டு வாய்ங்க...''

''பொட்டப் புள்ளன்னா... இவிங்களுக்கு எல்லாம் இளக்கம் த்தேன்... ஏப்ப சாப்பாயா இருந்தா... என்னைய் மாதிரி.. இந்தப் பாதகன்ட்ட கெடந்து இசிப்பட வேண் டியது த்தேன்...''

''ராணி மாதிரி இருந்தேன்டி... கண்ணு! மெத்தப் படிக்கணும்... ஒரு மெச்ச வேல பாக்கணும்.. கை நெறைய சம்பாதிக்கணும்... எம்புட்டு ஆச தெரியுமா? ஒரே ராவுல... என்னைய உருக்கொலைச்சுப் புட்டான்... உங்க மொதலாளி!'' என்றவளால் அதற்கு மேல் பேச முடியவில்லை! விம்மலும், விக்கலுமாய் அவள் வெடித்தழ,

ராஜதுரையின் மனதில் ஓர் தீர்மானம் குடியேறியது! ஆனால், என்ன குடியேறி என்ன புண்ணியம்? அடுத்த நாளே, அது நீர்த்தல்லவோ போனது!?

# 17

அடுத்த நாள் அதிகாலை நான்கு மணி!

மலருக்கு அப்போதே விழிப்புத் தட்டிவிட்டது!

ஆனால், எழுந்து தான் என்ன செய்வது? வாழ்வு உப்புச் சப்பில்லாதக் கஞ்சி போல், சலிப்புத் தட்டியது!

பிறந்த வீடென்றால், எழுந்த நேரமில்லாமல வேலைகள் தலைக்கு மேல் அணிவகுத்துக் காத்திருக்கும்! அதிலும் முறை வாசலிடும் வேலை அவளுக்கு மிகவும் பிடித்த ஒன்று! தூசித் தும்பில்லாமல் கூட்டி, சாணம் தெளித்து, அரிசி மாவில் கோலமிட்டு, நடுவே பரங்கிப்பூ வைத்து நிமிர்பவளுக்கு, தான் போட்டக் கோலத்தைத் தானே அழகுப் பார்ப்பதில், அப்படியொரு ஆனந்தம்! கண்ணை எடுக்கவே மனது வராது அவளுக்கு!

ஆனால், இப்போது!? வெளியே செல்லவே பிடிக்கவில்லை மலருக்கு! பிடிக்கவில்லை என்பதை விடவும், பயமாக இருந்தது என்பது தான் சரியான வார்த்தை!

இந்த ஊரைப் பொறுத்தவரை அவள் ஓர் தரம் கெட்டவள்!! நடத்தைத் தவறியவள்!! யாருக்கும் தெரியாமல் தாலிக் கட்டிக் கொண்டவள்!! அப்படிப் பட்டவள், வெளியே நடமாடினால் சும்மா இருப்பார்களா என்ன? ஏற்கனவே குத்துப்பட்ட மனதை மேலும் குதறி விட மாட்டார்களா!?



ஊர் வாய்க்குப் பயந்து, வீட்டுக்குள்ளேயே அடைந்துக் கிடந்தவளுக்கு, மூச்சு முட்டுவது போலிருந்தது!

"இந்த செயிலுக்குள்ளாரவே கெடந்து... மண்ணோட மண்ணா மக்கிப் போவப் போறோமோ?" என்று மனதைக் கவ்விய பயத்தை ஒதுக்க முடியாமல், மெல்ல எழுந்து, அறை ஜன்னலைத் திறந்தாள்!

குளிர்க்காற்று முகத்தில் வந்து மோத, உடம்பு ஒரு முறை நடுங்கி அடங்கியது!

கைகளை மார்பிற்குக் குறுக்கே கட்டிக் கொண்டு, உடம்பைக் குறுக்கியவளின் கண்கள், தன் பிறந்த வீட்டில் தொங்கிய பெரிய பூட்டைக் கண்டதும், ஒரு முறை இடுங்கி, மீண்டும் கூர்மைப் பெற்றன.

"இந்தச் சனியன... நம்ம தலயில கட்டிப்புட்டு... அந்த வாசுப்பயலும்.. அவுக அப்பனும் வூரை விட்டே ஓடிப் போயிட்டானுங்க.. ஈனப் பயலுக... நாதாரிங்க..." - சந்தோசத்தின் வசவு மூலமாய், வாசுவும் - வேலுகருப்பனும் ஊரைக் காலி செய்துக் கொண்டு போய்விட்டனர் என்ற விவரம் ஏற்கனவே தெரிந்திருந்த போதும், பூட்டிய வீடு அவர்களது இரும்புப் பூட்டுப் போட்ட இதயமாய்த் தெரிந்தது மலருக்கு!

"எப்படி? எப்படி? ஏன் என்னைய நம்பாம போயிட்டாக..." - மனம், தன் சோகத்தையே திரும்பத் திரும்பக் கிளறியதில், கண்ணீர் ஊற்றாய் கிளம்பியது!

கண்ணீரின் ஈரம் கன்னத்தில் படவும் தான், தான் அழுதிருக்கிறோம் என்ற விவரம் புரிய, வேகமாய்க் கன்னங்களைத் துடைத்துவிட்டுக் கொண்டாள் மலர்.

"நீ ஏன்டி அழுவுற? அவைங்க பண்ணத் தப்புக்கு.. நீ யேன்டி... அழுவணும்! கண்ணைத் துடைடி!" என்று

தனக்குத் தானே சொல்லிக் கொண்டவளின் கண்ணீரை, அவளது கரத்துடன் சேர்த்து, மற்றொரு கரமும் துடைத்தது!

வேறு யாராய் இருக்க முடியும்? ராஜதுரையே தான்!

மலரின் கரங்கள், பட்டென அவனது கையைத் தட்டி விட, ''மலரு.. அழுவாதடி!'' என்றபோது, அவனது குரல் கரகரத்துப் போயிருந்தது.

அடுத்த வினாடி, மலர் அங்கிருந்து நகர முற்பட, அவளை நகர விடாமல் பிடித்து வைத்தவன், ''மலரு... நா செஞ்சது தப்பு த்தேன்.. எனக்கு... உன்னைய யாருக் கும் விட்டுத் தர முடியலடி... நேரா வந்து பொண்ணு கேட்டா.. சாதிசனம்ன்னு எதையும் நடக்க விட மாட்டாய்ங்க.. அத்தேன்... என்னத் தவிர வேறொருத்தன் கையி ஒம்மேல படாதபடி... செஞ்சேன்...'' என்றான் தன் செயலுக்கான விளக்கமாய்.

நிமிர்ந்துப் பார்த்த மலரின் முகத்தில், ''அம்புட்டுத் தானா... இல்ல இன்னமும் இருக்கா?'' என்ற கேள்வியும், கூடவே தணல் போல் தகித்தக் கண்களும் இடம் பெற்றிருந்தன!

அவள் வாய் திறந்துக் கேட்காதவற்றை, கண்களில் ஜாலம் கேட்டு விட, ''நீ என்ன கேட்க வருதேன்னு புரியுது!'' என்றவன்,

ஒரு நிமிடம் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு, ''நா சொல்லப் போறது.. அம்புட்டும் எம் மனசில இருந்து வரது, மலரு! வஞ்சங்கலந்திருந்தாலும்.. அம்புட்டும் உண்மம! என்னைக்கு இல்லாட்டியும் ஒரு நாளு... ஒனக்கு இதெல்லாம் தெரிஞ்சு தானே ஆவணும்.. அது இன் னைக்கா இருந்திட்டுப் போவுது!'' என்றவன்,



''இத நா ஏஞ்சொல்லுறேன் தெரியுமா? நீ எங்கூடப் பேசணும்ன்னு இல்ல.. இதக் கேட்டப் பொறவு... நீ இந்த வீட்டில இருப்பியான்னே எனக்குத் தெரியல! அப்படி யிருந்தும்... ஏந்தெரியுமா சொல்லுதேன்? எம் மனசில இருக்கிறத... நீ தெரிஞ்சக்கணும்... அம்புட்டுத் த்தேன்...'' என்றான் மனதைத் திறந்து.

மலரும், வருவது வரட்டும் என்பது போல் கையைக் கட்டிக் கொண்டு நிற்க,

ராஜதுரை பேச ஆரம்பித்தான்.

''எனக்கு சின்னதில இருந்தே... உம் மேல ஒரு கண்ணு, மலரு!''

''பறிச்சு வச்ச... ரோசாப்பூவாட்டம்... அப்படியே அள்ளி மொகந்துப் பாக்கலாம் போல இருப்பே...''

''வயசு கூடக் கூட... உம் மேல இருக்க ஆச கூடுச்சே ஒழிய... கொறையவே இல்ல...''

''ஆனா... சாதிசனம்.. பங்காளி... வாசு... எல்லாமா சேர்ந்து என்னைய கட்டிப் போட்டுப்புடுச்சு...''

''நீ கவனிச்சிப் பாத்தியான்னுட்டுத் தெரியாது! ஆனா... நா நம்மூருப் பொண்ணுங்க யாருக்கிட்டயும் நின்னு பேசினது கூட இல்ல, மலரு! உங்கிட்ட மட்டுந் தேன்... சரிக்குச் சரி... ரூட்டை விட்டுட்டே இருப்பேன்... வாசு கூடச் சொல்லுவா(ன்)... ஏன்டா அவளையே வம்பு செய்றேன்னுட்டு...''

''என்ன மாதிரியே நீயும் இருந்தே, மலரு!''

''என்ன மலரு... அப்படிப் பார்க்குதே? எங்கிட்ட வம்பு வளக்குத மாதிரி... நீ யார்க்கிட்டயும் வாயடிச்சது இல்ல...''

''எல்லா(ம்) இருந்துச்சு! ஆனா... உன்னைய எப்படிக் கட்டிக்கிடதுன்னு எனக்குத் தெரியல...''

''எங்க அப்பனும் ஆத்தாளுமே இதுக்கு ஒத்துக்க மாட்டாகன்னு தெரிஞ்சுக்க...''

''பொறவு... உங்கப்புச்சி... அந்தாளு ஒரு சாதி வெறிப் பிடிச்ச மிருகம்...''

இந்த வரியைக் கேட்டதும், மலரின் கண்கள் கோபத்தின் அளவைக் கூட்டிக் காட்டின.

''என்ன மொறைக்கிறவ? இல்லைன்னு ச்சொல்லுப் பாப்பம்?'' என்று எதிர்க் கேள்விக் கேட்டவனின் குரல், செய்தத் தப்பிற்கு மன்னிப்புக் கேட்பவன் போல் இருக்கவில்லை. மாறாய், ''உண்மையைச் சொன்னா கோபம் வருதோ!?'' என்ற ரீதியில் கொதித்துப் போயிருந்தது.

பெற்ற தந்தையின் குணமறிந்த மகள் தலை குனிந்தாள்.

மலரின் தாழ்ந்தத் தலையை வருடத் துடித்தக் கரங்களை அடக்கிக் கொண்டு, அவன் பேசினான்.

''எப்பை... எப்பை..ன்னு காத்துட்டே இருந்தப்ப... உங்கப்புச்சி கிரகப்பிரவேசப் பத்திரிக்கயோட வந்தாரு! வந்தவரு... செவனேன்னு இருந்திருக்கலாம்... வேணும்ட்டே என்னைய உசுப்பேத்திவிட்டாரு...''

''வாசு கட்டின வீட்டு மேல.. எனக்கு முன்னமே ஒரு கண்ணு இருக்க த்தேன் செஞ்சது... இல்லைன்னு சொல்லலை...''

''என்னைய விட... அவைன்... பசையுள்ளவனா மாறுறது எனக்கு நருசா பிடிக்கல த்தேன்! கண்ணு மண்ணு தெரியாம கோபம் தலைக்கேறி நின்னுச்சு!''



''அதோட... உங்கப்புச்சி பேசினப் பேசும் சேர்ந்து... மண்டக் கிறுக்குக் கொண்டு போச்சு...''

''ஒயாம யோசிச்சதில... ஒன்னைய கட்டிக்கிட்டா... யென் ஆசயும் பூர்த்தியாவும்! மச்சினன்ங்கிற முறையில வாசு.. எப்பவும் எனக்குக் கீழ கெடப்பான்! உங்கப்புச்சி யோட துடுக்கையும் அடக்கினாப்ல ஆச்சுன்னு நினைச்சுத் த்தேன்! ஒரொரு காயா நகர்த்தினேன்...''

''இது வரைக்கும் ஒரு திட்டத்தோட த்தேன் மலரு செஞ்சேன்... நா ஒத்துக்கிடுதேன்...''

''ஆனா... உந்தலையில ரத்தத்தப் பாத்ததும்... எந்திட்டமெல்லாம் பறந்தே போச்சுது! நெசம் மலரு! கட்டுனா.. உன்னையத் த்தேன் கட்டணும்ங்கிற அளவுக்கு வெறியாகிப் போச்சு...''

''அதுவும்... அன்னைக்கு.. நீ என்னையப் பாத்தப் பார்வை... உன்னைய விடவே கூடாதுன்னுட்டு த்தேன்...''

அவன் பேசிக் கொண்டே போக, மலரின் பார்வையில் இருந்த உக்கிரம் கூடிக் கொண்டே போனது!

அவளது பார்வையின் உஷ்ணம் தாங்க முடியாமல், ராஜதுரையின் குரல் மெல்லத் தேய்ந்தது!

ஆனால், தலையை நிமிர்த்தித் தனது கடைசி வாக்கியத்தைத் தடுமாற்றில்லாமல் முடித்தான் ராஜதுரை.

''நீ யெம் பொஞ்சாதியா வாழ்ந்தேன்னுட்டு நா சொல்ல நினைக்கவே இல்ல! வாசு... வெவாகரத்து... அது இதுன்னு இழுக்கவும் த்தேன்... வேற வழி இல்லாம பொய் சொன்னேன்! நா சொன்னேன் சரி... ஆனா... உங்கப்பனும் அண்ணனும் நம்பி இருக்க வேண்டியது

தானே? எம் மேல மட்டும் கோபப்படுறதில.. நியாயமே இல்ல மலரு! உங்கப்புச்சி... உம்பக்கம் நின்னிருந்தா... யாராலையும் ஒன்னைய இங்க கொண்டாறவே முடிஞ் சிருக்காது!'' என அவன் கூறியக் கடைசி வாக்கியத் திலிருந்த உண்மை, எரியும் கொள்ளியாய் அவளைச் சுட்டது!

இதனால் எல்லாம் மலரின் கோபம் மறைந்துப் போகுமா என்ன? ம்ஹூம், துளியும் அசையவில்லை அவளது மனம்!

கோபம் இம்மியும் குறையாமல், முன்பு நின்ற இடத்திலேயே நின்றிருந்தவள், பார்வையை மட்டும் வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

''ஹ்ம்ம்...'' என்று நெடிதாய் ஓர் பெருமூச்சை வெளியிட்ட ராஜதுரை, தன் முயற்சியில் தளராதவனாய்,

''மலரு... என்னைய கட்டிக்கிட்டதால... உம்படிப்பு வீணாப் போச்சேன்னுட்டு வெசனப்படாத... உம் படிப்பு நிக்காம நா பாத்துக்கிடுதேன்! சத்தியம் மலரு!! இன் னைக்கு... காலேசில திரும்பச் சேர ஏற்பாடு பண்ணு தேன்... நீ பத்து மணி வாக்குல தயாரா இரு'' என்றான் அவன் உறுதியானக் குரலில்.

இவ்வளவு நேரம், ஓர் மரம் போல் நின்று அவனது பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தவளின் கண்களில், இப்போது ஓர் மின்னல்! ஓர் ஆசை! ஓர் நிம்மதி! ஓர் சந்தோசம்!

ராஜதுரைக்கு அவளைப் பார்க்கவே சந்தோஷமாய் இருந்தது!

மெல்ல அவள் கன்னம் தட்டியவன், ''இப்பக் கூட... வாயைத் தொறந்து ஒரு வார்த்த பேச மாட்டே?''



என்றவனின் முகத்தில் சிரிப்பிருந்த போதும், கண்களில் வலி இருந்தது!

மலரின் முகம் இறுகிவிடவே, ''நா சண்டியன்டி... ஆனா... நீ இருக்கியே... ஒத்தப் பார்வையில என்னைய சுக்கு சுக்கா நொறுக்கிப் புடுத!'' என்றுவிட்டுக் குளிய லறைக்குள் நுழைந்துக் கொண்டான்.

ஓர் இன்பப் படபடப்பு மலரினுள் புகுந்துக் கொண் டதில், அவள் முகம் மலர்ந்தே இருந்தது!

''படிக்க வைக்கிறேன்!'' என அவன் சொன்ன ஒரே வார்த்தை, அவளது கோபத்தைக் கூடப் பின்னே தள்ளிவிட்டது என்றால், அவள் படிப்பின் மீது எத்தனை காதல் கொண்டிருப்பாள்?

அந்தப் பாவையின் மனம், கல்லூரியையும்... அங்கிருக் கும் கருவிகளையும்.. புத்தகங்களையும்.. பரிசோதனை களையும் இன்பமாய் சுற்றி வரத் தொடங்கியது!

''ஐயோ... புஸ்தகம் எல்லாம் அந்த வீட்டில கெடக் குதே!?''

''சரி.. போவுது! கனகத்துக்கிட்ட வாங்கிக்கிடலாம்! ம்ம்ம்... ஆனா.. எழுதி வச்சிருந்த குறிப்பெல்லாம் போச்சு... ப்ச்... பரவாயில்ல... பாத்துக்கிடலாம்...'' - கல்லூரிக்குப் போவதிலேயே மூளை, மனம், உடம்பு என்று அனைத்தும் லயித்திருக்க, ஓர் இனியப் படபடப் புடன் தயாரானாள் பொன்மலர்.

அவளது முகத்தில் தெரிந்த சந்தோஷமும், கால்களில் தெரிந்த வேகமும், ஓரோர் அசைவிலும் தென்பட்ட உற்சாகமும் ராஜதுரையின் மனதில் ஓர் நம்பிக்கையை விதைத்தது!

அந்த நம்பிக்கை அளித்த உற்சாகத்துடன், கிளம்பிக் கீழே சென்றவன், ''என்னாத்தா... எப்படி இருக்கவ..'' என்ற கட்டைக் குரலில், ஒரு நிமிடம் தயங்கி நின்றான்.

அவனது ஒன்று விட்ட அத்தை மகள் கோமதி அவனது தாயாருடன் உரையாடிக் கொண்டிருந்தாள்!

''வாங்க அத்தாச்சி... எப்படி இருக்கீக?'' என வரவேற்றவனிடம்,

''என்னப்பா ராசு! நம்ம சனத்தில யாரும் செய்யாத கொடுமையெல்லாம்.. செஞ்சிருக்கே போல! போயும்... போயும் நமக்கு எடுப்புத் தூக்குறவைங்க மக த்தேன் கிடைச்சாளா?'' என்றாள் அவள், குதர்க்கமாய்.

அவரது கேள்வியை மதித்துப் பதில் சொல்லி விட்டால், ராஜதுரை என்னாவது?

அவரிடமிருந்து பார்வையை விலக்கியவன், அங்கு நின்றிருந்த வேலையாளின் பக்கம் திரும்பி, ''எலே... அலகா! பேப்பரஅ எங்கடே.... வெட்டிப் பயலே.. யாருடா வாயத் தொறப்பா... வார்த்தைய அள்ளி பைக்குள்ளப் போட்டுக்கிடுவோம் அலைவ போல...'' என்றான் அதிகாரமாய்.

வந்திருந்தவளின் முகம் செத்துவிட்டது!

''இப்படித் த்தேன்... கோமதி.. எங்கள மதிக்கவே மாட்டேங்குதான்.. அந்த எடுபட்ட மட்ட என்ன வசியம் பண்ணாளோ... எங்களயவே பண்ண வீட்டுக்குப் போவச் சொல்றான்...'' - சந்தோசத்தின் புலம்பல் எல்லாம் ராஜதுரையின் மண்டைக்குள் ஏறவே இல்லை.

வேகமாய் தினசரியைப் புரட்டியவன், அடுத்து அவர்கள் பேசிய எதையுமே சட்டை செய்யவில்லை.



மாவட்டச் செய்திகளில் கண்ணை வைத்திருந்தவனுக்குக் கைப்பேசியில் அழைப்பு வர, மதுரை விவசாய மாநாட்டின் தலைவரின் பெயரைத் திரையில் காணவும், கைப்பேசியை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வெளியே சென்றான்.

என்ன தான் தொழில்நுட்பமும், செல்போனும் பரவலாய் வளர்ந்து விட்டப் போதும், இன்னமும் பல கிராமங்களில் டவர் கிடைப்பது குதிரைக் கொம்பாக அல்லவோ இருக்கிறது?

அவன் வெளியே சென்று, ஐந்து நிமிடம் கழித்து, மலர் கீழே இறங்கி வந்தாள்!

அந்த நேரம் பார்த்து, அந்த ஊரிலேயே வசிக்கும் ராஜதுரையின் உறவினள் ஒருத்தியும் உள்ளே நுழைய, ஏற்கனவே இருந்தவளையும் இப்போது வந்தவளையும் கண்ணால் கூட ஏறிட்டுப் பார்க்காமல், மலர் பின்பறம் செல்ல, சந்தோசத்தின் முகம் சிறுத்துப் போனது!

அவ்வளவு தான், வந்திருந்த இரு பெண்மணிகளும் தத்தம் திருவாயைத் திறந்து, அருவியெனப் பொழியத் தொடங்கினர்.

''என்னாத்தா.. உம் மருமக வந்தவுகள ஒரு வார்த்த... வாங்கன்னு கேட்கல...''

''சந்தி சிரிச்சுப் போயி... வந்திருந்தாலும், ராங்கித் தனம் அடங்கல போலவே...''

''எப்படி அடங்கும்? ராசதொர த்தேன் அவ மேல பைத்தியமா இருக்குதானே...''

''என்ன பைத்தியமா இருந்தா என்ன? பெத்த ஆத்தாவ மதிக்க வேணாம்...''

''சரியா சொன்ன கோமதி! இப்படியா ஒருத்தன்... கூறு கெட்டுப் போயி இருப்பான்...''

''அவன் இருக்கது இருக்கட்டும்... செல்லாத்தா! எங்க அயித்தையும்ல வாய்ச் செத்துப் போயி இருக்கு...''

''ஆமா... கோமதி! நானும் கேள்விப்பட்டவ... ராக்காயியை சமைக்க வேணாம்னு சொல்லி... தோட்ட வேலைக்கு அனுப்பிப்புட்டு.. வெறும் பழைய சோறும்.. பச்ச மொளகாவுமா வச்சு.. இம்முசை பண்றாளாம்...''

''அடங்கொப்புரானே! இந்தக் கொடும வேற நடக்குதா? ஆத்தா... பொறந்த வீடு எப்படி... வாக்கப் பட்ட வீடு எப்படி? அவுகளையுமா கஞ்சிக் குடிக்க வைக்குதா?''

''அட, ஆமாடி! ஆத்தா வீடே... கறி.. மீனு... முட்டைன்னு அமக்களப்படும்.. இப்ப சுடு சோத்துக்கே பஞ்சப்படுறாகளாம்!''

''இதென்ன கொடும! காவலுக்குக் கெடக்க நாய்க்குக் கூட சுடு சோறு போடுவீகளே, ஆத்தா! உங்களுக்கா இந்த நெலம...'' என்று அந்து அந்து விழுந்தாள், கோமதி!

''ம்ம்... நெய்யும் சீனியுமா ஆத்தா செய்யுற பலகாரத் துக்கு... எம் புள்ளக எல்லாம் அடிமைக... இப்பப் பாரு... அவுகளுக்கே... திங்க ஒண்ணுமில்லை! அத்தேன்... கொஞ்சம் கைமுறுக்கும்.. அதிரசமும் கொண்டாந் தேன்...'' என்ற ஊர்க்காரி,

''இந்தாங்க ஆத்தா.. வாய்க்கு ருசியா ரெண்டைப் பிச்சுப் போடுங்க...'' என்றது தான் தாமதம், அது வரை சுடுதண்ணியில் போடப்பட்டத் தக்காளியாய் மனம்



சுருங்கிக் கொண்டிருந்த சந்தோசம், கண்ணில் கோபம் தெறிக்க அங்கிருந்து எழுந்தார்.

வந்திருந்த மகராசிகள் இருவரும் பார்த்திருக்க, ''அந்தச் சிறுக்கியை என்ன செய்யுதேன்.. பாரு!'' என்று சூளுரைத்தவாறே, கொல்லைப்புறம் சென்றார்.

மகனின் எச்சரிக்கை வார்த்தைகள் எல்லாம் அவர் மனதிலிருந்து தொலை தூரத்திற்கு ஓடியே போயிருந் தன! தன்னை, ஊராரின் பேச்சிற்கு ஆளாக்கிய மலரை நோகடித்தே ஆக வேண்டும் என்ற வெறியில், காளி போல் வெளியே சென்றவருக்கு,

அங்கே மலர் கன்னுக்குட்டியுடன் உரையாடிக் கொண்டிருப்பதைக் காணவும், கோபத்தின் அளவு உச்சத்திற்குச் சென்றது!

''எங்கிட்ட பேச மாட்டேங்கிறே... வந்த விருந்தாளி களை வான்னு கேட்க மாட்டேங்கிறே... ஏன் உங்கிட்ட மயங்கிக் கெடக்க உம் புருஷனை மதிச்சு ஒரு வார்த்த பேச மாட்டேங்கிற... இந்தக் கன்னுக்குட்டியாவா கொஞ்சுற?'' என்று உக்கிரம் உதிரத்தை நிறைக்க, வெறி கொண்ட வேங்கையாய் மாட்டுக் கொட்டகை நோக்கி நடந்தார்.

அந்த நேரம் பார்த்து, ''ஏய்டி... கண்ணு! நா.. இன் னைக்குக் காலேசுக்குப் போறேனே... படிக்கப் போகு தேன்.. என்ன படிப்பு தெரியுமா? லேப் டெக்னிசியன்... டாக்டர் கணக்கா ஊசி எல்லாம் போடுவேன் தெரியுமா? ஒனக்கு ஒரு ஊசி போடவா? எஞ்செல்லத்துக்குப் போடவா?'' என்று கன்னுக்குட்டியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, கொஞ்சிக் கொண்டிருந்த மலர், சந்தோசத் தின் வருகையை உணரவில்லை.

ஆனால், சந்தோசத்தின் காதுகளில் மலரின் கொஞ்சல் சிறு பிசிறு கூட இல்லாமல் விழ, அது வேறு அவரது உஷ்ணத்தை அதிகரித்தது!

என்ன செய்கிறோம்... ஏது செய்கிறோம் என்று புரியாத கோபத்தின் விளைவாய், அங்கு எரிந்துக் கொண்டிருந்த வெந்நீர் அடுப்பிலிருந்து ஓர் கொள்ளிக்கட்டையை உருவியவர், மலரின் முடியைக் கொத்தாய்ப் பிடித்து இழுத்து, அவள் என்னவென்று சுதாரிப்பதற்குள், அவளது காலில் ஓர் இழுப்பு இழுத்து விட்டார்!!!

''சண்டாளி... பாவி.. மூதேவி! எம் மானத்த வாங்க வந்தியாடி.. ராங்கி!'' - வாய்க்கு வந்தபடி திட்டிக் கொண்டிருந்தவர், அடுத்த சூடை வைப்பதற்கு இடம் தேடிய வினாடியில், அந்தக் கன்னுக்குட்டி, அவரை முட்டித் தள்ளியது!

''அட சனியனே! நீ இந்தப் பண்ணாடைக்கு வக்காலத்தா...'' என்று அதன் உடம்பிலும் ஓர் கோடு இழுக்கப் பட, ''ஓ.... ஓ...'' என்று கத்தியது கன்று!!

அந்தச் சத்தம், வீட்டினுள் இருந்தவர்களை மட்டுமல்லாது, அப்போது தான் கைப்பேசி அழைப்பை முடித்துக் கொண்டு வீட்டுப் படியேறிய ராஜதுரையையும் இழுக்க,

''என்னாச்சு...'' என்றபடியே விரைந்தனர் அனைவரும்.

அதற்குள், மலரின் மற்றொரு காலிலும், இடது கையிலுமென சந்தோசத்தின் கைகள், வேக வேகமாய் சூட்டுக் கோடுகளை இழுத்திருந்தன!

அடுத்ததாய், முகத்தின் அருகே சென்ற சந்தோசத்தின் கை, மலரின் அழகு முகத்தை அலங்கோலமாக்கும்



முன்னர், அவரது கைப்பிடித்து இழுத்த ராஜதுரையின் ''ஆத்தா!'' என்ற அலறல், அந்த ஊரையே நிரப்பியது!

விக்கித்து நின்றார் சந்தோசம்!!

மகன் இழுத்த இழுப்பில், மாட்டுக் கொட்டகையின் புறம் சென்று தடுமாறி விழுந்தவர், தன்னைச் சுதாரிக்கும் முன்னர், ராஜதுரை மலரை நெருங்கியிருந்தான்.

லேசாய் சூடு பட்டக் கன்னுக்குட்டியே, ''ஒ...ஒ...ஒ..'' என்று விடாது அழுதுக் கொண்டிருக்க, தன் வலியாவையும் உள்ளேயே முழுங்கியபடியே, பல்லைக் கடித்துக் கொண்ட மலரை இழுத்துத் தன் மேல் சாய்த்துக் கொண்ட ராஜதுரையின் இதயம் தடதடத்தது!!

ஆனால், அவனது கைகள் தன்னை இறுக்கியதில், மலர் சந்தோஷப்படவில்லை!

மாறாய், சூடு பட்ட இடத்தில் அவனது சட்டையும் சட்டையைத் தாண்டிய உடலும் படவும், ''ஸ்ஸ்ஸ...'' என்ற சத்தத்துடன் அவனிடமிருந்து விலகினாள்.

அவள் விலகிய காரணம் புரியவே, அவளது கைகளை எடுத்துப் பார்த்தவன் துடித்துப் போனான்.

அவளது செம்பவள மேனி, கருகிப் போயிருக்க, வளண்டிருந்த தோலும், வெளி வந்த ரத்தமும் பார்க்கவே மிகக் கொடூரமாய் இருந்தது!

அனுபவிக்காத தனக்கே கண்ணில் நீர் வடிகையில், சூடு பட்ட அவளுக்கு எப்படி வலிக்கிறதோ? என்ற பதைப்பில், மலரின் முகம் பார்த்தவன், அவள் உதட்டைப் பற்களால் அழுந்தக் கடித்து, கண்களை இறுக மூடி, சுவாசத்தை இழுத்து வைத்து, வலியைப் பொறுப்பதைக் காணவும் இடிந்துப் போனான்!

உயிர் போகும் வலியெடுக்கையில் கூட, வாய் திறந்துப் பேசாத அவளது உறுதி கண்டு நடுங்கிப் போனான் என்றே சொல்ல வேண்டும்!

அந்த நடுக்கம், கடிப்பட்ட அவளது உதடுகள், பற்களின் அழுத்தம் தாங்க முடியாமல், உதிரத்தைக் கொட்டவும், உடம்பிற்குள் சென்று உயிரை உருவிக் கொண்டு வந்தது!

நெஞ்சம் கலங்கிப் போனவனாய் ''மலரு... அழு... வலிக்குதுன்னு சொல்லி அழு... மலரு! அழுடி! ஐயோ... வலி பொறுக்க மாட்டியே...'' என்று அவளை இழுத்தணைத்தான், ராஜதுரை!

# 18



மலரின் பற்கள், அவளது உதட்டில் அழுந்த அழுந்த, ராஜதுரையின் நெஞ்சு அறுந்துக் கொண்டிருந்தது!

மலரின் பற்கள் அவளது உதட்டை அறுக்கவில்லை! ராஜதுரை எனும் ஆறடி மனிதனின் உடம்பிற்குள்ளிருந்த திமிரை கொஞ்சம்கொஞ்சமாய் அறுத்துக் கொண்டிருந்தது!

''மலரு... அழு மலரு... விடுடி.. உதட்டை விடு... அழு மலரு...'' - துரையும், மலரின் ரோஜா இதழ்களை விடுவிக்கப் போராடித் தான் பார்த்தான்!

ஆனால், உறுதிப் படைத்த அந்த உத்தமியோ, உயிரை எடுத்துச் செல்லும் வலியைத் தன் நெஞ்சின் பலம் கொண்டு, இமையமெனத் தாங்கினாள்!



ஆனால், அவளிடம் கெஞ்சிக் கொண்டிருக்கவோ... போராடிக் கொண்டிருக்கவோ இது நேரமில்லையே!

பட்டக் காயத்திற்கு மருந்திட்டாக வேண்டுமே!

''அலகா...'' என்று ராஜதுரையின் அழைப்பிற்கு எதிரொலியாய்,

''வண்டி எடுத்தாந்துட்டேன்ங்கய்யா... அம்மாவைத் தூக்கிட்டு வாங்க'' என்று குரல் கொடுத்தான், அந்தப் பொறுப்பான வேலைக்காரன்.

உடம்பிலிருந்த சூட்டுக் காயங்கள் உண்டுப் பண்ணிய வலியை விடவும், அவளது உதட்டிலிருந்து சிந்திய ஓரோர் சொட்டு ரத்தத்திற்கும் ராஜதுரையின் மனம், வெந்துப் போனது!

''கடவுளே!! கடவுளே!!'' - இதற்கு மேல், அவனால் கடவுளிடம் எதுவும் யாசிக்க முடியவில்லை.

சில சமயங்களில், மனதில் ஆயிரத்தெட்டு வேண்டுதல்கள் இருந்தாலும், சாமி சந்நிதியின் முன்னே நிற்கையில், எதுவுமே வேண்டத் தோன்றாது! எதிரே இருக்கும் தெய்வாம்சத்தை அப்படியே பருகிக் கொண்டே இருக்க மட்டுமே தோன்றும்! அந்த நிலைக்குப் பெயர் பரவச நிலையெனில், ராஜதுரை இருந்த நிலை வேதனைநிலை!

அகமும் முகமும் வேதனையில் முக்குளித்திருக்க, மரணக் காயம் பட்டிருந்த மலரைத் தூக்கினான் அவளது கணவன்.

அவளோ, அந்த நிலையிலும் அவனிடமிருந்து திமிறி வெளியேற முற்பட, ராஜதுரையின் பொறுமை பறந்தது!

''ஏற்கனவே நா செத்துக்கிட்டு இருக்குதேன் மலரு... இனியும் உன்னைய அடிக்க வச்சு... என்னைய இம்சப் படுத்தாத...'' என்றான் அவன், கடித்தப் பற்களும், கடுகடுத்த முகமுமாய்!

அவனது வார்த்தைகளில் தென்பட்ட முரட்டுக் காதல் அவளை இளக்கியதா? இல்லை அவன் தூக்கியதால் கையில் பட்டிருந்த தீக்காயம் அவனது சட்டையில் உரசி, உயிரைத் துளைக்கும் வலியை உண்டு பண்ணியதா? எதுவென்று தெரியவில்லை! மலர் கண் மூடிப் படுத்திருந் தாள்!

அவளைக் காரில் ஏற்றிவிட்டு, முன்பக்கம் ஏறுவதற் காக ஓடி வந்த ராஜதுரை, அங்கே நின்றிருந்த கோம தியையும் செல்லம்மாவையும், ஓர் உஷ்ணப் பார்வை பார்த்தான்! விழி வழியே விரோதத்தைக் காட்டிக் கொண்டே, ''நா திரும்பி வரையில... நீங்க இங்கன இருக்கக்கூடாது, சொல்லிப்புட்டேன்! எம் வார்த்தையை மீறி... இங்கனயே நின்னு... எங்காத்தாவைத் தூண்டி விட்டுட்டுத் திரிஞ்சீக... நாளைக்கு விடியயில... உங்க கழுத்தில தாலி இருக்காது!'' என்றான் உக்கிரமாய்.

அதன் பின்னே, அங்கே நின்றிருக்க அந்தப் பெண் களுக்கு என்ன பைத்தியமா?

ராஜதுரையின் கார் கேட்டைத் தாண்டும் முன்னர், அவர்கள் ஓடியிருந்தனர்.

செங்கப்படையின் எல்லையை, ராஜதுரையின் கார் கடக்கையில், ''ஸ்ஸ்ஸ்... சஸ்... ஆஅ... ஆஅ...'' என்று சன்னமான முனங்கல் மலரிடமிருந்து வெளிப்பட்டது!

அவள் வசதியாக அமர வேண்டி, தான் முன் சீட்டில் அமர்ந்திருந்த ராஜதுரையின் பார்வை, ஒரு கணம்



தப்பாமல் மனைவி மீதே இருந்தமையால், அவனால் அவளது முனங்கலை உடனேயே கண்டுகொள்ள முடிந்தது!

பற்கள் அழுந்தியிருந்த உதடும், உதட்டிற்குக் கீழே உள்ள சதையும் ஆழமாய்க் காயம் பட்டிருக்க, மலரால் வலியைப் பொறுக்க முடியவில்லை.

காயம் பட்ட இடத்தையே மீண்டும் மீண்டும் கடித்து, வலி பொறுத்ததால், அது வேறு காயத்தை உண்டு பண்ணி, இன்னமும் ரணமாய் வலித்தது! ஆதலால், பற்களால் கடிப்பதை விட்டிருந்தவளால், வலியைத் தாங்க முடியாமல் போக, சன்னமான முனங்கல் வெளி வர ஆரம்பித்தது!

ராஜதுரையால் அவளை அப்படிப் பார்க்கவே முடியவில்லை! இந்த நிலையில் கூட, வாய் விட்டு அழ மாட்டேன் என்று உறுதியாய் இருக்கும் அவள் மனம் கண்டு, சிறு பயம் கூட வந்தது, அவனுக்கு! ஆனால், அதைப் பற்றி யோசிக்க இது நேரமில்லையே!

அதனால், ''அலகா... வண்டிய நிறுத்து... நா பின்னே போய்க்கிறேன்'' என்றுவிட்டு, பின்பக்கம் ஏறியவன்,

மலரை இழுத்துத் தன் மீது சாய்த்துக் கொண்டான்.

நெற்றி முடி ஒதுக்கி, காதுகளைத் தடவிக் கொடுத்து, முகத்தை மென்மையாய் வருடி, தீப்புண்களின் மீது மெதுவாய் ஊதி என அவன் செய்த எந்தவொரு காரியமும் அவளது வலி போக்காமல் இருக்க, ''ஆஅ... ஸ்ஸ்ஸ்..'' என்ற அவளது முனங்கல் தொடர்ந்து கொண்டே இருந்தது.

''முடியலன்னா... ஒரு மொறைக்கா அழுதுறேன் மலரு! யேன் இப்படி... உள்ளாரேயே அடக்கி வச்சு...

அடக்கி வச்சு இம்சப்பட்டுக்கிறே...'' என்று கெஞ்சிக் கூடப் பார்த்தான், ராஜதுரை.

ம்ஹூம்! அவள் அசையவில்லை!

ஒரு கட்டத்தில், வலி பொறுக்க முடியாமல், அவள் இங்கும் அங்கும் நகரவும், காயம் பட்டிருந்த கால்கள், சீட்டில் உரசி, பெரும் வலியை உண்டாக்கின.

எதிர்பார்க்காது வந்த அந்த வலியால், மலர் மீண்டும் உதடுகளைக் கடிக்கப் போக, விருட்டென, தன் உள்ளங்கையை அவளது பற்களுக்கு இடையே கொடுத்தான், ராஜதுரை.

எதைக் கடிக்கிறோம் என்ற கவனத்தைக் கூட, அந்த வலி எடுத்திருக்க, மலரின் பற்கள், அவனது கைகளில் அழுந்தப் பதிந்தன.

ஆனால், கடித்த வேகத்திற்கு, உதடுகளிலிருந்து உயிர் போகும் வலி கிளம்பாமல் இருக்கவும் தான், தான் தன்னைத் தானே கடிக்கவில்லை என்பதை உணர்ந்தாள் மலர்.

இமைகளைத் தாழ்த்தி, கீழே பார்த்தவள், கணவனின் கரங்களைக் கண்டதும், பற்களை வேகமாய்ப் பின்னுக்கு இழுத்தாள்!

ஆனால், அவனோ கையை முன்னுக்குக் கொண்டு வந்து, அவளுக்குக் கடிக்க ஏதுவாய் வைத்துக் கொண்டான்.

தலையை மறுப்பாய் அசைத்தவள், அவன் கையை எடுக்காமலே இருக்கவும், வேகமாய் அவனது கையைத் தட்டிவிட, அவனது கை இம்மியும் அசையவில்லை. மாறாய், ஏற்கனவே தீக்காயம் பட்டிருந்த மலரது கை,



முன்சீட்டில் உரசிச் செல்ல, ஏற்கனவே வளண்டிருந்த தோல், மேலும் சீர்க்குலைந்து, பார்க்கவே பயங்கரமாய் ஆனதோடு மட்டுமல்லாமல், சூடு பட்டப் போது இருந்த வலியை விட நூறு மடங்கு வலியை அவளுக்குக் கொடுத்தது!

தன்னியல்பாய், மலரது பற்கள் ராஜதுரையின் கைகளைக் கடித்தன! மருத்துவமனை வரும்வரைக் கடித்துக் கொண்டேயும் இருந்தன!

ஓரோர் முறை, மலரின் பற்கள் அழுந்தும் போதும், தனக்கு ஏற்பட்ட வலியை விடவும், எவ்வளவு வலியிருந்தால் இவ்வளவு அழுத்தத்தோடும், வேகத்தோடும் தன்னைக் கடிப்பாள் என்றெண்ணி, உருகிக் கரைந்துப் போனான் ராஜதுரை எனும் ஆண் சிங்கம்!

மருத்துவமனை சென்றால், ஏகப்பட்டத் திட்டுக்கள், ''வீட்டுக்கு வந்தப் பொண்ணை இப்படித் தான் கொடுமைப் படுத்துறதா? நீங்கெல்லாம் மனுஷங்க தானா?'' என்ற ஏச்சுப் பேச்சுக்கள், சில பல சிகிச்சைகள், நான்கைந்து ஊசிகள், பை நிறைய மாத்திரைகள், இரண்டு களிம்புகள், ஏகப்பட்ட அறிவுரைகள் என்று மலரையும் ராஜதுரையையும் நான்கு மணி நேரத்தில், ஊருக்கு அனுப்பி வைத்தனர்.

தடவப்பட்டக் களிம்புகளின் இதம், ஏற்றிய ஊசியின் வேகம் என்று மலரின் கண்கள் சொக்கி விழத் தொடங்கிய மறுகணம், அவளது தலை ராஜதுரையின் மடியில் இருந்தது!

மலரும் மறுத்தேதும் பேசவில்லை. ஒரு வினாடிக்கும் மேலாய், தன்னிடம் கடிப்பட்ட அவனது கையைப்

பார்த்தவள், அதில் தனது பற்களின் தடமும், லேசான ரத்தக் கறையும் தென்படவே, மெல்லத் தலை நிமிர்த்தி, ராஜதுரையின் முகத்தைப் பார்த்தாள்!

அந்தக் கணம், ராஜதுரை ஒருமுறை செத்து, மீண்டும் பிறந்தான்!

திருமணம் முடிந்து இதுநாள் வரை, மலரது விழிகள் அவனது விழிகளோடு கலந்ததே இல்லை! ஓர் வெற்றுப் பார்வை! ஓர் எரிச்சல் சுளிப்பு! ஓர் கோபக் கனல்! முகம் பார்க்காத அலட்சியம்! ஓர் மரத்தப் பார்வை! இவை மட்டுமே, மலரவளின் மதி முகத்திலிருந்து உதிர்ந்துக் கொண்டிருக்க, இன்று அவள் தன் முகத்தை நேர் கொண்டு பார்த்ததில், அந்த முரட்டுக் காதலனுள்ளிருந்த மென்மையானக் காதல் மேன்மைப் பெறத் துவங்கியது!

சொக்கி வந்தத் தூக்கத்தினுள் மலரது கண்கள் காலடி எடுத்து வைத்துவிட்டப் போதும், ராஜதுரையின் கண்கள் மலரது முகத்திலிருந்து விடுபட மறுத்தன.

வண்டி நின்றதைக் கூட உணராமல், உறங்கிக் கொண் டிருந்த மனைவியின், முடியை வருடியவனின் மனம், "இவளை.. இனியாவது சந்தோஷமாய் வைத்துக் கொள்ள வேண்டும்!" என்ற உறுதியை எடுத்துக் கொண்டது.

அந்த உறுதியின் இதத்தைக் கைகளில் புகுத்தி, மலரை மெல்லத் தூக்கினான் ராஜதுரை.

என்ன தான் மெதுவாய்த் தூக்கியபோதும், களிம்புத் தடவியிருந்த போதும், தீப்புண்ணின் மீது சிறிதாய் எது உரசினாலும் எரியும் அல்லவா?

காரின் சீட் கவர் லேசாய் உரசிவிட, "ஆஅ... ஆஅ.." என்ற முனங்கலுடன் கண் விழித்த மலர், திகைத்துப் போனாள்.



ஏனென்றால், அவர்கள் வந்திருந்தது ராஜதுரையின் பெரிய வீட்டிற்கு அல்ல! ஊர் ஓரமாய் இருக்கும் பண்ணை வீட்டிற்கு!

சட்டென தலையைத் திருப்பித், தன்னைத் தூக்கிக் கொண்டு, வாசல்படி ஏறிக் கொண்டிருந்தக் கணவனைப் பார்த்தாள், "இங்கே எதற்கு?" என்ற கேள்வியைக் கண்ணில் தாங்கி.

அவனும் மனைவியின் மணிமொழி உணர்ந்தக் கண வனாய், "இனி... நாம இந்த வீட்டில த்தேன் இருக்கப் போறோம்!" என்றான், அவளது கண்களை ஊடுருவி. ஆனால், உறுதியாய்!

மலரின் பார்வையில் மின்னல் ஒன்று வெட்டிச் சென்றது! அதைத் தாங்கும் வானமாய், கணவன் மாறிப் போனான்.

ஆம். பெற்று வளர்த்தத் தாய்-தந்தையரை வீட்டை விட்டு விரட்டுவது பாவமென்று எண்ணினானோ என் னவோ, அவன் தன் ஜாகையைப் பண்ணை வீட்டிற்கு மாற்றிக் கொண்டான்.

இந்த முடிவை, சந்தோசத்திடமும் பழையம்பெரு மாளிடமும் சொல்லிய விதம் தான்! அவன் சண்டியன் - காதல் சண்டியன் என்பதை நிரூபித்தது!

நேரே வீட்டிற்குச் சென்றவன், அங்கே அமைதியே உருவாய் அமர்ந்திருந்த தந்தையின் முன்னே சென்று, கால் மேல் கால் போட்டு அமர்ந்தான்.

"நா எம் பொஞ்சாதி மேல உசிரையே வச்சிருக்கேன்... உம்ம மாதிரி பயத்த இல்ல. அதனால, இனிமே நானும் எம் பொஞ்சாதியும் அவ சூடுப்பட்ட இந்த வீட்டுப்படி

ஏற மாட்டோம்! இது, நா பொறந்த கருவேலம் அய்ய னார் பூமி மேல சத்தியம்!'' என்றுவிட்டு, அந்த வீட்டை விட்டு நகர்ந்தான்.

அதன் பின்னர், சந்தோசம் பண்ணை வீட்டிற்கு வந்து, கெஞ்சிய போதும் சரி, கதறிய போதும் சரி, சாபம் விட்டப் போதும் சரி, ராஜதுரையின் பதில் மௌனமாகிப் போனது!

கடைசியில் சந்தோசம் தான், ''நீ த்தேன் ஊமச்சியா போனேனா... எம் மவனையும் ஊமையா ஆக்கிப் புட்டியே!'' என்று கதற வேண்டியிருந்தது!

ஆனால், அதற்குப் பதிலடிக் கொடுப்பவனாய், ''அலகா.. உம்ம எசமானி அம்மாவை, அவுக வீட்டில் கொண்டு விட்டுட்டு வாடா!'' என்று வேலையாளை ஏவினான், ராஜதுரை! ஆக, ''உனக்கு மட்டும் தான் நான் ஊமை!'' என்று சொல்லாமல் சொல்லிவிட்டான்! ஓங்கி அடிவாங்கிய உணர்வு, சந்தோசத்திற்கு!

அதன் பின்னர், பெரிய வீட்டிற்கும், பண்ணை வீட்டிற்கும் வேலைக்காரர்கள் முதற்கொண்டு வரும்படி வரை, சப்ஜாடாய் பிரிக்கப்பட்டனர். முக்கியமாய், அங்கிருந்த மாடுகள் முழுதும் (கன்றுகள் உட்பட) பண்ணை வீட்டிற்கு மாற்றப்பட்டன.

இவையனைத்தும், தூக்க மாத்திரையின் தாக்கத்தில் பன்னிரண்டு மணி நேரம் உறங்கியே கழித்த மலர் கண் விழிப்பதற்குள் நடந்து முடிந்தது என்பதே, ராஜதுரையின் அதிகாரத்திற்கு அத்தாட்சி!

தானிருந்த அறையை விட்டு வெளியே வந்த மலரை, ''ஏய்... காத்தா... அந்த டி.வி.யை இங்கன வை.



நாளைக்கு... ஆசாரிகிட்டச் சொல்லி, மரத்தில ஒரு மேச வாங்கியாரணும். அது வரையிலும், இந்த இரும்பு மேச மேல இருக்கட்டும்... நீ ராவுக்கு வீட்டுக்குப் போகை யில.. ஆசாரி வீட்டில வெளக்கெரிஞ்சா... சொல்லிட்டுப் போயிடு!'' என்று ராஜதுரையின் ஏவல் வரவேற்றது.

மெல்ல கண்களைச் சுழல விட்டவளின் பார்வை, கொல்லைப்புறக் கதவில் நிலைத்தது!

தன்னைக் காக்க ஓடி வந்தக் கன்னுக்குட்டியின் நினைவு நெஞ்சில் மோத, ''எஞ் செல்லமே! சூடு பட்டுப் போனியேய்யா... பட்டு!'' என்று அழுகைப் பொங்கி வந்தது!

பழகி, இரு வாரங்களே ஆன நிலையில், தன்னைக் காக்க ஓடி வந்த அந்தக் குட்டி மட்டுமே தனது உறவு என்ற உணர்வு நெஞ்சினுள் புதைந்துப் போனது!

அந்த வாயில்லா ஜீவனுக்கு என்ன ஆனதோ என்ற பதைப்பு நெஞ்சில் புக, வேக எட்டுகளை எடுத்து வைத்து நடந்தபோது தான், தனக்கும் காயம் பட்டிருக் கிறது... அதுவும் காலில், குறிப்பாக, சேலை உரசும் கணுக்காலில் என்பது புரிந்தது!

புரிந்து என்ன பயன்? சேலை தான் உரசி விட்டிருந் ததே! அறைக்குள்ளிருந்து வெளியே வரும் தூரமும் குறைவு, அதே நேரம் அவளும் மெதுவாக வந்ததினால், காயம் அவ்வளவாய் பாதிக்கப்படவில்லை! ஆனால், இப்போது வேகமும், கூடவே தூரமும்!

எரிந்துக் கொன்றது, தேகம்!

''ஸ்ஸ்ஸ்ஸ... ஸ்ஸ்ஸ...'' - கொல்லைப்புறக் கதவைப் பிடித்துக் கொண்டு நின்று விட்டாள், பொன்மலர்.

நிமிடத்தில் அங்கே வந்த ராஜதுரை, ''மலரு... முழிச்சிட்டியா.. ஏன்டி... நடந்து வந்தே.... எரியுதா மலரு..'' எனத் துடித்துவிட்டான்.

பல்லைக் கடித்துக் கொண்டு நின்ற மலரின் பார்வை, கொல்லைப்புறம் செல்லவே,

''பாக்கியம் மவளத் தேடுதியா? அவ.. இங்கன.. நம்ம வீட்டில த்தேன்... இருக்குதா! தீப்புண்ணுல வேப்பெண்ண தடவி இருக்கு... பொழுது சாயையில, மாட்டு டாக்டரு வந்துப் பார்ப்பாரு...'' என்றான் அந்த ஒரு பார்வைக்கு, ஓராயிரம் விளக்கமாய்.

நிம்மதிப் பெருமூச்சு ஒன்றை வெளியேற்றிய மலர், மெல்ல நகரவும், சட்டென அவளைத் தூக்கிய ராஜதுரை, ''கால் காயம் ஆறுற வரையிலும்... சத்த சும்மா இரு மலரு! அங்கனைக்கும்.. இங்கனைக்கும் நடக்காத!'' என்றபடியே அறைக்குள் சென்று படுக்க வைத்தான்.

எல்லாவற்றையும் விட, எப்படி இவனால் சடக் சடக் என்று தூக்க முடிகிறது என்பதே மலரின் பெரிய கேள்வியாய் இருக்கத், தன்னைத் தூக்கியிருந்த கணவனின் தேகக் கட்டில் பார்வையை ஓட்டினாள், பொன்மலர்.

மடித்து விடப்பட்ட வெள்ளைச் சட்டையை மீறிக் கொண்டு, திமிறிய பின் கை சதைகள், அவனது உடலின் வலுவை எடுத்துக் காட்டின.

அப்படியே முன்னேறிய பார்வை, தோள், கழுத்து, காது, கன்னம், கண் என்று ஒவ்வொன்றாய் வலம் வர, மலர் தன்னைத் தொலைக்கவிருந்த வேளையில்,

''என்ன மலரு... நாலு உருட்டக் கட்டையை ஒண்ணா வச்ச மாதிரி இருக்கா ஒடம்பு! வெவசாய உடம்புடி... மண்ணை ஒரமாக்கி.. வேர்வத் தண்ணி



குடிச்சு வளந்தது...'' என்றான் துரை, அவளைக் கட்டிலில் விட்டப்படியே!

சட்டென முகம் சிறுத்துப் போயிற்று மலருக்கு!

அதைக் கண்ட ராஜதுரைக்குக் கோபம் வந்தபோதும், ''அவ இப்படித் த்தானே? பொறவு என்னத்துக்கு மனசை வெசனப்படுத்துற! கொஞ்ச... கொஞ்சமா சரி பண்ணுவோம்!'' என்று தனக்குத் தானே கூறிக் கொண்டான்.

அந்தத் தீர்மானத்தின் படி, ''பசியாறுறியா?'' எனக் கேட்டவன், அவள் அசையாதிருக்கவும்,

''பேசாம... கொல்ற இந்த வாயை... அப்படியே...'' - வந்தக் கோபத்தைப் பல்லைக் கடித்து உள்ளே தள்ளியபடியே, வெளியே சென்று தட்டில் உணவெடுத்து வந்தான்.

அவன் கையிலிருந்தத் தட்டைப் பார்த்ததும் தான், மலருக்குப் பசியே உரைத்தது!

அவன் அருகே வரக் காத்திருந்தவள், அவனிடம் தட்டிற்காக இடக்கை நீட்டவும், ராஜதுரையின் கைகள் உணவை அள்ளி அவளுக்கு ஊட்டின.

தலையைத் திருப்பி, அதை அவள் வாங்க மறுக்க, ''நா முன்னமே சொல்லியிருக்குதேன்... என்னைய அடிக்க வைக்காதன்னுட்டு! காந்திப் போயிருக்க இந்தக் கையால எப்படிடி சாப்பிடுவே? மரியாதையா வாயைத் திற!'' என்று ஓங்கி ஓர் அதட்டல் வந்தது, ராஜதுரை.

''பெரிய சண்டியரு! எல்லாத்துக்கும்... கோவந்தேன்.. நானே சாப்பிட்டுக்கிடுதேன்...'' என்று மனதில் எண்ணியதை வெளியே சொல்லாமல், வலக் கையை விரித்துப் பார்த்தவளுக்கு, அவனது கோபத்தின் காரணம் புரிந்தது.

சந்தோசம் காலில் சூடு போட்டுவிட்டு, கையில் போட வரவும், அதிலிருந்துத் தப்பித்து விட வேண்டும் என்ற வேகத்தில், கையை உருவியதால், உள்ளங்கையிலும் கொள்ளிக்கட்டைத் தன் வக்கிர ஓவியத்தைத் தீட்டிச் சென்றிருந்தது!

அதைப் பார்க்கப் பார்க்கக் கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது, மலருக்கு!

''ஒரு அஞ்சு நிமிசம் சந்தோஷமா இருந்தேன்... அது கூடப் பொறுக்கலையா கருவிய்யப்பா!'' என்று நெஞ்சம் ஓலமிட, எட்டாக்கனியாகிப் போனப் படிப்பை எண்ணி மனம் துவண்டு போனது!

மனைவியின் எண்ண ஓட்டத்தை முழுதாய்ப் படிக்க முடியாவிட்டாலும், ''அழுவாத மலரு! இனிமே... ஆத்தா உன்னைய அண்டாத மாதிரி நா பாத்துக்கிடுதேன்!'' என்றான் அவளது கண்களைத் துடைத்துவிட்டு.

அதற்குப் பதிலாய், மலர் அவனைப் பார்த்தப் பார்வையில் ஓர் ஏளனம், ஓர் இளக்காரம், ஓர் திமிர்!

''உம் மனச என்ன நினைக்குதுன்னு எனக்குப் புரியுது, மலரு! நீ அண்ட்றதே எனக்குப் புடிக்கலை. நீ என்னடா உங்காத்தாக்காரியை அண்ட விடாம செய்யுதேன்னு நினைக்கியோ? தப்புடி! எனக்கு மட்டும் த்தேன்டி நீயு.. உன்னைய அண்டுற உரிம எனக்கு மட்டும் த்தேன் உண்டு! அது அடிக்கிறதா இருந்தாலும் சரி... கொஞ்சுறதா இருந்தாலும் சரி! அதை... எங்கத்தாவா இருந்தாலும் யாருக்கும் விட்டுத் தர மாட்டேன்! புரிஞ்சுக்கடி ராங்கி! உன்னைய ராணி மாதிரி வச்சுக்கிற உரிமய எனக்கு மட்டும் த்தேன் கடவுள் கொடுத்திருக்கான்!'' என்றபோது அவனது குரலில் தெரிந்தத் திமிர், அவனது முரட்டுக் காதலுக்கு முத்திரையாகிப் போனது!



''தெனவெடுத்த சண்டியன்..'' என்று முணுமுணுக்க மட்டுமே செய்த மலர், அவன் கொடுத்த உணவை மறுக்காது வாங்கிக் கொண்டாள்!

பசி ஒரு புறமென்றால், அவன் அள்ளிக் கொடுத்த உணவிலிருந்த ருசி ஒரு புறம் அவளை ஈர்த்தது.

அவள் உணவுண்ட வேகத்தைக் கண்டு, மெலிதாய் ஓர் புன்னகைப் பூக்க, ''என்னாத்தா... நீராகாரமா தின்னு... நாக்கு மடிஞ்சுப் போச்சுதா...'' என்றவனின் முகத்தில் கேலி.

''ஹுக்கும்!'' என்ற மலரின் கழுத்தை வேகமாய் ஒடிந்தது!

''இனிமே.. நீ சோறாக்க வேணாம் தாயி! ராக்காத்தா செய்வா... நீ செவனேன்னு இரு!'' என்றான் ராஜதுரை.

கூடவே, ''க்கும்! நீ எங்க செவனேன்னு இருக்கப் போறே? இவன எப்படிடா இம்சப்பண்ணலாம்னுட்டு மண்டையைக் கொடஞ்சுட்டுக் கெடப்ப...'' - இதை அவன் சொன்னத் தினுசில், மலருக்கு லேசாய் சிரிப்புக் கூட வந்தது.

அவள் சிரிப்பை அடக்குவதை ஓர் ரசனையுடன் பார்த்திருந்தவன், கடைசி வாய் உணவை அள்ளிக் கொடுத்துவிட்டு, ''மாத்திர தாரேன்... போட்டுட்டுத் தூங்கு!'' என்றான், தன் துண்டால் வாயைத் துடைத்து விட்டுவிட்டு.

ஓர் குழந்தைக்குப் புகட்டுவது போல், மாத்திரை மருந்து கொடுத்தவன், அவளைப் படுக்க வைத்து, ''நீ ரொம்ப அசைஞ்சு கிடைஞ்சு படுக்க மாட்டே... இருந்தாலும்... ஒரு கவனம் இருக்கட்டும்!'' என்றான், இரு கால்களின் பக்கமும் சிறு வெல்வெட் தலையணைகளை அணைவாய் வைத்து.

''எல்லா பக்கமும் தலகாணியா வச்சிருக்கானே... இவன் எப்படிப் படுப்பானாம்?'' என்றெண்ணிய மலருக்குப் பதிலாய்,

கீழே படுக்கையை விரித்து, அதில் தலை சாய்த்தான் ராஜதுரை!

ஏனோ, ஒரு ராஜா தன் சிம்மாசனத்தை ஓர் குருவிக்கு விட்டுவிட்டுக், கீழே படுத்திருப்பது போல் தோன்றியது மலருக்கு! முதன்முதலாய், கணவன் மேல் சிறு கரிசனம் பிறந்தது அவள் மனதினுள்!

அந்தக் கரிசனம், அடுத்து வந்த நாட்களில் சின்ன வெங்காய விலை போல் சிறுகச் சிறுக உயர்ந்தது!

பின்னே, உயராமல் என்ன செய்யும்?

காலை எழுந்ததும், ''இந்தா... ஒனக்கு எரிக்க ரெண்டு பேப்பரு...'' என்று அவன் கொடுத்தத் தினசரிகளில் தொடங்கி,

அவள் குளிக்கையில் ''கால நீட்டு மலரு... பாலீத்தீன் பையைக் கட்டிவிடுதேன்!'' என்று அவளது புண்களில் தண்ணி படாமல் காத்து,

அவளுக்கு உடைமாற்ற உதவி,

அவள் முகம் சுளித்தால், ''உரிமப்பட்டவன்டி! என் கிட்டே என்ன வெட்கம் வேண்டிக்கிடக்கு!'' என அதட்டி,

''இட்டிலி... பஞ்சுப் பஞ்சா இருக்குதுடி... இன்னும் ஒண்ணே ஒண்ணு சாப்பிடு!'' என்று கெஞ்சி,

''சூதானமா இரு மலரு! எதுனா... எஞ்செல்லுக்குக் கூப்பிடு!'' என்று தொடங்கி, ''நீ த்தேன் பேச மாட்டியோ? பரவாயில்ல... எதுவா இருந்தாலும் செல்லுக்குக் கால் போடு... நீ பேச வேணாம்.. நீ கூப்பிட்டப் பத்தாவது நிமிசம் நா வந்துடுதேன்...'' என்று அவளது பிடிவாதம் அறிந்துப் பேசி,



காலையில் செல்பவன், பதினோரு மணியளவில் ஒரு முறை மனைவியை வந்துப் பார்த்து, இளநீர்... பதநீர்... பழரசம் என்று அவளைக் குடிக்க வைத்து,

மதிய உணவிற்கு வீட்டிற்கு வந்து, ''என்னடி சாப்பிடுதே? கல்லைத் தின்னாலும் செறிக்கிற வயசுடி! ஹ்ம்ம்... நொறுங்கத் தின்னு!'' என்று அதட்டி, அதட்டி, அவளுக்கு உணவுப் புகட்டி,

மாலை ஆறு மணிக்கெல்லாம் வீடு திரும்பி, அந்தி சாயும் அற்புத நொடிகளை அவளுடனே கழித்து என்று ஓர் காதல் கணவனாய் அவளைக் கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக் கொண்டான்.

அன்றும் அப்படித்தான், டி.வி.யில் ஓர் திரைப்படம் ஓடிக் கொண்டிருக்க, மலரும் ராஜதுரையும், அவர்கள் உபயோகிக்கும் அறையில் வைக்கப்பட்டிருந்தத் தொலைக்காட்சியில் அதைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

கட்டிலில் கால் நீட்டிச் சாய்ந்திருந்த மலரின் அருகே அமர்ந்திருந்த ராஜதுரை, அவளது கால்களைத் தன் மடியில் போட்டுக் கொண்டு, தீக்காயங்களைச் சுற்றி மென்மையாய் வருடி விட்டுக் கொண்டிருந்தான்.

எவ்வளவு நேரம் அப்படி வருடினானோ, மலரும் அறியவில்லை! அவனும் அறியவில்லை!

கொஞ்சம் கொஞ்சமாய் நேரம் கழிய, ராஜதுரை மெல்ல நகர்ந்துத் தானும் மலரைப் போலவே கட்டிலின் முகப்பில் தலை சாய்த்து, கால் நீட்டி அமர்ந்துக்

கொண்டு மலரின் கைகளை எடுத்து வருடத் தொடங்கினான்.

அந்த வருடல் கொடுத்த இதமோ இல்லை இளகத் தொடங்கியிருந்த மனதின் சுகமோ, மலரின் தலை கணவனின் தோள் மீது தானாய் சாய்ந்தது! தன்னை மறந்து!

விருட்டெனத் தலை திருப்பிப் பார்த்த ராஜதுரைக்கு, லேசாய்க் கண்ணீர் கூட வரும் போலிருந்தது! தன் தொடுகைக்குக் கிடைத்த முதல் பிரதிபலிப்பு அல்லவா! நெஞ்சம் நெகிழ்ந்துப் போனதில், கண்கள் ஈரத்தின் சுவடாகிப் போயின!

ஆனால், ஆண் மகன் என்ற நினைப்புக் கண்ணீரை நிறுத்திவிட, மெல்ல அவனது கரங்கள், மனைவியின் தோளைச் சுற்றி சென்றன.

ஒரு கையால் மனைவியை இறுக்கிக் கொண்டு, மறு கையால் அவளது காயத்தை அவன் வருட வருட, மலரின் தலை மெல்ல மெல்ல அவனது தோள்களிலிருந்து மார்பிற்கு இடமாறியது!

ராஜதுரையின் அணைப்பும் தன் அழுத்தத்தைக் கூட்ட, அவன் பிடியிலிருந்து விடுபட்ட மலரின் கரங்கள், மெல்ல நகர்ந்து அவனது மார்பில் தஞ்சம் புகுந்தன!

மேல் சட்டை அணியாததால், முண்டாப்பனியனின் வழியே முட்டிக் கொண்டு வெளிவந்த முரட்டு ரோமங்கள், கைகளுக்கு இதமாய்ப் பட, அதன் சுகத்தை அனுபவிக்கும் வண்ணம், மலரின் கரங்கள் கணவனின் மார்பில் மாலையாகின!



# 19



தன் மீது சாய்ந்த நிலையிலேயே உறங்கிவிட்ட மனைவியின் முடி கோதக் கூட ராஜதுரைக்குப், பயமாக இருந்தது!

சட்டென விழித்துவிட்டால்? விழித்த நிமிடமில்லாமல், தன் நிலை உணர்ந்து அவனிடமிருந்து விலகி விட்டால்? ஆம், அவனுக்கும் புரிந்தது அவள் முழுதாய் மாறவில்லை என்று!

என்றைக்கு அவளது இதழ் பூட்டு அவிழ்கிறதோ, என்றைக்கு அவள் வாய் திறந்து ''மாமா...'' என்ற அழைப்பை உதிர்க்கிறாளோ, அன்று தான் அவள் இந்தக் கல்யாணத்தை அங்கீகரித்து இருக்கிறாள் என்றெண்ணினான் ராஜதுரை.

இந்த இடைநிலை மயக்கம், அவனது கரிசனத்தால் வந்தது அவ்வளவே! இது ஓர் மேலோட்ட நிலை மட்டுமே! உள்ளே இருக்கும் கோபம் அப்படியே தான் இருக்கிறது என்று முழு மனதாய் நம்பினான் அவன்! அவளது கோபத்தைப் போக்க வேண்டும்.. போக்கியே ஆக வேண்டும் என்ற சபதம் உள்ளே எடுக்கப்பட, தன் மார்பு சாய்ந்திருந்த மனையாளை மெல்ல சரித்து, நன்றாகப் படுக்க வைத்தான்.

தலையணையில் சாய்ந்த மலர், லேசாய் சிணுங்கி, அவனை இன்னமும் ஒட்டிக் கொண்டு, அவனது இடுப்பில் கையிட்டுக் கொள்ளவும்,

''மனுசன இம்சப்படுத்தாத மலரு!'' என்று சன்னமாய் முணுமுணுத்த ராஜதுரையின் உதடுகள், தாங்கொண்ணா உணர்ச்சிகளின் விளைவாய், மனைவியின் நெற்றியில் முத்தம் வைத்து நிமிர்ந்தன!

ம்ஹூம்! ஒரு முத்தத்தோடு தணியும் தாகமா என்ன? மீண்டும் ஒன்று!

அப்படியும் அவனால் உதட்டைப் பிரித்தெடுக்க முடியவில்லை! கண்ணிமையில் இரண்டு! கன்னத்தில் ஒன்று! காதோரம் ஒன்று! மூக்கு நுனியில் ஒன்று! ஹ்ம்ம்... அடுத்ததாய் உதடு!

''இல்ல.. வேணாம் ராசு...'' என்று மூளை நங்கென்று மனதில் கொட்டிவிட, மெல்ல சரிந்து அவளை அணைத்துக் கொண்டு படுத்தான், அவன்! நல்ல பிள்ளையாய்!

எப்போதும் போல், காலை ஐந்து மணிக்கு விழிப்புத் தட்டிவிட்டது மலருக்கு. ஆனால், என்றைக்கும் இல்லாத திருநாளாய், இன்று நன்றாய்த் தூங்கி எழுந்தப் புத்துணர்ச்சி உடம்பை மட்டுமல்லாது மனதையும் ஆட்கொண்டது!

ஏனென்று புரியாது குழம்பியவளுக்குத், தன் மீது படிந்திருந்தக் கணவனின் கை விடையாகிப் போகவே, வேகமாய் எழுந்து அமர்ந்தாள்.

அந்த அசைவில், ராஜதுரையும் விழித்து விட, ''அய்யய்யோ... மாரியாத்தா சாமி ஆடுறதுக்குள்ள ஓடிப் போயிருடா...'' என்று எச்சரித்தது மூளை. அடுத்த நிமிடம், துரை அறையை விட்டு வெளியேறி இருந்தான்.

அன்றும், கையில் இரண்டு நாளிதழ்களைக் கொண்டு வந்து, ''இந்தா மலரு... ஒனக்கு எரிக்க...'' என அவன் நீட்ட,



''இவனுக்கு இருக்க லந்துக்கு...'' என்று லேசாய் சிரிப்பு வந்தது, மலருக்கு.

அவனிடம் ஒரு கை பேப்பரை வாங்க, வாயோ அங்கு சென்று கொண்டிருந்த வேலைக்காரனிடம் ''அலகா... அவுக அவுக... காசை வைரத்தில இறைப்பாக... தங்கத்தில இறைப்பாக... ஏன் நெல புலன்ல இறைப்பாக... உங்கய்யா என்னப்பு பேப்பர்ல இறைக்கிறாக!'' என்றது நக்கலாக.

வேலைக்கார அழகேசன், ''பெக்க... பெக்க'' பார்த்துக் கொண்டிருக்க,

''அடேங்கப்பாடி அப்பா! எம் பொஞ்சாதி.. நாஞ் செய்யுற செலவுக்குக் கணக்குக் கேட்க ஆரம்பிச்சிட்டாடோய்! பெரிய வீட்டு மருமவன்னு நிருபிக்கிறா! ஒரு விருந்துக்கு ஏற்பாடு பண்ணுடா... அலகா!'' என்று வேலைக்காரனிடம் வாய் பேச, கண்களோ மனையாளைப் பார்த்துக் கண்ணடித்தன.

சிவக்கத் தொடங்கிய முகத்தைக், கோபம் கொண்ட மனம் அடக்கி வைக்க, அவனை முறைத்துவிட்டு, உள்ளே எழுந்து சென்றாள் மலர்.

''பெரிய மொறப்பு... ஒன்னைய எம் வழிக்குக் கொண்டாரல.. நா ராசதொர இல்லடி!'' என்று சிரித்தான், அவன் ஆண் மகனாய்! ஆனால்.. அவள் தன் வழிக்கு வரப் போவதில்லை... தான் தான் அவள் வழிக்குப் போகப் போகிறோம் என்பது அவனுக்குத் தெரியவில்லை! பாவம்!

மலரின் தீக்காயங்கள் மெல்ல மெல்ல ஆறத்தொடங்கி இருந்த சமயம். விவசாய மாநாட்டு வேலைகள், கழுத்தை நெரிக்க ஆரம்பித்தன!

காலையில் கிளம்பிச் செல்பவன், மதியம் சாப்பிட்டிற்கே இரண்டு மணி... மூன்று மணிக்கு வர, நடுவே ஜூஸ் கொடுக்க எங்கே வருவது?

அவன் மீதிருந்த கோபம் முழுதாய்ப் போகாவிட்டாலும், அவனது வருகைக் குறைந்ததில் மலர் தவித்துப் போனாள்!

பொழுது விடிந்து பொழுது போனால், வாசலிலேயே தவம் கிடந்தாள்! அவன் புல்லட் சத்தம் கேட்டதும், விறுவிறுவென அறைக்குள் சென்று அமர்ந்துக் கொண்டபோதும், அவனது ஒரோர் காலடிச் சத்தத்தையும், மனம் கணக்கெடுக்க, ''தொர... செருப்பைக் கழட்டிட்டாருய்யா.. ஹ்ம்ம் இப்ப கை-கால் கழுவுறாரு... மொகம் தொடைக்கறாரு.. சாப்பாட்டு மேசைக்குப் போறாரு... என்ன செஞ்சிருக்குன்னு பாக்கறாரு... தட்டில் சோறிட்டுப் பெசயறாரு... ஹ்ம்ம் வந்துட்டாரு..'' என்று ஒரோர் அடியாய் அவனது அசைவுகளை அளந்தாள்!

முகத்திலிருந்த ஆர்வத்தைச் சட்டெனத் துடைத்தெடுத்து, ஓர் வெறும் பாவனையை அப்பிக் கொண்டவள், முகத்தை நேராக வைத்துக் கொண்டாள்.

''என்னம்மா சண்டிராணி... இன்னைக்கு என்ன சதி திட்டம் திட்டினீக...'' என்றபடியே வந்தான் ராஜதுரை.

அவள் எங்கே பேசுவாள்? கண்ணை உயர்த்தி, ஓர் முறைப்பு மட்டும் பதிலாகிப் போக, ''இப்படி எட்டிக்கிட்டுப் பாக்குற கண்ண.. அப்படியே நோண்டாம...'' என்று செல்லக் கோபம் வந்தது ராஜதுரைக்கு.

உதட்டைச் சுளித்து அவனை முறைத்தவளின் வாய், உணவிற்காகத் திறந்தது.



மலரின் உள்ளங்கை காயங்கள் தழும்புகளாய் மாறத் தொடங்கியிருந்தபோதும், இந்த உணவூட்டும் வழக்கம் மட்டும் மாறுவதாய் இல்லை! அவனும் விடுவதாய் இல்லை! இவளும் மறுப்பதாய் இல்லை! இருவருக்குள்ளும் ஓர் சொல்லொண்ணா உணர்விருந்து ஆட்டுவிக்க, ''சாப்பிட வா மலருன்னு அவரா கூப்பிடட்டும்... பொறவு நாமளே சாப்பிட்டுக்கிடலாம்'' என்று மலரும், ''எனக்குத் த்தேன் கை ஆறிப் போச்சுதே... நானே சாப்பிட்டுக்கிடுதேன்னு அவளா சொல்லட்டும்... ஊட்டுறதை விட்டுருவோம்...'' என்று அவனும், ஊட்டி விடுவதை நீடித்துக் கொண்டே வந்தனர்.

அன்றொரு நாள், பொழுதை நகர்த்துவது மிகவும் சிரமமாக இருந்தது, மலருக்கு. அந்த வீட்டிலாவது சந்தோசம் இருப்பார்... கரித்துக் கொட்டுவது என்ற பெயரிலாவது ஏதாவது ஒரு சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கும்! அதுவும், அவரது கேள்விகளுக்குப் பதிலேதும் சொல்லாமல் ஊமைச் சாமியாராய் அவரை வதைப்பதில் ஏற்படும் பரம சந்தோசமே, மலரின் பொழுதுகளை அர்த்தமுடையதாக்கின.

ஆனால், இங்கோ யாருமில்லை! இருக்கும் வேலைக்காரர்களும், ''பணிவு.. பயம்'' என்ற பெயரில் அவ்வளவாய் பேசுவதில்லை. மீறிப் பேசப் போனாலும், அந்த ராக்காத்தாவிற்குக் காதும் சரி வரக் கேட்பதில்லை.

''ஹ்ம்ம்... என்ன செய்யலாம்?''என்று யோசிக்கும் போதே,

''ராக்காத்தா... அய்யா இன்னைக்கு விறா மீனு வாங்கிக் கொடுத்தனுப்பி இருக்காக... இந்தா...'' என்றபடியே வந்தான் காத்தவராயன்.

ஒரு முடிவுக்கு வந்தவளாய், அடுக்களைக்குள் சென்றவள், ''ராக்காத்தா... நீங்க வயக்காட்டுக்குப் போங்க.. நா சோறாக்கிக்கிடுதேன்!'' என்றாள் முதியவளிடம்.

இவள் சோறாக்கும் லட்சணம் தெரிந்த ராக்காயி, ஒரு நிமிடம் அதிர்ந்தே போனாள் எனலாம்! பின்னே, இவ்வளவு நாளும் முதலாளியும் முதலாளியம்மாவும் ஒத்து வாழ்ந்த அழகைக் கண்டவளுக்கு, இன்று என்ன வேதாளம் என்று பக்கென்று இருந்தது.

''இல்ல தாயி.. சின்னய்யா ஒன்னைய ஒரு வேல செய்ய விடக் கூடாதுன்னுட்டு சொல்லியிருக்கு... வேணாம் தாயி! நானே பாத்துக்கிடுதேன்!'' என்றாள் அவள் வேறுவிதமாய்.

''ஹோ! ஒங்க சின்னய்யா சொன்னா கேட்பீக... நா சொன்னா கேட்க மாட்டீக...'' என்று மலர் கேட்டப் பாவனையில், அந்த இடத்தைக் காலி செய்தவள்தான், ராஜதுரையின் உரக்கடையில் தான் நின்றாள்.

கணக்கேட்டில் பார்வையைத் பதித்திருந்த ராஜதுரை, ''என்ன ராக்காத்தா.. இந்நேரம் இங்கன நிக்குறவ?'' என்றான் தலையை நிமிர்த்தாமலேயே.

''அய்யா.. சின்னப்புச்சி.. இன்னைக்கு சின்னம்மா சமைக்கிறேன்னுட்டு, என்னைய வெரட்டி விட்டுப்புடுச்சுய்யா..'' என அவள் மூச்சிரைக்கச் சொல்லி முடித்தது தான் தாமதம், ராஜதுரையின் மூச்சு ஒரு வினாடிக்கும் மேலாய் நின்றுவிட்டது!

''ஹய்யகோ!!'' என்ற மலைப்பைத் தவிர வேறெதும் தோன்றாமல், அடுத்த அரை மணி நேரத்தில் வீட்டிலிருந்தான் ராஜதுரை.



உள்ளே நுழைகையில், அடுக்களையிலிருந்து எதுவும் வாசம் வருகிறதா என்று ஒரு நப்பாசையில் மோப்பம் பிடித்துக் கொண்டே வந்தவனுக்கு, வெங்காயம் வெட்டிய வாசனை மட்டுமே வந்தது!

''அய்யய்யோ... திரும்பவுமா? ஆரம்பிச்சிட்டாளே!'' என்று வயிறு நொந்துப் போனது!

வேகமாய் வந்து, உணவு மேஜை அருகே விரைந்தால், பெரிது பெரிதாய் நான்கு பாத்திரங்கள்.

ஒன்றொன்றாய் திறந்தவனின் முகம் அஷ்டகோணலாகியது! ஒன்றில் பழைய சோறு, மற்றொன்றில் துளி யூண்டு ஊறுகாய், அடுத்ததில் இரண்டு பச்சை மிளகாய், நான்காவதில் பத்து வெங்காயம்! மனுஷனுக்கு எப்படி இருக்கும்?

அவன் திகைத்து நின்ற வினாடிக்கு மறு வினாடி, ''ஹ்ஹஹா!'' என்ற வெடிச் சிரிப்பு, அடுக்களைக்குள்ளிருந்து கேட்டது!

சிரிப்பை அடக்க முடியாமல், வாயைப் பொத்திக் கொண்டு அடுக்களையிலிருந்து வெளிவந்தாள் பொன் மலர்.

''அடிப்பாவி மவளே! என்னைய பாத்தா.. ஒனக்குக் கேனப்பய மாதிரி இருக்குதோ! ஏன்டி... இப்படிச் செய்யுதே? என்னையால பழைய சோறு திங்க முடியாது, மலரு! மனுசனக் கொல்லாதடி!'' - கத்தலில் தொடங்கிக் கெஞ்சலில் முடிந்தது, ராஜதுரையின் பேச்சு.

அவனிற்குப் பதிலாய் எப்பவும் பார்க்கும் ஒரு பார்வையைக் கூடச் சிந்தாமல், வேகமாய் அடுக்களைக்குள் சென்று, இரண்டு இரண்டுப் பாத்திரங்களாய்

எடுத்து வந்து, உணவு மேசையை நிரப்பினாள், அவன் மனைவி.

திகைத்து விழித்துக் கொண்டிருந்த ராஜதுரையை, அவள் கடைசியாய் ''நங்'' என்ற சத்தத்துடன் வைத்தப் பாத்திரம் இயல்பு நிலைக்கு மீட்டு வந்தது!

உடம்பின் ஓரோர் அசைவிலும் திமிரைக் காட்டி, அவள் அறைக்குள் நடந்து செல்வது ஓரக் கண்ணில் பட்டப் போதும், அவள் கொண்டு வந்து வைத்தப் பாத் திரங்களை வேகமாய் திறந்து ஆராய்ந்தான், ராஜதுரை.

மீன் குழம்பு, மீன் வறுவல், பருப்புத் துவையல் என்று வாசமே ஆளைக் கொன்றது!

''மலரு...'' என்ற சந்தோஷக் கூவலுடன், அறைக்குள் செல்லத் திரும்பியவன், ஓர் முடிவுக்கு வந்தவனாய், தட்டில் சோறிட்டு, அவளுக்குப் பிசைந்து எடுத்துச் சென்றான்.

ஆனால், இப்போது மலர் அதை வாங்கும் மனநிலை யில் இருக்கவில்லை!

ஒரு வேகத்தில், சமையற்கட்டிற்குள் சென்று சமைத்து விட்டாள்! ஆனால், சமைத்து முடிக்கும் தருவாயில் ''ஏய் மலரு... அவன் மேல ஒனக்குக் கோபம் போயிருச்சாடி? ஒரு வாரத்தில... ஒன்னைய சாச்சுப்புட்டானா? இல்ல.. அவனோட ஆச வார்த்தையில மயங்குற அளவுக்கு நீ முட்டாக்கழுதயாப் போனியா?'' என்று ஆரம்பித்தக் கேள்வி,

அவன் வந்து உணவு மேசையை ஆராய்கையில் கொஞ்சமாய் மட்டுப்பட்டு,

அவனது ''என்னையால பழைய சோறு திங்க முடி யாது!'' என்ற வாக்கியத்தில் மீண்டும் மேலெழும்பி வந்துவிட்டது!



''இவனால... பழைய சோறு திங்க முடியாது! ஆனா... என்னால ஊரு முன்னாடி அவமானப்பட மட்டும் முடி யுமா? இவன் ஆத்தாக்காரிக்கிட்ட சூடு பட முடியுமா? இல்ல ஊரில அம்புட்டுப் பேரு முன்னாடியும் ஈனச்சிறுக் கியா நிக்கத் த்தேன் முடியுமா?'' என்று மனதின் அடி மட்டத்திற்குச் செல்லத் தொடங்கியக் கோபமெல்லாம், புத்துயிர் பெற்று மேலே எழும்பின.

அந்தக் கோபம் முகத்தில் அப்பட்டமாய் வெளிப் பட்டுவிட, ''இந்தா மலரு... சாப்பிடு!'' என அவன் நீட்டிய உணவை வாங்க மறுத்தாள் பொன்மலர்.

''ஏம் மலரு? வாங்குடி!'' என்று வற்புறுத்தியவன்,

ஒரு வாயைச் சோறை வலுக்கட்டாயமாக அவளது வாய்க்குள் வைக்கப் பார்த்தான்.

அவ்வளவு தான்! வாயிலிருந்த உணவை, ஒரே உந்தலில் ''தூ...'' என வெளியே துப்பினாள் பொன்மலர்.

தன் கையை மீறிக் கொண்டுத் துப்பப்பட்ட உணவைக் கண்ட ராஜதுரைக்கு, ''ஏம் மலரு? ஏன் இப்படிச் செய்றே?'' என்று கோபம் தலைக்கேறியது!

அவன் பக்கம் சாயத் தொடங்கிய மனதை எண்ணி, மலருக்குத் தன் மீதே ஏகப்பட்டக் கோபம்! இப்போது, ராஜதுரையின் கோபமும் சேர்ந்துக் கொள்ள, ராஜதுரை நின்றிருந்தப் பக்கத்திற்கு மறுப்பக்கமாய், கட்டிலை விட்டு இறங்கினாள்.

ராஜதுரைக்கு மனைவியின் செயலில் அர்த்தம் விளங்கவில்லை. அவனுக்குப் பிடித்ததைச் சமைத்து விட்டு, ஏன் இப்படி ஓட வேண்டும் என்ற கேள்வியே பிரதானமாய் இருக்க,

ஒரே எட்டில், மலர் இறங்கியப் பக்கம் சென்றவன், ''என்ன மலரு? ஏன் ஓடுறே? வாடி இங்க!'' என்று அவளது கைப்பற்றி, சுண்டி இழுத்தான்.

அவன் இழுத்த வேகத்தில், மலர் அவனிடம் வந்துவிட்டப் போதும், இன்னமும் முழுதாய் ஆறியிராதத் தீக்காயத்தில் அவனது விரல்கள் அழுந்தப் பதிய, கொஞ்சம் கொஞ்சம் சதசதவென இருந்த இடத்தில், அவனது விரல்களின் இறுக்கம் கூடி, பெரும் வலியை அவளும் விதைத்தது!

ஆனால், அந்த நேரத்திலும் மலர் கத்தவில்லை! தன் மௌன யுத்தத்தைக் கைவிடவில்லை! தனக்கு அவன் மேலிருக்கும் கோபத்திற்கு அத்தாட்சியாய், அந்த இதழ்ப்பூட்டு சத்தியாக்கிரகத்தை நடத்திக் கொண்டிருந் தவள், ''ச்ச்ச்ச்ச்ச்ஸ்'' என்ற உதட்டுக் கடிப்பில், தன் வலியைப் பொறுத்தாள்!

''ஐயோ.. கைய அமுக்கிப்புட்டேனா.. ஐயோ.. கூறுகெட்டத் தனமா அமுக்குப் புட்டேன்... மன்னிச்சுக்க மலரு.. ஐயோ..'' என்று அவன் பதறியதில், துளியும் நாடகத்தன்மை இல்லாதப்போதும், மலரின் கோபம் மட்டுப்படவில்லை.

அதன் விளைவாய், மலர் அன்று முதல் தானே உணவை அள்ளி உண்ணத் துவங்கினாள்!

''ஏம்.. மலரு.. ஏம் மலரு..'' என்று பரிதவித்துக் கெஞ்சு வதைத் தவிர, அவனால் எதுவும் செய்ய முடியவில்லை.

சாண் ஏறினால் முழம் சறுக்கும் இந்த நிலையை எண்ணி, மனம் நொந்துப் போனான் ராஜதுரையும்! அதைத் தவிர வேறென்ன செய்ய முடியும் என்று சும்மாவும் இராமல், அடுத்த நாளே, தனக்குச் சமைத்துப்



போட்டக் கைகளுக்குத் தங்க வளையல் வாங்கி வந்தான்!

இரவு வரையிலும், அந்த வளையலை வெளியே எடுக்காமல் இருந்தவனின் மனம், ஒரு இருபது வயது இளைஞனின் மனநிலையில் துள்ளிக் கொண்டிருந்தது!

மலருமே, இது நாள் வரை அவனிடம் ஏன் நெகிழ்ந் திருந்தோம்? ஏன் நேற்று அவனிடம் கோபப்பட்டோம்? ஏன் அதற்குத் தன் மீதே கோபமாய் இருக்கிறோம்? ஒருவேளை, அவன் மீதானக் கோபம் போயே போயிற்றா? அதெப்படிப் போகலாம்? போகக் கூடாது? என்று ஆயிரமாயிரம் கேள்விகளினூடே குழம்பியிருந் தாள்!

இரவு உணவை ராக்காயி பரிமாற, மௌனமாய்க் கழிந்த அந்த நேரத்தைத் தொடர்ந்து, மலர் படுக்கையில் விழுந்தாள்.

சற்று நேரத்திற்கெல்லாம், கண்கள் சொக்கிவிட, மலர் ஆழ்ந்தத் துயிலுக்குள் சென்ற சிறிது நேரத்தில், மலரின் கரங்களில் ஏதோ ஊர்வதுப் போலிருந்தது.

அப்புறம், சின்னதாய் ஓர் சிணுங்கல்! சன்னமாய் ஓர் குலுங்கல் ஒலி!

மலரின் தூக்கம் கலைந்துப் போயிற்று!

மெல்ல விழி மலர்த்திப் பார்த்தவளைப் பார்க்கப் பார்க்க, ராஜதுரையின் நெஞ்சம் சாரதி இல்லாத குதிரை வண்டியாய்த் தறிக்கெட்டு ஓடியது!

''ஹய்யோ! ஹய்யோ!'' என்று நெஞ்சிடும் ஓலம், தொண்டை வழியே கேட்டுவிடுமோ என்று பயந்துப் போனான் அந்தச் சண்டியன்! அவனைப் பார்த்து

அவனுக்கே சிரிப்பாய் இருந்தப் போதும், மலரின் கண்மணிகள் வளையலைச் சுற்றிச் சுற்றி ஆராயவும், மனம் படபடத்துப் போனது!

''ஹய்யோ! என்ன செய்யக் காத்திருக்காளோ... தூக்கி எறிஞ்சிடுவாளோ... ஏளனமாய் சிரிப்பாளோ...'' என்று கற்பனைத் தறிகெட்டு ஓட,

அவளது முகத்தையும் கையையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆனால், அவனது எதிர்பார்ப்பை எல்லாம் பொய் யாக்கி விட்டு, மெல்லத் திரும்பிய மலரின் பார்வை, அவனிடம் படிந்து மீண்டது! ஆனால், அந்தப் பார் வையில் கோபமில்லை. ஏளனமில்லை. வெறுப்பில்லை. மாறாய் ஓர் கேள்வி மட்டுமே கொக்கிப் போட்டு நின்றது!

அவள் கேட்க வருவதை உணர்ந்தவனாய், ''நேத்து போட்ட சோத்தோட ருசிக்கு... ஒனக்குத் தங்கத்தில் காப்பு வாங்கியாரணும் போல இருந்துச்சு.. அத்தேன்...'' என மெல்ல இழுத்தான், ராஜதுரை.

அதற்குப் பதிலாய், அவனை ஏற இறங்க ஒரு முறைப் பார்த்தவள், கையைத் திருப்பித் திருப்பி ஒரு முறைப் பார்த்துவிட்டு, கழுத்திலிருந்த தாலியை எடுத்து ஒரு முறைப் பார்த்தாள். பின்னர், ஏளனமாய் உதடுப் பிதுக்கி விட்டுப் படுத்துக் கொண்டாள்!

சப்பென்று முகத்தில் அறை வாங்கியது போலிருந்தது, ராஜதுரைக்கு!

''ஏற்கனவே கழுத்துக்கு மாட்டியாச்சு... இன்னைக்குக் கைக்குக் காப்பாக்கும்!'' என்பது அப்பார்வையின் ஓர் அர்த்தம் மட்டுமே எனத் தோன்றியது அவனுக்கு!



அதைத் தவிரவும், அப்பார்வைக்கு ஓராயிரம் அர்த்தங்கள் இருந்த போதும், ஒன்று கூட நல்லவிதமாய் இருக்க வில்லை என்பது அவன் மனதை அறுக்கவே செய்தது!

''இல்ல... தொவண்டு போவாத ராசு! அவ மேல நீ வச்சிருக்கது நெசமான நேசம். பொய்ச்சுப் போவாது!'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டவனின், ''எப்படியும் மாற்றிவிடலாம்'' என்ற எண்ணம், அடுத்து வந்த சில நாட்களில் சிதைந்துப் போயிற்று!

வளையல் மாட்டிய இரவிற்குப் பின்னர், நாட்களும் நகர்ந்து மாதங்களாய் மாறின!

மலரின் கல்லூரியில் தேர்வு நெருங்கிவிட்டதால், இந்த முறைப் படிக்க இயலாது... அடுத்த செமஸ்டரில் பார்க்கலாம் என்று விட்டிருந்தனர் கல்லூரித் தரப்பினர். ஆதலால், மலர் வீட்டிலேயே இருக்க வேண்டியதாப் போக, ராஜதுரையும் மாநாட்டு வேலைகளில் தனது நேரத்தைத் தொலைத்திருந்தான்.

பேசாத அவளிடம், ஓயாது பேசும் வேலையை மட்டும் விடாது செய்த ராஜதுரையால், பெரிதாய் ஓர் முன்னேற் றத்தையும் ஏற்படுத்த முடியாமல் போக, ''மாநாடு முடியட்டும்... பாத்துக்கிடலாம்...'' என்று நாட்களை நகர்த்தினான் அவனும்.

மாநாடும் முடிந்தது! அவனும் வீடு திரும்பினான்!

பல நாள் அலைச்சலுக்குப் பின்னர் வீடு திரும்பிய வனுக்கு, மலரைப் பார்ப்பதே சந்தோஷத்தைக் கொடுக்க, கை-கால் கழுவியவாறே, மலரை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு, அவளிடம் ஏதோ மாற்றம் இருப்பது போல் தெரிந்தது!

'கண்ணெல்லாம் டொக்கு விழுந்து... கன்னம் ஒட்டிப் போயி... கழுத்தெலும்பு தெரியுதே... என்னாச்சு? மேலும் (உடம்பும்) ஒண்ணுமில்லாம கெடக்கே? ஒருவேளை... என்னைய அஞ்சு நாளாப் பாக்கலைன்னாலும், சோர்ந்துப் போயிட்டாளா? க்கும், போயிட்டாலும்! ஹ்ம்ம்... பொறவு என்ன? நா இல்லாத நேரமா பாத்து ஆத்தா எதுவும் பேசியிருக்குமா? இல்லையே... காத்தன் யாரும் வந்ததா சொல்லலையே... என்னவா இருக்கும்? ஊரில எவளாவது பேசியிருப்பாளா? இவ எங்கனயும் போனாளா? இல்லையே... போவ மாட்டாளே! மருதக்கு வாடின்னு சொன்னதுக்குக் கூட.. பேச்சில்லையே... ஏன் ஒரு மாதிரியா சோந்துப் போயி இருக்குதா? வாயைத் தொறந்து சொல்லவும் மாட்டாளே!' - யோசித்துக் கொண்டே வந்த ராஜதுரையின் மூளையுடன் சேர்த்து, அவனது கண்களும் மலரின் மேனியில் முன்னேறின.

சட்டென, மலரலவளின் வயிற்றில் நேரக்குத்தி நின்றது பார்வை! பின்னே, அந்த வயிறு மேடிட்டு அல்லவோ இருந்தது! நன்றாகவே மேடிட்டு இருந்தது! கண்டிப்பாக, நாலோ ஐந்தோ மாதமிருக்கும்! ஐந்தல்ல... அவர்கட்குத் திருமணம் முடிந்து நாலரை மாதம் தானே ஆகிறது! இவ்வளவு நாளாகியும், அதை வெளியே சொல்லாமல்... பாவி.. பாவி.. பாவி! நெஞ்சம் கொதித்துப் போயிற்று, ராஜதுரைக்கு!

அந்த மேடு, அவன் வாழ்வில் விழுந்துவிட்டப் பள்ளத்தைப் படம்பிடித்துக் காட்ட, ''ஏய்... உண்டாகி இருக்கியாடி? இதக் கூட என்கிட்டச் சொல்ல முடியல இல்ல! அப்படிப்பட்டப் பாவியாகிப் போனேனாடி... பாதகத்தி!'' என்று கூவியபடியே, அவளை நோக்கி விரைந்தவன், அவளைப் பிடித்து உலுக்கினான்.



# 20

நெஞ்சு உலைக்களமாய் கொதித்துக் கொண்டிருந்தது, ராஜதுரைக்கு!

கரு உண்டானதைக் கூடத் தன்னிடம் சொல்லாத அவளது பிடிவாதத்தைக் கண்டு, நெஞ்சம் துணுக்குற்றப் போதும், கோபமே பிரதானமாய் அவனை ஆட்டிப் படைத்தது!

யாரோ சவுக்கால் விசிக்... விசிக் என்று சுழட்டி சுழட்டி, முதுகைப் பதம் பார்த்தது போல், உடம்பும் மனமும் அவமானத்தால் சிவந்துப் போயின!

இதே அவமானத்தை அவளுக்குத் தான் கொடுத்தோம் என்ற உண்மை உறைக்காமல், நான்கு (அவன் ஊகப்படி நான்கு மாதம்) மாதக் கர்ப்பிணியான மலரை உலுக்கிக் கொண்டிருந்தான், ராஜதுரை.

''ஏன்டி.. ஏன்டி.. ஊமச்சியாடி நீயி? என்ன வாயி பேசுவே? இப்ப எங்கடிப் போச்சு அம்புட்டும்.. அடிப் பாவி! என்னைய இப்படிப் பாவி ஆக்கிட்டியேடி!'' - ஆத்திரம் கண்ணை மறைக்க, அவளிடம் கத்திக் கொண்டிருந்தான்.

''நா செஞ்சது தப்புத் த்தேன்... அதுக்காக இப்படியா? அதுக்காவ நா வருந்தாத நாளில்லடி, சண்டாளி! ஆனா.. நீயி! புள்ள உண்டானதைக் கூடச் சொல்லாம என்னடி

அப்படிக் கோவம் உனக்கு?'' என்றவன், அவளது தாடையை வலக்கையால் பிடித்து, ஒரு பக்கம் பெரு விரலாலும் மறுபக்கம் மற்ற நான்கு விரல்களும் அழுத்தினான்.

அவன் முற்றும் ஆடிப் போயிருப்பது, மலருக்குப் புரிந்தது!

வருந்தட்டும்! கோபப்படட்டும்! துடிக்கட்டும்! தவிக்கட்டும்! - நானும் தானே எல்லாம் பட்டேன் என்று வன்மம் ஏறிக் கொண்டே போனது அவளுக்கும்!

வீட்டிற்குள்ளே அவன் கொஞ்சும் கொஞ்சலுக்கு ஈடாய், ஊருக்கு முன்னே அவன் தன்னை இழிவுப் படுத்தியதை மறக்க முடியவில்லை, அந்த உத்தமியால்.

தன் பலம் கொண்டு அவனது கையைத் தட்டிவிட்டவளின் பார்வை, அவனைக் கூறுப்போட்டது!

கையை விலக்கிக் கொண்டபோதும், மலர் அந்த இடத்தை விட்டு நகரவில்லை.

கணவனின் கோபம் படிந்தக் காந்தக் கண்களை நேர்கொண்டு பார்த்தாள்!

''நீ கேட்டியாய்யா? நா கதறுனப்போ... நீ கேட்டியா? அப்போ காதே கேட்காதவன் மாதிரி இருந்திட்டு.. இப்ப ஏஞ்சொல்லலைன்னு கத்துறே? நா சொல்லையில நீ கேட்கல.. இப்ப நா சொல்லல!'' என்று அவளது பார்வை அவனது சட்டையைப் பிடித்து உலுக்க, ராஜதுரையின் கோபம் குற்ற உணர்வாய் மாறிப் போனது!

அந்தத் துளைக்கும் பார்வைக்குப் பின்னர், மெல்லத் திரும்பி அறை நோக்கி நடந்தாள் மலர். நின்ற இடத்திலேயே சமைந்தான், ராஜதுரை!



''இம்புட்டு அடமா இருக்குதாளே!'' என்று ஆயாசமாய் வந்த நெஞ்சை,

''அடேய்! அவளுக்கிருக்க வம்மதுக்கு... வயுத்தில இருக்க உம் புள்ளையை ஒண்ணுஞ்செய்யாமே இருக்குதாளேன்னு... மனசு சந்தோசப்படு! அத விட்டுப்புட்டு.. ஆடுறான்!''என்று அதட்டியது மூளை.

இந்த எண்ணம் தோன்றியதும் தான், கோபத்தைப் பின்னே தள்ளி, பிள்ளையை முன்னே கொண்டு வந்தான், ராஜதுரை.

தன் கர்வம்... கோபம்.. ஆத்திரம்... ஆணவம் என்று அனைத்தையும் மூட்டைக் கட்டிவிட்டு, மலர் சென்ற அறைக்குள் சென்றவன், ''வா மலரு... ஆஸ்பத்திரிக்குப் போயி... எல்லாம் சரியா இருக்கான்னு பாத்திட்டு வந்துடுவோம்!'' என்றான் கெஞ்சல் குரலில்.

அவன் ஒருவன் பேசினான் என்பதே தெரியாதவள் போல், மலர் கட்டிலில் படுத்துக் கொள்ளவும், ராஜதுரையால் பொறுமையை இழுத்து வைக்க முடியவில்லை.

''இதென்ன கூமுட்டைத் தனமா?'' என்று வந்த ஆத்திரத்தைப் பல்லைக் கடித்து அடக்கிக் கொண்டு,

''இம்புட்டு நாளும்.. இந்த விசயத்தைக் கூடக் கண்டுக்க முடியாத கூறுகெட்டவனா இருந்திருக்கேன்... போகுது! ஆனா... இப்பத் தெரிஞ்ச பொறவு.. என்னால சும்மா இருக்க முடியாது.. மலரு! வா! மருவாதையா எழுந்திரு!'' என்றான் அவள் கைப்பிடித்து இழுத்து.

ஆனால், பிடிவாதத்திற்குப் பிறந்த அந்தக் கிராமத்து மனுஷியோ, கையை உருவிக் கொண்டு, மீண்டும் படுக்க, ''வேணாம் மலரு! நா ஏற்கனவே... கோவத்த மட்டுப்படுத்த முடியாம இருக்குதேன்! என்னைய

மொரடனாக்கிப் பாக்காத!'' என்ற ராஜதுரையின் வாய் வார்த்தையை உதிர்க்க, கைகள் மலரை அள்ளிக் கொண்டு சென்றன.

வலுக்கட்டாயமாய் அவளை வண்டியில் ஏற்றியவன், தானே வண்டியை ஓட்டினான்.

வண்டியில் ஏறிய பின்னர், முரண்டுப் பிடித்து ஒன்றையும் சாதிக்கப் போவதில்லை என்பதோடு, அவளுக்குமே குழந்தை நன்றாக இருக்கிறதா எனத் தெரிந்துக் கொள்ள வேண்டியிருந்தது.

கண் மூடி சீட்டில் தலைச் சாய்த்திருந்தவளைப் பார்க்கப் பார்க்க ராஜதுரைக்கு உண்டானக் கோபம், மருத்துவமனையை அடைவதற்குள் பரிதாபமாய் மாறிப் போனது!

பெண்களுக்கு இந்த நேரத்தில், எவ்வளவோ சோர்விருக்கும்... வலியிருக்கும்... ஆசையிருக்கும்.. தாய் வீடு செல்ல வேண்டும் என்ற பாசமிருக்கும்... கணவனின் தோள் சாய நேசமிருக்கும்..ஆனால்... இவள்? எதையுமே அனுபவிக்கவில்லையே!

தனது முரட்டுக் காதல், அவளை என்னவெல்லாம் இழக்க வைத்திருக்கிறது? கடவுளே!

சில நாட்களாய் அவள் தன்னிடம் இணக்கமாய் இருந்தது கூட, அவளது கோபத்தையும் மீறி, இந்த மாதிரி சமயத்தில் உண்டாகும் ஏக்கத்தினால் தானோ?

ஹய்யோ... அவள் உண்டாகியிருக்கிறாள் என்பதை உணரக் கூட முடியாத முட்டாளாய்ப் போனோமே!

ச்சே... அவள் கருவுற்றிருக்கும் வேளையில்... எப்படிப்பட்ட வேதனையை அனுபவித்து விட்டாள்!? சூடுப்பட்டு.... அதை விடச் சூடாய்ப் பேச்சுக் கேட்டு! ஐயோ பாவம்!



மனைவி மீது தோன்றியப் பச்சாதாபத்தை உள்ளுக்குள்ளேயே வைத்துப் புதைக்க முடியாமல் கஷ்டப்பட்டவன், அவளை அழைத்துக் கொண்டு மருத்துவமனைப் படி ஏறினான்.

ரத்தப் பரிசோதனைக்குப் பின்னர், மகப்பேறு மருத்துவரிடம் அனுப்பினர் செவிலியர்கள்.

அவர் முதலில் கேட்டக் கேள்வி, ''இதுக்கு முன்னாடி எந்த டாக்டர்கிட்டம்மா காட்டுனீங்க?'' என்பது தான்.

அவன் சொல்லட்டும் என்று மலர் வேறு பக்கம் பார்க்க, ''கிராதகி!'' என்று பல்லைக் கடித்த ராஜதுரை,

''யார்ட்டையும் காட்டலைங்க மேடம்!'' என்றான் உள்ளே சென்ற குரலில்.

''என்னது காட்டலையா? மூணு மாசம்... ஹ்ம்ம்... இன்னும் பத்து நாள் போனா நாலு மாசமாகிடும்! ஏன்... இன்னும் காட்டலை?'' என்றார் அவர் காட்டமாய்.

என்ன சொல்வான் அவன்? எனக்கே தெரியாது என்றா? அப்படிச் சொன்னால், ''நீ அவ புருஷன் தானே?'' என்று நாக்கைப் பிடுங்கிக் கொள்ளும்படியானக் கேள்வி வரும்.

பல்லைக் கடித்தபடியே, ''அது... அது... வந்து..'' என்று இழுத்தவன்,

''எங்களுக்குள்ள ஒரு சின்ன வெசனம்... மேடம்! அத்தேன்...'' என்றுவிட்டு, அவர் பார்த்த விநோதப்பார்வையைக் கிடப்பில் போட்டவனாய் ''போனது போச்சுது! இப்பப் பாருங்க.,. மேடம்!'' என்றான் இன்றைய நிலைக்கு அவரை இட்டு வந்து.

''ம்ம்...'' எனக் கூறி, மலரின் கரங்களைப் பற்றியவர், அதிர்ந்தார்.

''இதென்ன இவ்வளவு பெரிய சூடு?'' என அவர் பதற, இப்போது மலரின் பார்வை எதிரே இருந்தக் குழந்தைப் படத்தைப் பார்ப்பதில் மும்மரமாய் இருந்தது.

''அது... அது...'' என்று இழுத்தவன்,

''அந்தச் சூடு த்தேன் ஆறிப் போச்சுதே மேடம்! இப்ப.. அவ வயுத்தில இருக்கப் புள்ளையைப் பாருங்க..''

''பாத்தா படிச்சவர் மாதிரி இருக்கீங்க! ஆனா.. காட்டான் மாதிரி பேசுறீங்க!'' என அவனைக் குத்திவிட்டு,

''இந்த தழும்பப் பார்த்தா... உங்க பொண்டாட்டிக்கு முப்பது நாளா இருக்கும் போது... சூடு பட்டிருக்கும்ன்னு நினைக்கிறேன்... என்னம்மா அப்படித் தானே?'' - தன் கணிப்பைக் கூறி, மலரிடம் ஆமோதிப்பைக் கேட்டார், மருத்துவர்.

மலரின் தலை ''ஆம்..'' என்பது போல் அசையவும், ராஜதுரைக்கு வந்தக் கோபத்திற்கு, ஒளியின் வேகத்தைக் கூட அளவாக்க முடியாது!

ஆனால், அதை உணரும் நிலையில் மலரும் இருக்கவில்லை. மருத்துவரும் இருக்கவில்லை.

''அந்த நேரத்தில... சூடுபட்ட வலி தெரியாம இருக்க.. ஏகப்பட்ட மாத்திரை கொடுத்திருப்பாங்க! அதெல்லாம் புள்ளய பாதிக்காம இருந்துச்சான்னு தெரியல! நீங்க பாட்டுக்கு... ஆறினக் காயம் தானேங்கிறீங்க...'' என்றார் கோபமாய்.

ராஜதுரை பதில் சொல்வதற்கு முன்னர், ''இல்ல டாக்டரம்மா, நா அவுகக் கொடுத்த மாத்திர எதையும் உங்கல'' என்றாள் மலர்.



''அடிப்பாவி!'' என்று வந்தது ராஜதுரை.

''ஹோ... சரி! ஆனா... ஏன்மா முன்னாடியே சொல்லியிருக்கலாம் இல்ல?''என்றார் அவர், மனத்தாங்கலுடன்.

இப்போது மலரின் பதில் மௌனமாகிப் போக, ''சரி விடு! உங்க ரெண்டு பேருக்குள்ள இருக்கக் கோபத்துக்குப் பிள்ளையைப் படுத்திட்டீங்களேன்னு கேட்டேன்...'' என்று விட்டு,

அவளை ஆராயத் தொடங்கினார்.

அவரது பார்வை ரத்தப்பரிசோதனை அறிக்கையில் இருக்க, ''மேடம்... மசக்கயில இருக்கையில... வாந்தி.. மயக்கம்... தலை சுத்தல்ன்னு இருக்குமே? இவளுக்குமே.. எதுவுமே நருசா இல்லையே?'' என்று தன் நெடுநேரச் சந்தேகத்தை எடுத்து வைத்தான்.

''எல்லாருக்கும் எல்லாமும் இருக்காது... ராஜதுரை! சிலருக்கு சில மாறுதல்கள் உடம்பில இருக்கும்... சிலருக்கு இருக்கவே இருக்காது! எப்படி ஒரோருத்தருக்கும்.. வேற வேற முகங்கள் இருக்கோ... அது மாதிரி இதுவும்! அவங்கவங்க உடல் அமைப்பைப் பொறுத்தது!'' என்றார் அவர் மருத்துவராய்.

அடுத்ததாய், ''இம்புட்டு நாள்... சரியான மாத்திர மருந்து சாப்பிடாம இருந்ததால... இவளுக்கோ... புள்ளைக்கோ எந்தப் பாதிப்பும் இருக்காதில்ல மேடம்?'' என்றான் அவன் பயத்துடன்.

''ஹ்ம்ம்... தெரியல! இன்னும் ரெண்டு மூணு டெஸ்ட் எடுத்திட்டு வாங்க! பாப்போம்! அப்புறம்... ஒரு ஸ்கேன் எழுதித் தரேன்.. அதைப் பார்த்திட்டு வந்ததும் தான், என்ன நிலைன்னு என்னால தெளிவாச் சொல்ல முடியும்!'' என்றார் அவர் பட்டும்படாமல்.

ராஜதுரையைக் காட்டிலும், மலருக்குச் சற்றே பயம் அதிகமாக இருந்தது!

''முட்டாத்தனமா இருந்துப்புட்டேனோ? இவன் மேல இருந்தக் கோவத்தில... புள்ளைய வருத்திப் புட்டேனோ...''

''எம் புள்ளக்கு ஒண்ணும் ஆகிடக் கூடாது... அது நல்லா இருக்கணும், கருவியப்பா!''

''ஆமா.. எம் புள்ள தேன்! பத்து மாசம் எம் வயத்துக்குள்ள இருக்கிறதில்ல.. அது எம் புள்ள தேன்.. பத்து நிமிசம் சொகம் கண்டுட்டுப் போன அவன் புள்ள இல்ல அது!''

''எம் புள்ள நல்லா இருக்கணும்...'' - மனம் விடாதுப் பிரார்த்திக் கொண்டிருந்தது!

கைகள் லேசாய் சில்லிட, மனம் படபடவென்று அடித்துக் கொண்டது! சட்டென, அருகே நடந்து வந்த ராஜதுரையின் கரத்தை இறுகப் பற்றினாள், பொன்மலர்.

மலரின் மனநிலைக்குச் சற்றும் மாறாத தவிப்புடன் நடந்துக் கொண்டிருந்த ராஜதுரை, மனைவியின் இச்செயலில் ஒரு நிமிடம் திகைத்து நின்றான்.

ஆனால், அது ஒரு வினாடி தான்! சட்டென சுதாரித்து, ''பயப்படாத மலரு...'' என்றபடியே, அவளைத் தன் தோள்பக்கமாய் இழுத்து, அவளது தோளைச் சுற்றி அணைத்துக் கொண்டான்.

அவளுக்கும் அந்த இதம் தேவைப்பட்டது போலும்! கணவனின் கைகளை இன்னமும் இறுகப் பற்றியவள், அண்ணாந்து அவன் முகம் பார்த்தாள்!

அந்தப் பார்வை, ஆயிரமாயிரம் வார்த்தைகளுக்கு ஈடாகிப் போக, பிடித்திருந்த அவளது கரத்தை மெல்ல



அழுத்தி, ''நம்ம புள்ள நல்லா இருக்கும்.. வெசனப் படாத!'' என்றான் அவன் நம்பிக்கையாய்.

இருவரது பார்வையும் ஒன்றுக்குள் ஒன்று பரவி நின்ற வேளையில், ''பொன்மலர் யாருங்க...'' என்று குரல் கொடுத்தார், ஸ்கேன் எடுக்கும் பெண்மணி.

''இவ த்தேன்... இவ த்தேன்...'' என்று பறந்தவன், மலரை அழைத்துக் கொண்டு அவர் உள்ளே செல்லவும்,

''நானும் வரலாமா?'' என்றான் தணிவாய்.

''அதெல்லாம் கூடாது!'' என்று அவனைத் தள்ளாத குறையாய் வெளியே தள்ளிய ஊழியரை விட, நமட்டுச் சிரிப்புச் சிரித்த மலர் மீது கோபம் வந்தது ராஜதுரைக்கு.

''சும்மா கெடந்தவன... பாக்குற பார்வையிலேயே கொல்ல வேண்டியது! இப்ப... சிரிக்கிறதைப் பாரு...'' எனத் தோன்றிய எரிச்சல்,

நேரம் செல்லச் செல்ல, ''என்னவாகிறறோ... ஏதாகிறறோ?'' என்ற பதட்டத்தில் தொலைந்தே போனது.

அரை மணி நேரம் சென்று, மலர் வெளியே வர, ''என்ன மலரு... என்ன சொன்னாக...'' என்று ஆவலே வடிவாய்க் கேட்டவனுக்குப் பதிலாய், ஸ்கேன் அறையைக் கண்ணால் காட்டினாள் பொன்மலர்.

''இப்பக் கூடப் பேச மாட்டியாடி... சண்டாளி!'' என்று பல்லைக் கடித்தவனின் பற்களை அவனிடமிருந்து காப்பாற்றும் வண்ணம், ''இந்தாங்க... இந்த ரிப்போர்ட்ட எடுத்திட்டுப் போயி.. டாக்டர் கிட்டக் காட்டுங்க...'' என்று ஒரு பெரிய கவரை நீட்டினார், அந்தப் பெண்மணி.

மருத்துவரிடம் சென்றால், ஸ்கேன் ரிப்போர்ட்டையும், ரத்த அறிக்கையும் மாறி மாறி ஒரு இருபது

நிமிடம் பார்த்தவர், ''நா சந்தேகப்பட்டது சரியாப் போச்சு!'' என்று ஆரம்பித்தார் மருத்துவர்.

''ஐயோ... என்ன சந்தேகம்? என்ன சரியாப் போச்சு? எதையாவது சொல்லித் தொலைங்க...'' என்று எரிச்சல் வந்தது கணவனுக்கு. மனைவிக்குமே!

''என்னடா.. நாலு மாசந்தான் ஆகுது... வயிறு இவ்வளவு எடுப்பா தெரிய ஆரம்பிச்சிடுச்சேன்னு நினைச்சேன்...'' என்று இழுத்துக் கொண்டே சென்றவர்,

''என்ன மேடம்? மலருக்கு எதுனா கோளாறா? புள்ளக்கு எதுவுமா?'' என்று பதறினான் ராஜதுரை.

''அதெல்லாம் இல்லைங்க! உங்க மனைவி நல்லா இருக்காங்க.. உங்க குழந்தையும்... ம்ஹூம் குழந்தை சொல்லக் கூடாதே...'' என அவர் யோசிக்க,

''பொறவு.. என்ன சொல்றது? ஒரு வேள.. எலிக் குஞ்சு வளருதோ? இல்ல சிங்கக்குட்டி வளருதா?'' இவன் வேற... சிங்கம்.. சிங்கம்ன்னுட்டுப் பீத்திக்கிறானே...'' - சம்பந்தா சம்பந்தமில்லாமல் மலரின் கற்பனை ஓட,

''குழந்தை சொல்லக் கூடாது! குழந்தைங்க சொல் லணும்!'' என்றார் மருத்துவர் சந்தோஷமாய்.

''என்ன சொல்றீக மேடம்? ரெட்டப் புள்ளயா?'' என்று ராஜதுரை அதிசயிக்க,

''ரெண்டு இல்லைங்க.. மூணு! மூணு புள்ள! என் பத்து வருஷ சர்வீஸ்ல இப்படியொரு கேஸை... நா இப்பத் தான் பார்க்கிறேன்...'' என்றார் அவர் சந்தோஷமாய்.

மலரோ, மலர்ந்து... விரிந்து.. வசிகசித்து... சந் தோசித்து... ரசித்து, கடைசியில் ராஜதுரையின் கைகளை இறுகப் பற்றி, அவனது தோள் சாய்ந்துக் கொண்டாள், தன் சந்தோஷத்தின் சாட்சியாய்!



# 21

மருத்துவர் எழுதிக் கொடுத்த மருந்து மாத்திரைகளை வாங்கிக் கொண்டு, வீடு வந்து சேர்ந்த இருவருக்குமே, பெருத்த நிம்மதி! அளவில்லா சந்தோஷம்!

அவர்கள் வீடு வந்த நேரம், இரவு உணவு வேளை யாகிப் போக, ''மலரு.... சாப்பாடு எடுத்தாராவா? சாப் பிடுதியா?'' என்றான் ராஜதுரை, கட்டிலில் சோர்ந்து அமர்ந்த மனைவியிடம்.

எப்போதும் போல், ஒன்றும் சொல்லாமல்... கட்டிலை விட்டு எழுந்துக் கொள்ளாமல்... அவனை ஓர் ''தேவை'' பார்வை பார்த்துவிட்டு, கட்டிலில் சம்மணமிட்டு அமர்ந்தக் கொண்டாள் மலர்.

'எப்படித் த்தேன்... இவளால கண்ணாலேயே பேச முடியுதோ! வில்லி!' என்று மனதிற்குள் சீராட்டிக் கொண்டவன், உணவு எடுத்து வந்து ஊட்டினான்.

ஊட்டிய ஓரோர் வாய்க்கும், ராஜதுரையின் திட்டங்கள் பறைசாற்றப்பட்டன.

''இனிமே.. ஒனக்கு வாய்க்கு என்ன ருசியா இருக் குதோ... அதையே ராக்காத்தாவ சமைக்கச் சொல்லு...''

''இந்த நேரத்தில கோழி ஆவாதும்பாக.. சூடு! அதனால... வாங்கியார வேணாம்ன்னுட்டு காத்தன்ட்டச் சொல்லிடுதேன்...''

''வேற என்ன நாக்குக்குக் கேட்குதோ... அதை உண்ணு! என்ன சரியா?''

''காட்டில இருந்து.. நெதம் கீரைக் கொடுத்து விடுதேன்... ஹ்ம்ம்... பொறவு.. அந்த டாக்டரம்மா முட்டை உண்ணச் சொன்னுச்சே! கட முட்ட வேணாம்... பாண்டியோட பண்ணையில இருந்து நாட்டுக் கோழி முட்ட அனுப்பச் சொல்லுதேன்...''

''ஹ்ம்ம்... இளநீ குடிச்சுக்கோ... என்ன பழம் வேணும்ன்னு காத்தன்ட்ட சொன்னியான... உடனே வாங்கியாந்துருவான்...''

''ஹான்! காத்தன் பொஞ்சாதி.. பேச்சியை ஒனக்குத் துணைக்கு வரச் சொல்லுதேன்! ஆத்திர அவசரம்ன்னா ஒரு பொம்பளைத் தொணை வேணும்ல! ராக்காத்தாட்ட வெசயத்தைச் சொல்லி... வெளங்க வைக்கிறதுக்குள்ள.. எம் மூணு புள்ளல... ரெண்டு வெளிய ஓடியாந்துரும்...''

இப்படியாய், ஏகப்பட்ட முன்னேற்பாடுகள் என்று சாப்பாட்டு நேரத்தைப் பேச்சு நேரமாய் மாற்றிக் கொண்டிருந்தான் ராஜதுரை.

சம்பிரதாயத்துக்கு ஓர் ''உம்'' கூடக் கொட்டாமல், உண்பதே கடமையாய் இருந்தாள் மலர்.

உண்டு முடித்ததும், மாத்திரையை எடுத்து வந்துக் கொடுத்தவன், ''ஏய்டி! ஆமா.. முன்னே நா கொடுத்த மாத்திர அம்புட்டையும் என்னடி செஞ்சவ? நா கொடுக்கையில.. ஆவுன்னு வாயத் தொறந்து முழுங்குனியே...'' என்று ஆச்சரியப்பட்டுப் போனான், ராஜதுரை.

லேசாய் வரத் தொடங்கிய சிரிப்பை அடக்கிக் கொண்டு, வாய்க்குள்ளிருந்தத் தண்ணீரைக் குடித்து முடித்தவள், மெல்ல வாய்த் திறந்து, நாக்கை லேசாய் உயர்த்திக் காட்டினாள்!

தன் அடிப்பாகத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த மாத்திரையை, நாக்கு எடுத்துக் காட்ட,



''அடிப்பாவி... நா அங்கிட்டுப் போனதும்.. நீ இங்கிட்டு இந்த மாத்திரையைத் தூக்கி ஏறிஞ்சுப்புடுவே... அப்படித் தானே!'' என்று வியந்தவனின் விழிகள் விரிந்திருந்தன.

அவன் காட்டிய பாவனை சிரிப்பை உண்டு பண்ண, வேண்டுமென்றே நாக்கின் அடியே இருந்த மாத்திரையை எடுத்து, வெளியே வீசப் போனாள் பொன்மலர்.

''அடி வெளுத்துடுவேன்... கழுத! மருவாதையா முழுங்கு!'' என்று கை ஓங்கியவனின் செயலுக்கு மாறாய், மனைவியின் குறும்பை ரசித்துச் சிரித்தனக் கண்கள்!

அவள் மீண்டும் கொஞ்சம் தண்ணீரைக் குடித்து முழுங்கிய பின்னரும், ராஜதுரைக்கும் சந்தேகம் போகவில்லை.

அவளது முகத்தைத் தன் பக்கம் இழுத்தவன், வலுக்கட்டாயமாய் வாயைத் திறந்து, மாத்திரையைப் பதுக்கி வைத்திருக்கிறாளா என்று முதல் கட்டச் சோதனையை வெற்றிகரமாய் நடத்தி முடித்துவிட்டே அவளைப் படுக்க விட்டான்.

சிறு சிரிப்புடனே உறங்கிப் போனாள், பொன்மலர்! அந்தச் சிரிப்பில் மனம் நிறைந்தவனாய், ராஜதுரையும் உறக்கத்தைத் தழுவினான்!

அடுத்த நாள் விடிந்த நேரமில்லாமல், ராஜதுரை ஆணைகள் பிறப்பித்தப்படி இருக்க, ''நா அப்பாவாகப் போறேன்...'' என்று தம்பட்டம் அடிக்காதக் குறையாக, மலர் கருவுற்று இருப்பது அந்த வீட்டு வேலைக்காரர்களுக்குப் பரவியது! அது போதாதா என்ன? அடுத்த ஒரு மணி நேரத்தில், ''மலரின் தாய்மை'' அந்தக் கிராமத்தின் தலைப்புச் செய்தியாய் மாறிப் போவதற்கு? அதுவும், அவளது கருவிலிருக்கும் மூன்று சிங்கங்களும், வெளியே வரும் முன்பே, சூப்பர் டூப்பர் ஹிட்டாகிப் போயினர்!

இதுநாள் வரை, ராஜதுரையின் பண்ணை வீட்டிற்கு அடிக்கடி வராத பலரும், ஏதோ அதிசயத்தைக் காண வருபவர் போல, மலரைக் காண வந்தனர். சந்தோசம் கூட, ஒரு முறை வந்து மருமகளைப் பார்த்துவிட்டுச் சென்றார்! ஏச்சுப் பேச்சோடு தான்!

நாட்கள் இப்படியே வேகமாய்ச் செல்ல, ராஜதுரை மீதான மலரின் சார்பு நிலை, கூடிக் கொண்டே சென்றது.

ஒரு குழந்தை எனும் போதே, பெண்ணின் உடம் பிற்குள் ஏகப்பட்ட மாறுதல்கள் ஏற்படும்! இப்போது என்னடாவென்றால் மூன்று குழந்தைகள் வேறு! பெரும் அவஸ்தையாய் இருந்தது மலருக்கு! இன்ப அவஸ்தை!

எப்போது பார்த்தாலும், வயிற்றுக்குள் எதுவோ ஓடுவது போலவே இருந்தது!

இடது பக்கம் ஒரு நிமிடம் குறுகுறுத்தால், அடுத்த நிமிடமே வலது புறம் சுருக்கென ஒரு குத்து விழுந்தது!

ஹ்ம்ம் இரண்டு பக்கமும் தேய்த்துவிட்டுக் கொண்டு நிமிர்ந்தாள், அடி வயிற்றில் ஒரு முட்டு!

''ஸ்ஸ்ஸ்.. சத்த சும்மா இருங்க...'' - பிள்ளைகள் வயிற்றுக்குள் இருக்கும் போதே, நாட்டாமை வேலை பார்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டாள், பொன்மலர்.

முதல் மூன்று மாதங்கள் அவ்வளவாய் தெரியாத மசக்கை அறிகுறிகள் எல்லாம், இப்போது ஒவ்வொன் றாய் தெரியத் தொடங்கின. அதற்காக, முதல் மூன்று மாதங்களின் வாந்தி... தலைச்சுத்தல் எல்லாம் இப்போது முளைத்துவிடவில்லை. நான்கைந்து மாதங்களில் தென்படும், அதிகப் பசியும்.. ஒரு நமநமப்பும் அவளைப் பெரிதும் ஆட்டிப்படைத்தன.



நட்ட நடு இரவில், பேய் போல் பசிக்கும் வயிறை என்ன செய்வதென்றும் தெரியாமல், அதே சமயம் தானாய் சென்று கணவனை எழுப்பவும் முடியாமல், தவித்துப் போனாள் பொன்மலர்.

அன்றும் அப்படித்தான், இரவு பதினொன்று இருக்கும். மலருக்குப் பசிக்கத் தொடங்கி விட்டது!

''என்ன புள்ளைங்களா... ஒம்பது மணிக்குத் தானே ரெண்டு தட்டு சோறு சாப்பிட்டோம்... இப்ப என்ன?'' என்று தன் வயிற்றைத் தடவியபடியே பேசியவள் (ஆம்... வாய் விட்டுப் பேசியவள்),

''உங்கப்பாரு எழுந்தா... அமளித் துமளி த்தேன்... வெளிய படுத்திருக்க அலகனை எழுப்பி... நீங்க திங்க மீனு வாங்கியாரச் சொல்லுவாரு? பாவமில்ல... அவென்! மெரண்டு.. மெரண்டே... மாக்காப் போனான்...'' என்ற படியே எழுந்தவள், மெல்ல அடுக்களைக்குள் சென்றாள்.

அந்த வீட்டில், நகர்ப்புறத்தில் வாழ்பவர்களுக்கு நிகரான வசதிகள் இருந்தபோதும், குளிர்சாதனப் பெட்டி மட்டும் வாங்கவில்லை, ராஜதுரை.

''என்னைக்கோ வெளஞ்ச காயைப்... பதப்படுத்தித் திங்குறதா? கருமம்! அப்படியென்ன... சோத்துக்கா வக் கத்துப் போயி இருக்கோம்? நூறு பேருக்குச் சமைக்கிற அளவுக்குக் காட்டில காய் வெளையுது... அதை எடுத் தாந்து நெதமும் சமைக்கிறது!'' என்ற எண்ணத்தில், பெரிய வீட்டிலும் சரி, இந்த வீட்டிலும் சரி குளிர்சாதனப் பெட்டி இல்லை.

ஆதலால், எஞ்சிய சோறு ஒன்று வேலைக்காரிக்குப் போகும்! இல்லை, காவல் நாய்க்குப் போகும்!

''சோத்துக்கு வழியில்ல... கொஞ்சூண்டு கூழு காச்சித் தாரேன்... குடிச்சிட்டுப் படுத்துக்கிடணும் சரியா? சும்மா.. முண்டிக்கிட்டே திரியப்புடாது!'' என்று மக்களிடம் உடன்படிக்கைப் போட்டவள்,

கொஞ்சம் கேப்பையை எடுத்து, நீரில் ஊறப்போட்டு விட்டு, மிக்சியை சுத்தம் செய்தாள்.

ராக்காயி இருந்தால், மிக்சி வேலையே இல்லை. ஆதலால், அதைத் தூசுத் தட்டி எடுத்தவள், கேப்பை ஊறக் காத்திருந்தாள்.

ஆனால், அதற்குள் வயிறு ''கிர்.. கிர்'' என்று சத்தம் எழுப்பத் தொடங்கியது!

''ஷ்.. சும்மா இருங்க.. அம்மா சோறு தாரேன்... மம்... மூச்! மம்... சொல்றேன்னில்ல... சும்மா இருங்க! புள்ளகளா மூச்! இப்படியே பண்ணிக்கிட்டு இருந்தீக... பொறவு... நீங்க பொறந்ததும் அம்மா எங்கயானா போய்டுவேன்... ஹ்ம்ம் சாமிகிட்டப் போய்டுவேன்... உங்கப்பாரோடவே.. ஹா.. ஹா...'' - மலரின் வாய் வேகமாய் மூடப்பட்டதில் வார்த்தைகள் தடைப்பட்டுப் போயிருந்தன.

கண்ணை அகல விரித்துப் பார்த்தவளுக்கு, ராஜதுரையின் கோப முகமும், ''இன்னொரு வாட்டி... அந்த வார்த்த சொல்லாதடி! மனசு... வலிக்குது!'' என்ற நொந்த வார்த்தைகளும் விடை கொடுத்தன.

மெல்ல அவன் கையை விலக்கியவள், இரண்டு டம்ளர் தண்ணீரை மடக்... மடக் என்று குடித்துவிட்டு, அங்கிருந்து நகர முற்பட்டாள்.

''பசிக்குதா மலரு?'' என்றான் அவன் மனைவியின் கரம் பிடித்து நிறுத்தி.



அவள் பேசாமல் நிற்கவும், ''கேப்ப ஊறி... நீ கூழு கிண்டுறதுக்குள்ள... வயிறு நோவெடுத்துப் போயிரும்!'' என்றவன், சற்றே யோசித்துவிட்டு, ''மணி இன்னும்... நடு சாமம் ஆகலையே! ராக்கடை... இன்னும் மூடியிருக்க மாட்டானுங்க.. பரோட்டா சாப்பிடுவே தானே, மலரு? வாங்கியாரவா?'' என்றான், மனைவியின் முகம் நிமிர்த்தி.

மறுப்பாய் எந்த உணர்ச்சியும் அவளது முகத்தில் தோன்றாமல் இருக்க, வேகமாய்ச் சட்டையை மாட்டிக் கொண்டு, புல்லட்டைக் கிளப்பிச் சென்றவன், வரும் போது கையில் பார்சலோடு வந்தான்.

அதை ரசித்து உண்ட பொன்மலரைக் கண்டவனுக்கு, அவள் தன்னுடன் பேசாமல் இருப்பதுக் கூட மறந்து விட்டது!

அன்று தொடங்கி, நடு இரவில் அவளை எழுப்பி, நான்கு இட்லிகளை உள்ளே அனுப்பும் வேலையைச் செவ்வனே செய்தான் ராஜதுரை.

''சும்மா இருங்க... சும்மா இருங்கன்னு தல போக அடிச்சுக்கிட்டேனே... கேட்டீகளா? நாஞ்சொன்னதக் கேட்டிருந்தா.. நமக்கு இது தேவையா? இப்பப் பாரு... வயிறு முட்ட முட்ட... தின்னுப்புட்டு... நாலு பேருமா உருண்டுக்கிட்டுக் கெடக்க வேண்டியது த்தேன்! உங்கப்பாரு... பஞ்சு மூட்டைக்குள்ளப் பஞ்சுப் பொதியை அடைக்கிற கணக்கா... திணிச்சிட்டே திரியாரு!'' என்று மலர் சலித்துக் கொள்ளும் அளவிற்கு, அவனது கவனிப்புக் கூடியது!

இந்த ரீதியில் நாட்கள் நகர, மலரின் உடம்பு வளர்ந்த விதத்தைக் கண்டு பயந்துப் போன ராக்காயி ''தாயி... கொஞ்சம்... ஒடம்பு வளைஞ்சு எதுனா வேல பாரு

தாயி... அப்பத்தேன் பிரசவம் சுளுவா அமையும்...'' என்றாள் தயவாக.

கூடவே, ''ஒரு ஆத்தா மொறைக்கா சொன்னேன் தாயி... தப்பா எடுத்துக்காத!'' என்று பம்ம வேறு செய்தாள்.

மலருக்குமே, வேலைகள் எதுவும் செய்யாமலிருப்பது பிடிக்கவில்லை! ஆனால், செய்யவும் முடியவில்லையே! பத்தடி நடந்தால் கூட, மூச்சிரைத்தது! கால் வலித்தது! கால் வீங்கிப் போனது! அதற்காக, இப்படியே இருக்கவும் முடியாதே!

வேலைக்காரி சொல்வது சரியென்று பட, ''தப்பா எடுக்க என்ன இருக்குது, ராக்காத்தா! எம் புள்ளைக நல்லதுக்கும்... என்னல்லத்துக்கும் தானே சொல்லுறீக... இனிமே செய்யுதேன், ஆத்தா!'' என்று அவளது பயம் போக்கியவள்,

அடுத்த நாள் காலையில், முறைவாசலிடுவதில் தன் வேலையை ஆரம்பித்தாள்.

இப்படி ஒரு நாள், வாசல் தெளித்துக் கொண்டிருக்கையில், ''ஆத்தா... இங்க வேலுகருப்பன்ட்டு...'' என்று அவளது தந்தையை விசாரித்தபடி வந்தார், ஒரு பெரியவர்.

நீண்ட நாட்களுக்குப் பின்னர், தந்தையின் பெயரைக் கேட்கவும், மலரின் முகம் இருண்டு இறுகியது!

உடனே தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''அவுகளா? இந்த ஊரு த்தேன்... வடக்குத் தெருவில.. மூணாவது வீடு!''

''ஹோ! நன்றி தாயி... மாசமா இருக்கப் போல இருக்கு. நல்லபடியா பெத்துப் பொழைக்கணும்...'' என்று வாழ்த்தினார் அப்பெரியவர்.



யாரென்று அறியாத போதும், வாழ்த்திய அவரது நெஞ்சம் கண்டு நெகிழ்ந்த மலரின் மனம், அப்பனையும் அண்ணனையும் எண்ணி நெருப்பாய்க் காந்தியது!

'இவருக்கு இருக்கக் கரிசனம் கூட... ஒங்களுக்கு இல்லையே!' என்று எண்ணியவள்,

''என்ன வெசயம் அப்பு? இம்புட்டு வெள்ளன வந்திருக்கீக?'' என்றாள் சாதாரணமாய்.

''அதா தாயி... நா திருநெல்வேலி பக்கத்து ஆளு! அங்கன இருந்து ராவுக்குக் கிளம்பி.. விடியையில மருத வந்தேன்! அப்படியே பனையபட்டிப் போவணும்! எறங்கி நின்னதும், உங்கூருக்கு வர மொத பஸ்ஸு வந்துச்சா.. சரி.. இங்கன வந்து விசாரிச்சிட்டு... பொறவு பனையப்பட்டிக்குப் போவலாம்ன்னு வந்தேன்'' என்றார் நீண்ட உரையாய்.

''ஓ..அப்படியா? ஆமா... என்ன வெசயம்ன்னு சொல்லலையே அப்பு?''

''அட.. நா வந்ததச் சொல்லிப்புட்டு... இத மறந்து போனேன் பாரேன்! வேலுகருப்பனுக்கு ஒரு மவன் இருக்கானாமே... சீமையில கை நெறைய சம்பாதிக்கிறானாமே... அவனுக்கு எம்மவளைக் கொடுக்கலாம்ன்னுட்டு! அவென் வேல செய்யுற எடத்தில... அவுக தங்கி இருக்க எடத்தில எல்லாம் வெசாரிச்சேன்... நல்லதனமா த்தேன் சொல்லுறாக! என்ன த்தேன் சீமையிலேயே இருக்கப் போறாகன்னாலும்.. சொந்த ஊருல விசாரிச்சுகிடுறது நல்லது த்தானே தாயி...அத்தேன்!'' என்றார் தான் வந்த காரியத்தை விளக்கி.

''ஓ!'' - ஒற்றை வார்த்தையில் அவரது கூற்றை மலர் ஜீரணிக்க, அவர் மேலும் பேசிக் கொண்டே சென்றார்.

''இங்க ஊரில ரெண்டு வீடு.. கொஞ்ச நெலபுலன்... எல்லாம் இருக்குனாக! அதுவில்லாம... மாமியாக்காரி இல்ல! கூடப் பொறந்தவகளும் யாருமில்லையாம்... ஒத்தப் புள்ள! சொத்து அம்புட்டும்... அவருக்குத்த்தேன்... வரும்! நல்ல எடமா இருந்துச்சு... முடிச்சுப்புடலாம்ன்னு...'' என அவர் சொல்லச் சொல்ல,

மலரின் கோபம் சகட்டு மேனிக்கு ஏறிக் கொண்டே சென்றது.

கடைசியாய், ''பாத்தா... நல்ல பொண்ணா தெரியுதே? நீ சொல்லுத் தாயி.. பையன் எப்படி?'' என அவர் கேட்கவும்,

''ஒங்களுக்கு ஒத்த மவளா, அப்பு?'' என்றாள் அவள், கேள்வியாய்.

ஏனென்று புரியாமல், ''ஆமா.. தாயி!'' என அவர் இழுக்க,

''வேணாம்ப்பு... அவைங்க... அத்தேன் அப்பனும் மவனும் ஒரு சந்தேகப்பிசாசுக! இருபது... இருபத்தைஞ்சு வருசமா... பொத்திப் பொத்தி வளத்த மவளையே... யாரோ சொன்ன ஒத்த வார்த்தய நம்பி... வெசம் வச்சுக் கொல்லப் பாத்தானுங்க! அப்படிப் பட்டவைங்களுக்கா பொண்ணைக் கொடுக்கப் போறீங்க? அவ... சொந்த அண்ணனோட கூட ரெண்டு நிமிசம் பேசினாக் கூட... சோத்தில மருந்த வச்சு... கொன்னுடுவானுங்க!'' என்றாள் அவள், கண்ணை உருட்டி.

அதன் பின், அங்கே நிற்கவும், தன் பெண்ணை வாசு விற்குக் கொடுக்கவோ வந்தவருக்கு என்ன பைத்தியமா?

ஓர் பெரிய நன்றியுடன் ஓடியே போனார் அவர்!



ஒரு குரூரத் திருப்தி உண்டானது மலரினுள்!

இரு கைகளையும் இடுப்பில் வைத்துக் கொண்டு, ''ஹஹ்ஹா!'' என்று வாய் விட்டுச் சிரித்தவள், துடைப் பத்தையும் வாளியையும் எடுத்துக் கொண்டு படியேற எத்தனிக்க, அங்கே ராஜதுரை நின்றிருந்தான்.

வாசல்படியில் நின்றிருந்தவனின் முகம், ''நீயா மலரு... இப்படி?'' என்ற கேள்வியைச் சூடி நிற்க, அவ னது கைகள் மார்பிற்குக் குறுக்கே கட்டப்பட்டிருந்தன.

தன்னையே குறுகுறுவெனப் பார்த்துக் கொண்டிருந்தக் கணவனின் பார்வையைத் தயங்காமல் தாங்கியவளின் பார்வை, ''நா பட்டேன்ல... இப்ப அவுக படட்டும்! நல்லா படட்டும்!'' என்று வன்மத்தை உமிழ்ந்தது!

''இந்த மாதிரி நேரத்தில... இந்த வஞ்சம் வேணாம்.. மலரு...'' என்று அவன் அவளது கையைப் பிடிக்க,

அதை உதறிக் கொண்டு உள்ளே சென்ற மலருக்கு, அன்று முழுதுமே மனம் சந்தோஷமாய் இருந்தது என்பது அவள் அனுபவித்த வேதனையின் உச்சம்!

ராஜதுரையின் மூன்று முத்துக்களும் கிடுகிடுவென வளர, அவர்களது தாயின் உடல் உபாதைகளும் கூடிக் கொண்டே போயின.

அந்த உபாதைகளின் ஒரு பாகம் தான், வயிற்றில் அவளுக்கு ஏற்பட்ட அரிப்பு!

அந்த அரிப்பிற்குக் காரணமாய் ''எங்க சின்னய்யா மாதிரி... புள்ளகளுக்கு நெறைய முடி இருக்குது போல... அத்தேன் அரிக்குது...'' என்று ராக்காயியும்,

''சாப்பாட்டில ஒறப்ப (காரம்) கொறைச்சுக்கிடுங்க சின்னம்மா! ஒறப்பு நெறையா சேர்த்துக்கிட்டா... அரிக்கும்பாக'' என்று பேச்சியும்,

''இதெல்லாம்... கர்ப்பிணிகளுக்கு சகஜம்மா! இந்த கிரீமைப் போட்டுக்கோ... ஆனா... என்ன அரிச்சாலும்... சொரியக் கூடாது! புண்ணாப் போய்டும்... அப்புறம்... ரொம்ப எரியும்! சொல்லிட்டேன்!'' என்று மருத்துவரும் சொல்ல,

மலர் தான் தவித்துப் போனாள்! அவளை விட ராஜ துரையும்!

அவள் படும் வேதனையைப்பார்த்துத் தவிக்கவில்லை அவன்! அவள் படுத்தும் பாட்டில் தான் தவித்துப் போனான்! அந்தளவிற்கு, அவனை ஆட்டி வைத்தாள், பொன்மலர்!

டாக்டர் கொடுத்த கிரீமை... ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை தடவியபோதும், சொரிய வேண்டும் என்ற உணர்வு குறையாமல் இருக்க,

நேரம் காலமில்லாமல் ராஜதுரையை வயிற்றை வருடி விட வைத்தாள்.

காலையில் அவன் மில்லுக்குக் கிளம்பி, புல்லட்டில் ஏறப் போவான். கையைப் பிடித்து, இழுத்துக் கொண்டு, அறைக்கு வருபவள், சேலைத் தலைப்பை விலக்கி, அவனது கையை வயிற்றில் வைத்து, ''ம்ம்...'' என்பாள் அதிகாரமாய்.

சரியென்று, அரை மணி நேரத்திற்கும் மேலாய் அவளது துன்பம் போக்கிவிட்டுச் செல்வான் அவனும்.

அத்துடன் நிற்காது, மலரின் தொல்லை! அன்புத் தொல்லை என்று சொல்ல வேண்டுமோ?!

பதினோரு மணி வாக்கில், ராஜதுரையின் எண்ணிற்கு ஓர் அழைப்புப் பறக்கும்.



அவன் எடுத்துக் காதில் வைத்து ''மலரு...'' என்றதும், ''டொக்'' என்று வைத்துவிடுவாள் சண்டிராணி. அடுத்தப் பத்தாவது நிமிடம், துரை வீட்டிலிருப்பான், கையில் க்ரீமுடன்!

இது தான் இப்படியென்றால், உணவுண்ணும் போது, பாதி உணவிலேயே ''ஹ்ம்ம்ம்...'' என்று சோர்வுடன், அவள் வலக்கையால் உணவையும் இடக்கையால் வயிற்றையும் அளப்பதை அன்புக் கணவனால் தாங்க முடியுமா என்ன? உடனே கையைக் கழுவிவிட்டு, வருடத் தொடங்கி விடுவான் அவனும்!

காலை வேளை இப்படிச் சென்றால், இரவில் பெரும் பேராட்டம் தான்!

தூங்க விடாமல் செய்யும் அரிப்பிற்கு விடிகால், ராஜதுரைதான்!

தூக்கத்திலேயே, அவனது கையைத் தேடி வயிற்றில் வைத்துக் கொள்பவள், ஆழந்த உறக்கத்தில் இருக்கும் அவனை எழுப்பும் வழி தெரியாமல், நறுக்கென்று கிள்ளி வைப்பாள்! பிறகென்ன சிவராத்திரி தான்! மலருக்கு அல்ல.. ராஜதுரைக்கு! கணவனின் இதமான வருடலில் அவள் உறங்கிவிட, ராஜதுரை தான் விழித்திருப்பான்!

சில சமயங்களில்... மிகச் சில சமயங்களில் அவன் உறங்கிவிட்டால், உடல் வேதனைத் தாளாமல் எழுந்துக் கொள்ளும் மலரின் கரங்கள், சட்... சட்... சட்டென கணவனின் கைகளில் அடித்து விடும்!

பாவம், பதறியடித்துக் கொண்டு அவளது துன்பம் போக்குவான் கணவனும்!

மலரை விடவும், ''எப்படா புள்ள பொறக்கும்?'' என்ற ரீதிக்குத் துன்பப்பட்டுப் போனான், ராஜதுரை!

அவனது வேண்டுதலின் விளைவாய், மலருக்கு ஏழாம் மாசம் நெருங்கியது!

ஏழாம் மாதத்தின் முடிவில் அவளிருந்தப் போது, ''இந்த வாரம்... வைத்தீஸ்வரன் கோவில... வளகாப்பு நடத்தலாம்ன்னுட்டுப் பாக்குதேன் மலரு! எல்லாருக்கும் சொல்லிவிடப் போறேன்!'' என்று அறிவித்தான் ராஜதுரை.

தொடர்ந்து, ''பூவு மாமியா வீட்டுக்கு... நேரில போயிச் சொல்லிட்டு வந்துடுதேன்! மித்தவுகளுக்கு... ஆளு விட்டா போதும்...'' என்றான்.

''பூவு...'' என மெல்ல உச்சரித்த மலரின் முகத்தில் ஏகப்பட்டக் கேள்விகள்.

''என்னடா இவ.. பூவப் பத்தி.. எந்தப் பேச்சுமில்லன்னு பாக்குதியா?'' என்றான் கணவன் கேள்வியாய்.

ஆம். மலருக்குள்ளும் இந்தக் கேள்வி இருந்துக் கொண்டே இருந்தது! யாரிடமும் கேட்கப் பிடிக்காமல், அவள் வாய் மூடி இருந்தாள்! வீட்டு வேலைக்காரர்களிடம் கேட்கலாம் தான்... ஆனால், உடனே விஷயம் சந்தோசம் காதிற்குப் போய்விடும்! அவள் வேறு வந்து ஆடுவாள்! ஏற்கனவே, தங்கள் திருமணத்தால் பூவின் மாமியார் வீட்டில் சலசலப்பு என்று ஆடிக் கொண்டிருப்பவள் அன்றோ!

கூடவே, பூவரசியும் இந்தத் திருமணத்தை எப்படி எடுத்துக் கொள்வாளோ என்றிருந்தது மலருக்கு! அவள் முகத்தில் முழிக்கவே வெட்கமாய்!

மனைவியின் எண்ணங்களுக்கு ஈடாய், ராஜதுரையும் பேசினான்.



''நம்ம கலியாணம் நடந்ததில... பூவு மாமியா வீட்டில யாருக்கும் உடன்பாடில்ல...''

''நாஞ் செஞ்சது... பெரிய குத்தமாம்... இதுவே... அவுக பையனுக்குப் பொண்ணு எடுக்கிறதுக்கு முந்தி நடந்திருந்தா... இந்தப் பக்கம் கூடத் தலை வச்சுப் படுத்திருக்க மாட்டாகளாம்!'' என்று சொல்லிக் கொண்டே சென்றவனின் முகம், கோபத்தில் சிவந்து கொண்டே வந்தது.

''அதனால.. அவுக குடும்பத்துக்கும்... நம்ம குடும்பத்துக்கும் கூட்டு நாட்டே இல்லைன்னுட்டாக... பூவு மாப்பிள நம்பரையும் மாத்த வச்சுட்டாக...'' என்றவன்,

''அவுக த்தேன் இப்படிக் கூறுக் கெட்டத் தனமா பேசினா... எங்கூடப் பொறந்ததுக்கு கூறு எங்கப் போச்சுன்னுட்டுத் தெரியல... ஒத்த போன் இல்ல... ஒத்த கடுதாசி இல்ல...'' என்றான் ஆற்றாமை மேலிட.

''பாப்பம்...' போயிக் கூப்பிடுவோம்... வந்தா வரட்டும்!'' என்றுவிட்டு சென்றவனுக்குப் பதிலாய்,

அடுத்த வாரத்தின் தொடக்கத்தில் பூவரசி, மலர் மற்றும் துரையின் தனிக் குடித்தனத்தை வந்துப் பார்வையிட்டாள்!

''இன்னைக்கு.. உச்சி வேள சாப்பாட்டுக்கு... பூவும்.. மாப்பிளயும் வராக மலரு!'' என்று ராஜதுரை கூறியதிலிருந்து, மலருக்குள் ஓர் இன்பப் படபடப்பு!

அவளது உயிர்த்தோழி! உடன் படித்தவள்! இப்போது நாத்தனார்! - கசந்துப் போனப் பல உறவுகளுக்கு மத்தியில், இனிதாய் ஓர் உறவு வருகைத் தருவதில், மலரின் மனம் துள்ளிக் கொண்டிருந்தது!

அதே சந்தோஷத்துடன், வீட்டிற்கு வந்த பூவரசியைத் தன் நிலையையும் மறந்து வரவேற்றவள், ''பூவு...'' என்றாள் ஆசையுடன்.

ராஜதுரை இன்பமாய் அதிர்ந்துப் போனான்!

இதுநாள் வரையிலும், மலர் அவன் பக்கத்து உறவுகள் யாருடனும் பேசியதில்லை! வேலைக்காரர்களுடன் பேசுவாள்.. வெளியாட்களுடன் பேசுவாள்! அவ்வளவே! அவன் உறவு என்று வரும் எவரிடமும் ஒரு வார்த்தை கூடப் பேசமாட்டாள்! அப்படிப்பட்டவள், இன்று, அவனது தங்கையை ''பூவு..'' என்று பெயர் சொல்லி அழைக்கவும், அகமகிழ்ந்துப் போனான், ராஜதுரை.

ஆனால், ராஜதுரையின் சந்தோஷத்தையும், அதற்குக் காரணமான மலரின் சந்தோஷத்தையும், அந்த சந்தோஷத்திற்குக் காரணமான சந்தோசத்தின் மகளே கெடுத்தாள்.

''என்னடி.. ஓடுகாலி! எங்குடியைக் கெடுத்திட்டு... நீ முழுகாம இருக்கப் போல..'' என்ற நொடிப்பும்,

''ஆமா.. நெசமாலுமே மூணு புள்ள இருந்து... வயிறு இத்தான்தண்டி இருக்கா? இல்ல ஒத்தப் புள்ளையா?'' என்ற கேள்வியும்,

''கலியாணத்துக்கு முன்னாடியே கருவ வாங்கிட்டு.. அது வெளிய தெரியக் கூடாதுன்னு.. மூணு புள்ள அது இதுன்னு அளந்து விடுறியோ? ஏழாம் மாசம் நெருங்கையில... கொறப்பிரசவத்தில, ஒத்தப் புள்ள தான் பொறந்துச்சுன்னு.. ஊர ஏமாத்திட்டுத் திரியலாம்ல!'' என்ற தன் கேள்விக்கான விளக்கமும்,

''நீ த்தேன்... தொடைச்சிட்டுத் திரிவியே!'' என்ற அருவெறுப்புமென, மலரின் முகத்திலிருந்த ஆனந்தத்தை சுத்தமாய்த் துடைத்தெடுத்தாள், பூவரசி!



# 22

''பூவு!!!'' - இரு வேறு குரல்கள், உச்சக்கட்டக் கோபத்துடன் ஓங்கி ஒலித்தன!

தன்னை அதட்டிய கணவனைக் கிடப்பில் போட்டு விட்டு, ஆத்திரத்தில் துடித்துக் கொண்டிருந்த அண்ணன் புறம் திரும்பியவள், ''என்னண்ணே... எதுக்குக் கத்துற? நெசத்த தானே சொன்னேன்...'' என்றாள் தானும் கோபமாய்.

''என்ன நெசம்? தப்பு நடந்திருக்குன்னா.. அதுக்கு நானுந்த்தேன் காரணம்... சும்மா மலரை ஏசிக்கிட்டுத் திரியாதன்னு சொன்னேனா இல்லையா?'' என்றான் ராஜதுரை, கண்டிப்புடன்.

''அவளைத் திட்டுன்னா பொத்துக்கிட்டு வருதோ?!'' என்றாள் பூவரசி, இளக்காரமாய்.

''அவளை மட்டும் குத்தம் சொல்லாதன்னுட்டுச் சொல்லுதேன்.. நானும் த்தேன் தப்புப் பண்ணினேன்... நானும் த்தேன் என்ன நானும் த்தேன்.. நா மட்டும் த்தேன் தப்பு பண்ணினேன்... அவ மேல ஆச வச்சது நாந்தேன்.. அந்த ஆசயில் த்தேன் பண்ணக்கூடாத காரியமெல்லாம் பண்ணிப்புட்டேன்...'' என்று தன்னிலை விளக்கம் கூறினான், ராஜதுரை.

''ஹுக்கும்! ஒனக்குப் பேசவா சொல்லி கொடுக்கணும்! அதுவும்... இந்த வாயாடிய வேற கட்டிக்கிட்டு இருக்க! இவளே சொல்லிக் கொடுப்பாளே!'' என்று நொடித்தப் பூவரசி,

''ச்சொல்லிக் கொடுத்து... ச்சொல்லிக் கொடுத்து த்தானே... ஒன்னைய எங்ககிட்ட இருந்துப் பிரிச்சுக் கூட்டியாந்துட்டா... பாவி!'' என்றாள் வன்மத்துடன்.

''பூவு! வார்த்தய அளந்துப் பேசு.. இல்ல நல்லா இருக்காது, சொல்லிப்புட்டேன்! பெரிய வீட்ட விட்டு நாங்க வந்ததுக்கும்... மலருக்கும் எந்த சம்பந்தமுமில்ல! இது எம் முடிவு! அம்புட்டுத் த்தேன்! உங்காத்தா ஆடின ஆட்டத்துக்கு.. அதுக்கு இந்த தண்டன தேவ தான்!'' என்றான் ராஜதுரை, குரலில் ஏறியக் கோபத்துடன்.

பூவரசி மேலும் பேசத் தொடங்கவும், அவளது கைப் பிடித்து அழுத்திய அன்பழகன், மச்சினனிடம் பேசினான்.

''மன்னிச்சுக்கங்க மச்சான்.. ஒங்க தங்கச்சிக்கு.. ஆறேழு மாசமா ஆத்தா வீட்டுக்கு வர முடியலை யேன்னு கோவம்! அதேன்.. இந்தக் குதி.. குதிக்கிறா...!'' என்று ராஜதுரையைச் சமாதானம் செய்த அவன் கூட, வாய் வார்த்தைக்காகவேனும் மலரைச் சமாதானம் செய்ய முயலவில்லை.

ராஜதுரையின் முகத்தில் கோபம் குறையாமல் இருக்க, ''எங்காத்தா... இந்தப் பிரச்சனையால, இவள இங்க நருசா வரக் கூடாதுன்னு சொல்லிப்புடுச்சு! உங்க கல்யாணச் செய்தி வந்தது தொட்டு.. எங்க வீட்டில ஒரே பிரச்சனை த்தேன்... விடிஞ்சா எந்திருச்சா, பூவை வசைப்பாடிட்டே இருந்தாக! அதேன்... இப்படிப் பேசிப்புட்டா! மனசில வச்சுக்காதீக மச்சான்!'' என்றான் அவன், மனைவியின் செயலுக்கு விளக்கமாய்.

கூடவே, ''பூவு... அண்ணனா இருந்தாலும்... அவரு குடும்பத்தப் பத்திப் பேசக் கூடாது! அவுகளுக்குள்ள ஆயிரம் இருக்கும்... அதையெல்லாம் நீ ஏன் பேசுறவ?'' என்ற மனைவியைக் கண்டித்தான்.



பூவரசி பதில் சொல்ல விளையவும், ''என்னைய புருஷனா மதிக்கிறதா இருந்தா.... பேசாம இரு! விருந்த உண்ணுட்டு ஊரப் பார்த்துப் போவோம்! இல்லையா.. இப்படியே நடயக் கட்டுவோம்!'' என்றான் தீர்மானமாய்.

அதன் பின், பூவரசி எதுவும் பேசவில்லை! முகம் இறுக, முற்றத்தில் போய் அமர்ந்துக் கொண்டாள்!

முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு, ஏதோ விரோதி வீட்டிற்கு வந்திருப்பவள் போல் அமர்ந்திருந்தத் தங் கையை விடவும், முகத்திலிருந்த ஜீவன் முழுதும் வடிந்து விட, கண்ணில் முட்டியக் கண்ணீருடன் அடுக்களைக் குள் சென்ற மலரைக் காண, ராஜதுரைக்குப் பொறுக்க வில்லை.

பின்னர், மலர் வெளியே வரவே இல்லை. ராக்காயி மூலம், வந்தவர்களுக்குக் குடிக்கக் கொடுத்து விட்டாள்.

ராஜதுரைக்கு இருப்பே கொள்ளவில்லை. எழுந்து அடுக்களைக்குள் செல்லலாம் என்றால், வீட்டுக்கு வந்த மாப்பிள்ளையை விட்டுவிட்டு, எப்படி உள்ளே எழுந்து செல்வதென்று யோசனையாய் இருந்தது!

ஏற்கனவே, எங்களை மதிக்கவில்லை... எங்க ஜாதிப் பெருமையைக் குலைத்துவிட்டாய்... ஏன்தான் இந்தக் குடும்பத்தில் பெண் எடுத்தோமோ... எங்க பையனுக் குன்னு இப்படியொரு மாமியார் வீடு... ஊரில எங்க மானம் போகுது என்று ஏகத்திற்கும் பேசியவர்களை ஒரு வழியாக சமாளித்து, அன்பழகனையும் பூவரசியையும் கூட்டி வந்திருக்கிறான். அதுவும், அன்பு ''அது அவரோட சொந்த விருப்பு... வெறுப்பு ஆத்தா! அத நாம நொர நாட்டியம் பேசக் கூடாது!'' என்று அதட்டியதால் தான்! அப்படியிருக்கையில், அவர்களை விட்டுவிட்டு,

மனைவி பின்னே செல்லவும் ராஜதுரையால் முடிய வில்லை.

பதநீரைப் பரிமாறிவிட்டு, தங்கள் வீட்டுப் பெண் ணின் நலத்தை விசாரித்து விட்டு ராக்காயி நகரவும், அன்பழகன் கைப்பேசியை எடுத்துக் கொண்டு டவருக் காக வெளியே செல்லவும், ராஜதுரை மலரின் ஸ்கேன் ரிப்போர்ட்டை எடுத்து வரவும் சரியாக இருந்தது.

''ஒனக்குத் த்தேன்... ரிப்போர்ட் எல்லாம் படிக்கத் தெரியுமே? லேப் டெக்னிசியன் தானே நீயி? இந்தா... இதப்பாரு...'' என்றவன், பூவின் கையில் அதைத் திணித் தான்.

கோபமாய் வாங்கி அதைப் புரட்டியவளின் கன்னம், குற்ற உணர்வில் சிவந்தது!

''டாக்டரம்மா கூட.. பொய் சொல்றாகன்னுப் பேசு வியா பூவு? எதையும்... பேசுறதுக்கு முன்னாடி யோசிச்சுப் பேசணும்!'' என்றான் ராஜதுரை, கோபமாய்.

பூவரசியின் தலை குனியக் காத்திருந்தவன் போல, ''என்னைய விட... ஒனக்குத் த்தேன் அவள நல்லாத் தெரியும்! ஆனா.. நீயி! என்ன வார்த்தையெல்லாம் பேசிப்புட்டே! எம் பூவு... ஆத்தா கொணம் வருதா ஒனக்கு? நல்லதில்ல பூவு, இந்த ஆங்காரமும்.. அவசரமும் நல்லதே இல்லை!'' என்றான் அண்ணனாய்.

''நீ வரேன்னு தெரிஞ்சதும்.. அது மொகத்தில எம் புட்டு சந்தோசம் இருந்துச்சுத் தெரியுமா? எனக்கு வாக் கப்பட்டது தொட்டு.. இன்னைக்குத் த்தேன்... அந்த மொகத்தில ஒரு தெளிவு பொறந்து நா பாத்திருக்கேன். ஆனா.. ரெண்டே வார்த்தையில் கொலைச்சுப்புட்டியே!'' என்று ஆற்றாமையால் வெந்துப் போனான், அவனும்.



''ஒ... ஒனக்கு உம் பொண்டாட்டியோட வெசனம் த்தேன் பெருசா போச்சில்ல... கலியாணம் முடிஞ்ச கையோட.. என்னைய அத்து விட்டவுக த்தேன்... பொறவு யாராவது நா எப்படி இருக்கேன்னு பாத்தீகளா? எம் மாமியாக்காரி பேசினப் பேச்சுக்கெல்லாம்... நா நாண்டுக்கிட்டு செத்திருக்கணும்.. என்ன பேச்சுத் தெரியுமா?'' என்று விசும்பிய பூ,

''இப்ப என்னவோ... நாட்டாம பண்ணிட்டுப் போறாரு உம் மச்சான்.. அந்தாளும் த்தேன்... ஆத்தா முந் தானையைப் புடுச்சுக்கிட்டு.. எனைய ஒரு போன் கூடப் பண்ண விடல! எம்புட்டு வெனசப் பட்டிருப்பேன்... எம்புட்டு நாளு அழுதுக் கரைஞ்சிருப்பேன்... அத யோசிச்சியா?'' என்று ஆற்றாமையில் முடித்தாள்.

தங்கை அழுததும் அண்ணனுக்குத் தாங்கவில்லை.

வேகமாய் அவளருகே சென்றவன், அவளை வயிற் றோடு அணைத்துக் கொண்டு, மெல்ல முடி கோதி, ''அதேன்... அண்ணே வந்து பேசி சமாதானம் செஞ்சுட் டேனில்ல.. இனி நீ எப்ப நினைச்சாலும், இங்கன வந்துட்டுப் போவலாம்! நாலு நாளைக்குத் தங்கிட்டுப் போவலாம்... என்னடா!'' என்றான் சமாதானமாய்.

பாசமலர்கள் இருவரும் என்னவோ சமரசமாகி விட் டனர்! ஆனால், மலர்! சுக்கு சுக்காய் உடைந்திருந்தாள், அவள்!

தன்னைப் புரிந்துக் கொள்வாள் என்றெண்ணியிருந்த உயிர்த் தோழி பேசியப் பேச்சுக்கள், ஜல்லிக் கற்களாய் மனதை அழுத்திக் கொண்டே இருந்ததில், நெஞ்சம் சல்லடையாய் சிதறிப் போனது!

அவள் எண்ணம் பாட்டிற்கு ஒரு புறம் ரணப்பட்டுக் கொண்டிருக்க, மறுபடியும் வந்தவர்களுக்கு விருந்து பரிமாறப்பட்டது!

இலையில் இருந்த உணவுகளே, விருந்து தன் வருகைக்கென்றே பார்த்துப் பார்த்துச் சமைக்கப்பட்டிருக் கிறது என்பதைப் பூவிற்கு உணர்த்தியது!

அவளுக்குப் பிடித்த உணவுகள் அனைத்தும், தனிப் பட்ட சுவையுடன் சாப்பிடுவோரின் சுவை நரம்புகளில் வயலின் வாசித்தன!

நெஞ்சம் லேசாய்ச் சுட்டது, பூவிற்கு! அதுவும், உணவு பரிமாறிய பொன்மலரின் முகத்தில் தென்பட்ட மரத்தத்தன்மை அவளைப் பொசுக்கியது!

தான் உள்ளே நுழைந்ததும், சந்தோசம் ததும்பி வழிய ஓடி வந்த மலருக்கும், இப்போது உணர்ச்சிகள் ஏதுமற்ற முகத்துடன் பரிமாறும் மலருக்குமான வித்தியாசம் அவளைத் தாக்க, உணவு உள்ளே இறங்க மறுத்தது!

பூவின் நிலை இப்படியென்றால், ராஜதுரையின் நிலையோ! பெரும் கவலைக்கிடம்!

பெரிய வயிற்றைத் தூக்கிக் கொண்டு அவள் பரிமாறு வது ஒரு புறமென்றால், பசியோடு அவள் பரிமாறுவது மறுபுறம் வலித்தது!

இதுநாள் வரையிலும், அவளும் அவனும் ஒன்றாகத் தான் உணவருந்துவர். பல சமயங்களில், மலர் உண்டு முடித்து, உறங்கிய பின்னர் தான் துரை உண்ணவே அமருவான்! பின்னே, அவளுக்கு வருட வேண்டாமோ?!

ஆனால், இன்று மனைவியை விட்டுவிட்டு உண் ணுவது துரைக்கு மிகவும் சிரமமாய் இருந்தது! அதுவும், அவள் மனது கஷ்டப்படும் வேளையில்!



ஒரோர் கவளமும் நெஞ்சை அறுக்க, வயிறு நிரம்ப மறுத்தது!

உண்ணவும் முடியாமல், எழவும் முடியாமல் வெகு வாய்த் தவித்துப் போனான், ராஜதுரை.

ஒருவாறாக, பூவரசியின் குடும்பம் விடைபெற்றனர்.

அவர்கள் கூறிய பொதுவான ''நாங்க வாரோம்...'' தனக்குத் தானா என்பது புரியாத போதும், நடுநாயக மாய்த் தலையாட்டியவள், அவர்களது வண்டி தெருவை விட்டு மறைந்த வினாடி இல்லாமல், அறைக்குள் சென்று மறைந்தாள்.

பின்னே ஓடி வந்த ராஜதுரைக்கு, அவள் கட்டிலில் விழுந்து, குமுறிக் குமுறி அழுவதைக் காண முடிய வில்லை!

''மலரு... அவ பேசினதுக்கெல்லாம் அழுவாகளா... அழுவாத மலரு! நமக்குத் த்தேன்... இந்த வெசயம் தெரியும்ல.. ஆத்தா த்தேன் வர நாளெல்லாம் பூ வீட்டில நடக்குற கூத்தைச் சொல்லி, ஒப்பாரி வைக்கும்ல! அது தெரிஞ்சிருந்தும்.. அவள நாம எதிர்பார்த்தது நம்ம தப்புய்யா! எங்கண்ணில்ல... அம்மாடி... வேணாம்ய்யா! அழுவாத!'' என்று என்னென்னமோ சொல்லிப் பார்த்தான்.

மலரின் அழுகை நிற்பதாய் இல்லை!

உணவு கொண்டு வந்தான்! உண்ணவில்லை!

ஊட்டி விட முயன்றான்! வாயைத் திறக்கவில்லை!

வயிற்றில் அரிப்பெடுத்து, அவள் சொரியத் தொடங் கவும், கிரீம் எடுத்து வந்தான்! அவனைத் தொடக் கூட விடவில்லை!

மாத்திரை உண்ணவில்லை! தண்ணீர் குடிக்கவில்லை! அழுகையை நிறுத்தவில்லை!

''விக்.. விக்.. விக்..'' என்று தேம்பித் தேம்பி அழுதவளை, என்ன சொல்லித் தேற்றுவதேன்றே தெரியவில்லை அவனுக்கும்.

அதுவே, அன்றிரவு தொடர,.பூவை ஏன்டா அழைத்து வந்தோம் என்றாகிவிட்டது அவனுக்கு!

அவளது பசியின் அளவை உணர்ந்தவனால், அவளது பட்டினிப் போராட்டத்தைப் பொறுக்க முடியவில்லை.

அதுமட்டுமில்லாமல், அந்த அரிப்பு வேறு!

வயிற்றில் ஏற்பட்ட அரிப்பைத் தாங்க முடியாமல், வேகமாய் மலர் சொரியச் சொரிய, அவளது அடி வயிறு முழுதும் ரத்தச் சிவப்பாகிப் போயின!

''ஐயோ.. புண்ணா போச்சுது மலரு! கையை எடுடி... நான் மருந்து போட்டு விடுதேன்...'' என்று அவளது கையை அவன் பற்றியது தான் தாமதம்.

''ஹான்... ஹா... ஹான்..'' என்று வெறி வந்தவள் போல், அவனது கையைப் பிடித்துத் தள்ளியவள், அருகே கிடந்தச் சாப்பாட்டுத் தட்டை எடுத்து அவனை அடிக்கத் தொடங்கினாள்.

பூ ஏற்படுத்தி விட்டுப் போனக் காயத்துடன், பசியும், கூடவே அரிப்பும் சேர்ந்து கொள்ள, தன் கட்டுப்பாட்டை இழக்கத் தொடங்கினாள், பொன்மலர்.

அதிலும், அந்த அரிப்பு, ஆளைக் கொன்றது! ஒரு வினாடி கூடச் சும்மா இருக்க விடாமல், நமநமத்துக் கொன்றது!

''அய்யய்யோ...'' என்று அலறிக் கொண்டு, வயிற்றை அப்படியே எடுத்துக் கீழே வைத்து விடலாம் போலிருந்தது மலருக்கு!



அந்தக் கோபம் முழுதும், கணவன் மீது பாய, அவனை அடித்து நொறுக்கி விட்டாள் பொன்மலர்.

அதிலும், தன் உயிர்த் தோழியே தன்னை அசிங்கமாய் பேசுவதற்கு இவன் தானே காரணம் என்ற எண்ணம் கொதிப்பை இரு மடங்காக்க, தட்டிலிருந்த சாதம் சிதறியதையோ, அதில் ஊற்றப் பட்டிருந்த மீன் குழம்பு, அவன் கண்ணில் பட்டுத் தெறித்ததையோ, ''மலரு...'' என்று அவன் கூவியதையோ உணராமல், அவனை அடித்துக் கொண்டே இருந்தாள்! தன் கை ஓயும் வரை!

ஒருவாராய், கை வலித்து அவள் சோர்ந்தமர்ந்த போது, அரை மணி நேரம் கடந்திருந்தது!

''சஸ்ஸ்ஸ்ஸ்...'' என்ற பெருமூச்சுடன் அமர்ந்தவளின் கையிலிருந்தத் தட்டு, நழுவி விழக் காத்திருந்தவன் போல்,

''கோவம் போயிருச்சா?'' என்ற ராஜதுரையின் குரலில் சுத்தமாய்க் கோபமில்லை.

அந்தக் குரலில் திகைத்து, மெல்ல அண்ணாந்துப் பார்த்தவளை, அப்படியே வாரிக் கொள்ள வேண்டும் போலிருந்தது துரைக்கு.

நெஞ்சம் கூறியதை அப்படியே நிறைவேற்றியவன், ''என்னைய என்ன வேணும்னாலும் செஞ்சுக்க மலரு.. கொன்னு கூடப் போடு.. ஆனா... உன்னைய வருத்திக்காத மலரு! மனசு வலிக்குது!'' என்றான், அவள் உச்சியில் முத்தமிட்டு.

இரு கைகளாலும், அவன் வயிற்றைத் தள்ளிக் கொண்டு, மலர் அவனை விட்டு விலகி நிற்கவும், ''பூவு புரியாம பேசிப்புட்டா மலரு! நா டாக்டர் ரிப்போர்ட் எல்லாம்... காட்டினதும் அவ மொகம் அப்படியே தொங்கிப்

போச்சு...'' என்றான் தங்கையின் நிலையை முன்னிறுத்தி.

ஆனால், மலருக்கோ 'ரிப்போர்ட் இருந்தா என்ன.. இல்லைன்னாக்க என்ன? அவ என்ன நம்பியிருக்க வேணாமா? என்ன வார்த்த பேசிப்புட்டா.. பாவி!' என்று உள்ளம் கொதித்தது.

அந்தக் கொதிப்பு முழுதும், அதற்குக் காரணமான ராஜதுரையின் மீது திரும்ப, கீழே கிடந்தத் தட்டை எடுத்து, வேகமாய் அவன் மீது வீசினாள்.

பித்தளையில் செய்யப்பட்ட அந்தத் தட்டு, அவனது நெற்றியைப் பதம் பார்த்துச் சென்றது!

''ஸ்ஸ்ஸ்... ஆஆ...'' என்று கத்தியவன், நெற்றியைப் பிடிக்கவும் தான் மலருக்குத் தான் செய்தக் காரியத்தின் வீரியம் உறைத்தது!

கண்கள் கலங்க, முகம் வெளிர, ரத்தம் வடிய, உடம்பு நடுங்க, ''அடித்து விடுவானோ?'' என்ற பயம் பிரதிபலிக்க நின்றிருந்த மனைவி, உள்ளிருக்கும் குழந்தைகளைக் காட்டிலும் குழந்தையாய் தெரிய, அவளை இழுத்துணைத்துக் கொண்டான், ராஜதுரை.

என்ன தான் கணவன், அவளைத் தங்கத் தட்டில் வைத்துத் தாங்கியபோதும், மலரின் மனம் ஆறவில்லை!

எந்நேரமும் கண்ணீர்! எந்நேரமும் வருத்தம்! சாப்பிட மாட்டேன் என்று அடம்! வேண்டுமென்றே வயிற்றைப் புண்ணாக்கிக் கொண்ட பிடிவாதம்! - ராஜதுரையை ஒரு வழி பண்ணினாள் பொன்மலர்.

இதற்கு உச்சம் சேர்ப்பது போல், ஒரு நாள் ராஜதுரை மில் வேலையாக வெளியே சென்றிருந்த போது, வேலுகருப்பன் அவனது வீட்டிற்கு வந்தார்.



பதினோரு மணியளவில், ''யாருடே அது வீட்டில்...'' என்ற குரல் வெளியே கேட்டதுமே, மலரின் மேனி ஒரு முறை அதிர்ந்து அடங்கியது!

கத்துவது அவளது தகப்பன் அல்லவோ! அவளை நம்பா தகப்பன! அவளைக் கொல்லத் துடித்தத் தகப்பன்!

அன்றைய தினத்தின் நிகழ்வுகள் நிழலாட, உக்கிரம் தலைக்கேறியது, பொன்மலருக்கு!

வீறு கொண்டு வெளியே சென்றவளின் முகத்தில் கோபத்தைக் காணவும், வேலுகருப்பன் ஒரு நிமிடம் தயங்கினார்! பின்னே, ''அப்பச்சி.. என்னைய மன்னிச்சுடுங்க...'' என்று அவள் காலில் விழுந்துக் கதறிய பெண்ணிடமிருந்து, அவர் கோபத்தை எதிர்பார்த்திருக்கவில்லை!

அவர் தயங்கி நின்ற வினாடியைச் சாதகமாக்கிக் கொண்டு, ''என்னய்யா? இங்க என்ன சலம்புறே?'' என்று எகத்தாளமாய் விழுந்தன வார்த்தைகள்.

''ஏய்... என்ன திமிரா?''

''ஆமா.. திமிரு த்தேன்... இப்ப என்ன வேணும் ஒனக்கு? எதுக்கு இங்க நின்னு.. கத்திக்கிட்டு இருக்கிற?'' என்று ஒருமையில் சாட்டையைச் சுழற்றின வார்த்தைகள்.

''கத்துறேனா? சங்க அறுத்துருவேன் கழுத...''

''காத்தா... இங்கன வா... வந்து இந்தாளை வெளிய வெரட்டு!'' என்று முழங்கினாள், பொன்மலர்.

''ஏய்...என்னையவா வெளிய போகச் சொல்லுறே? போறேன்டி... போறேன்! இத மட்டும் கேட்டுட்டுப் போறேன். எங்க மானத்தத் த்தேன் ஒட்டு மொத்தமா வாங்கிட்டே இல்ல.. பொறவு என்னடி? என்ன

கருமத்துக்கு எம மவனுக்கு வர சம்மந்தத்தைக் கெடுக்கிறே? பாவி! எங்கள நிம்மதியாவே வாழ விட மாட்டியா?''

''மாட்டேன்யா! மாட்டேன்! என்னைய இம்புட்டுக் கஷ்டப்பட வச்ச நீங்க... நல்லாவே இருக்கக் கூடாது.. என்னையால முடிஞ்ச வரைக்கும்... உம் மவனுக்கு வர சம்மந்தத்தைக் கெடுப்பேன்! அப்படியில்லையோ... நீங்க நாசமா போவணும்ன்னுட்டு கருவியப்பனுக்கு ஒரு கடா நேந்துவிடுவேன்...'' என்றாள் மலர், ஆங்காரமாய்.

''பாவி! எங் கொலத்தைக் கெடுத்தப் பாவி...''

''நீயெல்லாம் மனுசனே இல்ல... பொறவு ஒனக் கென்னையா கொலமும் கோத்திரமும்... போ.. போயி... ஒங் கொலத்தக் கட்டிக்கிட்டு சாவு! கொலம்.. கோத் திரம்ன்னு அலையுற நீ எதுக்குய்யா கல்யாணம் கட்டிக்கிடுதே? எதுக்கு புள்ள பெத்துக்கிடுதே! போ... போயி... நாண்டுக்கிட்டு சாவு! ஒங் கொலம் வந்து கொள்ளி போடட்டும்!'' என்று அடி வயிற்றிலிருந்து குரலை இழுத்து, அவள் கத்தவும்,

ராக்காயி வந்து, மலரை ''இந்த மாதிரி நேரத்தில... இப்படி வெளம் புடுங்கிக்கிட்டுக் கத்தக் கூடாது... தாயி! வா.. வந்திரு...'' என்று அழைத்துச் செல்ல,

காத்தான் வந்து, வேலுகருப்பனை வெளியே அனுப்ப, ராஜதுரை அந்த நேரம் வந்து சேர்ந்தான்.

''படு பாவி... ஒன்னால தான்டா.. ஒன்னால தான்டா...'' என்று வேலுகருப்பன், கையை ஓங்கிக் கொண்டு அவனை அடிக்கச் செல்லவும்,

ராக்காயியின் சொல்லிற்கு ஆட்பட்டு வீட்டினுள் சென்ற மலர், பிடித்திருந்த ராக்காயியின் கையை உதறிக் கொண்டு, வீறு கொண்டு வெளியே வந்தாள்.



வந்தவளின் கைகளில், ராக்காயி காய் நறுக்கிக் கொண்டிருந்த அருவாள்மனை இருந்தது!

''ஏய்... மருவாதையா வெளிய போயிரு! இல்ல... வெட்டிருவேன்!'' என்றவளின் கைகள், வேலுகருப் பனின் சட்டையைக் கொத்தாய்ப் பிடித்திருந்தன.

போட்டிருந்த கொண்டை அவிழ்ந்து, முடியை விரித்து விட, காளி போல் நின்றவளின் தோற்றம், இரு ஆண்களையும் உலுக்கவே,

''காத்தா... இவர புடிடா...''என்று வேலைக்காரனிடம் அவரை ஒப்படைத்தவன்,

''இன்னொரு தடவ... உம்ம இங்க பாத்தேன்... கொள்ளிப் போட ஆளிருக்காது சொல்லிப்புட்டேன்! போயிரும்!'' என்று வேலுகருப்பனைப் பார்த்து உறுமி விட்டு, மனைவியை உள்ளே அழைத்துச் சென்றான்.

அவர் ஏதோ கத்தவும், ''இவன் வெறும் வாய்ச் சவடால்ன்னு நினைக்காதீரும்! சொன்னத செய்யுற சண்டியன்! செஞ்சுப்புடுவேன்!'' என்றான் மீசையை முறுக்கி.

அதன் பின்னர், மலரைச் சமாளிப்பது ராஜதுரைக்குப் பெரும் பாடாய் இருந்தது!

வெறி! வெறி! வெறி! - கண் இரண்டும் கோவைப் பழம் போல் சிவந்திருக்க, ருத்ராதேவியாய் காட்சிக் கொடுத்தவளைப் பார்க்கவே அந்தச் சண்டியனுக்குப் பயமாய் இருந்தது!

பெற்ற தந்தை மீதே இவ்வளவு கோபம் கொண்டிருப் பவள், தன் மீது எவ்வளவு தூரம் கோபம் கொண்டிருப் பாள் என்பது புரிய, ஒரு முறை மேனி சிலிர்த்து அடங் கியது, அவனுக்கு!

ஆனால், கொலை செய்யத் துடிக்கும் அளவிற்குக் கோபமிருந்தும், கொலை செய்ய வேண்டிய ஆள் அருகே இருந்தும், கொலை செய்யும் சந்தர்ப்பங்கள் குவிந்து கிடந்தும், அவனை அவள் எதுவும் செய்யவில்லையே!

என்ன காரணம்? என்ன காரணம்? என மண்டையை உடைக்கத் தேவையில்லாமல்,

''உம் மேல அவளுக்கும் ஆச இருக்குடா! ஆனா.. அத மீறிக்கிட்டுக்... கோவமிருக்கு! அந்தக் கோவத்தில... பேசாம இருந்து உன்னையக் கொல்லுறாளே ஒழிய... உன்னைய ஒரேடியா அடிச்சுச் சாய்க்கிற வெறி அவளுக்கு இல்ல!'' என்ற உண்மையை உரக்க உரைத்தது மூளையும் மனமும்!

மனம் காதலில் வெதும்பிப் போக, மனைவியை நாடிச் சென்றான் அவன்.

அதன் பின்னர், மலரின் நடவடிக்கைகள் 'அவனை இம்சிக்கவே செய்த போதும், அவனால் அவள் மீது கோபம் கொள்ள முடியவில்லை.

''அவளுக்கும் த்தேன் யாரிருக்கா? எங்கிட்டக் கோவத்தக் காமிக்காம யார்கிட்டக் காம்பிக்கப் போறா...'' என்றும், ''எனக்குந்தேன் அவளை விட்டா யாரிருக்கா..'' என்றும் அவளை முன்னரை விடவும் கூடுதலாய்த் தாங்கினான், ராஜதுரை.

அந்த சமயம், மலரின் வளைகாப்பு வைபவம் நடந்தேறும் நாளும் வந்து சேர்ந்தது!

அவர்களது குடும்ப வழக்கப்படி, வைத்தீஸ்வரன் கோவிலில் வளைகாப்பு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



மலரும் - ராஜதுரையும் ஒரு காரில் செல்ல, சந்தோசம் - பழையம்பெருமாள் மற்றொரு காரிலும், பூவரசியின் குடும்பம் அவர்களது ஊரிலிருந்தும், மற்ற சொந்தங்கள் அனைவரும் ஒரு வேனிலும் வர, அங்கே வளைகாப்பு ஏற்பாடுகள் ராஜதுரையின் ஆணைப்படி முன்னரே நடைபெற்றிருந்தன.

அவர்கள் வந்ததும், வைத்தீஸ்வரனைக் கும்பிட்டு விட்டு, வைத்தீஸ்வரனின் துணைவியார் தையல்நாயகியின் சந்நிதியின் எதிரே போடப்பட்டிருந்த வளைகாப்பு மனையின் முன்னே வந்து சேர்ந்தனர்.

மலரால், அந்த மனையில் சம்மணமிட்டு அமரவே முடியவில்லை! பெருத்த வயிறு இடம் கொடுக்கவில்லை!

''பாவம்.. புள்ள! சிரமப்படுதே!'' என்று வருத்தம் கொண்ட ஒரு உறவினர் தான்,

''சும்மா... கால் நீட்டி உட்கார்ந்துக்கோம்மா... ஒண்ணும் தப்பில்ல...'' என்றார், வாஞ்சையாய்.

சட்டென மலரின் பார்வை ராஜதுரையை நாடிச் சென்றது! ஓர் ஒப்புதலுக்காய்!

மனைவியின் அந்தச் செயலில் நெஞ்சம் பனித்து விட, ''ம்ம்...'' என்று தலையசைத்தான் ராஜதுரை.

மலர் அமர்ந்ததும், உறவுக்காரப் பெண்கள் பலரும் அவளுக்குச் சந்தனம் குங்குமம் வைத்து, பூ முடித்தனர். சந்தோசம் உட்பட!

கடைசியாய், ''பூவு... நீ வையும்மா...'' என்று ஒருத்தர் அழைக்க, பூவின் முகம் அஷ்டக்கோணலானது!

அதைப் பார்த்த மலரின் முகம் கூம்பிவிட, தங்கையென்றும் பாராமல், இழுத்து அறைந்து விடலாம் போல்

வந்த வெறியை அடக்கிக் கொண்டு, கையைக் கட்டியபடியே நின்றான் ராஜதுரை.

அதற்குள் பூவின் மாமியாரே ''என்ன... தரயப் பாத்துக் கிட்டு நிக்குறவ? அவளுக்கு முன்னமே உனக்குத் தாலி ஏறிருச்சு! ஆனா... வயுத்தில ஒரு புழு பூச்சி இல்ல!

இப்ப... அவளுக்கு பூ முடிச்சவாவது எதுனா தங்குதா பாப்பம்!'' எனத் தன் ஏக்கத்தைக் கோபமாய்க் கொட்ட, பூவரசி பொன்மலருக்குச் சந்தனக் குங்குமம் பூசி, பூ முடித்தாள்.

''வளை அடுக்கிறதுக்கு முன்னாடி... எல்லா சந்நிதிலையும் போயி அர்ச்சனையை முடிச்சிட்டு வந்திடுங்க!'' என்று அவர்களை அனுப்பி வைத்தார், புரோகிதர்.

ஒரோர் சந்நிதியாய் வலம் வந்தவர்கள், ''செல்வ முத்துக்குமார சுவாமி'' என்ற பெயர் தாங்கிய கருவறைக் குள்ளே, தெய்வமில்லாமல் போகவும், கூட வந்த ஐயரிடம் கேட்டனர்.

''இன்னைக்கு கார்த்திக! அதுவும் வைகாசி கார்த்திக... மண்டல கார்த்திக! அபிஷேகத்துக்காக... மண்டபத்துக் குப் போயிருக்கார், சுவாமி! பிரகாரம் வரையில அவரைத் தரிசனம் பண்ணிட்டு வந்திடுங்கோ! ரொம்ப வரசித்தி பெற்றவர்! கேட்டது கிடைக்கும்!'' என்றார், பரவசத் துடன்.

அவர் சொன்னது போல், அர்ச்சனைகள் முடிந்து பிர காரத்தை சுற்றி வருகையில், செல்வ முத்துக் குமரனுக்கு தங்கக் கலசா அபிஷேகம் நடந்துக் கொண்டிருந்தது!

தூய சந்தனமும் மணக்கும் பன்னீரும் ஒன்றாய் சேர்ந்த கலவையைத் தங்கக் குடத்திலிருந்து ஊற்றி, முருகனைக் குளிர்வித்துக் கொண்டிருந்தனர்!



அந்த நேரத்தில், என்ன கேட்டாலும் கிடைக்கும்! முருகன் குளிர்ந்தன்றோ இருக்கிறான்!

கை கூப்பி நின்ற மலர், ''எம் புள்ளைக மூணு உம் பொறுப்பு, முருகா! அவுகள... நல்லபடியா இந்த பூமிக்குக் கூட்டியாந்துரு! மூணும்... மூணு முத்தா நல்லா இருக்கணும்!'' என்று தன் பிள்ளைகளுக்காய் வேண்டிக் கொண்டாள்.

அத்துடன் நிறுத்தியிருக்கலாம்! ஆனால், சற்று முன் பூ பார்த்தப் பார்வையும், இது வரையிலும் நல்லதனமாய் ஒரு வார்த்தை கூடப் பேசாத சந்தோசமும், ''ஒடு காலிக்கு வந்த வாழ்வ பாரு!'' என்று அங்கலாய்த்த உறவுகளும் சேர்ந்து கொண்டு, ''என்னையால இந்த வேதனையை தாங்க முடியல சாமி! இதில இருந்து... சீக்கிரமா எனக்கு விடுதல கொடு... என்னைய கூட் டிக்கோ!'' என்றாள், கண்ணிலிருந்து வடிந்தக் கண் ணீருடன்!

மலரின் அருகே நின்றிருந்த ராஜதுரையோ, ''அவள வாயைத் தொறந்து... ஒரு வார்த்த ஒரே ஒரு வார்த்த ''மாமா''ன்னு கூப்பிடச் சொல்லுய்யா! எனக்கு அது போதும்! நா முரடன் த்தேன்... கோவக்காரன் த்தேன்.. ஆனா.. அவ மேல நா வச்சிருக்க ஆச நெசம்! உம் வேலு மேல நெசம்!'' என்று முருகனிடம் விளக்கம் கொடுத்து விட்டு, ''சாமி! அவ இனிமேயாவது சந்தோசமா இருக் கணும்... அவளையும் புள்ளைகளையும் நல்லா வச்சுக்கிற திராணியை எனக்குக் கொடுய்யா, முத்தைய்யா!'' என்றான் உளம் உருக.

தன் வேண்டுதலை முடித்துக் கொண்டு நிமிர்ந்தவன், மனைவியின் கண்களில் கண்ணீரைக் காணவும்,

''அழுவாத மலரு!'' என்றான் அவளது கைப்பிடித்து அழுத்தி.

மலரும், சுற்றுப்புறம் உணர்ந்து கண்ணைத் துடைத்துக் கொண்ட போதும், பிடித்த அவனது கையை விடாமலேயே பிரகாரத்தை சுற்றி வந்தாள்.

அதன் பின்னர், ஐயர் வந்து மந்திரங்கள் ஓதி, சில பல சாங்கியங்கள் செய்த பின்னர், அனைவரையும் வளை யல் போடச் சொன்னார்.

ஒரொருவராய் வளையல் அடுக்க, கடைசியாய் வந்த ராஜதுரையின் கரங்கள், மரகதக்கல் பதித்த இரு வளையல்கள், முத்து வளையல்கள் இரண்டு, மாணிக்கக் கல் வைத்த வளையல்கள் இரண்டு என்று பச்சை - வெள்ளை - சிகப்பு என்று மூன்று நிறத்திலும் வளை யல்கள் அணிவிக்கவும், ஊரே வாய் பிளந்து பார்த்தது! மலர் உட்பட!

கடைசி சடங்காய், தையல்நாயகி தாயாரின் கழுத்தில் இருந்த மாலை ஒன்றை எடுத்து வந்த ஐயர், ராஜ துரையை அழைத்து, ''இந்த மாலையை உங்க ஆம் படையா கழுத்தில போடுங்கோ!'' என்றார்.

உதடு நிறைய வேண்டுதலும், உள்ளம் நிறையக் காதலும், உதிரும் முழுதும் அவளும், உயிர் முழுக்க பிள்ளைகளும், உடம்பு முழுக்க நிமிர்வுமாய், தன் கையிலிருந்த மாலையை அணிவித்த ராஜதுரையின் ஒரோர் அடியையும் மனதில் பதித்துக் கொண்ட மலரின், நெஞ்சம் அவளையும் மீறி நிறைந்தது!

அதுவும், கூடியிருந்தோர் அனைவரும் தங்கள் கையிலிருந்த அட்சதையை மலர் - துரை தம்பதியர் மீது தூவவும், இதுநாள் வரை மனதிலிருந்த வேதனைகள்



யாவும், அந்தப் பூத்தூவலுடன் கரைந்து போனது போன்ற உணர்வு அவளுக்கு!

அதே சந்தோசத்துடன், அவர்கள் கோவிலை மீண்டும் வலம் வந்தபோது, முருகனுக்கு நவரத்தினக் கவசம் அணிவிக்கப்பட்டு, சண்முகா அர்ச்சனை நடந்துக் கொண்டிருந்தது!

''காணக் கண் கோடி வேண்டுமய்யா, முருகா!'' என்று குரலெடுத்துப் பாட வேண்டும் போல் தோன்றியது மலருக்கு! அப்படியொரு அழகு! அப்படியொரு தெய்வீகம்!

மெய்யுருகி நின்றாள், அந்தக் கர்ப்பிணி!

அவளையும் அறியாமல், ''என் வாழ்க்கைய நல்ல படியா வச்சிரு முருகா!'' என்ற வார்த்தைகள் உதிர்ந்து விட, அழகன் முருகன் லேசாய் சிரித்தான்! தன் திரு விளையாடலுக்கு ஓர் பக்தைக் கிடைத்த சந்தோஷத்தில்!

## 23

வைத்தீஸ்வரன் கோவிலுக்குச் சென்று வந்த திலிருந்து, மலரின் மனம் சாந்தப்பட்டிருந்தது!

ஏனென்று புரியாவிட்டாலும், மனதில் ஓர் நிம்மதி! ஓர் சாந்தம்! சொல்லப் போனால், சன்னமாய் சந்தோசம் கூட! இன்னமும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டு மெனில், கணவனை எண்ணி ஓர் பெருமிதம் கூட!

கணவன் மில்லுக்குக் கிளம்பிச் சென்ற அரை மணிக் கெல்லாம், ''காத்தா... போயி நெய் மீனு வாங்கியாரியா?'' என்று வேலைக்காரனை ஏவி விட்டாள்.

''ஆம்'' என்று ஆடிய காத்தனின் தலை மறையவும், அடுக்களைக்குள் சென்று, குழம்பு வைப்பதற்குத் தேவையான மசாலாப் பொருட்களை எடுத்தாள்.

அவற்றை எடுத்துக் கொண்டு, அவள் கொல்லைப் புறம் செல்லக் காத்திருந்தவள் போல், ''என்ன தாயி செய்யுதே? மசாலா அரைக்கப் போகுதியா? சின்னய்யா பாத்தாக்கா என்னைய வஞ்சுக் கழட்டிப்புடும்! கொண்டா இங்க...'' என்று அவள் கையிலிருந்து மசாலா பொருட்களை வாங்கினாள், ராக்காயி!

அந்த முதியவள், காலை நீட்டி அமர்ந்து மசாலா அரைப்பதை, கொல்லைப்புறம் வாசல்படியில் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மலரிடம், மெல்லப் பேச்சுக் கொடுத்தாள் ராக்காயி!

''ஏன் தாயி... எங்க சின்னையா மேல இன்னமும் கோவமா த்தேன் இருக்கியோ?''

பம்மிப் பம்மி வெளி வந்த வார்த்தைகளில், லேசாய் சிரித்து, ''ஏன் கேட்கிறீக?'' என்றாள், மலர் தன்னைக் கண்டதும் ஓடி வந்த கன்னுக்குட்டியை (பாக்கியத்தின் மகள்) வருடிக் கொடுத்தவாறே.

''நா எதுக்குக் கேட்குதேன்ங்கிறது இருக்கட்டும்... நீ சொல்லு தாயி!''

''ஹ்ம்ம்... எப்படியாத்தா கோவமில்லாம இருக்க முடியும்? நீயே சொல்லு... உன்னைய இப்படி யாராவது கட்டாயத் தாலி கட்டுனா சும்மா இருப்பியா என்ன?''

''என்ன சொன்னே தாயி... சரியா காதுல விழுவல...'' என்று ராக்காயி காதைத் தேய்த்து விட்டுக் கொள்ளவும், மீண்டும் தான் கூறியதைக் குரல் உயர்த்திச் சொன்னாள் மலர்.



''கட்டாயத் தாலியா? ஒனக்கும் எங்க சின்னய்யாவைப் புடுச்சுத் தானே இருந்துச்சு...''

மலரால் பதிலேதும் சொல்ல முடியவில்லை.

''ஆமா... ஆனா... ஆனா...'' என்று இழுத்தவள்,

''எனக்குப் புடுச்சுச்சு த்தேன்... ஆனா... என்னைய அசிங்கப்படுத்தின மனுசனோட எப்படி மனசொப்பி வாழுறது?''

''எனக்கென்னமோ... சின்னய்யா வேற வழியில்லாமத் தேன்.. இப்படிச் செஞ்சிருப்பாருன்னு தோணுது! அவரு அதிரடியா இப்பப் பண்ணலைன்னா... சாதி... கொலம்... அது இதுன்னு உங்களைச் சேரவே விட்ருக்க மாட்டாய்ங்க!''

''ஆனா... ஆத்தா! நா கெட்டுப் போனவன்னுட்டு ஊரக் கூட்டி...

அசிங்கப்படுத்திப்புட்டாரே... எனக்கு இப்ப நினைச் சாலும் ஒடம்பு எரியுதுத்தா!'' என்று ஒரு முறை சிலிர்த் தவள்,

படு வேகமாய், ''நா அப்படிப் பட்டவன்னுட்டு... நீயும் நினைக்கியா ராக்காத்தா!'' என்றாள் பதற்றமும், பயமுமாய்.

''இல்ல தாயி! அப்படி நினைச்சிருந்தா... சின்னய்யா என்னைய இங்க வேலைக்குக் கூட்டியாந்தப்ப... வந் திருக்கவே மாட்டேன்! அன்னாடம்... சோத்துக்காக வேல செய்யுறவ த்தேன்... ஆனா... தரங்கெட்டவ வீட்டில சமைக்க ஒத்துக்கிட்டிருக்க மாட்டேன்...'' என்றாள், அந்தக் கிராமத்து மனுஷி.

''ஆத்தா!'' என்று மலர் வாய் பிளக்க,

''ஆமா தாயி! எனக்கு ஒம் மொகத்தப் பாத்தா... அப்படித் தெரியல! ஆனா சின்னய்யா சொல்றதையும்

நம்பாம இருக்க முடியல! சரி... நம்ம கணிப்புத் தேன் தப்போன்னுட்டு... ஒன்னைய ஆராய்ஞ்சுக்கிட்டே இருந்தவ! தப்பு செஞ்சிருந்தா... ஒரு சமயம் இல்லாட்டி ஒரு சமயம்... அந்தக் கள்ளத்தனம் மொகத்தில தெரிஞ்சிடும் தாயி! ஆனா... ஒம் மொகத்தில எப்பவும் ஒரு கோவம் த்தேன் இருக்கும்... நியாயமானக் கோவம்! எந்தக் கொம்பனா இருந்தாலும்... ஒருக்கா நடிக்கலாம்... இருக்கா நடிக்கலாம், ஆனா... பொழுதனைக்கும் நடிக்க முடியாது தாயி! நீ நடிக்கல தாயி! நாலு பொண்ணைப் பெத்த எனக்குத் தெரியாதா? நீ சுத்தத் தங்கமா வந்தவ... இங்க வந்து சூடு பட்டு சூடு பட்டு... எங்க சின்னய்யா கழுத்தில மாலையா போனே!'' என்றாள் அவள், கண் ணில் வாஞ்சையுடன்.

ஓடிச் சென்று, அவளைக் கட்டிக் கொள்ள வேண்டும் போலிருந்தது மலருக்கு!

ஆதி தொட்டு, அவளை நம்பிய ஒரே ஜீவன் இவ ளன்றோ! என்னமாய், கவனித்திருக்கிறாள்? அசந்து போனாள், மலர்!

மலரின் முகத்தில் சந்தோஷத்தைக் காணவும், ''ஆனா... இந்த ஆத்தா இன்னொண்ணையும் கவனிச்சேன்... அதைச் சொல்லட்டா!'' என்றாள் சிறு எதிர்பார்ப்புடன்.

மலர் ''ம்ம்ம்'' என உந்த,

''நீ தப்பு செய்யல த்தேன்! ஆனா, அதுக்காவ எங் கய்யா மேல... ஒனக்கு ஆச இல்லைன்னு சொன்னா... அது பொய்யி!'' என்றாள் அவள் ஆணித்தரமாய்.

''ஆத்தா!''

''மனசத் தொட்டு சொல்லு... இல்லைன்னு!''



''....'' என மலர் இழுக்க,

''ம்ம் சொல்லு தாயி!''

''அது... அது...''

''ம்ம்...''

''ஆச இருக்கவ த்தேன்... அவர இந்தப் பாடு படுத்து ரேனாக்கும்! போ ஆத்தா!''

''அப்படியா சேதி? எங்கய்யா கையால சோறு வாங் கிச் சாப்பிடறதும்... அவர வருடச் சொல்லிக் கேட் கிறதும்... நடு ராத்திரில அவர ராக்கடைக்கு வெரட்டி விடுறதும்... ஒம் பாசையில படுத்துறதா?''

''பின்ன இல்லையா?''

''உரிம இருக்கப் போயித் தானே.. அவர இதெல்லாம் செய்யச் சொல்லுதே? இல்லைன்னா சொல்லுவியா? - ராக்காயி மலரின் மனதைப் படிக்க,

''ம்ம்... ம்ம்...'' என்று முனங்க மட்டுமே முடிந்தது, மலரால்.

ஆனால், உடனேயே ''ஒனக்குத் தெரியாது... நா அவர பித்தளத் தட்டாலேயே அடிச்சுட்டேன் தெரியுமா?'' என்று சிறு பிள்ளையாய் விழி விரித்த மலர், ''ஆச இருந்தா... அடிப்பாங்களா?'' என்றாள் கொக்கிப் போட்டு.

''அடி என் ராசனுக்கு ஏத்த ராணி! நீ அடிச்சத வாங் கிக்கிட்ட எங்க மவராசன்... ஒன்னைய அடிச்சாரா?''

''ம்ஹூம்! அடிக்கவே இல்லை! மொறைச்சுக் கூடப் பாக்கல...'' என்று மலர் உதடுப் பிதுக்க,

''ஊருக்குச் சண்டியன்... ஒனக்கு அடங்கிப் போறான்னா... உம் மேல எம்புட்டு ஆச இருக்கணும்...

அந்த ஆசையில ஒரு பங்கு கூடவா ஒம் பக்கத்தில இருந்து வராம இருக்கும்? ஒம் பக்கத்தில இருந்து... சின்னதா இணைவு இல்லைன்னாலும், எங்கய்யா ஒன்னைய சீண்டியிருக்க மாட்டாரு! இஷ்டப்படாத பொண்ண... சீண்டுற அளவு ஈனப்பட்ட புள்ள இல்ல அது!'' என்றாள் அந்த வேலைக்காரி, அனைத்தையும் கணித்தவளாய்.

வேறொன்றும் சொல்ல முடியாமல், கையிலிருந்த வளையல்களுக்குள் கையை விட்டு விளையாடினாள் பொன்மலர்.

''இன்னும் என்ன தாயி... சுணக்கம்! ஒரு வார்த்த... எம் மவராசன் மொகம் பார்த்துப் பேசக் கூடாதா?'' என்று இறைஞ்சிய அக்கிழவி,

''புள்ள... மொகம் பாக்க முடியல! ஒன் வாயி திறக்க வேண்டி... தவங்கெடக்குது! பாவம் தாயி!'' என்றாள் பாசம் மிகவுற.

'மலர் பேசாமலே இருக்கவும், ''எம்புட்டு நாளைக் குத்தேன் இப்படி இருக்க முடியும்னு நினைக்குதே... வயித்தப் பாத்தா... இன்னும் பத்து நாள் த்தேன்... புள்ளைக பொறந்திடும்... பொறவு, அப்பன்னு எங்கய் யாவை நீ தானே அதுகளுக்குச் சொல்லிக் கொடுக்கணும்'' என்றாள் ராக்காயி, நிதர்சனத்தை எடுத்துக் காட்டி.

''பத்து நாள் தானா? டாக்டர் கொடுத்த நாளுக்கு... இன்னமும் ஒரு மாசமிருக்கே ஆத்தா... ஏன் அப்படிச் சொல்லுதே? ஐயோ!'' என்று மலர் பதற,

''பெரிய டாக்குட்டரு! நா பாக்காத பிரசவமா? எங்கய் யாவே எங்கையில தேன் வந்து விழுந்தாரு... நாந்தேன்



தொப்புள் கொடி அத்தவ! டாக்குட்டராம்... டாக்குட்டரு!'' என்று அந்த மூதாட்டி நொடிக்க,

''ஐயோ... அத விடுத்தா! ஏன் பத்து நாளுன்னு சொல்லுதே... அதச் சொல்லு மொதல! ஒத்த புள் ளைன்ன ஒம்பதாம் மாசம் கடைசிலத் தேன் பொறக்கு மாம்... ஆனா மூணு புள்ளைங்கிறதால... ஒம்பது தொடங்கையிலேயே பொறந்திடும்னு டாக்டரம்மா சொன்னாக... நீ என்னன்னா எட்டாம் மாசத்திலேயே பொறக்கும்ங்கிற! போதுமான வளர்ச்சி இருக்குமா?'' - தாய்மையின் தவிப்பு மேலோங்கி நின்றது மலரின் குரலில்.

''அட கிறுக்குப் பயப்புள்ள! வளர்ச்சிக்கென்ன... எங்கய்யாவோட சிங்கங்க மூணும் கண்டிப்பா ரெண் டரைக் கிலோ இருக்கும்ங்க... இல்லைன்னா... இந்த ராக்கை என்னன்னு கேளு!'' என்று பெருமைப் பீத்தி னாள் ராக்காயி.

''ம்ம்... அத விடுன்னு சொல்லுதேனே... ஏன் முன் னமே பொறக்கும்? எப்படிச் சொல்லுதே?'' - மலர் அதி லேயே குறியாக இருக்க,

''வயிறு இறங்கிருச்சு தாயி! புள்ளைக தலை... இன்னும் ஒரு வாரத்துல கர்ப்பப்பை வாய்க்கு வந்திடும்... உன்னால ஒத்த அடி எடுத்து வைக்க முடியாது!''

''அப்படியா?'' - மலரின் வாய் பிளந்தபடியே இருந்தது!

''ம்ம்... இப்பச் சொல்லு! எங்கய்யாவோட பேசலாம் இல்ல... பாவம் ஒம் வாயில இருந்து ஒத்த வார்த்த விழுவாதான்னுட்டு ஏங்குது!''

அவருக்குப் பதில் சொல்லாமல், சற்று நேரம் தன் வயிற்றையே பார்த்திருந்த மலர், மெல்ல வாய் திறந்தாள்.

''ம்ம்ம்... என்னால முடியலத்தா! என்ன த்தேன்... அவரு என்னைய தங்கத் தட்டுலேயே வச்சுத் தாங்கு னாலும்... நீ தான்டி எனக்குன்னு மார் தட்டுனாலும்... அப்பன் ஆத்தாவ தூக்கி எறிஞ்சிட்டு வந்தாலும்... என்னால முடியல!''

''கொஞ்ச நேரத்துக்கு... அவரோட காதல் மனசுக்கு மேல நின்னு... அவரு செஞ்ச தப்பை அடிக்குத் தள்ளிடுது! ஆனா... ஒரேடியா... அந்தத் தப்பு மனசை விட்டுப் போவ மாட்டேங்குது!''

''ஊரு முன்னாடி... என்னைய தரங்கெட்டவன்னுட்டு அவரு ஏசினது த்தேன் மனச அறுக்குது... நா போடாதக் கையெழுத்தப் போட்டு... நா செய்யாத தப்பைச் செஞ்சேன்னு சொல்லி... ஊரு முழுசையும் காரித் துப்ப வச்சாரே... அது மறையவே மாட்டேங்குது!''

''இப்பக்கூட... இந்த ஊரில இருக்க அம்புட்டுப் பேரும்... இவரு மேல இருக்கப் பயத்தில த்தேன்... என் னைய ஒண்ணும் பேசுறதுல்ல... ஆனா... உள்ளுக்குள்ள என்னைய அவுக ஒரு வேசியா த்தேன்... நினைச்சுக் காரித் துப்புவாக!''

''ஒங்க சின்னய்யா... என்ன கொஞ்சுனாலும்... என்ன நல்லா வச்சுக்கிட்டாலும்... நா பட்டக் காயம் அப்படியே தானே இருக்கு! நா பொறந்த இந்த ஊருல... எனக்கு நாதாரின்னு தானே பேரா போச்சு!''

''இந்த ஊர்க்காரக, பொறக்கப் போற எம் புள்ளை களுக்கும்... அதைச் சொல்லிக் கொடுப்பாக! அதுகளும்... வளந்து என்னைய புழுவப் பாக்கது போல பாக்குங்க!''



''அதுகள விடுங்க... என்னாலேயே மனசு ஒரு நெலப்பட்டு வாழ முடியல... ஒரு நிமிசம் அவரு மேல ஆச வந்தா... அடுத்த நிமிசம் அவரு மேல ஆத்திரம் வருது... இது எப்பத் தேன் மறையுமோ தெரியல!''

''நா செத்தாத் தேன் போவுமோ என்னமோ?'' ஓர் வருத்தத்துடன் பேசிக் கொண்டே வந்த மலர், கடைசி யில் கேவலமாய் முடிக்கவும்,

''அட என் வேலய்யா! என்ன வார்த்த சொல்லிப் புட்டே! புள்ளத்தாச்சி பேசுற பேச்சா இது? எங்க ராசய்யா கேட்டிருந்தா... தனக்கே சூடு பட்டாப்பல துடிச் சிருக்கும்! இன்னொரு வாட்டி... இப்படிப் பேசாத தாயி! நெஞ்சை அடைக்குது!'' என்று வேலைக்காரியே பதறி விட்டாள் எனும் போது, அவர்கள் பேசுவதை உள் ளிருந்துக் கேட்டிருந்த ராஜதுரை என்னவாகி இருப்பான்?

நெஞ்சைத் தூக்கி எரியும் அடுப்பிலும், உடம்பைத் தூக்கி சுடு தண்ணியிலும் போட்டது போல், ரணப் பட்டுப் போனது!

அவள் பட்ட, அவள் படும், அவள் படப் போகும் வேதனையாவும் கண் முன்னால் விரிய, சுவற்றில் சாய்ந்து நின்றவன், ஆழ மூச்செடுத்து, ஓர் முடிவுக்கு வந்தான்!

ஒரு இடம் கிரையம் செய்வதற்காக, மலரின் கையெழுத்து வேண்டி வந்திருந்தவன், அவள் மனம் திறந்து ராக்காயியிடம் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டதும், ஒரு நிமிடம் தயங்கி நின்றான்.

அந்த ஒரு நிமிடத் தயக்கம், அவனது வாழ்வையே புரட்டிப் போடப் போவதை அறியாமல், மலர் பேசும்

மொழியில் கட்டுண்டவனாய் அதை ரசிக்கத் தொடங்கினான்.

அதுவும் பேச்சுத் தன்னைப் பற்றியது என்றதும், ஆர்வம் தொற்றிக் கொள்ள, ஆவலே உருவாய் நின்றிருந்தவன், மலரின் கடைசி வாக்கியங்களில் நெஞ்சம் உடைபடும் வேதனையை அனுபவித்தான் என்று சொன்னால், அது வெறும் எழுத்து மட்டுமல்ல! ஓர் உணர்வு! தன்னவளுக்காய் எதையும் செய்யும் மன நிலை கொண்ட ஓர் கிராமத்தானின் உணர்வு! சண்டியனாய் மாறி அவளை ஆட்கொண்டவனுள், ஓர் சாந்த மனம் படைத்தவன் உட்புகுந்தவன் தாக்கம்!

அதுவும் ''கொஞ்ச நேரத்துக்கு... அவரோட காதல் மனசுக்கு மேல நின்னு... அவரு செஞ்ச தப்பை அடிக்குத் தள்ளிடுது! ஆனா... ஒரேடியா... அந்தத் தப்பு மனசை விட்டுப் போவ மாட்டேங்குது!'' என்ற அவளது வார்த்தைகள், ''இல்ல... ஒரேடியா என்ன மட்டும்... என்ன மட்டுமே அந்த மனச நினைக்க வைக்குதேன்! இது நா அவ மேல வச்ச ஆச மேல சத்தியம்!'' என்று சூளுரைக்க வைத்து, அவனை வீறு கொண்டு, வெளியே நடக்கச் செய்தது!

அதன் பின்னர், அவன் தீயாய் வேலை செய்ததில், வாசுவின் சென்னை எண்ணிற்குப் பத்து அழைப்புகள் பறந்தன. அதன் விளைவாய், வாசுவும் வேலுகருப்பனும் அன்றிரவே சென்னையிலிருந்து புறப்பட்டனர்.

அவர்கள் வருவதை உறுதி செய்து கொண்டு, பூவின் ஊருக்கும் ஆள் விட்டான், ராஜதுரை.

அடுத்ததாய், சொந்த ஊரிலேயே சில முக்கிய புள்ளிகளுக்கு விவரம் தெரிவித்து விட்டான். பழையம் பெருமாள் உட்பட.



கடைசியாய், மலரின் பிறந்த வீட்டிற்கு அடுத்த வீட்டுக்காரியான மல்லிகாவிற்கு ஆள் அனுப்பினான்.

ஓர் முடிவுக்கு வந்து விட்டத் திருப்தியுடன், வீடு வந்தவனை, மலர் செய்து வைத்த உணவு வரவேற்க, என்றைக்குமில்லா திருநாளாய் அன்று உணவு மிக ருசியுடன் இறங்கியது!

ஓர் திருப்தியுடன் அவன் உண்பதையே பார்த்திருந்த மலரின் முடி கோதி, ''சாப்பிடுதியா தாயி?'' என்றான் வாஞ்சையாய்.

அந்த வருடலிலும், அவன் கேட்ட வாஞ்சையிலும், முக்கியமாய் இன்று ராக்காயியிடம் நடத்திய உரையாடலிலும் தளர்ந்து போய், தன்னிலை மறந்திருந்த மலர், ''ம்ம்ம்...'' என்றாள் முனங்கலாய்.

அந்த ஒற்றை ''ம்ம்'' ஜென்மம் சாபல்யம் அடையச் செய்ய, ராஜதுரையின் கைகள் லேசாய் நடுங்கின என்று சொன்னால் அது மிகையானக் கற்பனையல்ல! ஓர் உண்மைக் காதலின் உறுதிமொழி!

ஒரு வாய் சோறெடுத்து அவன் ஊட்டிவிட, மெல்ல தலை சரித்து அவனைப் பார்த்தவள், லேசாய்ச் சிரித்தாள்.

அதில் மயங்கியவனாய், ''என்னடி...'' என்றான் அவனும்.

''ம்ஹூம்...'' என அவள் தலையசைக்க,

''என்ன ம்ஹூம்... இந்தத் தட்டைப் பிடுங்கி... நாலு சாத்து சாத்தலாம்ன்னு நினைக்குதியா?'' என்றான் அவன், முயன்று வரவழைத்தக் கிண்டலுடன்.

சட்டென, முகம் வாடி விட்டது மலருக்கு!

ஒன்றும் சொல்லாமல், தான் அமர்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்து, அவனது நெற்றியை மெல்ல வருடி

விட்டாள், மனையாள்! இதற்காகவே, தினம் ஒரு அடி வாங்கலாம் போலிருந்தது அவனுக்கு!

தன் எண்ணத்தை நினைத்துத் தானே சிரித்தவனாய் ''ஹஹஹா!'' என்று விட்டுச் சிரித்தவன், புரியாமல் பார்த்த மனைவியின் வயிற்றைக் கட்டிக் கொண்டு, சீராட்டினான்!

அன்றைய இரவு அவர்கட்கு ஓர் மறக்க முடியாத நிறைவைக் கொடுத்தது!

அடுத்த நாள், இந்த நாளை விட நிறைவாய் இருக்கும் என்ற நம்பிக்கையில் துரை உறங்க, மலரோ தாய்மையின் பூரிப்பில் உறங்கிப் போனாள்.

ஆனால், இருவரது நினைப்புமே அடுத்த நாள் சுக்கு சுக்காய் நொறுங்கிப் போயின!

அடுத்த நாள் காலை விடிந்த மாத்திரமில்லாமல், ராஜதுரை வெளியே கிளம்பிச் சென்றுவிட, சரியாக பத்தரை மணிக்கு ''அம்ம்ம்ம்மாமா...'' என்று அலறிக் கொண்டு வந்தான், அழகன்!

## 24



காலையில் இருந்தே, ராஜதுரை அவனது நிலையில் இல்லை! மலருக்கும் அது புரிந்தது!

எப்போதும் எழுந்ததும், தன்னருகே படுத்திருக்கும் மலரின் நெற்றியில் ஒரு முத்தம் வைப்பான்.

அவள் ''ம்ம்'' என்று முனங்கக் காத்திருப்பவன் போல், முனங்கும் உதடுகள் ஈரப்படும்!



''ப்ச்...'' என்று அவள் தள்ளிவிடவும், மொத மொத வென்று இருக்கும் வயிற்றில் மூன்று முத்தங்கள் குடியேறும்.

அடுத்ததாய், கட்டிலின் அருகே இருக்கும் மேசையிலிருந்து டாக்டர் கொடுத்த க்ரீமை எடுத்து, அவள் வயிற்றில் மெல்லத் தடவி விட்டு, ''இங்கிட்டும்... அங்கிட்டுமா அசையாம படுத்துக்க மலரு!'' என்று விட்டு எழுவான்.

இப்போதெல்லாம் மலர் எழ எப்படியும் ஏழு மணி ஆகிவிடுகிறது. அவளுக்கு அது தப்பென்று பட்டாலும், உடம்பு ஒத்துழைப்பதில்லை. அவள் ஏழு மணிக்கு எழுகையில், அய்யா குளித்து முடித்து, பேப்பரில் ஆழ்ந்திருப்பார்.

அவள் எவ்வளவு சத்தமில்லாமல் எழுந்தாலும், அவள் எழுந்த அடுத்த வினாடி, அறையினுள் இருப்பான்.

அதன் பின், குட்டிப் போட்ட பூனை போல் அவள் பின்னரே கழிம் அவன் நேர்கள்!

ஆனால், இன்று! காலையில் எழுந்ததும் (அன்று அவளும் அவன் கூடவே எழுந்து விட்டாள்), ஓர் அழுத்தமான முத்தம், இறுக்கமாய் ஓர் அணைப்பு! அவ்வளவே! ஹ்ம்ம், அதையும் தாண்டி... இன்னொன்று! கண்ணை ஊடுருவி ஓர் தேடல்! அதன் பின்னே, அதிலேயே ஓர் இதழ் ஒற்றல்!

''என்னன்னு கேளு மலரு... கேளு...'' என்று கேட்கத் தூண்டிய மனதை, கர்வத்தின் கவசம் அடக்கிவிட, அவனையே கண்களால் தொடர்ந்து கொண்டு பேசாது இருந்து விட்டாள்! பேசிட்டாலும்...!

அவள் குளிக்கச் சென்ற இடைவெளியில், ராஜதுரை வெளியே கிளம்பிச் சென்றுவிட, அடுக்களைக்குள் வந்தவள், ராக்காயி சுட்டிருந்த வடைகளுள் ஒன்றை

வாயில் போட்டுக் கொண்டு, ''என்ன ராக்காத்தா... உம்ம சின்னய்யாவ காணோம்?'' என்றாள் அலட்சியம் போல்.

''நானா அவருக்குப் பொஞ்சாதி? நீ தானே? போற மவராசன் சட்டயப் புடுச்சு... எங்கவே போறேன்னு கேளு! அத விட்டுப்புட்டு... இங்கன வந்து... வடையைத் தின்னுக்கிட்டு... நொரநாட்டியம் பேசுறவ!'' என்றாள் அந்தப் பெரியவளும், மலருக்குச் சளைக்காதவளாய்!

''ஹுக்கும்! ரொம்பத்தேன்...'' என்று நொடித்துக் கொண்ட மலர், தன் பெரிய வயிற்றைத் தூக்கிக் கொண்டு நகர,

''ஆனாலும்... ஒனக்கிருக்க நெஞ்சுரத்துக்கு... ஆத்தாடி! ஆத்தா!'' என்று ராக்காயியால் சலித்துக் கொள்ள மட்டுமே முடிந்தது!

ஆனால், காலை வேளை உணவு நேரம் கடந்த பின்னர், மலருக்கு இருப்பே கொள்ளவில்லை.

''எங்க போறேன்... எப்ப வருவேன்னுட்டு சொல் லிட்டுப் போவலாம்ல்ல... பெரிய சீமைத்தொர!'' என்று நெஞ்சு, அலைக்களைந்து போனது!

வாசலுக்கும் முற்றத்துக்குமாய் அவள் நடந்தே களைக்க, ''காலு... வலியெடுத்துப் போவும் தாயி! சத்த உக்காரு...'' என்று ராக்காயி கூடச் சொல்லிப் பார்த்தாள். ம்ஹூம், அந்தப் பிடிவாதக் காரி சற்றும் அசைய வில்லை.

அவளது கால்களுக்கு ஓய்வு கொடுக்கவா... இல்லை அவளது உயிரை உருவிப் போடவோ, அழகேசன் ''அம்மா...'' என்ற அலறலுடன் வந்து சேர்ந்தான்.



''என்ன அலகா... என்னாச்சு... ஏன் இம்புட்டுப் பதட்டமா இருக்குதே?'' என்று பதறியவளின் உள்ளே, பெரும் பரிதவிப்பு!

''அம்மா... அம்மா... அம்மா...'' என்பதைத் தவிர, அவனுக்கு வேறு வார்த்தைகளே வரவில்லை.

''என்னடே... என்னன்னு சொல்லு! அவருக்கு ஏதுமா? சொல்லு... சொல்லு!'' என்ற மலரின் தவிப்பைக் கேட்டு, ராக்காயியும் ஓடி வர,

அழகன், ''அய்யா...'' என்றான் தவிப்பாய்.

''என்னடா... கிறுக்கா? சொல்லித் தொலைடா!'' என்று ராக்காயியும் சேர்ந்துத் தவித்தாள்.

''சொல்லு அலகா... என்ன... அவருக்கு எதுவுமா? புல்லட்டுல போனாரே? ஐயோ...! முருகா!'' என்ற மலரின் வயிற்றில், ஓர் சுருக்!

''ஆஆ...'' என்று லேசாய் அலறியவளுக்கு, அந்த வலியெல்லாம் ஒரு வலியாகவே தெரியவில்லை. கணவனைப் பற்றிய தவிப்பே, உடம்பையும் மனதையும் நிரப்பியிருக்க, ''என்ன என்ன'' என்று தவித்துத் தொலைத்தது மனம்.

எஜமானியின் தவிப்பைப் பார்த்த அழகேசன், சொல்லத் தான் நினைத்தான்... ஆனால், வார்த்தை தொண்டையைத் தாண்டி வர மறுத்தது! அவனது தவிப்பையும் புரிந்தவளாய், ராக்காயி ஒரு சொம்பு தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கவும், ஒரே மடக்கில் அதை வாயில் கவிழ்த்தவன், ''அய்யா... பெரிய வீட்டு முன்னாடி... ஊரக் கூட்டி... மன்னிப்புக் கேட்கு தாரும்மா...'' என்றான் பதட்டமாய்..

''என்னது மன்னிப்பா?'' - நெஞ்சு ஒரு நிமிடம் நின்று போனது, மலருக்கு!

மலர் சமைந்து நின்றுவிட, ''எதுக்குடே மன்னிப்பு?'' - ராக்காயி இடையிட்டாள்.

''அம்மாவுக்காகவாம்... ஒங்க அப்புச்சி... அண்ணே அம்புட்டுப் பேரும் வந்திருக்காக!'' என்று அவன் பதற, மலரின் மேனி சிலிர்த்து அடங்கியது! மனதில் தோன்றிய கோபம் இருக்க இடமின்றி, முகத்தில் ஏறி, அவளைக் காளி போல் உக்கிரமாக்கியது.

''வண்டிய எடுடா அலகா... என்னைய அங்கன கூட்டிப் போ!'' என்று ஏவினாள், பொன்மலர்.

''இல்ல தாயி! இந்த நேரத்தில வேணாம்... எந்நேரமும் புள்ள வெளிய வந்திரும் தாயி!'' - உண்மையானத் தாய்ப்பாசத்துடன் பதறினாள், ராக்காயி.

''இல்ல... முடியாது! எடு அலகா! ஒம் மொதலாளி சொல்லுதேன்... கேட்க மாட்டியா? எடுடா!'' என்று மலரின் வார்த்தைகள் முடியும் முன்னே, வண்டி வாசலுக்கு வந்திருந்தது.

வேகம் கொண்டு அதில் ஏறப் போனவள், கண்ணில் கலக்கத்துடன் தன்னையே பார்த்திருந்த ராக்காயியின் கைப்பிடித்து இழுத்து ''நா எனக்கு வாக்கப்பட்டப் பச்சப்புள்ளய பாக்கப் போகுதேன்! நீ... எம் புள்ளைகளை பாத்துக்க வா!'' என்று அவளையும் வண்டியில் ஏற்றினாள்.

வண்டியில் சென்ற ஓரோர் நொடியும், மலரின் மனம் ராஜதுரையையே சுற்றி வந்தது.



''அவனா? அவனா? அவனா?'' - இதிலேயே மனம் சுழன்று கொண்டிருக்க, இதற்கு மேல் யோசிக்க விடாமல், அடி வயிற்றில் எதுவோ பலமாய் முட்டுவது போலிருந்தது!

சிறுநீர் கழிக்கும் இடத்தில், எதுவோ பெரிதாய் இறங்கி வருவது போல் வலித்தது! ஆனால், அந்த வலி, உள்ளிருக்கும் தவிப்பை மறைத்து விடவில்லை.

வயிற்றிலிருக்கும் பிள்ளைகளை விடவும், மனதிலிருக்கும் கணவனைச் சுற்றியே எண்ணம் வலையெனப் பின்னி நின்றது!

''ஏன்... ஏன்... ஏன்?''

''கவுரவம்... அந்தஸ்து... என்று தன் பெருமையை விட்டுக் கொடுக்காதவனா?''

''நா சண்டியன்டி என்று மீசையை முறுக்குபவனா?''

''நா பெரிய தனக்காரன்டி என்று பெருமைப் பேசுபவனா?''

''எனக்கிருக்க செல்வாக்குக்கு ஒன்னைய கூண்டோட தூக்கிருவேன்டா என்று எதிராளியை அடக்குபவனா?''

''ஒத்தைக்கு ஒத்தை வரியாடா... வாய்ச் செத்தப் பயலே.. என்று சட்டையை ஏற்றி விடுபவனா?''

''நா சொன்ன சொல்லுக்கு... மறு பேச்சு வந்தா... இப்படியே நடையக் கட்டுதேன் என்று தோரணையாய் நிற்பவனா?''

''ஒற்றைப் புருவ அசைவில், வேலைக்காரர்களின் காலில் சக்கரத்தைக் கட்டுபவனா?'' என்ற அவளது

கேள்விகளுக்குப் பதில் போல், அவள் கண்ட காட்சி அமைந்தது.

பெரிய வீட்டின் முன்னே அவன் நின்றிருக்க, அவளது பிறந்த வீட்டின் வாசலில் வேலுகருப்பனும், வாசுதேவனும், பெரிய வீட்டு வாசல்படியில் சந்தோசம் - பழையம்பெருமாள் - பூவின் குடும்பம், வாசுவின் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் மல்லிகா, வீதியில் பலர் என்று ஊரே கூடி நின்றது.

''ஐயோ... கடவுளே... என்ன பேசுதான்... கடவுளே முருகா...'' - மலரின் மனம் துடிப்பது மட்டுமல்ல, அவளது பிள்ளைகளின் இதயத் துடிப்பு கூட அவளுக்குக் கேட்டது.

ஆனால், பிள்ளைகள்... கர்ப்பம்... தந்தை... தமையன்... மாமியார்... நத்தனார்... பக்கத்து வீடு... ஊர் மக்கள் என எல்லாருமே பின்னே சென்று விட, கையை முதுகுக்குப் பின்னே கோர்த்துக் கொண்டு, ஊரை நோக்கிய முகமும், வானத்தை வெறித்துப் பார்வையுமாய் நின்றிருந்த கணவன் மட்டுமே மனதில் நிலைத்திருந்தான்.

ஊரே கூடி நின்று வேடிக்கைப் பார்த்ததால் வண்டியை சற்றுத் தொலைவில் நிறுத்திவிட்டு, மலர் நடந்து சென்றதை யாரும் உணரவில்லை. ராஜதுரை உட்பட.

அவள் கூட்டத்தை விலக்கிக் கொண்டு, முதலடியைக் கணவனை நோக்கி எடுத்து வைக்க,

''திட்டம் போட்டுத் த்தேன்... நா அவளக் கலியாணம் கட்டிக்கிட்டேன்...''



''எனக்கு வேற வழி தெரியல... வேற எந்த விதமாவும்... இந்த ஊரையோ... ரெண்டு பேரு குடும்பத்தையோ என்னால சமாளிச்சிருக்க முடியாது...''

எனத் தொடங்கியவன், அன்றொரு நாள் மலரிடம் அவன் கூறிய அனைத்தையும் ஓர் மரத்த குரலில் சொல்லி முடித்தான்.

அந்த சமயத்தில், கூட்டத்தில் மலர் நடந்து வருவதைப் பலர் கவனித்து விட்ட போதும், வானத்தை வெறித்தே இருந்த ராஜதுரையின் பார்வை, அவள் வந்ததை உணரவேயில்லை.

அவளுக்கும் அவனுக்கும் நாலே ஆள் என்ற இடைவெளி இருக்கையில், ''ரெஜிஸ்தர் ஆபீஸ்ல... எனக்கிருக்க செல்வாக்க வச்சு.. ஒரு பத்திரத்த வாங்கி... அத மலரு கையெழுத்துப் போட்ட ரத்த ரிப்போர்ட் பேப்பருக்கு அடியில வச்சுக் கையெழுத்து வாங்கினது நாந்தேன்...''

''ஒங்கள நம்ப வைக்க... அவள ரெஜிஸ்தர் ஆபீஸ்க்கு எதித்தாப்பல இருக்க வெக்காளி அம்மா கோவிலுக்கு வரச் சொன்னேன்! அவ என்கிட்டப் பேசுறதுக்காக... ரெஜிஸ்தர் ஆபீஸ்க்குப் பக்கமா வந்தா... அம்புட்டுத்தேன்! அவ உள்ள வரவுமில்ல... கையெழுத்துப் போடவுமில்ல! இது நான் பொறந்த இந்தவூரு மண்ண மேல சத்தியம்!''

''எங்க கலியாணத்துக்கு சாட்சியா பாண்டியன் வந்தான்னு சொன்னதும்... இந்தப் பயலை விட்டு மலருகிட்ட போனைக் கொடுக்கச் சொல்லிப் பேசச் சொன்னதும் நாந்தேன்... அந்தப் புள்ளைக்கு எதுவும் தெரியாது!''

''பொறவு! முக்கியமான விசயம்... அவ கழுத்தில தாலி ஏறுனதுக்குப் பொறவு த்தேன்... அவ என்னோட உடமயானா! அதுக்கு முன்ன, எம் முழி கூட... அவளை முழுங்க விட்டதில்ல! இது... நாங் கும்புடுற கருவி யாண்டி மேல... சத்தியம்! சத்தியம்! சத்தியம்!''

''எம் பொஞ்சாதி தங்கம்! உரசிப் பாக்காத தங்கம்!''

''நானா போயி.... அவ மனசைக் கலைக்கைன்னா... அவ மனசில கொஞ்சமா ஏற்பட்ட சலனம் கூட நருசா வந்திருக்காது!''

''எல்லாத்துக்கும் மூலக் காரணம் நாந்தேன்!''

''அதுவும்... ஊரைக் கூட்டி... கலியாணத்துக்கு முன்னாடியே அவ என்னோட பொஞ்சாதியா வாழ்ந் தான்னு சொன்னது, எங்க அவ எனக்குக் கிடைக்காம போய்டுவாளேங்கிற பயத்தில த்தேன்...''

''கலியாணம் முடிஞ்சதுன்னு சொன்னாப் போதும்... அவள எனக்குக் கட்டிக் கொடுத்திருவாங்கன்னு நினைச் சேன்... ஆனா... வாசு வெவாகரத்துங்கிற அளவுக்குப் போனதும்... நா அந்தப் பொய்யைச் சொல்ல வேண்டிய தாப் போச்சு!''

''நீங்க கேக்கலாம்... ஏன் அவளத் தூக்கிட்டுப் போயி கட்டியிருக்கலாம்ல... எதுக்கு ஊரக் கூட்டி அசிங்கப்படுத் துனேன்னுட்டு! ஆமா... கட்டியிருக்கலாம்! ஆனா... எனக்கு வாசு மேலையும் அவுக அப்பன் மேலயும் இருந்த வன்மத்தை இப்படித் தீர்த்துக்கலாம்ன்னு நினைச் சேன்...''

''ஆமாய்யா... வன்மம் த்தேன்... என்னைய விட ஒருத்தன் பெரியாளா வரதாங்கிற வன்மம்! ஆனா...



அந்த வஞ்சமெல்லாம்... என் மலரு என்னைக்கு வாயைத் தொறந்து ஒத்த வார்த்தைப் பேசலையோ... அப்பவே சுக்கு... சுக்காப் போச்சுது!''

''நா சொன்ன பொய்யி... எம் மலரோட உசிரையே குடிக்கிற அளவுக்குப் போவும்ன்னு நா நினைக்கவே இல்ல! நா செத்தா த்தேன். போவும் போலிருக்கு அவ மனசு ரணப்பட்டு அழுததும் த்தேன். நா பண்ணின தப்புக்கு அவளை நல்லா பாத்துக்கிட்டா மட்டும் பத்தாது... அவ உத்தமின்னு ஊருக்கு முன்னே நிரூபிக்கணும்ன்னு நினைச்சேன்...''

''எம் மலரு மாசு படாத தங்கம்!''

''அவ கழுத்துல எங்கையி... தாலி கட்டுறதுக்கு முன்னாடி, அவ எம் பொஞ்சாதி ஆகிட்டான்னு சொன் னது பொய்யி!''

''ஆமா... பொய்யி த்தேன்... நாஞ் சொன்னது பொய்யி த்தேன்...''

''என்னைய ம...............''

அந்த வார்த்தை ஒலி வடிவம் பெறவில்லை.

''மன்னிப்பு'' என்ற வேண்டுதல் அவன் உதடுகளி லிருந்து விடைபெறவில்லை.

ஊரின் முன்னே ''பொது மன்னிப்பு'' கேட்டு அவன் தலை குனியவில்லை.

அவனைவிட மோசமான ஜாதி வெறி கொண்ட பலரின் முன்னே அவனது தரம் இறங்கவில்லை.

அவனை விடவும் சுயநலமிக்கப் பலரின் முன்னே அவனது கவுரவம் குறையவில்லை.

மனதில் ஒருத்தனையும், மடியில் ஒருவனையும் கல்யணம் என்ற பெயரில் துன்புறுத்தும் யார் முன் னிலையிலும் அவனது காதல் தாழ்ந்து விடவில்லை.

வெளிப்பூச்சுக்காய் வீடும், வெறும் பகட்டுக்காய் நிலமும் சேர்த்து வைத்திருப்போரின் முன்னே அவனது குலப் பெருமை குலைய வில்லை.

இதை எல்லாவற்றையும் விட, அவனது பொய்களால் தன் மானம் போயிற்று என்று இத்தனை நாளை அவனைக் கொல்லாமல் கொன்று கொண்டிருந்த மலா், அவனது தலையைக் குனிய விடவில்லை என்பது அங்கே அவர்கள் ஒருவர் மீது ஒருவர் கொண்ட காதலுக்கு நற்சான்றாகிப் போனது!

கணவன் என்ன சொல்லப் போகிறான் என்பதை ஊகித்தவளாய், தன் நிலையையும் மறந்து, சுற்றியிருந்த மக்களின் மீது இடிபட்டு, அவன் கூறியதில் தத்தம் ஜீவன் மறந்து, வாய் பிளந்து நின்றிருந்த மரங்களின் மீது மோதி என முன்னேறி வந்தவளுக்கு, இதனால் அவ ளுக்கு ஏற்படப் போகும் பாதிப்பைப் பற்றிய கவலை சிறிதும் இருக்கவில்லை.

ஏற்கனவே, அடிவயிற்றில் ''நம... நம... நம...'' என்றிருந்து கொண்டிருந்த வலி, இப்போது இடுப்பிலும், விலாவிலும் இடிப்பட்டதன் வாயிலாக, ''நங்... நங்... நங்...'' என்று உடம்புக்குள் ஊடுருவியதைக் கூடக் கவனிக்கவில்லை.

வேகம் கொண்டு கணவனை அடைந்தவள், அவன் உயரத்துக்குச் சற்றே எம்பி, அவன் அந்த வார்த்தை சொல்லும் முன்னர், அவனது வாயை அடைத்திருந்தாள்.



கை அவன் வாயை அடைத்த வினாடி, ''மாமா...'' என்ற கூவல் அவளுள்ளிருந்து வெளிப்பட்டு, அவனுள் சென்று, அவனது மடிந்த ஜீவனுக்கு உயிர்க் கொடுத்து எழுப்பியது!

ஸ்தம்பித்து என்பார்களே அதெல்லாம் சிறிய வார்த்தை!

அவனது உணர்வின் வர்ணிப்பதற்குத் தமிழ் அகராதி யில் புதிதாய் ஓர் வார்த்தைக் கண்டுபிடித்தாக வேண்டும்! இருப்பதைச் சொல்ல வேண்டுமெனில், வியப்பு! அதிர்ச்சி! பேரதிர்ச்சி! சந்தோஷம்! அளவிட முடியாத சந்தோசம்! திகைப்பு! நிம்மதி! பேரானந்தம்! பரமானந்தம்! ஜென்ம சாபல்யம்!

எதையும் உணராமல், வெறுமனே மனைவியின் அழைப்பில் மட்டுமே ராஜதுரை அதிர்ந்திருக்க, மனை யாள் பேசினாள்! அவனுக்காய்!

''இவுக முன்னாடி எதுக்கு மாமா மன்னிப்புக் கேட்கு தீக...'' என்று இரைந்தவள்,

''நீரு தப்பு பண்ணீரு த்தேன்... ஆனா... இவுக முன்னாடி மன்னிப்பு கேட்குத அளவுக்கு எம் புருஷன் ஒண்ணும் தாழ்ந்து போவல!'' என்று மலர் பேசிக் கொண்டிருக்கும்போதே,

''ஆத்தா பொன்னு என்னைய மன்னிச்சிடு தாயி!'' என்று அவளது காலில் விழுந்தது, வேறு யாராய் இருக்க முடியும்? வேலு கருப்பனே தான்!

''ச்சீ... ச்சீ'' என ஏதோ தீண்டத் தகாததைத் தொட் டவள் போல், தன் காலை உதறியவள்,

தந்தையின் ''இந்தச் சண்டாளன் சொன்னப் பொய்யை நம்பி...''

''அடச்சீ! அவரு சொன்னா... நீரு ஏன்ய்யா நம்புனீரு?'' என்று அவரை எதிர்த்துக் கேட்டவள், கணவனிடம் திரும்பினாள்.

''ஒமக்கென்ன பைத்தியமா... மாமா? இவைங்க முன்னாடியெல்லாம் மண்டிப்போட்டு நின்னுக்கிட்டு இருக்கீரு? அப்படியென்ன தப்புப் பண்ணுப்புட்டீரு! எம்மேல... உள்ள ஆசையில... சத்த பிசகிட்டீரு... இதுக்கென்ன வூரு முன்னாடி மன்னிப்பு... மண்ணாங் கட்டி வேண்டிக் கிடக்கு...''

ராஜதுரைக்கு அப்போது தான் உயிர் வந்தது போலும்.

''என்ன மலரு சொல்லுதே... நீ தானே... நேத் தைக்கு...'' என அவன் தடுமாற,

பிடித்திருந்த அவனது சட்டையை இழுத்து, தன் கண்ணெனும் ஆயுதத்தால் அவனைக் கொலை (காதல் கொலை) செய்து, தானிருக்கும் மனதிற்குள் தானே ராணியாய் மாறி, ''சொன்னேன் த்தேன்! அதுக்காவ ஒங்கள மன்னிப்பா கேட்கச் சொன்னேன்? எம் மாமன் யாரு முன்னாடியும் தல குனியக் கூடாது! அதுக்கு... இந்த ஊரில இருக்க ஒரு பயலுக்கும் தகுதி இல்ல...'' என்றவள், அவனது காதலின் கண்மணியாகிப் போனாள்.

ஆனால், மலரும் ராஜதுரையும் தத்தம் உணர்வுகளுக் குள் சிக்கியிருக்க இது தனியறை அல்லவே! ஊர்ப் பொதுக்கூட்டம் அன்றோ!

வேலுகருப்பன், ''தாயி... அன்னைக்குக் கூறில்லாம ஏதேதோ பண்ணிப்புட்டேன் தாயி! அவன் சர்க்கார் காகிதம்ன்னு நீட்டவும்... மனசு தடுமாறிப் போச்சுது!''

மலருக்குப் பத்திக் கொண்டு வந்து விட்டது!



''நல்லா அசிங்கமா வந்துடும் வாயில... அவரு சர்க்கார் காகிதத்தக் காமிக்கும் முன்னே... நீரு அப்படியே எம் மேல பாசத்தப் பொழிஞ்சீரோ? அந்த சில்க்கு ஜிப்பாக் காரனுக்கு என்னைய கட்டிக் கொடுக்க... நீயும் உம் மவனும் திட்டம் போட்டு... என்னைய சாவடிக்கல! எனக்கு வர ஆத்திரத்துக்கு... உன்னைய கொன்னுடு வேன்!'' - மலர் ஆக்ரோஷமாய் கத்தவும்,

''பொன்னு... அண்ணே தப்புப் பண்ணிட்டேன் பொன்னு! என்னவா இருந்தாலும்... உன்னைய நா நம்பியிருக்கணும்... தப்புப் பண்ணிப்புட்டேனே!'' என்று தன் முதல் வார்த்தையை உதிர்த்தான் வாசுதேவன்.

''வாய்யா... வா! ஒன்னையத் தேன்... இம்புட்டு நாளா தேடிக்கிட்டு இருந்தேன்... எதுக்குத் தெரியுமா? பாத்த மாத்திரமா அப்படியே வெட்டிப்புடலாம்ன்னு த்தேன்...'' என்ற மலர், வாசு பேசும் முன்னர்,

''பெருசா பீத்திக்கிவியே... மெத்தப் படிச்சவன்... மெத்தப் படிச்சவன்னுட்டு! படிப்புங்கிறது... பகுத்தறிவ வளக்கணும். இப்படிச் செம்மறி ஆட்டுத் தனத்த இல்ல... என்ன படிச்சிருந்து... என்னய்யா சாதிச்சே? கூறுங்கிறது சுத்தமா இல்லாம...''

''இப்படிக் கூறுகெட்டவன்... தங்கண்ணு முன்னால வளந்தா... எம் மாமனுக்கு ஏன்ய்யா வன்மம் வராது? கூறே இல்லாத நீயே இம்புட்டு வளரலையில... ஊருக்கு ராசனைய்யா அவரு! ஒம் மேல வம்மம் வச்சதில தப்பே இல்ல...'' என்று தன் காதல் மனதை வென்றவனுக்குத் தன் பலம் முழுதையும் திரட்டி, வக்காலத்து வாங்கிக் கொண்டிருந்தாள் மலர்.

அதற்குள் ஊருக்குள் சலசலப்பு ஏற்பட்டது.

''ராசதொரயா இப்படி? வாசுவ வஞ்சம் தீக்க இப்படிப் பண்ணிப்புட்டானே...''

''அன்னைக்கே அந்தப் புள்ள அந்தக் கெஞ்சுக் கெஞ்சுச்சு... பொட்டக் கோழி கூவி விடியவா போவுதுன்னு நாம த்தேன் நம்பாம போயிட்டோம்.''

''ராசு எங்கப்பு நம்ப விட்டான்? அவஞ் செய்ததுத்தேன் நியாயம்ன்னு நம்ம வாய வில்ல அடக்கிப்புட்டான்.''

''திட்டம் போட்டே செஞ்சிருக்கான்... பாவி...''

''என்னவா இருந்தாலும்... கட்டாயத் தாலியில்ல கட்டிப்புட்டான்...''

''பொன்னு வாய் பேசுமே ஒழிய... விடலைப் பசங்களப் பாத்து... லேசாய்ச் சிரிக்கக் கூடச் செய்யாது!''

''க்கும்! ஆமா... எம் மவ கூடச் சொன்னா... பொன்னு வேணாம் வேணாம்ன்னு சொல்லுச்சம்... இவன் தேன்... அத வலுக்கட்டாயமா வண்டில ஏத்திக் கூட்டிப் போனானாம்...''

''பொன்னு... எப்பவுமே நெருப்புத் தேன்!'' என்று ஊர் மக்கள் அவரவர் பாட்டிற்குப் பேச,

''அடச்சீ... நெருத்துங்க'' என்று ஓங்கிக் கத்தினாள் மலர்.

''மலரு...'' என்று ராஜதுரை இழுக்க,

''நீரு சும்மா இரும்! சும்மா... எதுக்கெடுத்தாலும் மலரு... மலருன்னுட்டு...'' என்று அவனை அடக்கியவள்,



''அன்னைக்கு என்னடான்னா... நா அம்புட்டு கெஞ்சினேன்னு... எவனாவது அசைஞ்சு கொடுத்தீகளா? இப்ப என்னவோ... எம் மாமனப் பத்தி நாக்க வலிச்சுக்கிட்டுப் பேசுறீக? ஒங்களுக்கே வெக்கமா இல்ல... பேசுற நாக்க இழுத்து வச்சு அறுத்துப்புடுவேன் அறுத்து!''

''என்னைய ஊரு முன்னாடி அசிங்கப்படுத்தினாருத்தேன்... ஆனா அது வெறுமனே வஞ்சத்த தீத்துக்கிறதுக்கா மட்டுமா இருந்தா... நீங்க குதிக்க வேண்டியதுத்தேன்! ஆனா அவரு எம் மேல ஆசையில்லாம... வெறுமனே வம்மதுக்காக மட்டும் இதைச் செய்யல...''

''போன வழி தப்புன்னாலும், அவரு சேர்ந்த இடம்... அதான் எம் மனசு அவருக்காகவே செஞ்சது!''

''தப்பே செய்யாத மனுஷன்னு இந்த ஒலகத்தில யாருமே இல்ல...''

''ஏன்... இந்த மல்லிகாக்கா வீட்டுக்காரர் மாதிரி குடிகாரரு... இந்த ஊரிலேயே இல்ல...''

''இந்த இசக்கி முத்து பய... டவுன்ல ஒரு புள்ளையோட ஓடிப் போயிட்டான்...''

''இந்த பாண்டியண்ணே சித்தப்பா மவன்... கஞ்சா அடிக்கிறான்...''

''ஏன்... என்னோட கூடப் பொறந்த பொறப்பே என்னைய நம்பல!''

''என்னையப் பெத்தவருக்கு... அவரு ரத்தத்தை விட... சாதித்தேன் பெருசா போச்சு...''

''அதோ அந்தக் கோமதியக்கா... யாரு வீட்டு வம்பைடா பேசலாம்ன்னு அலையுது!''

''இந்தா நிக்காளே... என்னோட ஒண்ணா வளந்தவ... ஒரே தட்டில சாப்பிட்டு... ஒரே பள்ளிக்கொடத்துக்குப் போயி... ஒரே காலேசுல படிச்சு... என்னைய நல்லா தெரிஞ்சவன்னு நான் நினைச்சவ... ஒரு பச்சோந்தியா திரியுறா! நாத்துனாங்கிற ராங்கித் தனம் குடிகொண்டு போச்சு...''

''எம் மாமியா... பேரில மட்டும் சந்தோசத்த வச்சுக்கிட்டு... யாருக்கும் சந்தோசத்தைக் கொடுக்காம இருக்குது!''

''இந்தா எம் மாமனாரு... பேச நாக்கிருந்தும்... அத பொஞ்சாதி ஏவுற திசைக்குத் தேன் அசைக்காரு!''

''ஏன்... நானே தப்புப் பண்ணினவ த்தேன்! அவரு மேல நானும் ஆச வச்சேன்... என்னைய கட்டிக்க வழி பாரும்ன்னு அவர/உசுப்பி விட்டேன்... ஆனா.. அவரு வந்து நிக்கையில, இல்லைன்னு ஆடினே! என்னைய அசிங்கப்படுத்தி... கலியாணம் கட்டிக்கிட்டாருங்கிற ஒரே காரணத்துக்காக... அவர பண்ணாத இம்சை யெல்லாம் பண்ணினேன்!''

''எல்லாரும் தப்பு பண்றோம்! பண்ற தப்ப உணராம திரும்பத் திரும்ப அதே தப்பப் பண்ணிக்கிட்டே இருந்தா நாம மனுஷ ஜென்மமா இருக்க லாயக்கில்ல!'' - இதுவரை ஊரை நோக்கியே இருந்த மலரின் பார்வை, ராஜதுரையின் மீது படிந்தது.

அவன் கண்ணை விட்டுப் பார்வையை அகற்றாமல், வழி வழியே மனதிற்குள் குடிப் புகுந்து, ''ஆனா... எம் மாமன்!'' என்று ஓர் இடைவெளி விட்டு நிறுத் தியவள்,



''மனுஷன் இல்லைய்யா! பெரிய மனுஷன்! சண்டியன்! சீமைத் தொர!'' என்றாள் கர்வமாய்.

## 25

மனைவியின் பேச்சில் திகைத்தவனாய், மலைத்து நின்றான் ராஜதுரை!

தன்னைப் புரிந்து கொண்டு விட்டாளா? தன் காதலை உணர்ந்து விட்டாளா? தன்னைக் கணவனாய் ஏற்றுக் கொண்டு விட்டாளா? தன் குழந்தைகளுடன் சேர்த்துத் தனக்கும் உயிர்க் கொடுத்து விட்டாளா? - அவனால் நிகழ்வதை நம்பக் கூட முடியவில்லை!

முந்தைய தின இரவு வரை, ஏன் இன்றைய தினக் காலையில் கூட, ஒரு வார்த்தைகூடப் பேசாமல் கொன்ற வளா? என் மலரா? என் நேசம் கொண்ட மனைவியா? என்று தான் காண்பதை நினைவென்றே கருதவில்லை அவன்!

''என்னை அசிங்கப்படுத்திட்டீரே!'' என்று கதறிய மலருக்கும், ''இவுக முன்னாடி தல குனிஞ்சு நிக்கிற அளவுக்கு... நீரு எந்தத் தப்பும் செய்யல!'' என்று அறைகூவும் மலருக்கும் ஏகப்பட்ட வித்தியாசங்கள் தென்பட்டன, ராஜதுரைக்கு!

ஆனால், அதிர்ச்சி.... திகைப்பு.. மலைப்பு... வித்தி யாசம்... ஒற்றுமை என எல்லாவற்றையும் மீறி, அவனுள் ஓர் சந்தோசம் ஊற்றாய் பெருகி ஓடியது!

ஊர் முன்னிலையில் தனது தலை குனியக்கூடாது என்ற அவளது எண்ணமே அவளது காதலுக்குச்

சான்றாகிப் போக, இன்றே கூட சாவு வந்தால் பரவா யில்லை என்ற எண்ணம் அவனுள் எழுந்தது!

ஆனால், எழுந்த மறுவினாடி இல்லாமல் குலைந்தும் போனது! பின்னே, அவன் போய் விட்டால், அவனது மலருக்கும்... அவனது பிள்ளைகளுக்கும் யாரிருக் கிறார்கள்! ம்ஹூம், வாழ்க்கை முழுதும் அவளைச் சந்தோஷமாய் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற உறுதி, மனதினுள் புகுந்த அதே சமயம், அவனைப் பற்றியிருந்த மலரின் கரங்கள் அழுத்தமாய் இறுகின.

அந்த அழுத்தம் ஏதோ விபரீதத்தை அவனது ஆறறி விற்கு உணர்த்த, ''மலரு... என்ன செய்யுதுடி...'' என் றான் துடித்தவனாய்.

மலருக்குமே அப்போதுதான், வெளியிருக்கும் உலகம் மறந்து, உள்ளிருக்கும் உலகத்தின் மாய லீலை பிடிபட்டது போலும்!

''மா.... மா...'' என்று சன்னமாய் முனங்கியவள், உள் ளிருந்து கிளம்பிய பெருவலியின் காரணமாய், ''வலிக்குது மாமா...'' என்றாள் சத்தமாய்.

துடித்துப் போனான் ராஜதுரை என்பது அங்கிருந்த அனைவருக்குமே புரிந்தது! சந்தோசம் உட்பட!

'என்ன மலரு... என்ன செய்யுது...'' என அவன் பதற,

''தெரியல மாமா... ஒண்ணுக்குப் போவணும் போல இருக்கு...'' என்றாள் மலர், தன் சிரமத்தை வெளிப் படையாய் முகத்தில் காட்டி.

''இரு... இந்தா போயிடலாம்...'' என்றவன், வினாடி தாமதிக்காமல் அவளைக் கையில் ஏந்திவிட, ஊரே வாய் பிளந்து நின்றது.



''ஒண்ணுமில்ல மலரு... ரெண்டே நிமிசத்தில நம்ம வீட்டுக்குப் போயிறலாம்... போனதும் போ...'' என்று அவன் சமாதானம் செய்தது எல்லாம், மலரின் வலியைக் கட்டுப்படுத்தவே இல்லை.

''அய்யா... ராசு... புள்ள ரொம்பத் துடிக்குதே, பெரிய வீட்டுக்குக் கூட்டிப் போயுறேன்...'' என்று பெரிய மனுஷன் சொல்ல, சந்தோசத்தின் முகத்தில் ஓர் ஏக்கம் வெட்டிச் சென்றது!

ஆனால், அவர் மகன் என்ன ரோஷமற்றவனா? இல்லை அவர் மருமகள் தான், மகனின் மனம் அறியாத வளா?

தன் கோபத்தை முன்னிறுத்தி, மனைவியின் வலியை அதிகரிக்கக் கூடாது என்றெண்ணிய ராஜதுரை தயங்கி நிற்க, ''இல்ல மாமா.. நம்ம வீட்டுக்கே போய்டலாம்...'' என்றாள் மலர், உதட்டைப் பற்களால் கடித்து, தன் வலியை மறைத்துக் கொண்டு.

அவளது உதடு அறுபடுவதை ஏற்கனவே ஒருமுறை கண்ட அனுபவமோ என்னமோ, ராஜதுரையின் மனம் வலியில் சுருண்டது!

வேகம் கொண்டு அவன் நடக்க, அவனது கையிலும் வேஷ்டியிலும் ஈரம் படியத் தொடங்கியதுமே, ராக்காயி யும் அங்கிருந்த சில பெண்களும், ''ஆத்தி... பனிக் கொடம் உடைஞ்சிருச்சே எஞ்சாமி!'' என்று நடந்ததைக் கணித்து விட்டிருந்தனர்.

ராஜதுரையின் மூச்சு ஒரு முறை நின்று போனது!

அதை மேலும் சில நிமிடங்கள் நிறுத்தி வைப்பது போலும், ''புள்ளைங்க... மூச்சுக்கு இல்லாம... கஷ்டப் பட்டுப் போவுமே?''

''மூணு புள்ள வேற... சிக்கலாகிப் போவுமே...''

''இந்நேரத்துக்குக்... கர்ப்பவாயி... தொரந்திருக்கும். பிரசவம்... சுளுவா இருக்காது!''

''பனிக்கொடம் உடைஞ்சு ஊத்துதுன்னா... அப் பையோ வலி வந்திருக்கணும்! மவராசி... எப்படிப் பொறுத்தாளோ...''

''ராசதொர மேல எம்புட்டு ஆச இருந்தா... உயிர் போற வலி தாங்கியிருப்பா! கருவியாண்டவனே... தங்க மவ நல்லபடியா பொழைச்சு எழணும்!''

''ஆச மட்டுமா? அவந் தல குனியக் கூடாதுன்னு நெஞ்சுரமும் சோத்தில்ல இருந்திருக்கு...! இப்படியொரு பொஞ்சாதி கெடைக்க... ராசதொர புண்ணியம் பண்ணி யிருக்கணும்!''

''நாமளும் த்தேன்... மீனம் பாத்து.. மேச்சம் பாத்து... நா(ள்) பாத்து... நட்சத்திரம் பாத்து... கலியாணம் பண்ணுதோம்! ஆனா... ஒத்த ஜோடி கூட இம்புட்டு அன்னியோன்யமா இருந்ததில்லடியம்மா!''

''இருந்தா... தொர மாதிரியும்... மலரு மாதிரியும் வாழணும்! ஒரொருத்தருக்கு ஒருத்தர் விட்டுக் கொடுக் காம... என்னம்மா இருக்குதாக! எனக்கும் வாச்சிருக்கே... அவுக அப்பன் வீட்டு முன்னால... என்னைச் சீக்கு வச்சு... சின்னாப் பின்னமாக்குது!''

ஓரோருவரும் ஒவ்வொன்று பேச, அதில் பல, ராஜதுரையின் நெஞ்சைக் கிழித்துச் சென்றது!

அது ஒரு புறமென்றால், மலர் ''ம்ம்ம்... ம்ம்ம்... ம்ம்ம்.. ம்மா... ம்மா...'' என்று முனங்கல், அவனைச் சிதைத்துப் போட்டது!



ஐயோ, தன் மானம் காக்க வேண்டி, தன் உயிரையும் துச்சமாக்கியிருக்கிறாளே! எப்பேர்ப்பட்ட அன்பிருந்தால், இதைச் செய்ய முடியும்?

இந்த அன்பின் முன்னே, தான் வைத்த நேசமெல்லாம் எந்த விதத்தில் சேர்த்தி!

''கண்ணம்மா! மலரு!'' - மனம் கதறியது!

அவனது கதறலுக்கு எதிரொலியாய், ''ஐயோ! ஊரு கண்ணே... புள்ள மேல பட்டுடுச்சே! நல்லபடியா பெத்தெடுக்கணுமே! வேலய்யா!'' என்று உளமார ஆண்டவனை வேண்டினாள், ராக்காயி.

''ராக்காத்தா... அவளுக்கு ஒண்ணுமில்லையில்ல... என்னாத்தா சொல்லு!'' என்று கேட்ட குரல், தனக்குச் சொந்தமானது தானா என்று அவனுக்குச் சந்தேகமே வந்தது! அந்தளவிற்குக் குரல் கமறியிருந்தது!

ஊரையே ஒற்றைப் பார்வையில் கட்டிப் போடும் மகராசன், தன் ஒரு வார்த்தைக்காக யாசகம் கேட்டு நிற்பது, நெஞ்சைப் பிசைய, ''பயப்படாதீங்க அப்பு... வேலன் தொணையிருப்பான்! கலங்காதீரும்!'' என்று ராக்காயி தைரியம் சொல்லி முடிப்பதற்கும், கூட் டத்தைத் தள்ளிக் கொண்டு அவர்களது வண்டியை அடைவதற்கும் சரியாக இருந்தது.

அதற்காகவே காத்திருந்தவள் போல், ''ம்ம்ம்ம்ம் ஆஆஆஆஆ'' என அலறினாள் மலர்.

அந்த வார்த்தையின் ஓரோர் உச்சரிப்பும், ராஜ துரையின் ஓரோர் அணுவிற்குள் சென்று, பலமடங்காய் மீண்டும் எதிரொலிக்க, அந்த ஆறடி அரசன் கிடு கிடுத்துப் போனான்!

வார்த்தை ஸ்தம்பித்து, உணர்வுகள் மங்கி, மயக்கம் வரும் போலிருந்தது ராஜதுரைக்கு!

''என்னப்பு... அப்படியே நிக்குதே... மம்.. உக்காரு! வெருசா போவோம்!'' என்று ராக்காயி, அவனைத் தட்டவும் தான், சுய உணர்வுப் பெற்றான் அவன்.

மலரை வண்டியில் ஏற்றும்போதும் தான், அவனும் கவனித்தான். வாசுவும் வேலுகருப்பனும் கண்ணில் கண்ணீருடன் பின்னாடியே வந்திருந்தனர்.

''வா...'' என்றும் சொல்ல முடியாமல்,

''எதுக்கு வந்தீக?'' என்று எடுத்தெறிந்தும் பேச முடியாமல், ராஜதுரை ஒரு வினாடி தயங்கி நின்றான்.

அவனது தயக்கத்தை முற்றிலுமாய் களைவது போல், மலர் ''ஆஆஆஆஆ...'' என்றாள் மீண்டும், இன்னும் கொஞ்சம் சத்தத்துடன்.

அவ்வளவு தான், கடவுளே எதிரே வந்திருந்தாலும் ராஜதுரையின் கண்ணில் பட்டிருக்க மாட்டார்.

கூடவே, ''என்னப்பு... என்ன ரோசன... ஏறும்! டேய்... அலகா வண்டிய எடு!'' என்ற ராக்காயியின் வார்த்தையும் சேர்ந்துக் கொள்ள, ராஜதுரை தன் நான்கு குழந்தைகளுடன் வண்டியில் ஏற, வண்டி வேக மெடுத்தது.

மலரின் அலறலிலும், ராக்காயியின் ''பொறுத்துக்கோ தாயி'' என்ற சமாதானத்துடனும், ராஜதுரையின் வலி களிலும் வேதனைகளிலுமாய், அந்தப் பயண நேரம் கழிந்துப்போக, மருத்துவமனை வந்து சேர்ந்தது.

அதன் பின், மலர் அவனிடமிருந்து பிரிக்கப்பட் டாள்!



''பனிக்குடம் உடையுற அளவுக்கா வச்சுக்கிறது? முன்னமே கூட்டிட்டு வந்திருக்க வேணாமா?''

''மூணு குழந்தையும் வெவ்வேறு திசையில் இருக்கு... ஹார்ட் பீட் வேற கம்மியா இருக்கு?''

''அப்படியென்ன வேல... என்ன பண்ணிட்டு இருந் தீங்க...''

''அய்யோ... அவங்களுக்கு பல்ஸ் வேற குறையுது! சிஸ்டர்... பிரஷர் செக் பண்ணுங்க...''

''ப்ச்... இவங்களுக்கு எப்படி லோ பிரஷர் வந்துச்சு! போன செக்-அப்ல இல்லையே!''

''சரி... இந்த ஊசியைப் போடுங்க...''

''சிஸ்டர்... ஓ.டி. (ஆபரேஷன் தியேட்டர்) ரெடி பண்ணுங்க.''

''எமர்ஜென்சின்னு சொல்லி... பிடியாட்ரிசியனை வரச் சொல்லுங்க...''

''ஒரு குழந்தையோட ஹார்ட் பீட் இறங்குதா? ஹோ... காட் ஃபாஸ்ட்!''

''இதென்னது... இவங்களுக்கு பல்ஸ் சரியாக ஊசி போட்டா... பசங்க ஹார்ட் பீட் இறங்குது!''

''குய்க்! குய்க்!'' - இதெல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு, ராஜதுரை எங்ஙனம் உயிரோடு இருந்தான் என்பதே அவனுக்குத் தெரியவில்லை.

''நீங்க போயி... உங்க மனைவியோட கொஞ்சம் பேச்சுக் கொடுத்திட்டே இருங்க... மிஸ்டர் ராஜதுரை. நாங்க அதுக்குள்ள ஆபரேஷனுக்கு ரெடி பண்ணிடு றோம்!'' என்ற மருத்துவர், முகத்தில் பீதியுடன் பின்னடைந்த ராஜதுரையை இழுத்துச் சென்று மலரின் அருகே அமர வைத்தார்.

அவர்கள் கொடுத்திருந்த ஊசியை விளைவக, மலர் ஆழ்ந்த மயக்கத்திற்குச் சென்றிருந்தாள்.

என்ன பேசுவது என்றுகூட ராஜதுரைக்குப் புரிய வில்லை.

''மலரு... மலரு... மலரு...'' - இதைத் தாண்டி அவ னால் எதையுமே யோசிக்க முடியவில்லை! பிள்ளை களைக்கூட!

கொஞ்சம் கொஞ்சமாய் அவனது வேதனையாவும், ஒலி வடிவம் பெற்றன. அவை, மலரின் காதில் விழுந் தனவா என்றெல்லாம் அவன் எண்ணக்கூட இல்லை. அவன் போக்கில் பேசிக்கொண்டே சென்றான்.

''நீ பேசிட்டேன்னுட்டு சந்தோஷமா இருந்தேனே... இப்படி ஒரேடியா எந்தலையில இடியைப் போட்டுராதே மலரு!''

''இதுக்கு நீ பேசாமலே இருந்திருக்கலாம்... ஐயோ... ஐயோ... எல்லாம் என்னால தான்!''

''ஊரக் கூட்டி... ஒன்னைய உத்தமின்னு நிருபிக் கிறேன்னுட்டு... ஒன் உசிரக் குடிச்சுப்புட்டேனே! கட வுளே!''

''என்னால ஒனக்கு... எப்பவுமே கஷ்டம் த்தேன்... ஒன்னைய ஒரு நா... ஒரு பொழுது சந்தோஷமா வச்சுக் கிடலையே!''

''எஞ் சந்தோஷம்... எம் வாழ்க்கை... எம் விருப் பம்ட்டே இருந்துட்டேனே... படுபாவி!''

''நீ சந்தோஷமா இருக்கணும்னு தான் ஒண்ணொண் ணும் செய்யுதேன்... ஆனா... கடைசிலே.... இப்படி ஆகிப் போவுதே!''



''இப்பக் கூடப் பாரு... ஊரக் கூட்டி... நீ சுத்தமான வன்னு சொல்லிட்டா நீ நிம்மதியா இருப்பேன்னு நினைச்சேன்... ஆனா...''

''நா மட்டும் ஊரக் கூட்டாம இருந்திருந்தா... நீ வீட்டில இருந்திருப்பே... வலி வந்தது தெரிஞ்சிருக் கும்... ஒடனே ஆசுபத்திரிக்கு வந்திருக்கலாம்! ஐயோ... இப்ப என்னால இல்ல... அம்புட்டும் கெட்டுப் போச்சு!''

''அய்யா! கருவியய்யா! ஒரொரு வருஷமும்... ஒரு கெடா பலி கொடுக்கிறேன்ய்யா! எம் மலரைக் காப்பாத்தீரும்!'' - தன் வேதனையின் முடிவில் (ம்ஹூம் அவன் முடிக்க எண்ணவில்லை. ஆனால் முடிக்க வேண்டியக் கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டான்), வேண்டுதலை ராஜதுரை முன் வைக்க,

''ஹய்யே! கஞ்சப்பிசுனாரி... ஒரு கெடா தானாக்கும்! மூணு வெட்டும்! எம் மக்க... மூணு பேருக்கும்!'' என்ற மலரின் குரல் அவனை உசுப்பி எழுப்பியது!

''மலரு!'' அவன் திகைத்து நிறுத்த,

''இவரு... ஒருத்தரு... மலரு... மலருன்னுட்டு...'' என்று சிரித்தவள், மறு வினாடியே

''ம்மா... மா...'' என்றாள் வலி மிகுதியில்.

''மலரு...'' என அவன் பதறியெழ

''எனக்கு ஒண்ணுமில்ல மாமா.. பயப்படாதீக!'' என்றாள் மலர், அவன் கைப்பிடித்து அழுத்தி.

அவளது பிடி கொடுத்த அழுத்தத்தில் தான், ராஜ துரைக்கு அடுத்த இரண்டு மணி நேரமும் கழிந்தது!

முதலில் வெளியே வந்த நர்ஸ் ''உங்களுக்கு பொண்ணு பொறந்திருக்கா...'' என்று நீட்ட,

''எம் பொஞ்சாதி எப்படியிருக்கா?'' என்றான் ராஜதுரை, அவளது முகத்தையே பார்த்தப்படி.

''ஒண்ணும் பிரச்சனையில்ல. இன்னும் அரை மணி நேரத்தில... ஓ.டி.ல இருந்து வெளிய வந்திடுவாங்க...''

''அவ... உசிருக்கு... உசிருக்கு... ஒரு ஆபத்தும் இல்லையில்ல...''

''அவங்க நூறு சதவீதம் நல்லபடியா இருக்காங்க. இது நா கும்புற இயேசு மேல சத்தியம்!'' என்று தன் கழுத்து சிலுவை மேல் அவள் கை வைக்கவும், ராஜதுரையின் மூச்சு நேரானது.

அதன் பின்னரே, அவனது பார்வை நர்ஸின் கையி லிருந்த தன் பெண்ணிடம் தாவியது.

செக்கச் செவேரென பஞ்சு மிட்டாய் போலிருந்தாள் மகள்!

சட்டென, அடுத்த இரு பிள்ளைகளின் ஞாபகமும் வர, ''மத்த ரெண்டு பிள்ளைங்க...'' என்றான் அவன் பதற்றமாய்.

''அம்மா வயித்துக்குள்ளேயே... பயங்கரமா சண்டைப் போட்டுட்டு இருக்காங்க, உங்க பசங்க! நா தான் ஃபர்ஸ்ட்... நா தான் ஃபஸ்ட் என்று குதிக்காத குறை தான்! இந்த விஷயத்தில ரெண்டு பேரும் ஃபஸ்டா இருக்க முடியாதுங்கிறதால... ஒரு முடிவுக்கு வரப் போராடிட்டு இருக்காங்க! ஆனா... ஒண்ணும் பிரச்சனை யில்ல... வந்திடுவாங்க!''

''ஹ்ஹ ஆஹா!'' என்று வாய்விட்டுச் சிரித்த ராஜதுரை,

''பயலுக, தானா, நர்சம்மா!'' என்றான் ஆர்வமாய்.



''ஆமா... பசங்க தான்! ஸ்கேன்ல பார்த்தேன்... நீங்க இன்னும் கொஞ்ச நேரத்தில நேர்லயே பாக்கப் போறீங்க!'' என்றவர்,

''உங்க பொண்ணு... உங்களைப் பாக்குறதுக்காகத் துள்ளிக் குதிச்சு ஓடி வந்திருக்கா! அவளைப் பாக்காம... இன்னும் சண்டைப் போடுற பசங்களையே கேட்குறீங் களே!'' எனக் கூறிச் சிரிக்கவும்,

''அதானே! வந்த மகாலெட்சுமியை மொதல பாருய்யா! தலைச்சம் பொண்ணு பொறந்தா... லெட்சுமி கொட்டும் பாக! நீங்க ரெண்டு பேரும்... நூறு வருசத்துக்கு சந் தோசமா வாழணும்... மவராசா!'' என்றாள் ராக்காயி, கண்ணில் நீருடன்.

அங்கே கண்ணீருடன் நின்றிருந்த வேலுகருப்பன் பக்கம் ராக்காயி கை காட்ட, ''பயமா இருக்குது ராக் காத்தா! வயித்தக் கீறிக்கிட்டுப் படுத்திருக்க மவராசி... வந்து என்ன ஆட்டம் ஆடுவாளோ! புள்ளங்களைக் காமிக்கிறதா.... வேணாமான்னு... ரெட்ட யோசனையா இருக்குது!'' என்றான் ராஜதுரை, உண்மையானப் பயத்துடனே.

''இதப் பாருடா... இந்த மலரு புள்ள கைகாரி தான்... ஆனானப்பட்ட எங்க சின்னய்யாவையே சாச்சுப் புடுச்சே!'' - ராக்காயியே கிண்டல் செய்யும் அளவிற்கு, மலர் ராஜதுரையை ஆட்டி வைத்திருந்தாள்!

''ஆத்தாடி ஆத்தா... இந்த ராக்காத்தாவுக்கு வந்த வாயப் பாருத்தா! எம் பொஞ்சாதியோட வாய கடனுக்கு வாங்கியிருக்கியோ!'' என்று கிண்டல் செய்த ராஜதுரை, அப்போதும் தயங்கி நிற்கவும்,

''என்னப்பு... ரோசனை? போ... போய் புள்ளையக் காட்டு! பெத்தவனில்ல... அவனுக்கும் இருக்காதா?''

என்று ராக்காயி தான், ராஜதுரையை அனுப்பி வைத்தாள்.

வேலுகருப்பனே பார்த்தப் பிறகு, ராஜதுரையின் பெற்றோரும், பூவரசியும் பார்ப்பதற்கு என்ன? அனைவரும் பார்த்துச் செல்லக் காத்திருந்தவள் போல், மலர் கண் விழித்தாள்.

அந்த நேரம், ராக்காயி மட்டும் அவளுக்குத் துணையிருக்க, ''என்ன ராக்காத்தா... எம் புள்ளைகளைப் பாத்துக்கச் சொல்லி... ஒன்னைய கூட்டியாந்தா! இப்படியா பண்றது? பச்சப்புள்ள பதறிப் போச்சில்ல!'' என்றாள் மலர், மலர்ந்த சிரிப்புடன்.

''ஆனாலும்... ஒனக்கிருக்க அதுப்புக்கு! சொல்லச் சொல்லக் கேட்காம... ஒன்னைய யாரு... கூட்டத்தை இடிச்சுக்கிட்டுப் போவச் சொன்னது?'' என்று கடிந்து கொண்ட பெரியவள்,

''எங்கய்யா... இப்படி வெசனப்பட்டு நா பாத்ததில்ல! ஒரே நாளையில... அவருக்கு மூணு வயசு மூப்பைக் கூட்டிப்புட்டே!'' என்றாள், தன் எஜமானின் நலம் கருதி.

மனம் நிறைந்துச் சிரித்த மலரின் பார்வை, பிள்ளைகளைத் தேடவும், ''குளியாட்டக் கூட்டிப் போயிருக்காக!'' என்றாள் ராக்காயி.

மீண்டும் மலரின் பார்வை அறையைச் சுற்றிவர, ''யாரத் தேடுறவ?'' என்றார் பெரியவர்.

''ஒனக்குத் தெரியாது? எம் மொகத்தில இருந்தே... ஒரு படம் ஓட்டுற அளவுக்கு ஒனக்கு விசயம் வெளங்கும்! இப்ப வெளங்கலையாக்கும்! சும்மா ரூட்டக் கொடுக்காத, ராக்காத்தா!'' என்று மலர் சிரிக்க,



''புள்ள பெத்தவ மாதிரியா இருக்கே? எட்டூருக்கு வாய் நீளுது!'' என்று மலரின் குமட்டில் குத்திய ராக்காயி ''இம்புட்டுப் பேசுற வாயி... எம் மாமன் எங்க... ராக்காத்தான்னுட்டு கேக்காதோ?'' என்றார் நக்கலாய்.

''கேட்டாத் தேன் சொல்லுவீகளோ?'' என்றாள் மலரும் அதே நக்கலுடன்.

இரு பெண்களும் மலர்ந்து சிரிக்கவும், கதவைத் திறந்து கொண்டு ராஜதுரை உள்ளே வரவும் சரியாக இருக்க, ராக்காயி வெளியேறினாள்.

அதன் பின்னர், நீள நீளப் பத்திகளாக காதல் பரிமாறப்படவில்லை!

காதல் ரசம் சொட்டும் வசனங்கள் இருவர் உதட்டிலிருந்தும் வெளிவரவில்லை!

என்னை மன்னித்துவிடு என்ற சமர்ப்பணங்கள் இல்லை!

உன் மேல் உள்ள காதலால் தான் இப்படிச் செய்தேன் என்ற விளக்கங்கள் இல்லை!

அணைப்புகள் இல்லை! முத்தங்கள் இல்லை! இதழொற்றல்கள் இல்லை! கையும் கையும் பிசையவில்லை!

ஒருவர் விழியை மற்றவரது பார்வைக் கட்டிப்போட, மலரின் நெற்றியை வருடின ராஜதுரையின் நடுங்கும் விரல்கள்!

அந்த இதம் தந்த சுகமோ இல்லை அவனது காதலை வென்ற கர்வமோ, மலர் ''மாமா...'' என்று ஆசையாக விளித்து நிறுத்த,

அவள் இதழ் அவிந்தப் பேரானந்தமோ இல்லை தன் பிள்ளைகளைக் கண்ட சந்தோஷமோ இல்லை அவளது

மனதில் தான் பிடித்திருக்கும் இடமோ, அவனை ''மலரு...'' என்று சந்தோஷமாய் விளிக்கச் செய்தது!

அந்த விழி வெட்டலும், வார்த்தை முட்டலும்... அவர்கள் வாழ்வு முழுமையாவதற்கு அத்தாட்சியாகிப் போயின!

## 26

✱ ஆறு மாதங்களுக்குப் பின்னர் ✱

''ஆறு மாசத்தையிலே... ஒனக்கிருக்க விசமத்துக்கு... இங்கன வாடி! ஏய்... தமிழு... இங்க வா!'' - தனக்குப் போக்குக் காட்டிவிட்டு, வேகவேகமாய் ஒற்றைக் காலில் தவந்து சென்ற தன் மகளை அழைத்துக் கொண்டிருந் தாள் மலர்.

அந்த நண்டோ, தாயைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு, வாசலை நோக்கி, ஏவுகணையெனப் பாய்ந்தது!

''தமிழு... அம்மாட்ட வந்திடு! இல்லைன்னா... தர்மனுக்குக் கொடுத்திடுவேன்!'' என்று மலர் மிரட்ட,

தாய்க்குத் தப்பாமல் பிறந்த அந்தச் செல்வச் சிட்டோ, ''ஹி... ஹி... ஹக்...'' என்று சத்தம் எழுப்பிக் கொண்டே, வாசல் நோக்கி விரைந்தது.

விழ வேண்டிய காதில் விழாத மலரின் மிரட்டல், விழக்கூடாத காதில் விழுந்து, தாயைப் பின்னிருந்து ஒரு எத்து விட்டான், அவளது தவப்புதல்வன் 'தனஞ் செயன்!'



''அடிக்கழுத! இப்பவே என்ன தோரணை ஒனக்கு?'' என்று மகனின் கன்னத்தில் செல்லமாய்த் தட்டியவள், அவனை முன்னே இழுத்து, ஓர் வாய் உணவை உள்ளே திணித்தாள்.

பிள்ளைகள் மூவரும் உணவுண்ணப் படுத்தியப் பாட்டில், ''பேசாம... இதுக வாய்க்கு ஒரு ஜிப்பைத் தைச்சு விட்டுறலாம்... சோறு ஊட்டையில தொறந்துட்டு... சோத்தை உள்ளார வச்சு, ஜிப்பை மூடிவிட்றலாம்! இதுங்க... ஒத்த வாய் சோறு உண்கிறதுக்குள்ள... நமக்கு சீவனத்துப் போவது!'' என்று கூட அவளுக்குத் தோன்றும்.

''ஒனக்கா கொடுக்கிறேன்னு சொன்னேன்? தர்மனுக் குத் தானே கொடுக்கிறேன்னு சொன்னேன்... அவன் பேரைக் கேட்டா... எங்கிட்டுக் கெடந்து தான் ஓடியாறு வியோ!'' என்று செல்லமாய் சலித்துக் கொண்டவள், அவன் வாயைத் துடைத்து விட்டாள்.

இரண்டு வாய் உணவு சென்றதும், தனஞ்செயன் ஓடிவிட, ''ஏலேய்... தர்மா! எங்கடா இருக்கே? எப்பப் பரு.. இந்த மேசைக்குக் கீழேயே என்ன த்தேன் சோலியோ ஒனக்கு! இங்க ஓடியா... அம்மாட்ட வா!'' என்று அடுத்தவனை அழைத்தாள், தாய்.

அந்த இளம் கன்றோ, முதல் நாற்காலியிலிருந்து அடுத்த நாற்காலியின் காலுக்குள் அனாசயமாய் வளைய வந்தது!

''முட்டிக்கப் போறடா, தர்மா! சொன்னது கேட்குது களா... வாலுக!'' என்று மலர் பல்லைக் கடிக்கும்போதே,

''எம் புள்ளைகள வையாதடி...'' என்றபடியே வந்தான் ராஜதுரை, கையில் அவனது செல்ல மகள் தமிழரசி யுடன்.

''அதானே பாத்தேன்! என்னடா... சின்னக் கழுத வாசப் பக்கமே வாசம் செய்யுதேன்னுட்டு! அவுக அப் பாவைப் பாக்கப் போனாக போல!'' என்று கணவனின் கையிலிருந்த மகளுக்கு, இரண்டு வாய் உணவை வேகவேகமாய் உள்ளே செலுத்தினாள், பொன்மலர். பின்னே, தந்தை கையிலிருக்கும் போது மட்டுமே, தமிழரசி தன்னை மறந்து உணவை வாங்குவாள்! கிடைத்தச் சந்தர்ப்பத்தை விடலாமோ?

அடுத்த ஒரு மணி நேரமும், அந்த வீடு போர்க் களமாய் மாறிப் போயிருந்தது! உணவுப் போர்க்களம்! வெற்றி பெற்றது மலரின் கையா? பிள்ளைகளின் வாயா? என்பது சந்தேகத்திற்கு உரிய விஷயமே!

ஒரு வழியாக, பிள்ளைகள் மூவரும் இருவர் உறங்கி விட, பெண்ணரசி மட்டும்... ராஜதுரை உணவுண்ணும் வேளையில், அவனது மடியை அலங்கரித்தாள்.

''பெரிய இவுக அப்பாட்டேயே வளந்தவுக! போடி கழுத!'' என்று மகளைச் சீண்டியபடியே, கணவனுக்கு உணவு பரிமாறினாள், பொன்மலர்.

''எப்படி மலரு... எத்தனை வாட்டி வச்சாலும்... ருசி கொறையாம... வாசம் கொறையாம... உன்னால இப்படிச் சமைக்க முடியுது!'' என்றவன், கருவாட்டுக் குழம்பை ஒரு பிடிப் பிடித்தான்.

''ஒங்கள மாதிரி... சாப்பாட்ட ருசிச்சு சாப்புடுற புருஷன் இருக்க வரையிலும்... எஞ்சமையல் தெறம வளந்துகிட்டே தான் போவும்!'' என்றாள் அவளும், அவனது ரசனையை ரசித்தவளாய்.

கூடவே, ''அய்யா... சாமி! ஒடனே போயி... ரெண்டு தங்க வளையல வாங்கியாந்துராதீரும்! எங்கையில போட இடமில்ல...'' என்று கூவினாள், அவனது அடுத்தச் செயலை உணர்ந்தவளாய்.



''ஹ்ஹஹா!'' என்று மனம் விட்டுச் சிரித்தவன், ''இந்த மொற... தங்கக் காப்பில்லடி... தங்கம்!'' என்றான் பூடகமாய்.

''என்ன மாமா? என்ன மாமா?'' என்று அவனைப் போட்டுப் படுத்தியவளால், குழந்தைப் பிறந்த சமயத் தில் தான் கூறியதை நினைவு படுத்த முடியவில்லை.

பிரசவம் முடிந்ததிலிருந்து சரியாகப் பதினைந்து நாள் கழித்து, மலரும் அவனது மக்களும் வீடு வந்து சேர்ந் திருந்தனர்.

முதல் ஒரு வாரமும், அந்தச் சிறு பிள்ளைகளின் நடவடிக்கைகளுக்குத் தங்களை நடைமுறைப் படுத்து வதிலேயே கழிந்துவிட, ஒரு நாள் இரவு விஸ்ராந்தி யாகக் கணவனும் மனைவியும் உரையாடத் தொடங் கினர்.

மலரின் கையைத் தன்னுள் வைத்துக் கொண்டு, அவளது உச்சியில் தன் தலை சாய்த்து, ''என்னைய மன்னிச்சுட்டியா மலரு? மனசத் தொட்டுச் சொல்லு!'' என்றான் ராஜதுரை, குற்றவுணர்வு மேலோங்கி நின்றக் குரலில்.

''ஏம்... மாமா திடீர்ன்னு!'' என்றாள் மலர், சட்டெனத் திரும்பி, அவனது மார்பில் தாடையைப் பதித்து.

''சொல்லு மலரு! மனசப் போட்டு... உறுத்திக்கிட்டே இருக்குது!'' என்றான் அவன், கண்ணில் கவலையுடன்.

மெல்ல கையுயர்த்தி, அவனது கழுத்தைத் தன் கை மாலைகளுக்கான இடமாக்கியவள், ''நீரு செஞ்சது

தப்பு த்தேன்.. ஆனா... அதுக்காவ ரொம்பவும் வருத் தப்பட்டுட்டீரு மாமா! ஒரு தப்புக்குத் தண்டனை தேவத் தேன்... ஆனா.. தண்டனையே வாழ்க்கையாகிடக் கூடாதில்ல! ஒமக்கும் எம் மேல ஆசையிருக்கு... எனக் கும் ஒம்ம மேல விருப்பம் இருக்குது! நடுல நடந்துப் போன காயத்தப் போட்டு... கிளறி விட்டுட்டே இருக் கிறதில என்ன புண்ணியம் சொல்லம்?'' என்றாள், மலர் தேர்ந்த மனோதத்துவ மேதையைப் போல்.

மனைவியின் பேச்சில் மயங்கியவனாய், அவளின் நெற்றியில் முத்தம் வைத்தவன்,

''நீ ராக்காத்தாட்டப் பேசுனதக் கேட்டது தொட்டு... நீ என்னோட மனசு ஒத்து வாழவே மாட்டியோன்னு தவிச்சுப் போயிட்டேன்... மலரு!'' என்றான் அவன், தன் வேதனையின் சாரலைக் குரலில் தூவி..

''ஊருக்கு முன்னாடி... என் நடத்தையப் பத்தின வௌக்கம் சொல்லணும்ன்னு நினைச்சேன், மாமா! ஆனா... நீரு தலை குனிஞ்சு நிக்கணும்ன்னு நா ஒருக் காலும் நினைச்சதே இல்ல! நீரு எப்பவும் சொல்வீரே... எங்காலில் கூட நீ விழக்கூடாது மலருன்னு... அதே மாதிரி த்தேன் மாமா.. எங்கிட்ட மட்டும் த்தேன்... நீரு மன்னிப்பு கேட்குறதோ... இல்ல... காலில விழுறதோ அது எங்கிட்ட மட்டும் த்தேன் இருக்கணும்!'' - தீவிரம் போல் சொல்லிக் கொண்டே சென்றவளின் குரல், கடைசியில் முத்துமணிகளைச் சிதற விட்டது போல் சிரிக்கவும்,

ஒரு நிமிடம் திகைத்த ராஜதுரை, ''அடிக் கழுத! ஒனக்கிருக்க வாய்க்கு!'' என்றான் தானும் சிரித்தபடி.

அவனுடன் கூடச் சேர்ந்து சிரித்த மலரின் முகத்தில் மீண்டும் ஓர் தீவிரம் குடி கொண்டது!



''எனக்குத் தெரியும் மாமா... ஒருத்தங்க ஒரு பொருள் மேல எம்புட்டு ஆச வைக்கிறாங்களோ... அந்தப் பொருள் கெடக்காம போகையில் நெஞ்சே வெடிக்கிற மாதிரி வலிக்கும்ன்னுட்டு! நீரு... எம் மேல ஆச வச்சதுக்குக் காரணமே எம் பேச்சுத் த்தேன்.. அதையே ஒம்ம ரசிக்க விடாம செஞ்சேனே... அதை விடவும் பெருசா தண்டிக்க முடியாது!'' என்றவள்,

''எனக்கும் அந்த வலி புரியும் மாமா! எனக்குப் படிக் கணும்ன்னு கொள்ள ஆசை... ஆனா... அது நெறை வேறாமலே போய்டுச்சு! எனக்கு எப்படி மனசு வலிச்சது தெரியுமா? அந்த வலியை...'' - எனப் பேசிக் கொண்டே போனவள், அவர்களது மக்களுள் ஒருவர் முழித்துவிட, மலர் அங்கே ஓடியே போனாள்.

அத்துடன் மலர் அச்சம்பவத்தை மறந்தே போயிருந் தாலும், ராஜதுரை மறந்து விடவில்லை!

அதன் விளைவைத் தான் இன்று காட்டினான்!

''என்ன மாமா... என்ன மாமா...'' என்று மலர் நச்சரித்துக் கொண்டே இருக்க,

''பொறு... பொறு! இப்படிப் பறந்தியானா... ஒண் ணுஞ் செய்ய முடியாது!'' என்று அவளை அடக்கிக் கொண்டிருந்தான், ராஜதுரை.

''சரி... விடுங்க! விசயம் தானா வீதிக்கு வரட்டும்... பார்த்துக்கிடுதேன்!'' என்ற மலர்,

''இன்னைக்கு... உம்ம மாமனும் மச்சானும் புள்ளை களைப் பாக்க வந்தாக!'' என்றாள் உதட்டைச் சுளித்து.

''அதுக்கேன்... உதட்ட இந்தப் பாடு படுத்துறவ! விடுடி!'' என்ற ராஜதுரை, மலரின் உதட்டை லேசாய் சுண்டிவிட்டு, சுகம் கண்டான்.

''ப்ச்... சும்மா இரும்! உம்ம இளவரசி... என்னைய கண்ணாலேயே காவு வாங்குறா...'' என்று தனது கையைத் தட்டிய மனைவியிடம்,

''அதென்னடி...எம் மாமன்? எம் மச்சான்? உங் கப்பன்... உங்கண்ணன்னு சொல்றது!'' என்றான் சிரிப் புடன்.

''அவைங்க... வீட்டுக்கு வரதே எனக்குப் பிடிக்கல... ஆனா... செஞ்சத் தப்பை உணர்ந்து வந்திருக்கோம்... மன்னிக்கக் கூடாதான்னு வந்து நின்னவுகளை வெளியத் தொரத்த முடியாமத் த்தேன் உள்ளார விட்டேன்! கொஞ்ச நாள் போவட்டும் மாமா... தப்ப உணர்ந்த ஒம்ம மன் னிக்கவே ஏழு மாசமான மாதிரி... அவுகளையும் மன்னிக்கக் காலம் பிடிக்கும்! இப்பத்தேனே உணர்ந்து வந்திருக் காக... போவட்டும்... கொஞ்சம் நாள் போவட்டும்!'' என்றாள் மலர், தீர்மானமாய்.

''சரி... உன்னிஷ்டம்!'' என்பதைத் தவிர, ராஜ துரையும் வேறெந்த முயற்சியும் செய்யவில்லை. காலத்தை விடவும் சிறந்த மருந்தும் ஏதுமில்லை. ஆசானும் யாருமில்லை அல்லவா!

நேரம் சென்று கொண்டே இருந்தது! ஆனால், மலர் வந்து ''தங்க வளையலுக்கு ஈடா என்னது?'' என்று கேட்கவுமில்லை. அதைப் பற்றி விசாரிக்கவுமில்லை.

''சரியான ராங்கி!'' என்று மனதிற்குள் வைதபடியே, ராஜதுரை தான் மலரை நாடிச் செல்ல வேண்டியதாப் போயிற்று.

தூங்கிய மகளைத் தொட்டியில் போட்டுவிட்டு, அடுக்களைக்குள் நுழைந்தவன், மீந்துப் போன சாப் பாட்டை எடுத்து வைத்துக் கொண்டிருந்த மனையாளைப் பின்னிருந்து அணைத்தான்!



அணைத்த மறுநிமிடம், ''ஆத்தாடி!'' என்று மலர் கூவுவதற்குப் பதிலாக, ராக்காத்தா கூவிவிட,

ஒரு நிமிடம், மனைவிக்குப் பதிலாய் ராக்காயியைத் தூக்கி விட்டோமோ என்று பயந்து விட்டான், ராஜதுரை.

சட்டென தன் கையிலிருந்த மனைவியின் முகத்தைத் திருப்பி அவன் பார்க்க, ''ஐயோ... மானம் போவுது! எறக்கி விடுங்க மாமா... ம்ம்ம்!'' என்று சிணுங்கிக் கொண் டிருந்தவள் மலரே தான்!

ஆனால், ராக்காயியின் குரல் கேட்டதே என்ற பதைப்பில் அவள் பார்வையை ஓட்ட, அடுக்களையின் மறு பக்கத்திலிருந்து ராக்காயி வெளியேறிக் கொண் டிருந்தார்! தன் புடவைத் தலைப்பை எடுத்துத் தன் வலது தோளை மூடியபடியே.

சிரிப்புப் பொங்கி வந்தது ராஜதுரை!

அவன் மலர்ந்து சிரிக்கவும், ''ஷ்... விடுங்க! அய்யோ!'' என்று தன் வெட்கம் பூத்த முகத்திற்கு, மன்னவனின் மார்பை வேராக்கிக் கொண்டாள், பொன்மலர்.

அப்படியே மனைவியை அள்ளிக் கொண்டு, தன் படுக்கையறைக்குச் சென்றவன், ''தங்க வளைக்கு ஈடா என்னன்னு கேட்கவே இல்லையேடி!'' என்றான் ஆர்வ மாக மேலோங்க.

''அதான்... முத்திடுச்சு இல்ல... சந்தைக்கு வர வேண் டியது தானே? இதில் நா வேற கூவணுமாக்கும்!'' என்று மலர் நொடிக்க,

''என்னமோ.... ஆசை இல்லாத மாதிரியே நடிப் பியே!'' என்று அலுத்துக் கொண்ட போதும், தான்

கொண்டு வந்தக் காரிலிருந்து ஓர் காகிதத்தை எடுத்து அவளிடம் நீட்டிவிட்டு, அவள் முகம் காட்டும் பாவங்களைத் தன் மனத்திரையில் ஒளிப்படங்களாக்கிக் கொள்ளக் காத்திருந்தான், ராஜதுரை.

அவனது எதிர்பார்ப்பை வீணாக்காமல், மலரின் முகமும் பாவங்களின் அட்சயப் பாத்திரமாகிப் போகின!

''மாமா...'' என்ற ஆர்ப்பரிப்பைத் தவிர அவளிட மிருந்து வார்த்தைகளே வரவில்லை! ஆனானப்பட்ட மலருக்கே வார்த்தைக்குப் பஞ்சமாகிப் போனது!

''என்ன மலரு சந்தோஷமா?'' என ராஜதுரை சிரிப் புடன் கேட்க,

''ஹய்யோ! எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியல மாமா...'' என்றவள், ஓடிச் சென்று ராஜதுரையின் கழுத்தில் தன் கைகளைக் கோர்த்துக் கொண்டிருந்தாள்.

பின்னே, அவள் படிப்புத் தொடர வழி செய்திருக் கிறானே கணவன்!

அதுவும், அவள் படித்துக் கொண்டிருந்த லேப் டெக்னிஷியன் படிப்பு அல்ல! அதற்கு மேலாய்!

''என்னவோ.. கையில ஊசிய நொழைச்சு ரத்தத்தை எடுக்கையில நாம த்தேன் டாக்டர் மாதிரி... அப்படியே சிலிர்க்கும் தெரியுமா?'' என்று மலர் ஒரு முறை சொன் னதை மனதில் வைத்து, அவள் மருத்துவப் படிப்பிற்கான விண்ணப்பத்தைத் தானே பூர்த்தி செய்து, அவள் கையெழுத்தைத் தானே இட்டு, அது ஏற்றுக் கொள் ளப்பட்ட செய்தியும், நேர்முகக் கலந்தாய்வுக்கான அழைப்புக் கடிதத்துடன் மனைவியை எதிர்கொண்டிருந் தான் ராஜதுரை.



அவளது +2 தேர்வு முடிவுகளே, இதற்குப் போது மானதாய் இருக்க, ராஜதுரையின் வேலை சுலபமாய் முடிந்தது!

தன் கையிலிருந்த காகிதத்தையே நம்பமாட்டாமல் பார்த்தவள், ''பொன்மலர்... பொன்மலர்... பொன் மலர்...'' என்று அதில் போட்டிருந்த தன் பெயரையே பல தடவைப் படித்து, அதிலும் திருப்திப் படாமல், அதை லேசாய்த் தடவிக் கொடுத்தாள்.

ராஜதுரைக்கு மிகவும் சந்தோஷமாய் இருந்தது! தன்னவளின் முகத்தில் தோன்றிய ஆர்வம் அவனை மயக்க, மெல்ல அவளை இழுத்து ஓர் முத்தம் வைத் தான்!

''ஆனா... எனக்கு சீட்டுக் கெடைக்குமா மாமா?'' என அவள் திடீரெனக் கவலை கொள்ள,

''கெடைக்கும் மலரு... நீ எடுத்திருக்க மார்க்குக்கு கண்டிப்பா கெடைக்குமாம். நெறைய பேர்ட்ட விசாரிச் சேன்...'' என்றான் அவன், அவளை உற்சாகப்படுத்தி!

அவளுக்கும் சந்தோஷமாய் இருந்தது!

அந்த சந்தோஷத்தில் நேரம் இன்பமாய்க் கழிய, திடீரென ''எங்கையெழுத்த... நீரு எப்படிப் போடலாம்? இந்தத் திருட்டுப் பயப் புத்தி.... உம்ம விட்டுப் போவுதா?'' என்று தன் காளி அவதாரத்தை அவள் எடுத்துவிட,

''என்ன மலரு செய்றது? பொன்மலர்ன்னு... குண்டு குண்டா ஒன்ன மாதிரியே மொழுக்கு... மொழுக்குன்னு ஒங் கையெழுத்தும் என்னைய அப்படியே கயிறு வச்சு இழுக்குதுடி!'' என்றவனை,

''உம்ம...'' என்று துரத்திக் கொண்டு ஓடினாள், பொன்மலர்!

அவர்களை ஆனந்தம் துரத்திக் கொண்டு சென்றது! அணைத்துக் கொள்வதற்காய்!

# 27

✱ ஆறு வருடங்களுக்குப் பிறகு ✱

''அப்படித் தேன் வலிக்கும் பூவு... கொஞ்சம் பொறுத்துக்க.. ம்ம்.. நல்லா முக்கு... ம்ம்... இன்னும் இன்னும்!'' - நிறை மாதமாய் இருந்த பூவின் அருகே நின்று பிரசவம் பார்த்துக் கொண்டிருந்தாள், மருத்துவர் பொன்மலர்.

நெருங்கிய தோழியை நம்பாத பாவமோ அல்லது அவள் தூய்மையானவள் என்று தெரிந்த பின்னரும் அவளிடம் மன்னிப்புக் கேட்காத மேம்பாவமோ, பூவரசிக்குத் திருமணம் முடிந்து ஏழு வருடங்களாகியும் குழந்தை பிறக்கவில்லை.

ஏறாத கோவிலில்லை. வேண்டாத தெய்வமில்லை. பார்க்காத மருத்துவரில்லை. ஆனால், எதிலும் கிடைக் காத பலன், ஒன்றரை வருடங்களுக்கு முன் பொன் மலரின் வீட்டுப் படியேறி ''என்னைய மன்னிசசிடு பொன்னு! ஒன்னைய நம்பாத பாவத்துக்குத் தேன்... எம் வயிறு மலரவே இல்ல போல!'' என்று பூவரசி கதறி யதும், கொஞ்சம் கொஞ்சமாய்த் தெரியத் தொடங்கி, அடுத்த சில மாதங்களில் அவளது தாய்மையை முழுமை யடையச் செய்தது!



இப்போது, அவளது பிரசவம், ''மலர் மருத்துவமனை'' என்று ராஜதுரை தொடங்கியிருந்த மருத்துவமனை யிலேயே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

வெளியே சந்தோசம் - பழையம்பெருமாள், அன் பழகன், அவனது பெற்றோர், சில நெருங்கிய சொந் தங்கள் என்று பலரும் கூடியிருக்க, ராஜதுரையும் அவர்களுடன் இருந்தான்.

அரை மணி நேரப் போராட்டத்திற்குப் பின்னர், பூவரசியின் மகன் உலகைப் பார்த்துத் தன் முதல் பாஷையை உரக்க எடுத்துவிட்டான்!

அனைவரின் முகத்திலும் பரவிய நிம்மதியை சந்தோஷமாய் மாற்றவென, ''அண்ணே... ஒங்களுக்கு மகன் பொறந்திருக்கான்!'' என்றபடியே வந்தாள் பொன்மலர்.

சந்தோஷமும் பெருமிதமுமாய் நின்றிருந்த அன்பழ கனை அணைத்து வாழ்த்துச் சொன்ன ராஜதுரைக்கு, அன்பழகனின் தாயார் பேசியது பெரும் கோபத்தை உண்டு பண்ணியது.

''நல்ல வேளைக்கு... ஆம்பிள புள்ளையப் பெத்தா! வருஷஞ்சென்னு புள்ள பொறக்குதே... பொட்டப் புள்ளயா போயிடுமோ... அடுத்தாப்ல புள்ள பொறக் காதுன்னு சொல்லிப்புட்டா என்ன பண்றதுன்னு ரோசனையாவே இருந்துச்சு!'' என்று அந்தப் பெண்மணி அங்கலாய்க்க,

''சொல்றேனேன்னு தப்பா எடுத்துக்காதீக அயித்த! எங்களுக்கும் மூத்தது மக தேன்! ஆனா... தலைச்சம் புள்ள மகாலெட்சுமியா பொறந்ததில, அதுக்குப் பொறவு சரிவுன்னு ஒண்ணு... எங்களுக்கு இருந்ததே இல்ல! ஒரு

லட்சம்... ரெண்டு லட்சம்ன்னு வருமானம் வந்துக்கிட்டு இருந்த எடத்தில... நாலு லட்சம்... அஞ்சு லட்சம் வருது! பணத்த விடுங்க... ஒரு பொண்ணு இருந்தா வீட்டுல இருக்க கலகலப்புக்குப் பஞ்சமே இருக்காது! பொம்பளப் புள்ளைங்க மாதிரி... ஒங்க மேல பாசம் வைக்க ஆளே கெடைக்க மாட்டாக! அந்தப் பாசத்துக்கு... நா அடிம, அயித்த!'' என்று நீளமாய் பேசி முடித்தவன்,

''மலரு... அலகன் இங்கன நிப்பான்... வேலைய வெருசா முடிச்சிட்டு வீடு வந்து சேரு!'' என்று விட்டு, தங்கை பிள்ளைக்குத் தங்கத்தில் ஓர் செயினை அணிவித்து அழகு பார்த்த கையோடு, ''இந்த மாமனோட சீரு... உம் வீட்டுக்கு வண்டி கட்டி வரும்டா, எஞ்சிங்கக் குட்டி! மாமா... இப்பப் போயிட்டு நாளைக்கு வெள்ளென வாரேன்!'' என்று அங்கிருந்து சென்று விட்டான்.

பின்னே, வெளியூர் கான்வென்ட்டில் படிக்கும் அவனது செல்லப் பிள்ளைகள் விடுமுறைக்கென வீடு வந்திருக்கின்றனரே!

இவ்வளவு பாசம் வைத்திருப்பவன், பிள்ளைகளை வெளியூர் பள்ளியில் சேர்க்கக் காரணம் - மலர்!

''ஒங்களோட சேர்ந்தா எம் புள்ளைங்க படிக்கவே மாட்டேங்குதுங்க! ஊருப்பட்ட செல்லத்தைக் கொடுத்து... அதுகள உருப்படவே விட மாட்டேங்கிரீக! அதுவும், இந்த வூரு வாத்திக எல்லாம்... ஒங்ககிட்ட கடனை வாங்கிட்டு.. அதைக் கொடுக்காம தாஜா பண்ண... அதுகளுக்குச் சும்மாவே பாஸ் போட்டு விடு றானுங்க! வேணாஞ்சாமி! வேணாம்!'' என்று ஒரே



பிடியாய் நின்று, பிள்ளைகளை கான்வென்ட்டில் சேர்த்து விட்டிருந்தாள்.

ராஜதுரையும் எவ்வளவே சொல்லிப் பார்த்தான்... கெஞ்சினான்... மிரட்டினான்! ம்ஹூம்! மலர் அசை யவே இல்லை! கடைசியில், அவள் தன் இதழவிழா போராட்டத்தைத் துவங்கவும், டோட்டல் சரண்டர் ஆகிவிட்டான் அந்த ஊரையே நிர்வாகம் செய்யும் ப்ரெசிடென்ட்!

கணவனைப் பற்றிய எண்ணங்கள் ஒருவித பெரு மிதத்தை உண்டு பண்ண, விரிந்த சிரிப்புடன், நர்ஸ்களிடம் பிள்ளையைப் பார்த்துக் கொள்ள வேண்டிய வழிமுறைகளைச் சொல்லிவிட்டு,

''நாளைக்கு வரையில... புள்ளைக மூணையும் கூட்டியாறேன் பூவு! நீ... இப்ப நல்லா தூங்கு!'' என்று பூவரசியிடம் விடைபெற்றவள்,

பழையம்பெருமாளிடம் ''வாரேன் மாமா! நீங்க வீட்டுக்குப் போங்க... பூவுக்குத் தொணையா அயித்த இருந்தாப் போதும்!'' எனக் கூறிய மாத்திரமாய், சந்தோசத்திடம் ஓர் தலையசைவுடன் நகர்ந்தாள்.

''திமிரு! திமிரு! எல்லாம்... அந்த மவராசன் கொடுக்கிற எடம்! புருஷங்காரன் அடக்கி வச்சா... இவ அடங்குவா! அவனில்ல... இவ முந்தானையில முடி போட்டுக்கிட்டு இருக்குதான்!'' என்று சந்தோசம் கழுத்தை நொடிக்க,

''சும்மா... அந்தப் புள்ளையைக் கரிச்சுக் கொட்டாத சந்தோசம்...'' என்றதோடு நகர்ந்து விட்டார், பழையம். சில மனிதர்களின் குணம்... ஆறு வருடம் என்ன? அறுபது வருடமானாலும் சரியாகாது!

மாமனார் - மாமியார் பேசியது காதில் விழுந்த போதும், அதை கண்டு கொள்ளாமல் நடந்த பொன் மலருக்குக் கொஞ்சம் கூட வருத்தமாய் இல்லை! ஏன் வருத்தப்பட வேண்டும்? கண்ணுக்குக் கண்ணாய்... உயிருக்கு நிகராய்... ஊனுக்கு உதிரமாய்... நெஞ்சத்தின் சுடராய்... அணையா காதலுடன் கணவன் இருக்கையில், யார் வேண்டும் அவளுக்கு!

முகமும் மனமும் நிறைந்திருக்க, மலர் வீடு வருகையில், நன்றாக மழை பிடித்துக் கொண்டிருந்தது.

அவர்கள் முன்பு வசித்த பண்ணை வீட்டை, பெரிய மச்சு வீடாய் மாற்றிக் கட்டியிருந்தான் ராஜதுரை. அதன், போர்டிகோவில் அழகன் காரை நிறுத்தவும் தான், மலருக்கு உறைக்கவே செய்தது!

''ஐயோ... கடவுளே! டேய்... அலகா... போ... போ... ஓடிப் போயி... நாலு துண்டு எடுத்தா... ராக்காத்தாவ வெந்நீர் வைக்கச் சொல்லு...'' என்று கூவியபடியே பின்கட்டுக்கு விரைந்தாள்,

அவள் எதிர்பார்த்தபடியே, அவளது நான்கு குழந்தை களும் மழையில் ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தன!

''நினைச்சுக்கிட்டே வந்தேன்... மழையில ஆட்டம் போட்டுக்கிட்டுத் திரிவீகன்னு...''

''ஏய்... தனம்... இங்க வாடா! ரெண்டு நாளையில பள்ளிக்கொடம் போவணும்டா கழுதைகளா... வாங்க...''

''தர்மா... எஞ்செல்லமில்ல! வா கண்ணு! சளி புடிச் சுக்கும் ராசா!''

''தமிழு... வாடி... நளைக்கு பூவத்த மகனைப் பாக்கப் போவணும்ல... வாடி தங்கம்!'' என்று ஒரோர் விதமாய் அவளும் கெஞ்சிப் பார்த்தாள்.



அவர்கள் காதில் விழுந்தால் அல்லவோ! வருணன் மடை திறந்து நீரை ஊற்ற, அந்த இயற்கை தந்த நீரூற்றில் உல்லாசமாய் நனைந்து கொண்டிருந்தனர், சிறு பிள்ளைகள்!

கூடவே, தங்களது செல்லத் தந்தையும் அன்றோ சந்தோஷக் கூத்தாடுகிறான்!

தாயின் கோப வார்த்தைகள், தந்தையின் சந்தோஷக் கூவல்களில் கரைந்து போக, ஆனந்தக் கூத்தாடினார்கள் அவர்களும்!

ஒரு கட்டத்தில் 'மாமா' என்று மலர் உரக்கக் கூவ,

ராஜதுரை தன் ஆட்டத்தை நிறுத்தி, ஒரு வினாடி மலரைப் பார்த்தான்! பிள்ளைகளும் தங்கள் குதியாட்டத்தை நிறுத்தி, தந்தையையும் தாயையும் மாறி மாறிப் பார்த்தனர்.

''என்ன பண்ணிக்கிட்டு இருக்கீக? கொஞ்சமாவது கூறு... இரு...'' என்று தொடங்கிய வாக்கியத்தை மலர் முடிக்கவில்லை.

அவளது கையைப் பிடித்து, நிழலிலிருந்து மழைக்கு இழுத்து வந்த ராஜதுரை, மலரின் கண்கள் அக்னியின் கங்கை ஏந்தத் தொடங்கவும், சட்டென அதில் ஓர் முத்தம் வைத்து, அவள் திகைக்கும் போதே கன்னத்தில் ஓர் முத்தம் வைத்து, ''மலரு... மழ ஜோரா இருக்குதில்ல'' என்றான் உரக்க,

மலரோ எதற்கு ஆட்டுகிறோம் என்றே புரியாமல், தலையை மேலும் கீழுமாய் ஆட்டி வைக்க, ''ஏய் பசங்களா... அம்மாக்கு மழ புடுச்சிருக்குடா! அந்தப் பந்த எடுங்க... என்னமோ சொல்வீகளே... ரெயின் ஃபுட்பால்... அது வெளையாடலாம்...'' என்றான் வேகமாய்.

''ஊய்...'' என்று கத்திக் கொண்டு, பிள்ளைகள் பந்தை எடுத்து வர எடுத்துக் கொண்ட அரை வினாடியில், அரை டஜன் முத்தங்கள் ராஜதுரையிடமிருந்து மலருக்கு இடமாறின!

அதன் பின்னர், மலர் ''வேணாம்...'' என்று சொல்லித் தான் இருப்பாளா என்ன?

கணவனின் இதழ்கள் கொடுத்த இதத்தில், நெஞ்சம் கரைந்து நிற்க, அவளும் அவர்களுடன் மழையின் பிள்ளையாய் மாறிப் போனாள்!

பிள்ளைகள் எடுத்து வந்த பந்தை, வேகம் கொண்டு ஒரு உதை விட்டவள், ''புள்ளைகளா... அதை எடுத் தாங்க...'' என்று பிள்ளைகளின் கவனத்தை வேறு புறம் திருப்பிய நிமிடமில்லாமல்,

கணவனின் சட்டையைப் பிடித்து, அவனது முகத்தைத் தன்னருகே கொண்டு வந்தாள்.

ராஜதுரையின் விழிகள் ஆர்வத்தின் ஊற்றாகிப் போக, மலரவளோ தன் இதழ் பிரித்து, அவனுக்கு இதழமுதம் ஊட்ட, அங்கே இரு இதயங்களும் இதழ் வழியே கலந்தன! தன் இதழ் அவிழ்த்து... அவனது இதழ் பூட்டி... இதயம் நுழைந்தாள், பொன்மலர்!

# மலரும் இதழே

என்.சீதாலெட்சுமி

